# சந்தேகந் தெளிதல்

அடுத்து வருவது கைவல்லிய நவநீதத்தில் சந்தேகந் தெளிதல் படலம்.

இது வரைக்கும் ஞானத்தை குறிச்ச தியரி என்னன்னு பாத்தோம். இனிமே இதிலே வரக்கூடிய சந்தேகங்கள் என்னென்ன அதுக்கு சமாதானம் என்னன்னு பாக்கலாம். சில விஷயங்களை கேட்கிறோம். அது நமக்கு புரிஞ்சு போச்சுன்னு நினைக்கிறோம். கொஞ்ச காலம் கழிந்த பிறகு அந்த விஷயத்திலே நமக்கு பல சந்தேகங்கள் வரும். எவ்வளவுக்கு எவ்வளவு நமக்கு தெளிவா தோணித்தோ அவ்வளவுக்கு அவ்வளவு இப்ப சந்தேகமா தோணும்! இப்படி ஆகக்கூடாதுன்னுதான் அந்த காலத்திலே பெரியவங்க ஒரு விஷயம் சொன்ன கையோட, கேட்டவங்க சந்தேகம் எழுப்பலைனா தானே அதை எல்லாம் எழுப்பி பதிலையும் சொல்லிடுவாங்க.

ஒரு கம்பத்தை நடணும். குழி பறிச்சு அதுல கம்பத்தை நடறோம். அப்படியே விட்டா அது நிலையா நிக்காது. அதை நட்ட இடத்து பக்கத்தில கொஞ்சம் சின்ன கல், மண் எல்லாம் போட்டு குத்தி கிட்டிச்சு விடனும். அப்பதான் கம்பம் பலமா நிக்கும். அது போல "பிரம்மத்தில நிலை பெற்ற மனசை உறுதியா ஆக்க சில விஷயம் சொல்லறேன் கேளு" ன்னு ஆரம்பிக்கிறார் தாண்டவராய ஸ்வாமிகள்.

1.

நரர்குழி பறித்துமெள்ள நாட்டிய நெடிய கம்பம்  
உரமுறக் குத்திக்குத்தி யுறைப்பிக்கு முபாயம் போலே  
பரமசிற் சொரூபதன்னிற் பற்றிய மனோவிருத்தி  
திரநிலை பெறச்சந்தேகந் தெளிதலை மொழிகின்றேனே

நரர்= மானுடர் குழி பறித்து மெள்ள நாட்டிய=நிறுத்திய நெடிய கம்பம் உரமுற= வலிமையடைய; குத்திக்குத்தி உறைப்பிக்கும் உபாயம் போலே பரம (மேலான) சிற் (சின்மாத்திர ஆத்ம) சொரூபம் தன்னில் பற்றிய=பொருந்திய மனோவிருத்தி (அபேதமாய் பொருந்திய அகண்டாகார விருத்தி) ஸ்திரநிலை பெறச் சந்தேகந் தெளிதலை மொழிகின்றேனே.

நாம முன்னே பாத்து விட்ட கதை இன்னும் தொடருது. தனக்கு பிரபஞ்சம் உண்டானது முதல் விதேக முக்தியை அடைகிற வரை எல்லாம் விளக்கி சொன்ன குரு செய்யச்சொன்னதை குரங்குப்பிடியா பிடிச்சுக்கிட்டான். விடாமல் செய்கிறான் சீடன்.

குரங்குப்பிடின்னு சொல்கிறதுல ஒரு அர்த்தம் இருக்கு.

மர்கடநியாயம், மார்ஜாலி நியாயம் ன்னு ரெண்டு வித தத்துவம்.

மர்கடநியாயம்: குரங்கின் குட்டிதான் குரங்கை பிடித்துக் கொள்ளணும். குரங்கு பாட்டுக்கு அதோட வேலையை பாக்கும். கிளைக்கு கிளை தாவினாலும் கிண்டாலும் குட்டிதான் ஜாக்கிரதையா இருக்கணும். பிடியை விட்டு குட்டி கீழே விழுந்தா குரங்கு அதைப்பத்தி கவலையே படாது. அதுபோல் இறைவனை பக்தன்தான் பிடித்துக்கொள்ளவேண்டும்.

மார்ஜாலி நியாயத்திலே பூனைக்குட்டி சும்மாதானிருக்கும். என்ன ஆபத்து வந்தாலும் மியாவ் மியாவ் ன்னு கத்தி அம்மாவை கூப்பிடுமே தவிர ஒரு செயலிலேயும் இறங்காது. பூனைதான் வந்து அதை கவ்வி தூக்கிப்போகும். அது போல் பக்தன் பரி பூரண சரணாகதி செய்தால் இறைவன் தேவையானதை செய்வான்.

இந்த தத்துவ வித்தியாசம்தான் ஸ்ரீவைஷ்ணவர்களிலே தென்கலை சம்பிரதாயத்துக்கும் வடகலை சம்பிரதாயத்துக்கும் உள்ளவித்தியாசம்.

இங்க சீடன் அவனோட முயற்சியிலே குரு சொன்னதை செய்கிறான்னு புரிஞ்சுக்கணும்.

2.

நற்கருத் துடையோனாகி ஞானவானாகி நின்றோன்
மர்கட நியாயம்போலே மகாபூத விகாரந்தொட்டு
நிற்குண விதேகமுத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன
சற்குரு வினைவிடாமற் சந்தத மநுசரித்தான்.

நற்கருத்து (சத்துவ விருத்தி) உடையோனாகி (அபரோட்ச) ஞானவானாகி நின்றோன் (நின்ற சீடன்) மர்கட (குரங்கு) நியாயம் போலே மகாபூத விகாரம் (ஸ்தூல சரீரம்) தொட்டு (முதலாக) நிற்குண விதேகமுத்தி நிலை பரியந்தம் (சத்துவ குணமும் இறந்த கைவல்ய நிலை வரை) சொன்ன சற்குருவினை விடாமல் சந்ததம் (எப்போதும்) அநுசரித்தான். (சேவை செய்து வந்தான்)
(மர்கடநியாயம்: குரங்கின் குட்டிதான் குரங்கை பிடித்துக் கொள்ளவேண்டும். அதுபோல் இறைவனை பக்தன்தான் பிடித்துக்கொள்ளவேண்டும். மார்ஜாலி நியாயம்: பூனைக்குட்டி சும்மாதானிருக்கும். பூனை அதை கவ்வி தூக்கிப்போகும். அது போல் பக்தன் பூரண சரணாகதி செய்தால் இறைவன் தேவையானதை செய்வான்.)

மதியம் வியாழன், மே 21, 2009
சந்தேகம்? கொஞ்ச நாள் போனதும் நிழல் மாதிரி தன்னை தொடர்ந்து வர சீடனைப்பாத்து குரு கேக்கிறார். என்னப்பா உன் சாதனை எல்லாம் எப்படி போய்கிட்டு இருக்கு? சாட்சி மாத்திரமா இருக்கப் பழகிட்டியா? சந்தேகம் ஒண்ணும் இல்லியே? தெளிவா இருக்கியா? உன்னோட அனுபவம் என்ன சொல்லுங்கிறார். குருவுக்கு சீடனோட நிலை தெரியாமலா இருக்கும்? இருந்தாலும் சீடன் குரங்கு நியாயப்படி நடந்துக்கிறதால ஒண்ணும் தெரியாத மாதிரி கேக்கிறார்.

3.

ஆசிரியர் சீடரை அனுபவம் வினாவுதல்.

சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல் விடாமலன்பாம்
மைந்தனை நோக்கிச்சாட்சி மாத்திரமாய் நின்றாயோ
சிந்தையிலைய மெல்லாந் தீர்ந்தவோ தெளிவுனுள்ளே
அந்தரங் கலந்ததுண்டோ வநுபவமுரை செய்வாயே

சந்ததம் (எப்போதும்) புருடன் தன்னைச் சாயை (நிழல்) போல் விடாமல், (நடந்து வந்த) அன்பாம் மைந்தனை (சீடனை) நோக்கி சாட்சி மாத்திரமாய் நின்றாயோ? சிந்தையில் ஐயம் எல்லாம் தீர்ந்தவோ? தெளிவுனுள்ளே அந்தரம் (விபரீத பாவனை) கலந்ததுண்டோ (உதித்துள்ளதோ)? அநுபவம் உரை செய்வாயே (சொல்லுவாயே).

4

மூன்று கேள்விகளுக்கும் சீடன் விடையாக விண்ணப்பம் செய்தல்.

எனவுரைத் தருளுமாசா னிருபதம் வணங்கியெந்தாய்
சனனவன் காட்டின்மோகத் தமத்தெழு பேதப்பேய்கள்
உனதரு ளுதயவெற்பி லுபதேச வருக்கன்றோன்றி
மனவிழி தெரியஞான வான்கதிர் பரந்தாலுண்டோ.

என உரைத்து அருளும் ஆசான் இருபதம் வணங்கி எந்தாய் (என் தந்தையே) சனன

(பிறவி என்னும்) அவன் (கடத்தற்கரிய) காட்டின் மோகத் தமத்து (தமத்தில்= அஞ்ஞானத்தில்) எழு(ம்) பேத (விபரீத) பேய்கள், உனது அருள் உதய வெற்பில் (உதய கிரியில்) உபதேச அருக்கன் (சூரியன்) தோன்றி மனவிழி தெரிய ஞானவான் (ஞானமாகிய) கதிர் பரந்தால் உண்டோ (இருக்குமோ?).

சீடன் கால்ல விழுந்து வணங்கி சொல்கிறான்: "ஐயா பிறவி என்கிற காட்டில இருந்தாலும் உங்களோட உபதேசம் என்கிற சூரியனோட வெளிச்சம் இருந்தா கவலை இல்லியே. உங்க உபதேசத்தாலே அஞ்ஞானமான இருட்டும் சந்தேகம் என்கிற நிழலும் போயிட்டுது. இருந்தாலும் பேயை ஓட்டின மந்திரவாதி திரும்ப பிரச்சினை வராம இருக்க யந்திரம் எழுதி கட்டுகிறாப்போல சத்துவத்திலேயே மனசு நிக்கிறாப்போல என் அனுபவம் நிலையா நிக்க சில சந்தேகங்களை நிவர்த்தி செய்தா நல்லது!”

5.
சகசானுபவம் வரத்தையாய் உள்ளது குறித்து வினாவுதல்
மந்திர மூர்த்திதன்னான் மாற்றிய பேய்போனாலும்
எந்திர மெழுதிக்கட்டி யினிவராவகை செய்வார்போல்
முந்தியுன் னுபதேசத்தான் மோகம்போனாலு மையா
புந்திநின் றுறைக்கவின்னம் புகலும்விண்ணப்ப முண்டே

மந்திர மூர்த்தி தன்னான் (மூர்த்தியினால்) மாற்றிய (நீக்கிய) பேய் போனாலும் எந்திரம் எழுதிக்கட்டி இனி [அந்த பேய்கள்] வராவகை (வராதபடி) செய்வார்போல் முந்தி உன் உபதேசத்தால் மோகம் போனாலும், ஐயா புந்தி (சத்துவ மனம்) நின்று உறைக்க (ஆத்ம ஸ்வரூபத்தில் நின்று நிலைக்க) இன்னம் (மேலும்) புகலும் விண்ணப்பம் உண்டே.

பிரமம் வாக்கு, மனசுக்கு எட்டுமா எட்டாதா?

6.
ஆகமப் பிரமாணத்தா லறியென்றும் வாக்குக்கெட்டா
தேகமாம் பிரமமென்று மிதயத்தா லுணர்வாயென்றும்
சோகமா மனத்திற்கெட்டா சுயஞ்சோதி யென்றுஞ்சொன்னீர்
மோகமா மிரண்டு சங்கை முளைத்தன பறித்திடீரே

ஆகம (ஸ்ருதி) பிரமாணத்தால் அறி என்றும், வாக்குக்கெட்டாது, ஏகமாம் (ஒன்றே) பிரமம் என்றும், இதயத்தால் உணர்வாய் என்றும், சோகமா(ன) மனத்திற்கு எட்டா சுயஞ்சோதி என்றும் சொன்னீர். மோகமாம் (மயக்கமாம்) இரண்டு சங்கை (சந்தேகங்கள்) முளைத்தன பறித்திடீரே (நிவர்த்தி செய்வீராக)

வேதத்து மேல நம்பிக்கை வெச்சு ஒண்ணேயான பிரம்மத்தை இதயத்தாலே உணரணும் ன்னு சொன்னீங்க. அது வாக்குக்கு எட்டாது மனசுக்கு பிடிபடாதுன்னும் சொன்னீங்க. இதுல எனக்கு ரெண்டு சந்தேகம். அதுக்கு விடை சொல்லுங்க. வேதம் வாக்குதானே? அதால தெரிஞ்சுக்கன்னு சொல்லி பின்னாலேயே வாக்குக்கு எட்டாதுன்னா என்ன அர்த்தம்?
முன்னே மஹா வாக்கியங்களைப்பத்தி சொன்ன போது "சுருதி பிரமாணத்தால உன்னோட நிஜ சொரூபம் என்னன்னு தெரிஞ்சுக்க"ன்னார். பின்னாலேயே "பிரம்மமானது துக்க மயமான மனதுக்கு எட்டாத சுயம் பிரகாசம்" னார்.
அப்ப பிரமம் மனசுக்கு எட்டுமா எட்டாதா? ரெண்டும் ஒண்ணுக்கு ஒண்ணு முரணா இருக்கே!

பதில்

குரு பதில் சொல்கிறார்.
அப்பனே பரப்பிரம்ம சொரூபமானது பெயர், வடிவம், கறுப்பு, சிவப்புன்னு நிறம், நெட்டை குட்டை பருமன் சன்னம் ன்னு எந்த இலட்சணமும் உள்ளது இல்லை. பஞ்சபூதங்களிலே ஒண்ணோ ரெண்டோ இல்லை. அதனால காரணங்களாலயாவாது இந்திரியங்களாலேயாவது அறிகிற வஸ்து இல்லை. இதனால அது பிரத்யட்சம், அநுமானம், உபமானம் முதலான பிரமாணங்களால அகப்படாது. அதனாலதான் ப்ரம்மம் வாக்குக்கு எட்டாதுன்னு சொன்னேன்.

7. பிரமம் வாக்குக்கு அகோசரமாயும் கோசரமாயும் இருக்குமோ?
மற்றைமுப் பிரணமா னத்தால் வத்துநி ண்ணயம்கூ டாதே
உற்றதோர் விடயம் பூத முபயமன் றாத லாலே
குற்றமாம் குணவிசேடங் கூடாம லிருக்கை யாலே
இற்றது வாக்குக்கெட்டா தென்பது மறிவாய் நீயே

மற்றை முப் (=மூன்று- பிரத்யட்சம், அநுமானம், உபமானம்) பிரணமானத்தால் வத்து (வஸ்து- பிரம்ஹ) நிண்ணயம் கூடாதே (ஆகாது). உற்றதோர் விடயம் (இந்திரியங்களுக்கு சம்பந்தப்பட்டது அல்ல) பூதம் (சீவன்) உபயமன்று (த்வைதம் அல்ல) ஆதலாலே, குற்றமாம் குணவிசேடம் கூடாமல் (பொருந்தாமல்) இருக்கையாலே இற்றது (இப்பிரகாரமாக அந்த பிரமம்) வாக்குக்கு எட்டாது என்பதும் அறிவாய் நீயே.

ப்ரமாணங்கள் எட்டு விதம்.

ப்ரத்யட்சம்.

அநுமானம்

உபமானம்

சத்தம்

அருத்தாபத்தி

அநுபலப்தி

ஐதீகம்

ஆகமம்

1. பிரத்யட்சம்: நேரா ஒரு பொருளை பாக்கிறது. நாம ரூபவஸ்துக்களை இப்படிபாக்கலாம். அதாவது எதுக்கெல்லாம் ஒரு பேரும் ஒரு வடிவமும் இருக்கோ அதெல்லாம் இதில வரும்.

2. அநுமானம்: நேரடியா பாக்கிர ஒரு வஸ்துவை வெச்சுகிட்டு இன்னொரு விஷயத்தை இருக்கிறதாக அறிகிறது. இப்படீ வழியிலே போய் கொண்டு இருக்கிறோம். ஒருஇடத்திலே புகை வருகிறதை பாக்கிறோம். ஓ என்னமோ எறியுதுன்னு நினைக்கிறோம். தீயை நாமபாக்கலை; ஆனா புகை இருக்கிற இடத்திலே தீ இருக்கத்தான் இருக்கும்ன்னு நமக்கு அனுபவம். அதனால இப்படி அநுமானிக்கிறோம்.

3. உபமானம்: அறியாத ஒருபொருளை ஏற்கெனெவே தெரிஞ்ச ஒரு பொருளால தெரிஞ்சிக்கிறது.

ஒத்தர் மானை பாத்ததே இல்லை. அது எப்படி இருக்கும் ன்னு கேக்கறார். என்ன பதில் சொல்லறது? காட்டில பாக்கலாம். மரை பசு மாதிரி இருக்கும் ன்னு சொன்னா ஓஹோ அது போலவா ன்னு கொஞ்சம் புரிஞ்சுப்பார். இது உபமான பிரமாணம். பசு உபமானம். அதால அறியப்பட்டது உபமேயம்.

4. சப்த பிரமாணம். ஆப்த வாக்கியம்னும் சொல்வாங்க. நம்மால எல்லாத்தையுமே நேரில பாத்தோ அனுபவிச்சோ தெரிஞ்சுக்க முடியாது. இப்படிதான் தெரிஞ்சுக்கணும் ன்னா நமக்கு மிகக்குறைவான விஷயங்களே தெரிய வரும். அதனால என்ன செய்யறோம்? நம்பத்தகுந்தவங்க சொன்னா அதுவே நமக்கு பிரமாணம். ரொம்ப நாள் கழிச்சு ஒரு நண்பரை பாத்து பேசிகிட்டு இருக்கோம். "டேய் உனக்கு தெரியுமா ஸோ அன்ட் ஸோ செத்து போயிட்டாண்டா" என்கிறார். "அப்படியா! நம்பவே முடியலையே!" ன்னு பேச்சுக்கு சொன்னாலும் நாம அதை நம்பறோம். அவர் பொய் சொல்ல மாட்டார்ன்னு நம்பிக்கை.

5. அருத்தா பத்தி பிரமாணம் என்கிறது லாஜிக். பகல்லே சாப்பிடாம ஒத்தர் இருக்கார். நான் இன்ன விஷயத்துக்காக உண்ணா விரதம் இருக்கேன் என்கிறார். ஆனா நாலு நாளாகியும் ஆசாமி குத்துக்கல்லாட்டம் இருக்கார். கொஞ்சம் கூட களைப்பா இல்லை. உடம்பு இளைக்கலை. அவர் பகல்ல சாப்பிடலையே தவிர ராத்திரி ரகசியமா ஒரு பிடிபிடிக்கிறார்ன்னு ஊகிக்கிறோம். அதான் அருத்தா பத்தி.

PG: [எது இல்லாம ஒரு விஷயம் சம்பவிக்காதோ அவ்வளோ முக்கியமான, இன்றியமையாத வஸ்து உபபாத்தியம். இங்க ராச்சாப்பாடு உபபாத்தியம். இந்த உபபாத்தியத்தால எது விளையுமோ அது சமபாத்தியம். சும்மா ஒரு பிஜி பாய்ண்ட்! ஹிஹிஹி! இன்னும்... எதோட அபாவத்தால -அதான் எது இல்லாததால- எது நடக்கமுடியாம போகுமோ அது உபபாதகம். ராத்திரி சாப்பாடோட அபாவத்தால – அதாவ்வது இல்லாம போவதால- பகல்ல சாப்பிடாதவனுக்கு உடம்போட பருமன் இல்லாம குறைஞ்சு போகும். அதனால இரவு சாப்பாடு பருமனோட உபபாதகம்.] எதுக்கு இவ்வளொ சொன்னேன்னா உபபாத்தியத்தோட சம்பந்தத்தால உபபாதகத்தை காட்டுறதுதான் அருத்தாப்பத்தி ப்ரமாணம்.

6. அநுபலப்தி ப்ரமாணம்: இத அபாவ பிரமானம்ன்னும் சொல்வாங்க. அதாவது இல்லாமையே பிரமாணம். குழப்புதா? இங்கே புத்தகம் இல்லைன்னு சொல்கிறோம். அப்படியான்னு பாக்கிறோம். ஆமா இல்லை. உண்மைதானே? இதான் அபாவ பிரமாணம்.

7. ஐதீக பிரமாணம்: காலாகாலமா ஒரு விஷயம் எல்லாரும் சொல்லிகிட்டு இருக்காங்க. அதனால அது உண்மைன்னு தெரிஞ்சுக்கிறது. பல கோவிகளிலே இந்த மாதிரி விஷயம் கேள்விப்படலாம். இங்கேதான் வஸிஷ்டர் யாகம் பண்ணார். அப்படி ஐதீகம்ன்னு சொல்லுவாங்க. அப்படி நடந்ததையும் நிரூபிக்க முடியாது - எவ்வளோ காலம் ஆச்சு? எப்படி எந்த ஆதாரமும் இருக்கும்? இல்லைன்னு சொல்லவும் முடியாது. அப்ப காலாகாலமா சொல்லிகிட்டு இருக்கிறது தப்பா?

8. ஆகமப்பிரமாணம்: சாஸ்திரங்களிலே சொல்லி இருக்கிறதை நம்புவது

சில சமயம் இந்த எட்டை ஆறுன்னும் சொல்லுவாங்க. உபமான பிரமாணம்ன்னு தனியா இல்லை. அது பிரத்யக்ஷ பிரமாணத்தோட சேத்தி; ஆகமப்பிரமாணம் சப்த பிரமாணத்திலே சேத்தி. அதனால ஆறுதான் ன்னு சொல்க்கிறவங்க உண்டு. வேற எங்காவது இப்படி வித்தியாசமா படிச்சா குழம்ப வேணான்னு சொன்னேன்.

சரி, சரி மேட்டருக்கு வரலாம்.

பிரம்மத்தை எந்த பிரமாணத்திலே சேக்கிறது?

அதுக்கு பேரோ உருவமோ இல்லை. அதனால பாக்கமுடியாது. பஞ்ச பூதங்களோட சேர்க்கை மட்டுமே இல்லை. அதனால பிரத்யக்ஷ பிரமாணம் இல்லை.

புகை அக்னி இருக்கிறதை போல எதாலும் பிரம்மம் இருக்கிறதை ஊகம் செய்ய சொல்ல முடியாது. அதனால அநுமானம் இல்லை.

பிரம்மம்தான் இருக்கு; வேற எதுவுமே அன்னியமா இல்லை. அத்னால் எதை உதாரணம் காட்டி இது போல இருக்கும்ன்னு சொல்லலாம்? அதனால உபமான பிரமாணம் இல்லை.

பிரம்மம் ஆகமத்துக்கு எட்டாது. அப்பர் சொன்னாப்போல இவ்வண்ணன், இவ்வுருவன், இந்நிறத்தன், இத்தன்மையன், இவ்விடத்தன் ன்னு ஒன்னுமே சொல்ல முடியாதே!

அப்ப பிரம்மம் வாக்குக்கு எட்டாது.

இப்படி வாக்குக்கு எட்டாதுன்னு சொன்ன வேதமே வாக்குக்கு எட்டும்ன்னு எப்படி சொல்லித்துன்னா...

சொல்லாம சொல்லித்து.

அதாவது ...

ரொம்ப நாள் கழிச்சு ஒரு பெண்ணோட சினேகிதிகள் அவளை பாக்க வந்தாங்க. அதுக்குள்ள அவளுக்கு கல்யாணம் ஆயிடுத்து. "எங்கேடி உன் புருஷன்?" ன்னு கேக்கிறங்க. "வெளீயே போயிருக்கார்"

"அட, பாக்க முடியாதா?"

"இல்லடி இப்ப ஒரு சாமி ஊர்வலம் வரும், அதிலே வருவார் பாக்கலாம்."

அதோ வந்தாச்சே! எல்லாரும் மாடிக்கு போய் வராந்தாவிலே நின்னு பாக்கிறாங்க. சாமி வருது. அதுக்கு முன்னே பலர் வித விதமா ஆடிகிட்டு பாடிகிட்டு வராங்க. இவ புருஷன் இவனாதான் இருக்கும்ன்னு ஊகம் பண்ணி "இவனா? இவனா?" - அப்பப்ப கேக்கிறாங்க. "இல்லை, இல்லை" ன்னு சொல்லிகிட்டே வரா. அப்ப ஒரு வழியா நிஜமாவே அவளோட புருஷன் ஜம்ன்னு சிலம்பம் சுத்திகிட்டு வந்துட்டான்.

"இவனாடி?"

பதில் காணோம். இது வரைக்கும் இல்லை இல்லைன்னு வார்த்தையா சொன்னவ இப்ப வார்த்தை இல்லாம வெக்கத்தோட சும்மா இருக்கிறதை பாத்து "அட இவன்தான்!" ன்னு சினேகிதிகள் தெரிஞ்சுகிட்டாங்க!

அது போல, "இது இல்லை, இது இல்லை" ன்னு லிஸ்ட் போட்ட வேதம், "இது இல்லாம எது இருக்கோ அதுவே பிரம்மம்" ன்னு சொல்லாம சொல்லித்து என்கிறார் குரு.

அது உன் உடம்பு இல்லை. ஏன்னா அது அநித்தியமானது.

இல்லை, சடமில்லை, துக்கம் உள்ளது இல்லை. இது நான் இல்லை இது நான் இல்லை" ன்னு சொல்லிகிட்டே போய் "கடைசிலே எது மிச்சமா இருக்குமோ அதுவே பிரம்மம்." இப்படி கூறாம கூறும் வேதம். இந்த வழியா பிரம்மம் வாக்குக்கு எட்டும்.

8.

வாக்கியந் தனக்கெட்டாது வத்துவென் றுரைத்த வேதம்
வாக்கிய விருத்தி யாலவ் வத்துவைக் காட்டிற்றன்றோ
வாக்கியங்களிலே மான மாவதே தென்றாயாகில்
வாக்கியமிரண்டும் மெய்யே மறைகள் பொய்யாது கேளாய்.

வாக்கியந்தனக்கு எட்டாது வத்து (பிரமம்) என்று உரைத்த வேதம் (மகா) வாக்கிய (த்தின் லக்ஷணா) விருத்தியால் அவ் வத்துவை காட்டிற்று அன்றோ? வாக்கியங்களிலே மானமாவது (பிரமாணவாவது) ஏது என்றாய் ஆகில் வாக்கியம் இரண்டும் மெய்யே; மறைகள் பொய்யாது கேளாய்.

9.

பிரமம் ஸ்ருதிக்கு அகோசரமும் கோசரமுமாம்

தன்பதியல்லாப் பேர்க டமையல்ல னல்ல னென்றாள்
அன்பனைக் கேட்ட நேர மவள்வெட்கி மௌனமானாள்
என்பது போல நீக்கி யிதன்றிதன் றெனச்சே டித்த
பின்பரப் பிரமந் தன்னைப் பேசாமற் காட்டும் வேதம்.

தன் பதி அல்லாப் பேர்கள்தமை அல்லன் அல்லன் என்றாள், அன்பனை (கணவனை) கேட்ட நேரம் அவள் வெட்கி மௌனமானாள் என்பது போல நீக்கி இதன்று இதன்று எனச் சேடித்த (இல்லையென்ற) பின், பரப் பிரமந் தன்னைப் பேசாமல் காட்டும் வேதம்.

முதல் சந்தேகத்துக்கு பதில் சொல்லியாச்சு. இப்ப ரெண்டாவது சந்தேகமான பிரம்மம் மனசுக்கு எட்டுமா எட்டாதான்னு சொல்கிறார்.

புலன்களாலதானே இந்த உலகத்தை அறியறோம். இந்த புலன்களுக்கு அந்தக்கரணமே ராஜா. மனசாகவும் புத்தியாகவும் வெளிப்படுகிற அந்தக்கரணம் உள்ளே தனியாவும், புலன்கள் மூலமா வெளியேவும் செயல்படும். புத்தி எப்பவும் தெளிவானது. கண்ணாடி மாதிரி. அதிலே சத்தாக இருக்கிற கூடஸ்தனோட நிழல் பிரதிபலிக்கும். (கூடஸ்தன்? நினைவிருக்கா? கடல்- கடல் நீர் திவலை மாதிரி பிரம்மம்- கூடஸ்தன்). இப்படி பிரதிபலிக்கிறதாலே அது இயல்பு மாறிடுது இல்லையா? அதனால அதுக்கு ஆபாசன்னு

பேர். அந்தக்கரணம் மனசாக இதன் வழியா சஞ்சரிக்கும். அதாவது விஷயங்களோட சம்பந்திக்கும். இந்த சுத்த சத்துவ மனோ விருத்திதான் ஞானம் என்கிறது. இதை ஆழ்ந்து யோசிச்சு புரிஞ்சுக்கணும். (அதுக்காகவே இது சின்ன பதிவு!)

10.

உகற்ப சிருட்டியாய் மனோ உற்பத்தி

முந்திய சங்கை தீர மொழிந்ததை யறிந்து கொள்வாய்
பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரநீ கேளாய்
இந்தியங் களுக்கிராச னிதயமா மதினெண் ணங்கள்
புந்தியு மனமு மென்றே புறத்தகத் துலாவி யாடும்

முந்திய சங்கை (பிரமம் வாக்குக்கு எப்படி எட்டும் என்ற சந்தேகம்) தீர மொழிந்ததை அறிந்து கொள்வாய். பிந்திய சங்கை (சுயஞ்சோதியாகிய பிரமம் மனத்துக்கு எட்டும், எட்டாது எவ்விதம்) தீரப் பேசும் உத்தரம் (பதில்) நீ கேளாய்.

இந்தியங்களுக்கு (சர்வேந்திரியங்களுக்கும்) இராசன் இதயமாம். அதன் எண்ணங்கள் புந்தியும் மனமும் என்றே புறத்தகத்து உலாவி ஆடும் (ஆத்ம ஸ்மரணமே மனமும் புத்தியும் ஆகத்தோன்றும்)

கண்ணாடியிலே நம்ம முகத்தை பாக்கிறோம். அது நம்மை மாதிரியே இருக்கு. ஆனா அது நாம் இல்லை.
அது போல சித்தான ஆத்மாவின் நிழல் வேற ஒரு சித் போல தோன்றும். அதுவே புத்தி. இதில ஆத்மாவின் சித் களங்கமில்லாதது. புத்தி களங்கமானது. இருந்தாலும் சித்தோட சம்பந்தம் இருக்கிறதால கொஞ்சமாவாது அறிவு இருக்கணுமே? அது உலக விஷயங்களிலே அறிவு உள்ளது. இதுக்கு ஞானம்ன்னு பெயர்.(பூரணமான பிரம்ம ஞானம் இல்லை. உலக விஷயங்களிலே ஞானம்)

[போன பதிவையேதான் வேற மாதிரி எழுதி இருக்கேன்.]

11.

சீவன் உற்பத்தி:

உன்முகம் போற்கண் ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போற்
சின்மய வடிவின் சாயை சித்துப்போல் புத்தி தோன்றும்
நின்மல விருத்தி யந்த நிழல் வழி யாயு லாவும்
தன்மநன் மகனே யித்தைத் தானன்றோ ஞானமென்பார்.

உன்முகம் போல் கண்ணாடிக்குள் ஒரு முகம் கண்டால் போல சின்மய வடிவின் (ஆத்மாவின்) சாயை (நிழல்) சித்து (வேறொரு சேதனம்) போல் புத்தி தோன்றும். (புத்தியாக பிரதி பலிக்கும்). நின்மல (களங்கமில்லா) விருத்தி அந்த நிழல் வழியாய் உலாவும். தன்ம (ஆனந்த அனுபவம் பெற்று உள்ள) நன் மகனே இதைத் தான் அன்றோ ஞானமென்பார்.

[புத்தியில் பிரதிபலிக்கும் ஆத்ம சாயை சிதாபாசன் ஆகும். இதனுடன் சேர்ந்து வெளி

விஷயங்களில் செல்லும் விருத்தியே ஞானமாகும்.]

ஜீவன் என்கிறது என்னன்னு கொஞ்சம் தெளிவாக்கிக்கலாம். அந்தக்கரணம் ரஜோ குணத்தில சத்துவம். அதனால தெளிவானது. பிரம்மத்தோட ஒரு துணுக்கு கூடஸ்தன். அதோட சத்துவ நிழல் அதில படிகிற போது அது ஜீவனாகிறது. ஒரு கண்ணாடில பாக்கிற கடலோட பிம்பத்தை கற்பனை செய்தா கொஞ்சம் புரியலாம்.

அப்ப கூடஸ்தன் அதன் நிழல் அந்தக்கரணம் மூணும் சேர்ந்தது ஜீவன்.

ஒரு குளம் இருக்கு. அதில ஆகாசத்தில ஒளி வீசற சந்திரனோட பிம்பம் பிரதிபலிக்குது. இப்படி பிம்பம் தோணனும்னா ரெண்டு விஷயம் அவசியம். நாம கண்ணாடில நம்மோட முகத்தை பாக்கிறப்ப முதலாவதா நாம் இருக்கணும். அடுத்து கண்ணாடி வேணும். அப்படி இருந்தா நம்ம முகத்தை கண்ணாடியிலே பாத்து மகிழலாம். கண்ணாடியில பாக்கிறது நம்மோட பிம்பம். நாம் இல்லாம கண்ணாடி இல்லாம பிம்பம் இல்லை. வானத்து சந்திரன் இல்லாம குளம் இல்லாம சந்திர பிம்பம் இல்லை.

இது போல அந்தக்கரணத்தில பிரதிபலிக்கிற கூடஸ்தனோட பிம்பம் ஜீவன்.

வானத்து சந்திரன் அசையாம நிக்க தண்ணீர் அலைச்சலில சந்திர பிம்பம் அசைகிறது. இந்த ஆபாச சந்திரன் அதிஷ்டான வான சந்திரனேதான் நாம் ன்னு மறந்து போய் நீர் அலைகிறதை தான் அசைந்து அலைகிறதா நினைப்பது போல ஜீவனோட தன்மை. அதிஷ்டான கூடஸ்தனே நாம் ன்னு மறந்து போய் தான் ஜீவன்னும் மனசு இயங்க பலம் ஆபாசனான தன் சக்தியாலதான்னு கவனிக்காம மனசு தான் இல்லாம வேற பொருள்ன்னும் அது இயங்குகிறது அதோட வேலை எல்லாம் தன் வேலைன்னு மயங்குகிறது.

ஜீவன் அப்படி இல்லாம தான் வேற கூடஸ்தன் வேற இல்லைன்னு புரிஞ்சு சாட்சியாவே நின்னு பாக்குமோ அப்ப இது வரைக்கும் நம்ம ஆட்டிப்படைச்சதா நினைச்ச மனசு எங்கேடான்னு தேடி பாக்க மனசோட உண்மை தெரிய வரும்.

அதாவது உனக்குள்ளே இருக்கும் நான் என்பதைக்கொண்டு மனம் எங்கே என்று பார்த்தால் அது காணப்படாது. மனத்தை கொண்டு நான் என்பதை பார். அப்போது நான் இன்னது என்று தோன்றியதும் மனம் இல்லாமல் போகும். இப்படி பெரியவங்க சொல்லி இருக்காங்க.

ஏக காலத்திலே மனசையும் உண்மையான நான் ஐ யும் பாக்க முடியாது. அதனால ஒண்ணுதான் உண்மை. எது? முன்னே சொன்னப்படி பார்க்கிறப்ப மனம்தான் காணாம போகுது.நான் எப்பவும் இருக்கு. இந்த நானேதான் மனசு தோண காரணமாயும் இருக்கு.

டெக்னிகலா இதை விகங்க மார்கமா மனோலயமாக நேர் வழி என்கிறாங்க.

தாயுமானவர் மனசை பாத்து நின்ஜன்ம தேயத்தில் நீ செல்ல வேண்டும் ன்னு சொன்ன இந்த வழி கஷ்டமான வழி. சிரம சாத்தியம். அதாவது செய்ய முடியும்னாலும் கஷ்டப்பட்டுதான் சாதிக்க முடியும்.

--

## பிரம்மம் மனதுக்கு எட்டும். எட்டாமலும் இருக்கும்

வெண்கலத்தில பல பொருட்கள் செய்கிறாங்க. நல்லா வெண்கலத்தை காய்ச்சி உருக்குவாங்க. அப்புறம் பல விதமான அச்சுக்கள் இருக்கும். ஆனை அச்சு, விளக்கு அச்சு, சாமி அச்சுன்னு பலது. எந்த அச்சில வெண்கலத்தை ஊத்தறாங்களோ அதை பொருத்து அது மாதிரியா பொருள் கிடைக்கும். வெண்கலம் ஒரே பொருளா இருந்தாலும் அது பல

விதமாகிறது அச்சை பொருத்தது.

அதை போல சத்து பிரதிபலிச்ச மனசு (சரியா சொல்லப்போனா ஆபாச சகித அந்தக்கரண விருத்தி. ஹிஹிஹிஹி எனக்கு தாங்க்ஸ் எல்லாம் வேணாங்க) வெளிப்படுகிற போது உலக விஷயங்களில் இருக்கிற மறைப்பை -அதாங்க ஆவரணம்- பாதிக்கிறது. இந்த மறைப்பு தமஸ் ன்னு நினைவிருக்கு இல்லையா? சஞ்சரிக்கிற மனசு ரஜஸ். சத்துவமான ஆபாசன் உலக விஷயங்களை அது கடம் இது படம்ன்னு வெளிச்சம் போட்டு விளங்க வைக்கிறது.

இதிலே ஒரு விஷயத்தை அறிய விஸ்தாரமாகி வளருகிறது மனசு. அதான் மனோ விருத்தி. இதுக்கு அந்த பலத்தை தருகிறது சித் ஆபாசம்.

ஒரு அறையிலே ஒரு பொருளை தேடறோம். இருட்டா இருக்கேன்னு ஒரு விளக்கை வெச்சுகிட்டு தேடறோம். ஆனா விளக்கை தேட வேற விளக்கு தேவையில்லையே. சூரியனை பாக்க விளக்கு வேணாமே! அது அதோட வெளிச்சத்தாலேயே காணப்படும்.

இதைப்போல உலக பொருட்களை பாக்க மனசு அங்கே போகணும். பார்க்க சித் உடைய பலமும் வேணும். ஆனா சித்தையே பாக்கணும் ன்னா மனசு அங்கே போனால் போதும். சிதாபாச பலம் வேணாம்.

அதனால மனசுக்கு ரெண்டு பாகம். விருத்தி என்கிற பாகம். பலம் என்கிற பாகம். சித்தை பாக்க பலம் வேணாம், மன விருத்தி போதும் ன்னு பாத்தோம் இல்லையா? சித்தாவது எது? பிரம்மம்தான்.

ஆக பிரம்மம் மனசோட விருத்திக்கு எட்டும். பலம் என்கிற பாகத்துக்கு இல்லை. இப்படித்தான் பிரம்மம் மனசுக்கு எட்டவும் எட்டும். எட்டாமலும் இருக்கும்.

12

ஞேய உற்பத்தியும் ஒரு விஷயத்தை விளங்க வைக்க இரண்டு ஏதுக்கு எனில்

உருக்கிய தராநீர் நாநா வுருவங்க ளானாற் போல
விருத்திகள் கடப டாதி விடயமாய்ப் பரிண மிக்கும்
அருப்பல விடய மெல்லா மாபாசன் றோற்று விக்கும்
இருட்டினில் விளக்குங் கண்ணு மில்லாமற் பொருள் காணாதே

உருக்கிய தராநீர் (அச்சில் விட்ட உடன்) நாநா உருவங்கள் ஆனாற் போல, விருத்திகள் (மன சங்கல்பங்கள்) கட (குடம்) பட ஆதி (முதலான) விடயமாய் [அதாவது உலகாக] பரிணமிக்கும். அருப்பல (அருவமான) விடயம் எல்லாம் ஆபாசன் தோற்றுவிக்கும். இருட்டினில் விளக்கும் கண்ணும் இல்லாமல் பொருள் காணாதே. (காண இயலாது).

(அது போல ஆவரணத்தை போக்க விருத்தியும் ஸ்புரண ரூப பிரயோசன நிமித்தம் சிதாபாசன் என்ற ஆத்ம சாயையும் இல்லாது ஆத்மாவல்லா பொருட்கள் பிரகாசியா) மனோ விருத்தியே ஞேயம் (அறியப்பட்டது) ஆகும், அதை சிதாபாசன் விருத்தியுடன் கூடி விளக்கி வைக்கும்.

13.

பகிர்முக அந்தர் முக ஞானத்தால் அறிவது இவை:

எரிகிற விளக்காற் கண்ணா லிருட்பொருள் காணல் வேண்டும்
தெரிகிற பரிதி காணச் சென்றிடில் கண்ணே போதும்
விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும்

புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண்போர்க்கே

எரிகிற விளக்கால் கண்ணால் இருட்(டில் உள்ள) பொருள் காணல் வேண்டும். தெரிகிற பரிதி (சூரியனை) காணச் சென்றிடில் கண்ணே போதும். (பலவிதமாக) விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் (விருத்தி ஞானமும்) பலமும் (சிதாபாச ஆத்ம நிழல்) வேண்டும்.
புரிகின்ற (விசார ரூபமான) விருத்தி யொன்றே போதும் மெய்ப் பொருள் (ஆத்மாவை) காண்போர்க்கே
சடமான ஜகத்தை காண மனமும் சீவனும் வேண்டும். சித்து ரூபமான ஆத்மாவை அறிய சத்துவ விருத்தி மட்டுமே வேண்டும்.

14.

மனத்தின் உருவம் கூறி பிரமம் மனத்துக்கு புலப்படும் புலப்படாது எனல்:

விருத்தியும் பலமும் கூடும் விகாரமே மனமென் பார்கள்
கருத்தெழு விருத்திவேண்டுங் கணக்கினான் மனத்திற்கெட்டும்
வருத்தியபலமாமிந்த மனத்திற்கெட்டாது கண்டாய்
அருத்தமிப்படியென்றைய மகன்றுநீ தெளிந்திடாயே

விருத்தியும் பலமும் (சிதாபாசன் என்ற ஆத்ம நிழல்) கூடும் விகாரமே (பரிணாமமே) மனம் என்பார்கள். கருத்தெழு விருத்திவேண்டும் (என்ற) கணக்கினால் (அந்தக் கரணத்தில் எழும் சுத்த சத்துவ விருத்தி வேண்டும் என்பதால்) [பிரமம்] மனத்திற்கெட்டும். வருத்திய (துன்பம் தரும்) பலமாம் (சிதாபாசனுடன் கூடிய) இந்த மனத்திற்கு [பிரமம்] எட்டாது கண்டாய். [ஸ்ருதி வாக்கியத்துக்கு] அருத்தம் (பொருள்) இப்படியென்று ஐயம் அகன்று நீ தெளிந்திடாயே.
--
ஜீவன் என்கிறது ...
ஜீவன் என்கிறது என்னன்னு கொஞ்சம் தெளிவாக்கிக்கலாம்.
அந்தக்கரணம் ரஜோ குணத்தில சத்துவம். அதனால தெளிவானது.
பிரம்மத்தோட ஒரு துணுக்கு கூடஸ்தன். அதோட சத்துவ நிழல் அதில படிகிற போது அது ஜீவனாகிறது. ஒரு கண்ணாடில பாக்கிற கடல் அலையோட பிம்பத்தை கற்பனை செய்தா கொஞ்சம் புரியலாம்.
அப்ப கூடஸ்தன் +அதன் நிழல் +அந்தக்கரணம் மூணும் சேர்ந்தது ஜீவன்.

ஒரு குளம் இருக்கு. அதில ஆகாசத்தில ஒளி வீசற சந்திரனோட பிம்பம் பிரதிபலிக்குது. இப்படி பிம்பம் தோணனும்னா ரெண்டு விஷயம் அவசியம். நாம கண்ணாடில நம்மோட முகத்தை பாக்கிறப்ப முதலாவதா நாம் இருக்கணும். அடுத்து கண்ணாடி வேணும். அப்படி இருந்தா நம்ம முகத்தை கண்ணாடியிலே பாத்து மகிழலாம். கண்ணாடியில பாக்கிறது நம்மோட பிம்பம். நாம் இல்லாம, கண்ணாடி இல்லாம பிம்பம் இல்லை. வானத்து சந்திரன் இல்லாம, குளம் இல்லாம சந்திர பிம்பம் இல்லை.

இது போல அந்தக்கரணத்தில பிரதிபலிக்கிற கூடஸ்தனோட பிம்பம் ஜீவன்.
வானத்து சந்திரன் அசையாம நிக்க தண்ணீர் அலைச்சலில சந்திர பிம்பம் அசைகிறது. இந்த ஆபாச சந்திரன் அதிஷ்டான வான சந்திரனேதான் நாம் ன்னு மறந்து போச்சு! ஏதோ நீர் அலைகிறதை தான் அசைந்து அலைகிறதா நினைக்குது! இது போல ஜீவனோட தன்மை.

அதிஷ்டான கூடஸ்தனே நாம் ன்னு மறந்து போய் தான் ஜீவன் அப்படின்னு மயங்குகிறது; மனசு இயங்க பலம் ஆபாசனான தன்னோட சக்தியாலதான்னு கவனிக்காம, மனசு தான் இல்லாம வேற பொருள்ன்னும் அது மயங்குகிறது. மனசோட வேலை எல்லாம் தன் வேலைன்னு மயங்குகிறது.

ஜீவன் அப்படி இல்லாம தான் வேற கூடஸ்தன் வேற இல்லைன்னு புரிஞ்சு, சாட்சியாவே நின்னு பாக்குமோ அப்ப இது வரைக்கும் நம்மை ஆட்டிப்படைச்சதா நினைச்ச மனசு எங்கேடான்னு தேடி பாக்க, மனசோட உண்மை தெரிய வரும்.

ஏக காலத்திலே மனசையும் உண்மையான நான் ஐ யும் பாக்க முடியாது. அதனால ஒண்ணுதான் உண்மை. எது?

அதாவது உனக்குள்ளே இருக்கும் நான் என்பதைக்கொண்டு மனம் எங்கே என்று பார்த்தால் அது காணப்படாது.

அட, நான் யாருன்னு தெரியலையே? தெரிஞ்சாதானே அப்படி பாக்கன்னு சொன்னா... வாஸ்தவம். சரி அப்படின்னா மனத்தை கொண்டு நான் என்பதை பார். அப்போது நான் இன்னது என்று தோன்றியதும் மனம் இல்லாமல் போகும்.
இப்படி பெரியவங்க சொல்லி இருக்காங்க.
இதன் படி பார்க்கிறப்ப "நான்" ஐ கொண்டு மனசை பாத்தாலும், மனசை கொண்டு "நானை" பாத்தாலும் மனம்தான் காணாம போகுது. நான் எப்பவும் இருக்கு. இந்த நானேதான் மனசு தோண காரணமாயும் இருக்கு.

டெக்னிகலா இதை விகங்க மார்கமா மனோலயமாக நேர் வழி என்கிறாங்க. ஸ்ஸ்ஸ் அப்பாடா!

தாயுமானவர் மனசை பாத்து "நின் ஜன்ம தேயத்தில் நீ செல்ல வேண்டும்" ன்னு சொன்ன இந்த வழி கஷ்டமான வழி. சிரம சாத்தியம். அதாவது செய்ய முடியும்னாலும் கஷ்டப்பட்டுதான் சாதிக்க முடியும்.

## மனசு எப்படி சமாதியிலே அசைவில்லாம நிக்க முடியும்?

வஞ்சனை பண்ணாம உங்களுக்கு தெரிஞ்சதை சொல்லிக்கொடுக்கிற குருவே நீங்க சொல்கிறது எல்லாம் புரிஞ்சது. இன்னொரு சந்தேகம்.

சமாதி என்கிறது என்ன? மனசு கொஞ்சம் கூட சலனமடையாம, அலையில்லாத கடல் மாதிரியும், காத்தில அசையாத தீபம் மாதிரியும் எங்கும் நிறைஞ்ச பரிபூரண நிலையான பிரம்மாகாரமா ஆகிறதுதானே?

ஆனா இந்த பாழும் மனசோ எப்பவுமே அலை பாஞ்சுகிட்டுதானே இருக்கு? ஊஞ்சல் மாதிரி எப்பவுமே அசைஞ்சு கொண்டிருக்கு. (ஆதி சங்கரர் மனசுக்கு கொடுத்த டெபனஷனே சஞ்சலம்தான்)

இப்படிப்பட்ட மனசு எப்படி பிரம்மகாரமான சமாதியிலே அசைவில்லாம நிக்க முடியும்?

அலையிலா சாகரம் போல் அனிலம் சேரா விளக்கது போல்

நிலையொன்றியநற் சமாதியுற்று நின்றாட்கமலத் தெழும்புரச

நிறைவாரிதியிற் புகுந்தடியேன் நேசித்து அதனில் இருப்பேனோ

திருப்போரூர் சந்நிதி முறை - சிதம்பர ஸ்வாமிகள்.



வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன வழிகளறிந் தேனினியோர் வசனங்கேளீர்

சஞ்சலமற் றகண்ட பூரணமாய்ச் சித்தந் ததாகார மாவதன்றோ சமாதி யோகம்
உஞ்சலையொத் தலைவதுதன் சுபாவ மாகி யொருகணத்திற் பலவுலகா யுதிக்கு மிந்த
நெஞ்சகம்வத் துவிலசையா நிவாததீப நிலையடைவ தெப்படியோ நீர்சொல்வீரே

வஞ்சகமில்(லாத) பரமார்த்த குருவே சொன்ன வழிகள் அறிந்தேன். இனியோர் வசனங்கேளீர். சஞ்சலமற்று அகண்ட பூரணமாய்ச் சித்தம் (மனம்) ததாகாரம் (பிரமம்) ஆவதன்றோ சமாதி யோகம். உஞ்சலை (ஊஞ்சலை) ஒத்து அலைவது தன் சுபாவமாகி ஒரு கணத்தில் பல உலகாய் உதிக்கும் இந்த நெஞ்சகம் வத்துவில் அசையா நிவாததீப நிலை அடைவது எப்படியோ நீர் சொல்வீரே. {மனம் அலையாதிருக்க உபாயம் கேட்டல்}

நல்ல கேள்விப்பா. மனசுக்கு சத்வம் ரஜஸ் தமஸ் ன்னு மூணு குணம் உண்டு இல்லையா? அதில ஒரு நேரத்தில ஒரு குணம்தான் மேலோங்கி இருக்கும். சத்துவம் மேலோங்கின போது ஈஸ்வர பக்தி, கருணை, சாந்தம், ஞானம் ன்னு சன் மார்க குணங்கள் உண்டாகும்.

அதுவே ரஜோ குணம் அதிகமாகும்போது உலக சம்பந்தமான விஷயங்கள், உடம்பு சம்பந்தமான விஷயங்கள், சாத்திர வாசனை இப்படி இதில எல்லாம் விருப்பம் வருகிற குணம் இதெல்லாம் உண்டாகும். தமோ குணம் மேலோங்கித்துனா அகங்காரம், டம்பம், சோம்பல், தூக்கம், காமம், குரோதம் எல்லாம் உண்டாகும்.

இந்த மூணிலே தமத்தை விடணும்ன்னு எல்லாருக்குமே தெரியும். ரஜோ குணத்தையும் ஞானம் தேடுகிறவங்க விடணும்.
இந்த ரஜோ குணத்திலே மூணு விதம்.

உலக வாசனை என்பது உலகத்திலே எல்லாரும் புகழும் படியா மெச்சும் படியா துதிக்கும்படியா நாம இருக்கணும்ன்னு ஆசை படுகிறது.
இப்படி எல்லாரும் பிரியப்படுகிற மாதிரி நடந்து கொள்கிறது இயலாத காரியம். எப்பவும் எல்லாரையும் திருப்தி செய்ய முடியாது. ஒவ்வொரு சமயம் ஒவ்வொத்தரை திருப்தி செய்யலாம் அவ்வளவே. ஏன் மழை பெய்யறது. சிலர் பாழும் மழைன்னு திட்டறாங்க. சிலர் ஆஹா மழைன்னு சந்தோஷப்படறாங்க.
பதிவிரதையான சீதையையே குறை சொல்லித்து இந்த உலகம். அப்புறம் என்ன? அதுவும் 2 யுகங்களுக்கு முன்னே. இப்ப கலி யுகத்திலே கேக்கவே வேண்டாம்.
அதனால நமக்கு சரின்னு தோன்றியதை செய்து கொண்டே போகணும். மத்தவங்க மேம்போக்கா பாத்துட்டு புகழறதும் வேணாம்; இகழறதும் வேணாம். ஆனம் லாபம் எந்த வழியிலோ அதிலேயே போகப்பாக்கணும்.

இரண்டாவது தேக வாசனை. காயகல்பம் எல்லாம் சாப்பிட்டு தேகத்தை நெடுங்காலம் அழியாம அப்படியே வெச்சுக்கணும். சந்தனம், பூ எல்லாம் அணிஞ்சு அலங்காரம் செய்துக்கணும் என்கிற ஆசை. இந்த காலத்திலே வருஷா வருஷம் மெடிகல் செக்அப் ன்னு நிறைய பரிசோதனைகள் எல்லாம் செய்து பல பரிசோதனை கூடங்கள் பிழைக்க வழி செய்து தரோம். நிறைய வைட்டமின் மாத்திரை விற்பனை ஆகுது. ஒரு சின்ன ஜலதோஷம்ன்னா கூட ஒரு சுக்கு கஷாயம் வெச்சு குடிக்காம டாக்டரை தேடி ஓடறோம். மொத்தமா ஒரு 500 ரூபா செலவானாதான் அப்பாடான்னு இருக்கு. நம்மால சில ப்யூட்டி பார்லர்கள் பிழைக்குது. எல்லாம் சில மணி நேரம் மட்டுமே நிக்கிற அலங்காரத்துக்கு! தினம் மூணு தரம் ஆடை மாத்தாட்டா ஏதோ குறைஞ்சு போனதா நினைக்கிறோம்.
ஹும் !
என்னதான் பணக்காரன் ஆனாலும், படிச்சவங்களா இருந்தாலும் ஒரு நாள் யமதர்ம ராஜன் கூப்பிட்டா கிளம்பித்தான் ஆகணும். இதோ இந்த ஐஸ்க்ரீமை சாப்பிட்டுட்டு வரேன்னு சொல்ல முடியாது. டிரெஸ் மாத்திட்டு வரேன்னு சொல்ல முடியாது.

ஞானத்தை அப்பியாசிக்கிறவங்க உடல் மேலே இருக்கிற இந்த அபிமானத்தையும் விலக்கவே வேணும்.

மூணாவது சாத்திர அபிமானம். அதாவது எல்லாரைவிட நமக்கு அதிகமா தெரியணும். நம்மை விட அதிகமா தெரிசஞ்ச ஆசாமி இருக்கவே கூடாதுன்னு ஒரு விசித்திர எண்ணம். "இதை தெரியுமா? அதை தெரியுமா? சொல்லுங்க பாப்போம்!" ன்னு கேட்டுகிட்டே இருப்பாங்க. மத்தவங்க எதை சொன்னாலும் "அப்படியா? என்ன ஆதாரம்?"ன்னு கேட்டு மட்டம் தட்டப் பாப்பாங்க.

ஒரு வித்வான் இருந்தார். அவருக்கு எல்லாத்தையும் படிக்கணும்ன்னு ஆசை. சங்கரர் எழுதின பிரம்ம சூத்திரத்தை ஆராய்ஞ்சார், ஆராய்ஞ்சார், அப்படி ஆரய்ஞ்சார். ஆராய்ஞ்சு உரை எழுதினார். மனவி வீட்டு காரியத்தை எல்லாம் கவனிக்க இவர் பாட்டுக்கு படிச்சுகிட்டே இருப்பார். காலை முதல் இரவு நெடுநேரம் வரை படிப்புதான். நிறைய எழுதினார். ஊர் ஜனங்களும் இப்படி பெரிய வித்வான் நாம் ஊரிலே இருக்கறது பெருமைன்னு தேவையான உதவி எல்லாம் செய்தாங்க. அதனால சாப்பாட்டுக்கு கவலை இல்லாம படிச்சுகிட்டே, எழுதிகிட்டே இருந்தார்.
ஒரு நாள் ஒரு வழியா நூலை எழுதி முடிக்கும் சமயம் இருட்டிவிட்டது. விளக்கு வரக்காணோம். என்னடான்னு தலை நிமிர்ந்து பார்த்தார். ஒரு முதிர்ந்த பெண்மணி மெதுவா கஷ்டப்பட்டுகிட்டு ஒரு விளக்கை எடுத்து வந்தாங்க. "யாருமா நீ?" ன்னு கேட்டார். அவங்க சிரிச்சுகிட்டே "அப்பாடா! இப்பவாவது என்னை யாருன்னு கேக்க தோணித்தே! நான்தான் உங்க மனைவி!" ன்னாங்க.

இவர் திகைச்சு போயிட்டார்! அவ்வளோ வயசாயிடுத்தா! இவ்வளோ நாளா உன்னை கவனிக்காம விட்டுட்டேனேன்னு வருத்தப்பட்டார். அதனால, அப்பதான் தான் எழுதி முடிச்ச நூலுக்கு அவங்க பேரையே வெச்சார். பாமதி. ஸ்ரீ சங்கரர் எழுதிய பிரம்ம சூத்திரத்துக்கு உரைநூல். வித்வான் பேர் கூட பிரபலம் இல்லாம போயிடுத்து. அவர் பேரு வாசஸ்பதி மிஸ்ரர் என்கிறாங்க. மிஸ்ரர் குடும்ப பேரு. வாசஸ்பதி டைட்டில். அவர் பேர் என்ன? தெரியாது! (வாசஸ்பதி என்பதே அவர் பேரா இருக்கலாம் என்கிறார் என் பையர்!) பாமதி இன்னும் பேசப்படுது.

பரத்வாஜர் பத்தி காடகத்திலே ஒரு கதை வருது.

எல்லா வித்தைகளையும் கத்துக்கப்பாத்தார். கத்துக்கொண்டேஏஏஏ... போனார். வாழ்நாள் முடியப்போகிறதுன்னு தெரிஞ்சது. "அடடா, இன்னும் படிக்க நினைச்சது பாக்கி இருக்கே!". இந்திரனை நோக்கி தபஸ் பண்ணார். இந்திரன் வந்து என்ன வேணும்ன்னு கேட்டான். இன்னொரு ஆயுசு கொடுன்னு கேட்டார். சரின்னு அவனும் கொடுத்துட்டு போயிட்டான். மேலே படிச்சு படிச்சு அந்த ஆயுசும் முடிகிற நேரம் திருப்பி தபஸ் செஞ்சு இரண்டாம் முறை ஆயுசை நீட்டிக்கொண்டார். அதுவும் போறலை. மூணாம் முறை தபஸ் செஞ்சப்பா இந்திரன் பாத்தான். "எதுக்கு இப்படி ஆயுசை நீட்டிக்கொண்டே போகிறாய்? என்ன பிரயோசனம்?" ன்னு கேட்டான்.

பரத்வாஜர் எனக்கு எல்லா விதைகளையும் கரைச்சு குடிச்சு முடிக்கணுமேன்னார். இந்திரன் சிரிச்சுண்டே எதிரே இருந்த ஒரு பெரிய மலையை காட்டினான். "இதப்பாத்தியா எவ்வளவு பெரிய மலை? இது போல மனுஷனுக்கு கிடைக்கக்கூடிய சாத்திரங்கள். இதப்பாத்தியா ஒரு கைபிடி அளவு மண். இதான் நீ மூணு ஆயுசுலே கத்துகிட்டது. இதுக்கெல்லாம் முடிவே கிடையாது. "
"எந்த வித்தையை கத்து கொண்டால் எல்லாம் கற்றுக்கொண்டதாகுமோ அந்த பிரம்ம விதையை கத்துக்கப்பாரு" ன்னான்.

பரத்வாஜரும் அதை புரிஞ்சு கொண்டு வேதாந்த மார்கத்திலே மனசை செலுத்தி பெரிய

ரிஷி ஆனார்.

இப்படி கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு ன்னு புரிஞ்சுகொண்டு எதை தெரிஞ்சு கொண்டா நம்ம ஆன்ம சாதனைக்கு பயனா இருக்குமோ அதை மட்டுமே ஆழ்ந்து படிச்சு தெரிஞ்சுகொண்டு உள் வாங்கிக்க பாக்கணும். படிச்சதை அனுபவத்துக்கு கொண்டு வரப்பாக்கணும். இதுவே ஒரு ஞான அப்பியாசி செய்ய வேண்டியது.

மனசோட சத்துவ குணம்தான் உத்தம குணம். ரஜோ குணம் மத்திமம். தமஸ் கீழானது. அந்தக்கரணம்ன்னு சொல்கிறதின் 5 பாகங்களிலே (நினைவிருக்கா?) உள்ளமே சத்துவம். மனம், புத்தி, சித்தம் ரஜஸ். அகங்காரம் தமஸ். இந்த சத்துவமான உள்ளம் மனசோட அருவ பாகம். மற்றது உருவ பாகம். பின்னாலே வரும்.

16.

மனத்தின் முக்குணமும் அவற்றின் காரியமும்.

கருதுமனோ குணமூன்றா மூன்றிலொன்று கதித்தெழுந்தான் மற்றிரண்டுங் கரந்து நிற்கும்.
தருமமிகுஞ் சத்துவமே லானபோது சன்மார்க மான தெய்வ சம்பத்துண்டாம்.
மருவுரசோ குணமாகி லுலகதேக வாதனையாஞ் சாத்திரவா தனையுமாகும்
அருமகனே தமோகுணமே லானபோதி லசுரசம்பத்துண்டாகு மறிந்துகொள்ளே

கருதும் மனோ (மனத்தின்) குணம் மூன்றாம் மூன்றில் ஒன்று கதித்தெழுந்தால் (ஓங்கி எழுந்தால்) மற்றிரண்டும் கரந்து (அடங்கி) நிற்கும். தரும மிகும் (நிஷ்காம்ய புண்ய குணம் அதிகரித்ததால்) சத்துவம் மேலானபோது சன் (நல்ல) மார்கமான தெய்வ சம்பத்துண்டாம். மருவும் ரசோ குணமாகில் (காம்ய புண்ணியத்தால் ரஜஸ குணம் அதிகரித்தால்) உலக, தேக, சாத்திர வாதனையும் (வாசனை) உண்டாகும். அரு மகனே [பாவ கர்மத்தால்] தமோ குணம் மேலான போதில் அசுர சம்பத்துண்டாகும் அறிந்து கொள்ளே.

நமக்கு ரொம்பவே ஆறுதல் தர விஷயம் நம் மனசோட இயற்கையான குணம் சத்துவம் என்கிறதுதான்.
ரஜஸும் தமஸும் கூட வந்து சேர்ந்தது. இயற்கையானதே எப்பவும் நீடிக்கும். இடையிலே வந்ததை நீக்கினால் நீங்கும். சத்வ குணத்தயே மேலோங்கி இருக்கும்படி எப்பவும் பிடிச்சுகிட்டு இருந்தா ரஜோ தமோ குணங்கள் நசியும். உள்ளம் ஆகாய தத்துவம். அதுதானே சத்துவ பாகம்னு பாத்தோம்? சத்துவத்திலேயே மனசு நிலையா இருந்தா ஆகாயம் போல நிர்மலமா போகும். சலனமில்லாம அதி சூக்கும நிலைக்கு போயிடும். அதே போல சலனம் இல்லாத அதி சூக்குமமான பிரம்மத்தோட ஒன்றி போகும்.

17.

மனோலய உபாயம்:

மனது சத்துவ சொரூபமற் றிரண்டும் வந்து கலந்தன வவற்றைமாற் றினார்போம்

தனது சன்மார்கத் தைவிடா திருந்தபோது தமோ குணமும் ரஜோகுணமுஞ் சமிக்கும்பின்னைக்

கன பரிணாமஞ் சலனம் போம் போனக்காற் களங்க மற்றுநின்ற வாகாசம் போலும்

நினதுள மப்படியா மப்பிரமத் தொன்றாய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே

மனதுக்கு [இயல்பானது] சத்வ சொரூபம். மற்றிரண்டும் [இடையே] வந்து கலந்தன. அவற்றை மாற்றினால் போம். (நீக்கினால் நீங்கும்). தனது சன்மார்கத்தை விடாதிருந்த (நீக்காமல் அனுஷ்டித்த) போது [தேகத்தின் இயல்பான] தமோ குணமும் [பிராணத்தின்

இயல்பான] ரஜோகுணமும் சமிக்கும் (நீங்கும்). பின்னை கன (கனமாகிய விஷய) பரிணாமமும் (ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்துக்கு தாவும்) சலனம் போம். போனக்கால் களங்கமற்று நின்ற ஆகாசம் போலும் நினது உள்ளம் அப்படியாம் அப்பிரமத்து ஒன்றாய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந்தானே.

ரஜோ குணம் மனசோட சலனத்துக்கு காரணமா இருக்கு. இந்த சலனம் பிராணனின் காரியம். தமோ குணம் ஸ்தூல பொருளை - அதான் பருப்பொருளை அறிய காரணமா இருக்கு. ஆசை, கோபம், அகங்காரம், டம்பம், சோம்பல், தூக்கம் இதெல்லாம் இந்த 2 குணங்களை சேர்ந்ததுதான். இதெல்லாம் இடையிலே வந்தவை. நிலையா இருக்காது.

நாம் கடைக்கு போறோம். அங்கே கடைக்காரணோட ஏதோ தகராறு. சண்டை போட்டுட்டு புரு புருன்னு வீட்டுக்கு வரோம். எல்லாம் சரி! இந்த கோபம் எவ்வளவு நேரம் இருக்கும். வீட்டிலே குழந்தையை, பேத்தி பெயரனை பாத்ததும் அது காணாம போயிடும். சிரிச்சு விளையாடறோம். இல்லை ஆசை மனைவி காப்பி போட்டு கொண்டுவந்து கொடுத்து சரி விடுங்க அதை ன்னு சொன்னபின் காணாம போயிடும். இதை நிறுத்தி வைக்க முடியாது. யாரானா "இதோ பாருப்பா இப்படியே ரெண்டு நாள் கோபப்பட்டு கொண்டு இரு பாக்கலாம். ஆயிரம் ரூபா தரேன்" னு சொன்னாக்கூட அப்படியே கோபத்தை நிறுத்தி வைக்க முடியாது. அதை கேட்டு உடனே சிரிச்சாலும் சிரிச்சுடுவார்.

இல்லை மாறாக அடிச்சது லக்கு லாட்டரி, இல்லை இணையத்திலே எழுதிய கதைக்கு ஏதோ பரிசு கிடைக்குது; இல்லை சூடான பதிவுகள்ளே உங்க வலைப்பூ போடு போடுன்னு போடுது. ரொம்ப சந்தோஷப்படறோம். எவ்வளவு நேரம்? ரெண்டு மூணு நாள்? அப்புறம்? அதுவும் கொஞ்ச கொஞ்சமா போயிடும். இல்லை ஆபீஸ் டேமேஜரை பாத்த உடனே சட்டுனு காணாம போயிடும். எந்த "தாங்க முடியாத துயரம்" ன்னு சொல்கிற விஷயம் கூட நாளடைவிலே காணாம போயிடுது.

ஏன்னா இதெல்லாம் நம்மளோட சுபாவ குணம் இல்லை.

சத்துவமே சலனமில்லாத நல்ல குணம். விரும்பினா அதிலேயே இருக்கலாம். எவ்வளவு நேரம், நாள் வேணுமனாலும். பத்து ரூபாய் தரேன் இன்னிக்கு சாதமாவே இரு. யார் கோபப்படுத்தினாலும் கோவம் வராம பாத்துக்க ன்னா அது கொஞ்சம் முயற்சியோட முடிகிற காரியம்தான். ஆனா லட்ச ரூபா கொடுத்தாலும் கோபத்தையோ சோகத்தையோ வர வைக்கவும் முடியாது, நிலையா நிறுத்தி வைக்கவும் இயலாது.

சில காட்டுத்தீக்கள் எப்படி உண்டாகுதுன்னா யாராவது பிக்னிக் போயிட்டு பாட்டில் ஏதாவதை காலியானதை அப்படியே போட்டுவிட்டு போயிடுவாங்க. சில நாட்களிலே சூரிய கதிர்கள் அதன் வழியா புகுந்து அது லென்ஸ் மாதிரி வேலை செய்வதாலே குவிஞ்சு பக்கத்தில இருக்கிற காய்ஞ்ச புல்லை பத்த வைக்கும். இது அப்படியே பரவி புதர்கள் மரங்கள் பிடிச்சுக்கொண்டு எரிய ஆரம்பிச்சுடும். இதனாலேயே பாட்டில் கொண்டு போகக்கூடாதுன்னு தடை விதிச்சு இருக்கிற பூங்காக்கள் உண்டு.

சாதாரணமா கடும் கோடையிலே "அப்பா வெயில் கொளுத்துது"ன்னு நாம சொன்னாலும் எவ்வளோ வெயில் அடிச்சாலும் எதுவும் பத்திக்கிறதில்லை. ஆனா குவிக்கப்பட்ட கதிர்கள் ஒரு காட்டையே எரிக்கும். அதைப்போல மனசோட சக்தி சாதாரணமா விஷயங்களை பற்றுகிற ரஜோ, தமோ குணங்களா பரவி இருக்கு. சத்வ குணம் மாறாக நிச்சலனமானது. மனசோட வல்லமை லென்ஸால குவிக்கப்பட்ட வெயில் மாதிரி சத்துவத்தில குவிஞ்சா அதோட வல்லமை காட்டுத்தீ போல அபாரமா ஆகும். அதனால அப்படி குவிக்க முடியறவங்க சாதாரணமா பலரும் செய்ய முடியாததை எல்லாம் செய்வாங்க. முடிவில மாயையையே நீக்கி பரம்பொருளை அடையவும் கூட இந்த சக்தியால செய்ய முடியும்.

இப்படி மூன்று குணங்களிலே ஒன்னு மேலெழும் போது மற்றது அடங்கும் ன்னு யோக

வாசிட்டத்திலேயும் சொல்லியிருக்கு.

வாழுஞ்சத்துவ மற்றையவ்விரண்டையு மறைத்துத்
தாழு மற்றையவ் விரண்டுமத்தமோகுணந்தழைப்பின்
வீழும் சத்துவந் தமங்களவ்விரசதம் விளைவி
னூழிந் மற்றவை யிரண்டுந்தாழ்ந் தொன்றுமிக்குளவாம்.
வாழும் சத்துவ மற்றை அவ்விரண்டையும் மறைத்துத்
தாழும் அற்றை அவ் விரண்டும். அத் தமோ குணந்தழைப்பின்
வீழும் சத்துவம். தமங்கள் அவ்விரசதம் விளைவின்
ஊழின் மற்றவை இரண்டுந் தாழ்ந்து ஒன்று மிக்க உளவாம்.

18.

திருஷ்டாந்தத்துடன் விடை கூறி முடித்தல்

களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர் களங்கமற்ற கண்ணாடி காட்டும் போது
விளங்கியதன் மயமாகி யபேதமாகி விகற்பமின்றி நிருவிகற்ப மானாற் போல
அளந்தறியப் படாவிடிவாய்ச் சத்தாய்ச் சித்தா யானந்த மாம்பிரமத் தைக்கிய மான
உளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே யுலைவெங்கேயென்று சங்கையொழிந்திடாயே

களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர் களங்கமற்ற கண்ணாடி காட்டும் போது

விளங்கிய [து போல] தன் மயமாகி அபேதமாகி விகற்பமின்றி நிருவிகற்பமானால் போல அளந்தறியப் படா விபுவாய் (வ்யாபகமாய்) சத்தாய் சித்தாய் ஆனந்தமாம் பிரமத்து ஐக்கியமான உளந்தெளிந்த படி இருந்தால், உலகம் எங்கே? உலைவு எங்கே? என்று சங்கை ஒழிந்திடாயே

ஒரு மாசில்லாத கண்ணாடி முன்னே இன்னொரு மாசில்லா கண்ணாடியை காட்டினா இதுவும் அதே போல நிர்மலமா தோணும் இல்லையா? அது போல பிரமத்தைப்போல நிர் மலமா, மாசில்லாத, சாந்தமாய் இருக்கிற உன் உள்ளம் அகண்டமாய், ஆனந்தமாய் இருக்கிற அந்த பிரம்மத்தில் ஐக்கியமாகி தெளிவாக நின்னுதுன்னா இந்த உலக தோற்றமும் ஏது? சலனமேது? என்று உணர்ந்து சந்தேகத்தை போக்கிக்க என்கிறார். இப்ப பாத்தவைகளால சலனமில்லாத களங்கமில்லாத உள்ளமே அறிவு ஆன்மா ன்னு புரியும். இது நடக்கிற விஷயங்களுக்கு சாட்சியா மட்டும் இருக்கு.

இந்த பதிவு முழுக்க கொஞ்சம் அட்வான்ஸ்ட் விஷயம்தான். தமிழ்லே படிச்சு மகிழறவங்களுக்கு. புரியாட்டாலும் ஒண்ணும் பிரச்சினை இல்லை. ஏற்கெனெவே சொன்னதுதான் இப்பவும் சில நூல்களிலேந்து மேற்கோள் காட்டப்படுது.

---------------------------

இப்படி எல்லாம் சொன்னதுல ஒண்ணு புரிஞ்சு இருக்கும்.எந்த உள்ளம் சலனமில்லாம (மனசோட குணம்) களங்கம் இல்லாம இருக்கோ அதுவே ஆன்மா, பேரறிவு என்கிறது. இந்த ஆன்மாவுக்கும் பிரமத்துக்கு ஒரே லட்சணம்தான். அதனால இரண்டும் கலந்து ஒண்ணாகும். ஆன்மா பரமான்மா நடுவில பேதம் சொல்கிறவன் ரௌரவம் என்கிற

நரகத்தை அடைவான் ன்னு சொல்லி இருக்கு. இந்த இரண்டு நடுவிலே கட ஆகாசம், மஹா ஆகாசம் போல அளவிலேதான் வித்தியாசம். சொரூபத்திலே இல்லை.

சாந்தமே தற்சாட்சி யே பிரமம்......

போந்த பிரமமே பூரணமா-மாய்ந்துணர்ந்த

சுத்தபரி பூரணமே தோன்றாச் சுவானுபவஞ்

சித்தநிலை தானே சிவம் (சொரூப சாரம்)

கடமடமா முபாதிகளை நேதி செய்யிற்

கடவானும் மடவானு மொன்றே போல

மடமைமுத லுபாதிகளை நேதி செய்யின்

மாசற்ற வான்மாவும் பரமு மொன்றே

யிடமருவும் வேதாந்த விசாரத்தாலே

யிருமைதரு முபாதியெலா நேதி பண்ணித்

தடமருவு மான்மபர வைக்கி யத்தைத்

தடையறவே முமுட்சுவெலா முணர வேண்டும்

(ஈஸ்வர கீதை)

[நேதி செய்யின்= இல்லை என ஆக்குதல்]

தற்போதம் (தான் என்ற எண்ணம்=அகங்காரம்) இழந்து ஆன்மா பரமான்மாவோட ஐக்கியமாகும். இது ஆன்மா வேறேயா இருந்து பரமான்மாவை எதிரே பாத்து "அட! நீயும் நானும் ஒண்ணு"ன்னு கலக்கிறதில்லை. தான் யார் என்கிறதை உண்மையா அறிஞ்ச அளவிலே ஐக்கியம் ஆகிடும். எப்போ தான் ன்னு ஒரு எண்ணம் இருக்கோ அப்ப அது உண்மையான நிலையில்லை.

போதம் பதைப்பறவே பூரணமாம் பூரணமும்

போதம் பதைத்தளவே பொய்யாகு-மீது

விழித்திமைப்பர் நின்றால் வெளியசைந்தாற் காற்றாம்

பழக்கமதைச் சாட்சியைப்போற் பார்

(ஒழிவில் ஒடுக்கம்)

அகண்டாகார சொரூபத்தில் தன்னை இழத்தலே நிலையானது ஆகும். சிவம் ஆன்மாவை விழுங்கித்தான் தானாக பிரகாசிக்கும் என்று சொல்வாங்க. இதனால சிவனுக்கு உயிருண்னி ன்னு கூட ஒரு பேர் வெச்சு இருக்காங்க.

ஆனா அமுதே அயில்வே லரசே

ஞானா கரனே நவிலத் தகுமோ

யானாகிய வென்னை விழுங்கி வெறுந்

தானாய் நிலைநின் றதுதற் பரவே. 28- கந்தர் அனுபூதி

அல்லையுண்ட பகல் போல வவித்தை யெல்லா

மடையவுண்டு தடையறவுன் னறிவைத்தானே

வெல்லவுண்டிங் குன்னையுந் தானாகக் கொண்டு

வேதகமாய்ப் பேசாமை விளங்குந்தானே ..

(அல்லையுண்ட பகல் போல அவித்தை எல்லாம் அடைய உண்டு, தடையற உன் அறிவைத் தானே வெல்ல உண்டு, இங்கு உன்னையும் தானாகக் கொண்டு வேதகமாய்ப் பேசாமை விளக்கும் தானே. 21.)

ஓராமலேயொருகா லுன்னாம லுள்ளொளியைப்

பாரம லுள்ளபடி பார்த்திருந்தால் -வாராதோ

பத்துத் திசையும் பரந்தெழுந்தா னந்தவெள்ளந்

தத்திக் கரைபுரண்டு தான்

(ஓராமலே ஒரு கால் உன்னாமல் உள்ளொளியைப் பாராமல் உள்ளபடி பார்த்திருந்தால்- வாராதோ பத்துத் திசையும் பரந்தெழுந்து ஆனந்த வெள்ளம் தத்திக் கரை புரண்டு தான். 58.)

- தாயுமானவர்

ஐக்கிய நிலையில் தான் அதுவாதல் தவிர முன்னிலையில் ஒன்றுமில்லை. அதனால எதிரிட்டு அறிவதற்கு ஒண்ணுமே இல்லை. தான் அங்கே இல்லை. அதனால அது இதுன்னு சொல்ல ஹேது ஒண்ணுமே இல்லை.

ஊமைகண்ட சொப்பனம்போன் றுள்ளே யறிவதன்றி

நாமிதெனச் சொற்றிடவு நண்ணுமோ-தாமதம்போ

லாங்கதுவாய்ப் போவதலா லன்றிதா மென்றுரைக்க

வீங்கொருவ ருண்டோ விசை.

(ஊமை கண்ட சொப்பனம் போன்று உள்ளே அறிவதன்றி, நாம் இது எனச் சொற்றிடவும் நண்ணுமோ? தாமதம் போல் ஆங்கு அதுவாய்ப் போவதலால் அன்றி தாம் என்றுரைக்க ஈங்கு ஒருவர் உண்டோ இசை.)

ஒன்றென் றிரண்டென்று மொன்றிரண்டே யாமென்று

மென்றோ நீ முத்திதனி லேய்ந்திடுவா - யொன்றென்று

சொல்லு மறிவைத் துரியாதீ தம்விழுங்கிற்

சொல்லுமவ னெங்குற்றான் சொல்.

(ஒன்று என்று இரண்டென்றும் ஒன்று இரண்டேயாம் என்றும் என்றோ நீ முத்திதனில் ஏய்ந்திடுவாய். ஒன்றென்று சொல்லும் அறிவைத் துரியாதீதம் விழுங்கில் சொல்லும் அவன் எங்குற்றான் சொல்.)

-வள்ளலார்.- சிவஞான பிரகாச வெண்பா

ஞான நிலையிலே மனச் சலனமில்லை. பிரபஞ்சம் கனவு போன்ற அனுபவமாக தோன்றும். அதற்கு சந்தேகம் இல்லை என்கிறாங்க.

இப்படியா சொல்லுகிற விஷயங்களாலே என்ன புரியுதுன்னா சீவன் முக்தி என்கிறது மனம் இறந்த நிலை.

இதனால சீடனுக்கு ஒரு சந்தேகம் வருது.....

19.

சத்து ரூபப் பிரமத்திற் சத்துவ மனம் லயித்த போது சத்துக்கள் பிராரத்த போகம் அனுபவிப்பது எப்படி என வினாவுதல்.

ஏகமாய் மனமிறந்தாற் சீவன் முத்த ரிருக்குமட்டும் பிராரத்த மெதினா லுண்பார்

போகமா னதுபுசித்துத் தொலைப்ப தன்றோ புசிப்பதென்றால் மனந்தானும் போன தன்றே

சோகமா மனமிறந்தாற் போகமில்லை தோன்றுமெனின் முத்தரென்று சொலக்கூடாதே

மோகமா மிதுதெளிய குருவே நன்றா மொழிந்தருள்வாய் தெளிவதன்றோ முத்திதானே

ஏகமாய் மனமிறந்தால் சீவன் முத்தர் இருக்கும் மட்டும் பிராரத்தம் எதினால் உண்பார்? போகமானது புசித்துத் தொலைப்பது அன்றோ? புசிப்பதென்றால் மனம் தானும் போனது அன்றே? சோகமாம் (துன்பம் தரும்) மனம் இறந்தால் போகமில்லை. [மனம்] தோன்றும் எனின் முத்தரென்று சொலக்கூடாதே. மோகமாம் இது தெளிய குருவே நன்றாய் மொழிந்தருள்வாய். தெளிவது அன்றோ முத்திதானே.

அடுத்த கேள்வி கேட்கிறான் சீடன்.

குருவே, கர்மாவை அனுபவிச்சுதானே தீர்க்கணும்? அதாவது நாம முன்னே மத்தவங்களுக்கு செய்த தப்புங்களுக்கு இப்ப நாம அனுபவிக்கணும். அப்படி கஷ்டம் அனுபவிச்சாத்தான் அது தீரும்.

சரி, சீவன் முக்தர் ஒத்தர் இருக்கார். அவர் சீவன் முக்தர் என்கிறதால அவருடைய மனம் நாசமாயிடுத்துன்னு தெரியுது.

ஆனா மனசு இருந்தாதானே கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கலாம்? மனசு இல்லைனா கஷ்டம் இல்லை. கஷ்டம் இல்லைனா கர்மவினையை அனுபவிச்சதா ஆகுமா? கஷ்டத்தை அனுபவிக்க மனசு இருக்கிறதா சொன்னா அப்ப அவரை சீவன் முக்தர்ன்னு சொல்ல முடியாதே!

இந்த சிஷ்யன் சமான்யப்பட்டவன் இல்லை.

கரெக்டா பாய்ன்ட பிடிக்கிறார் பாருங்க.

மனசு இல்லாம போகிறது என்கிறது ரெண்டு விதம் அப்பா. ஒண்ணு மனசோட சாதாரண இயல்பு -சொரூபம்- கெட்டு போகிறது. சீவன் முக்தருக்கு இப்படி கெட்டு போகும். இததான் சொரூப நாசம் என்பாங்க. மத்தது மனசு மொத்தமா காணாம செத்துப்போகிறது. அது அரூப நாசம். விதேக முக்தருக்கு (உடல் இறந்து போன முக்தருக்கு) இப்படி இருக்கும்.

மனோ நாசம் இருவிதம் என பதில்

மனநாசஞ் சொரூபமென்று மரூபமென்றும் வகுத்துரைப்பா ரிருவகையா வருமிவற்றில்
வினவாத சீவன்முத்த ரிடத்திலொன்றும் விதேக முத்த ரிடத்திலொன்று மேவுங்கண்டாய்
தனதான சத்துவமாய் மனஞ்சே டித்துத் தமசுரசசு கணசித்தல் சொரூப நாசம்
அனகாசத் துவந்தானு மிலிங்க தேக மடங்கும்போ தடங்குதலே யரூப நாசம்.

மனநாசஞ் சொரூபமென்றும் அரூபம் என்றும் வகுத்துரைப்பார். இரு வகையாய் வருமிவற்றில் வினவாத (கற்க வேண்டியது இல்லாத) சீவன் முத்தர் இடத்தில் ஒன்றும், விதேக (தேகம் இல்லா அரூப) முத்தர் இடத்தில் ஒன்றும் மேவும் (பொருந்தி இருக்கும்) கண்டாய். தனதான (தன் சுபாவமான) சத்துவமாய் மனம் சேடித்து (மிஞ்சி) தமசு ரசசுகள் நசித்தல் சொரூப நாசம். அனகா (குற்றமில்லா) சத்துவம் தானும் இலிங்க (சூக்ஷ்ம) தேகம் அடங்கும் போது அடங்குதலே அரூப நாசம்.

ராஜசமும் தமஸ்ம் போயாச்சுன்னா மனம் தன் இயல்பான சத்துவத்தில இருக்கும். அந்த வகையை சாதாரணமான மனசா சொல்ல முடியாது. அப்படி இருக்கிறவர் நிகழ்காலத்திலேயே எப்பவும் இருப்பார். கிடைச்சதை சாப்பிடுவார். இன்னைக்கு வடை பாயசத்தோட சாப்பாடா ரைட். அடுத்த நாள் வெறும் மோர் சோறுதானா அதுவும் ரைட். நேத்திக்கு பாயசம் கிடைச்சப்ப மகிழ்ச்சியும் இல்லை. இன்னைக்கு கிடைச்ச மோர் சோறு பத்தி வருத்தமும் இல்லை. நான் செய்கிறேன் என்கிற நினைப்பு இல்லை எப்பவுமே இல்லை என்கிறதால இவர் செய்கிற கர்மா எதுவும் இவரை ஒட்டாது. இறைவனோட ஏஜன்ட் மாதிரி தூண்டப்பபட்டதை செய்து கர்மாவை தீத்துப்பார்.

இப்படியாக இவர் கர்மவினையை அனுபவிச்சு தீர்க்கவும் தீர்ப்பார் அதே சமயம் முக்தராகவும் இருப்பார்.

//ஒரு ஜீவந்முக்தருக்கு ஸ்தூல தேஹம் தவிர, லிங்க தேஹம், காரண சரீரம் இரண்டுமே அழிந்து விடுகின்றன என்று பொருள் கொள்ள வேண்டுமா ?
மனம் மாய்ந்து விடுகிறது என்றால் அதை ஒட்டிய அனத்துமே இல்லை என்றாக வேண்டும் அல்லவா?//

நல்ல கேள்வி கேட்டார் தேவ் சார்!

இது வரை பாத்ததின் பின்னணியிலே கொஞ்சம் இதை பாக்கலாம்.

நாம் ஒரு ஜீவன் ஞான சாதனை செஞ்சு மேலே மேலே போகிறதை பாத்து கொண்டு இருக்கோம்.

ஒரு பெரிய திருப்பு முனை ஞானம் உதிக்கிறது. ( அது புதுசா ஒண்ணும் உதிக்கலை. மாயை போய் உண்மை நிலை தெரியுது அவ்வளோதான்.) சாதகன் சந்தேகம், விபரீதம் போல இருக்கிற அபாயங்களை எல்லாம் தாண்டி ஸ்திரப்பட்டாச்சு. இது ஜீவன் முக்த நிலை. ஞானம் வந்தாச்சு; ஆனா இன்னும் இந்த ஸ்தூல சரீரம் விழலை. எப்போ விழும்? ஞானத்தீயிலே சஞ்சித ஆகாமி கர்மாக்கள் எரிஞ்சு போச்சு. மீதி இருக்கிற ஏற்கெனவே ஆரம்பிச்சு விட்ட பிராரத்த கர்மா முடிஞ்சதும் சரீரம் விழுந்துடும்.

அது வரை?

சூக்கும சரீரம் கொஞ்சம் இருக்கும். அந்தக்கரணம் போச்சு. அதனால்தானே அஞ்ஞானம் போகும்? பிரம்மத்தையும் கூடஸ்தனையும் பிரிக்கிறது அதுதானே? பிராணன்கள், ஞான கர்மேந்திரியங்கள் இருக்கும். அதனாலதானே இன்னும் இந்த உடம்பு சிலதை

"உணர்கிறது" ,"நடக்கிறது" "சாப்பிடுகிறது".....?

ஆனா அந்தக்கரணம் போன பிறகு எதோட ஆதீனத்திலே இவை இருக்கும்? ரஜசும் தமசும் அழிஞ்சு போன நிலையிலே சத்துவ மனசு மட்டும் எஞ்சி இருக்கும் இல்லையா? அதோட ஆதிக்கத்திலே இருக்கும். அதான் மனசோட சொரூப நாசம்.

இந்த சத்வ மனசு பிரம்மத்தை தனித்தனியா அணு அணுவா பார்க்கும் நிலையிலே இருக்கிறது. இது சவிகற்ப சமாதி.

இதை சத்வ மனசோட ஆதீனம்ன்னு சொல்லாம ஈஸ்வரனோட ஆதீனத்திலேன்னும் சொல்கிறங்க. அந்தக்கரணம் போயிடுத்து. ஜீவாத்மா பரமாத்மாவோட ஐக்கியம் ஆயிடுத்து. ஆனா இந்த உடம்பு விழணுமே? அது வரை விவகாரம் நடக்கணுமே? ஒரு சைதன்யம் (தேவ் சார் இதைப் பத்தி இன்னும் மின்தமிழிலே எழுதலையே?!) - இயங்கு சக்தி - இல்லாம ஜடப்பொருள் எப்படி இயங்கும்? அதனால அது ஈஸ்வரனோட சக்தியிலே இயங்கும். அப்ப அது ஈஸ்வரனோட விளையாட்டுப்படி இயங்கும். சேஷாத்ரி ஸ்வாமிகள் மாதிரி சாப்பிடக்கொடுத்ததை வீசி எறிஞ்சாலும் எறியும்; பகவான் ரமணர் மாதிரி எல்லாத்தையும் மௌனமா சாட்சியா பாத்து கொண்டு இருந்தாலும் இருக்கும்; ஜட பரதர் போல மலத்திலேயும் சேற்றிலேயும் இருந்தாலும் ஒண்ணும் தெரியாம இருந்தாலும் இருக்கும். பல ஜீவன் முக்தர்கள் - இவங்க ஜீவன் முக்தர்ன்னே தெரியாமலே இருக்கிறவங்க – எப்படி இருந்தாங்களோ அதே போல வேஷம் போட்டுகிட்டு இருந்து நாடகம் ஆடிட்டுப்போனாலும் போகும்!

ஆச்சு. பிராரத்த கர்மா ஒருவழியா அனுபவிச்சு முடிஞ்சு போச்சு. மத்த கர்மா ஏற்கெனவே போயிடுத்து. அந்தக்கரணம் போனப்பவே ஆணவமும் போச்சு. சரீர விவகார நடைமுறைக்கு கனவு போல எஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச மாயையும் போயிடும். இப்படி காரண சரீரம் அழிஞ்சு போனதாலே சூக்கும சரீரத்தை அடுத்த பிறவிக்கு கொண்டு போகிற ஏஜென்ட் இல்லாம சூக்கும சரீரம் எங்கிருந்து வந்ததோ அங்கேயே போய் ஒடுங்கிடும்.

பிரமத்தை தனித்தனியா அனுபவிச்ச சவிகற்ப சமாதி போய் விகற்ப சமாதியும் வந்துடும். அவ்வளோதான். ஜீவன் பிரம்மத்தோட கரைஞ்சு போகிற ப்ராசஸ் முழுமை ஆகிடும்.

இப்படித்தான் நான் புரிஞ்சு கொண்டு இருக்கேன்.

விமர்சனங்களை வரவேற்கிறேன்!

## 21.

உருவமின்றி அருவமாய் உணர்வுருவமான மனத்தினால் சீவன் முத்தி சுகமும் பிராரத்த போகமும் அனுபவிக்கலாம்.

சுத்தமாஞ் சத்துவமே யுண்மையாகுந் துகளிருள்போ னான்மனமென்சொல்லும் போம்போம்

வர்த்தமா னத்தில்வந்த வுணவை யுண்பார் வருவதும்போ வதுநினைந்து மகிழார்வாடார்

கர்த்தரா மகந்தையைவிட் டகர்த்தராகிக் கரணவிருத் திகளவத்தை காண்பாராகி

முத்தரா யிருக்கலுமாம் புசிப்புங்கூடு முட்டிலையென் றறிந்துசங்கை மோசிப்பாயே

சுத்தமாஞ் சத்துவமே உண்மையாகும் (மனதின் உண்மை சொரூபமாகும்) துகள் (ராஜஸம்)

இருள் (தாமசம்) [ஒழிந்து] போனால் மனம் என் சொல்லும் (விவகாரமும்) போம்போம். (இறந்துவிடும்). வர்த்தமானத்தில் (நிகழ்காலத்தில்) வந்த உணவை உண்பார்; வருவதும் (எதிர்காலம்) போவதும் (இறந்தகாலம்) நினைந்து மகிழார் வாடார். கர்த்தராம் (இதை செய்பவன் நான் என்னும்) அகந்தையை விட்டு அகர்த்தராகிக் கரண விருத்திகள் அவத்தை காண்பாராகி, முத்தராய் இருக்கலுமாம் புசிப்பும் கூடும் (பிராரர்த்த போகம் புசித்தலும் ஆகும்) முட்டிலை (தடை இல்லை) என்றறிந்து சங்கை (சந்தேகம்) மோசிப்பாயே (நீக்குவாயே).

22

சத்துவ மனம் பிராரர்த்த கர்மப்படி விவகாரம் செய்கையில் சமாதியில் இருத்தல் எப்படி?

விவகார வேலையெலாஞ் சமாதியென்றால் விகற்பமன்றோ மனமலைந்து விடாதோ விட்டால்
அவதான நழுவுமன்றோ வென்றாயாகி லதற்கொருதிட் டாந்தங்கே ளாசை கொண்டு
நவமாகப் பரபுருடன் றன்னைகூடி நயந்தசுக மநுபவித்த நாரி நெஞ்சந்
தவமாக மனைத்தொழில்கள் செய்யும்போதுந் தழுவியநு பவித்தசுகந் தனைவிடாதே.

"விவகார வேலை எலாம் சமாதியென்றால் விகற்பம் (விரோதம்) அன்றோ? மனமலைந்து விடாதோ? விட்டால் அவதானம் (சொரூபம் நாமென்னும் ஞான நிச்சயம்) நழுவுமன்றோ?" என்றாயாகில் அதற்கொரு திட்டாந்தம் கேள். ஆசை கொண்டு நவமாகப் பரபுருடன்தன்னை கூடி நயந்த சுகம் அநுபவித்த நாரி நெஞ்சம் தவமாக மனை தொழில்கள் செய்யும்போதும் தழுவி அநுபவித்த சுகந்தனை விடாதே. (அது போல என அறிவாய்) [சுத்த சத்துவம் சொரூபானந்தத்தில் அழுந்தியிருப்பதால் விவகாரம் செய்யும்போதும் சமாதியிலேயே இருக்கும்]

" பிரம்மத்தில லயமாகி சமாதில இருப்பார்ன்னு நினைச்சா, நீங்க பாட்டுக்கு வியவகாரம் செய்வார் என்கிறீங்க. இது விரோதமா இருக்கே. வியவகாரம் னா மனசு அதில ஈடுபடாதா. ஈடுபட்டா மனசு அலையாதா? அப்படி ஏக்காக்கிர சித்தம் இல்லாம மனசு அலைந்தா அது சமாதி இல்லையே?" என்கிறான் சீடன்.

மனசு ஒரு இடத்தில இருக்க உடம்பு பாட்டுக்கு வேற வேலையை பாக்கிறது நமக்கு ஒண்ணும் புதுசு இல்லையே! அந்த காலத்தில அப்படி இருந்ததோ என்னமோ? பூஜைன்னு உட்காந்து ஆரம்பத்தில ரொம்ப கவனத்தோட ஆரம்பிச்சு கொஞ்ச நேரத்தில ஆபீஸ்/ வீட்டு பிரச்சினை ன்னு மனசு வேற எங்கோ போயிடுது. கை கால் பாட்டுக்கு தானியங்கியா பூஜைக்கான படிகளை சரியா செஞ்சுகிட்டே போகுது. கடைசில கொஞ்சம் கூட மனசு ஈடுபடாம பூஜையை முடிச்சு எழுந்திருக்கிறதும் உண்டு. இது வருத்தத்திலேயே இருந்து கொண்டு காரியம் செய்கிற விஷயம்.

வீட்டிலே டிமிக்கி கொடுத்துட்டு இரவு காதலனை சந்திச்சு சல்லாபிச்சுட்டு அடுத்த நாள் மனசு அந்த சுகத்திலேயே இருக்க தானியங்கியா வீட்டு வேலைகளை செய்கிற பெண் போலன்னு உதாரணம் கொடுக்கறார் ஸ்வாமிகள்.

என்ன இப்படி எல்லாம் ஒரு உதாரணமா என்கறீங்களா? கொஞ்சம் நிரடலா இருந்தாலும் அது ரொம்பவே பொருத்தமான உதாரணம். உடல் இன்பமே இப்படி ஒரு நிலையை கொடுக்கும்னா பிரம்ம ஆனந்தம் ஏன் தராது?

சொல்ல வந்தது மனசு ஒரு இடத்தில இருக்க காரியம் பாட்டுக்கு செய்ய முடியும் என்கிறதுதான். அதாவது பிரம்மத்தில சித்தம் இருக்க வியவகாரங்களையும்

செய்யக்கூடும்.

"தாதி விளையாடி இருகை வீசி வந்தாலும் தாதி மனம் நீர்க்குடத்தேதான்" என்கிறார் பட்டினத்தார்.

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினுங்

குளிர்தீம் புனற்கைஅள்ளிக்

கொள்ளுகினும் ........

சந்ததமும் நின்னருளை மறவா வரந்தந்து

தமியேனை ரட்சைபுரிவாய்

சர்வபரி பூரண அகண்டதத் துவமான

சச்சிதா னந்தசிவமே.11.

- தாயுமானவர்.

இப்படி தொழில் செய்கிற சீவன் முக்தன் ஒரு சாட்சியாக மட்டுமே இருக்கிறான். அட! ஒரு சாதாரண மனுஷனே சில காரியங்களை ஒரே நேரத்திலே செய்கிறாங்க. மெய்ல் பாத்துகிட்டே சாட்டறாங்க. வேலை பாத்துக்கிட்டே ப்ளாக் போஸ்ட் பண்ணறாங்க.

இப்படி இருக்க சீவன் முக்தருக்கு இது பெரிய காரியமா?

ஒருவன் ஒரு பெரிய ஏரிக்கரை மேலே இருக்கிறான். ஒரு பக்கம் பாத்தா ஏரியிலே தண்ணி; விசாலமா, பிரிவில்லாம ஒண்ணா இருக்கிறது. அவனே வெளிப்பக்கம் பாத்தா வீடு ரோடு, மிருகங்கள், பல மனிதர்கள், இன்ன பிற துன்பம் தருவன  எல்லாம் தெரியுது.

இதே போல சீவன் முக்தன் உள்ளே பாக்கும்போது களங்கமில்லாத, சலனமில்லாத, ஏகமானதாக, அகண்டாகாரமா ஆன்மாவை பாக்கிறான்.

இவனே பகிர் முகமா பாக்கிறப்ப நானா ரூபமா நாம ரூப பிரபஞ்சத்தை பாக்கிறான். ஆனா இந்த உலக விவகாரங்களிலே வெறும் சாட்சியா இருக்கிறதே அவனோட இயல்பா இருக்கு. நமக்கு எப்படி "நான் செய்கிறேன்" என்கிறது இயல்பா இருக்கோ அதே மாதிரி இவருக்கு சாட்சியா இருக்கிறது இயல்பா இருக்கு.

## 23.

### அகண்ட மாகர்த்தனாக சீவன் முத்தர் கர்த்தத்வம் வராதபடி பிராரர்த்த போகம் புசித்தல் 3 வகை.

தேகந்தன லனாகியகர்த் தனாகிச் சீவனின்றிப் பிரமமாய்த் தெளிந்தமுத்தன்

போகத்தை யுண்பனென்றாக் கருத்தாவாமே பூரணமாம கர்த்தனுக்குப் போகமுண்டோ

சோகத்தை யறுத்தருளுங் குருவேயிந்தத் துகளறுக்க வேண்டுமென்று சொன்னாயாகில்

மாகர்த்தன் மாபோகி மாத்தியாகி வகை மூன்றா யவரிருக்கு மகிமை கேளாய்.

தேகந்தன் அலன் (தேகம் தான் இல்லை என) ஆகி அகர்த்தனாகிச் சீவன் இன்றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன் போகத்தை உண்பன் என்றால் கருத்தாவாமே (செயல்

செய்பவனாகுமே) பூரணமாம் அகர்த்தனுக்குப் போகமுண்டோ? சோகத்தை அறுத்தருளும் குருவே இந்தத் துகளறுக்க (சந்தேகத்தை நீக்க) வேண்டுமென்று சொன்னாயாகில், மாகர்த்தன் மாபோகி மாத்தியாகி வகை மூன்றாய் அவர் இருக்கும் மகிமை கேளாய்.

இன்னும் சமாதானம் ஆகலை. அதெப்படி தேகம் நானில்லை ன்னு ஆகி எதுவும் செய்யாதவன் சீவன் அல்லன் பூரணன்னு ஆன அப்புறம் எதுவும் செய்யாதவனுக்கு விஷய அனுபவம் - கர்ம பலம் அனுபவிக்கிறது - இருக்கும் ன்னு கேட்க நினைக்கிறாய்.

சீவன் முக்தன் உடம்பு சம்பந்தமான அபிமானம் இல்லாதவன். அதாவது தனக்கு ஸ்தூல சூக்கும காரண தேகங்களின் சம்பந்தம் இருக்கிறதாகவோ தான் இந்த ஜாதியை சேர்ந்தவன் ன்னோ உணர்வு இல்லாதவன்.

அவன் தொழிலற்றவன். அதாவது நான் இதை செய்யறேன் ன்னு உணர்வு இல்லாதவன். தான் சீவன் இல்லை பிரம்மம் ன்னு தெரிஞ்சு எப்பவும் பிரமத்தை சாக்ஷாத்கரிச்ச நிலையில நிக்கிறவன். அப்படிப்பட்டவன் போகங்களை அனுபவிக்கிறான்னா போக்தாவாகவும் தொழில் செய்யறான்னா கர்த்தாவாகவும் ஆயிடுவானே? பரிபூரண பிரம்மத்துக்கு பிராரப்த போகம் ஏது?

அப்படி கேக்க நினைக்கிறாய். அப்படின்னா  சீவன் முத்தர் மாகர்த்தன் மாபோகி மாத்தியாகி ன்னு இருக்கிற சமாசாரம் கேளு.

24.

மா கர்த்தன் இலக்கணம்:

செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்குங் காந்தச் சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்குமாபோல்

செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்கு மென்முன் சடமான வுலகெல்லாஞ் சேட்டை செய்யும்

மெய்கலந்த விந்திரிய விகாரரூப விவகார விருத்திக்கும் விருத்திதானா

மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சியேநான் வெயில் போலென் றுறைத்தவனே விபுமாகர்த்தன்.

செய்கையும் செய்விக்கையும் அற்றிருக்கும் காந்தச் சிலை(கல்) மலை முன் இரும்புகள் சேட்டிக்குமா (நகருதல்) போல், செய்கையும் செய்விக்கையும் அற்றிருக்கும் என் முன் சடமான உலகெல்லாம் சேட்டை செய்யும் (தானே இயங்கும்). மெய் கலந்த இந்திரிய விகார ரூப விவகார விருத்திக்கும், விருத்தி தானாம். (சத்துவ விருத்திக்கும்) மெய்கலந்த (லயமான) சமாதிக்கும் சாட்சியே நான். வெயில் போல் (சூரியன் உலக விவகாரத்துக்கும் விவகாரம் இன்மைக்கும் சாட்சியாய் உள்ளது போல) என்றுறைத்தவனே விபுமாகர்த்தன்.

அமேரிக்காவிலே ஒரு இடம். அங்க குறிப்பிட்ட இடத்தில பூமியோட ஈர்ப்பு வித்தியாசமா இருக்கும். பக்கத்து பக்கத்துல நிக்கிறவங்க சாய்ஞ்சுகிட்டு இருக்கிறதா தெரியும். அந்த இடத்து காந்த தன்மை அப்படி. அது முனைஞ்சு மக்களை சாய்கணும்னா சாய்குது? அது பாட்டுக்கு அது இருக்கு. பக்கத்துல போற மத்தவங்கதான் பாதிக்கப்படறாங்க.

இப்படி காந்த மலை தான் தானா இருக்க மத்த இரும்பு பொருள் எல்லாம் தானா ஈர்க்கப்பட்டு நகருகிறா மாதிரி; சீவன் முக்தன் தான் செயலில்லாம செய்விக்கையும் இல்லாம இருக்க உலக விவகாரங்கள் பாட்டுக்கு தானா நடக்குது.

சூரியன் பாட்டுக்கு குஷியா கிழக்கே உதிக்கிறார். இந்த கோடையில எல்லாரும் திட்டி தீர்க்க காய்ஞ்சுட்டு நிதானமா அஸ்தமிக்கிறார். யாரையும் வருத்தனும்னு அவர் நினைக்கிறதில்லை. காலையில அவரை பாக்கிற தாமரை சந்தோஷமா மலருது. மத்த

செடிகளில இருக்கிற பூக்களும் மலருது. ஆனா தரையில கிடக்கிற பூ வாடிப்போகுது. புல்லு மேல இருந்த பனி காணாமப்போகுது. ஈரம் காயுது. தண்ணி ஆவியா போகுது. சூரியனை பொருத்த வரை இப்படி நடந்தா என்ன? நடக்காட்டா என்ன? எப்படி இருந்தாலும் அதனால அவருக்கு தாக்கம் ஒண்ணுமில்லை. தன் சந்நிதான விசேஷத்தால உலகத்தில இருக்கிற பொருட்கள் நாநா விகாரங்களை அடைஞ்சாலும் தான் தாக்கமில்லாம சூரியன் சாட்சி மாத்திரமாய் இருக்கிறாப்போல; தேக சம்பந்தமான இந்திரிய விஷயங்களோ, மனசு சம்பந்தமான விஷயங்களோ, இல்லை பிரம்ம சமாதியோ எல்லாத்துக்கும் சாட்சியா மட்டும் இருக்கிறதாக திட அநுபவத்தில இருக்கிறவன் மாகர்த்தன் ஆவான்.

காட்டில தீ பிடிச்சுக்குது. அது என்ன இது புளிய மரம், இது சந்தன மரம், இது எட்டி மரம், இது காஞ்ச மரம், இது பச்சை மரம் ன்னு பாக்கிறதா? எல்லாத்தையும்தான் எரிக்குது. அத போல சாப்பிடுற பொருள்ல இது சுத்தம், இது அசுத்தம், இது குற்றம் உள்ளது, இது குற்றம் இல்லாதது, இது காரம், இது சுவையானது ன்னு பிரிச்சு பாக்காம பொறுமையோட கிடைச்சதை சாப்பிடுகிறவன் மாபோகி.

சின்னது, பெரிசு, தன்னோடது, மத்தவங்களுது ன்னு வித்தியாசம் பார்க்காம நல்லது, கெட்டது எது வந்தாலும் எதிலும் தாக்கமில்லாம இருக்கிறவனே மாதியாகி.

இப்படி மாகர்த்தன் மாபோகி மாதியாகியா இருக்கிறவரே மோக்ஷத்தை உடையவர் ஆவார்.

## 25.

மாபோகி மாத்தியாகி இலக்கணம்:

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தங்சுத்த மபத்தியம் பத்தியமென வூணாய்ந்திடாமல்

பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத்தீப்போற் போகங்கள் புசிப்பவன் மாபோகியாகும்

சிறிதுபெரிது கடனதந்நி யங்கணன்மை தீமைகள் சேரினும்படிகச் செயல்போற்சித்தம்

வெறிதிருக்கு மவனேமாத்தி யாகியாவான் விரதமிம்மூன் றுடையவரே வீடுளோரே.

அறுசுவையின் குணம் குற்றம் அசுத்தம் சுத்தம் அபத்தியம் பத்தியம் என ஊண் ஆய்ந்திடாமல் பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத்தீப்போல் போகங்கள் புசிப்பவன் மாபோகியாகும். சிறிது பெரிதுகள், தனது அந்நியங்கள், நன்மை தீமைகள் சேரினும் ஸ்படிகச் செயல் போல் சித்தம் வெறித்திருக்கும் (பற்று அற்று இருக்கும்) அவனே மாத்தியாகி ஆவான். விரதம் இம்மூன்று உடையவரே வீடுளோரே.

இன்னும் சந்தேகம் போகலை. கர்ம வினையால இந்த உடம்பு கிடைச்சு இருக்கு. பிராரத்தப்படி செயல்களை செய்கிறார் உலக மக்களுக்கு தேவையானதை செய்யறார் ன்னா எல்லாத்தையும் செஞ்சு முடிச்சவர்ன்னு அவரை சொல்லறாங்களே, அதெப்படி?

## 26.

கிருத கிருத்தியன் இலக்கணம் தெரியும் பொருட்டு வினா

மெய்யும் கொண்டு பிராரத்தத் தருவிதிவழி நின்றிடவும்

உய்யுங்கன்மிகளுக் கநுகுணமா வுறுதொழில் செய்திடவும்

செய்யுஞ்செய்கை முடிந்தவனென் றுரைசெப்புவதெப்படியோ

நையுந்துன்ப மகற்றிய குருவே நலமாவருள்வீரே.

மெய்யும் (உடலையும்) கொண்டு பிராரத்தம் தரும் விதி வழி நின்றிடவும், உய்யும் கன்மிகளுக்கு அநுகுணமாய் (அநுகூலமாய்) உறு தொழில் (பொருந்தும் கர்மாக்களை) செய்திடவும், செய்யும் செய்கை முடிந்தவன் (ஞானியானவன் கிருத கிருத்தியன்) என்று உரை செப்புவது எப்படியோ? நையும் துன்பம் அகற்றிய குருவே நலமாய் அருள்வீரே. [தொழில் உண்டாக்கும் தேகமும் பிராரத்த கர்மமும் உள்ள சீவன் முத்தர் விவகாரம் செய்ய எப்படி அவரை கிருத கிருத்தியன் எனலாம்?]

உலகத்தில மக்கள் அஞ்ஞானத்தில இருந்துகொண்டு செய்கிற செயல்கள் மூணு. முதல்ல உலக போகங்களை அனுபவிக்க உழவு, வியாபாரம், சேவகம் முதலியதை செய்கிறது. அவை லௌகீக தொழில்கள். ரெண்டாவது பரலோக போகங்களுக்காக செய்கிற தரும கைங்கரியங்கள், யாகங்கள், யக்ஞங்கள் முதலானவை. மூணாவதா ஞானத்தை விரும்பி செய்கிற சாத்திரங்கள் கேட்டல் மனனம் செய்தல் போன்றவை.

இதிலே முதல் இரண்டும் இந்த உலகத்திலேயும் அடுத்த உலகத்திலேயும் மகிழச்சியோட இருக்க செய்கிறவை. இதெல்லாம் மண், பெண், பொன் மேல ஆசை வெச்சவங்களுக்குதானே. நான், என்னுது என்கிற நினைப்பு இருக்கிறவங்களுக்குதானே. ஞானிக்கு இதால ஒரு பிரயோசனமும் இல்லை.

மூணாவதா பாத்ததோ எல்லாமே ஞானத்துக்காக செய்கிறது. இவனுக்குத்தான் ஞானம் வச்தாச்சே. அப்புறம் அதால என்ன பயன்?

27.

விடை:

ஆடவர் செய் தொழின்மூவகை யாகுமவித்தை வசத்துறுநாள்
ஏடணைமமதை யகந்தையுளார்க்கே யிகபர விவகாரம்
வீடணுகுவமெனு மிச்சையுள்ளார்க்கே வித்தை படிப்பதெல்லாம்
பாடன்மிகுந் தொழிலாற் பலனுண்டோ பரிபூரணமானால்

ஆடவர் செய் தொழில் (உழவு முதலியன, யாகம் முதலியன, கேட்டல் முதலியன) என மூவகையாகும். அவித்தை வசத்துறு (பொருந்தியுள்ள) நாள் (காலத்தில்) ஏடணை (ஆசை) மமதை அகந்தை உள்ளார்க்கே இக (உழவு முதலிய), பர (யாகம் முதலிய) விவகாரம். வீடு அணுகுவம் எனும் இச்சை உள்ளார்க்கே வித்தை படிப்பது (கேட்டல் முதலிய தத்துவ ஞானம் சம்பாதித்தல்) எல்லாம். பாடம் மிகுந் தொழிலால் (சிரவணாதி மோட்ச செய்கைகளால்) பலனுண்டோ பரிபூரணமானால்?

அது சரி ஐயா யாருக்கு இக பர போகங்களில விரக்தி வந்தாச்சோ அவங்க மெய் ஞாகத்தை தேடறதாலே அவங்களுக்கு முதல் ரெண்டு வேலையும் வேண்டாம்தான். ஆனா ஞானம் வந்தாச்சுன்னா இவர் பிரம்ம அனுபவத்தில சித்தம் நிலையா இருக்க கேட்டல், (சாஸ்திர விசாரம்) மனனம், நிதித்யாசனம் எல்லாம் செய்ய வேண்டாமா? (அப்படி செய்தால் தொழில் இல்லாதவன் ஆக மாட்டானே)

சீவன் முத்தருக்கு சிரவணாதி தேவையில்லை என்றது உறுதிபட வினா

குரவர்சிகா மணியேகேளீர் நீர்கூறிய வழியொக்கும்
பரமுடனிகமு மிழந்தவரன்றோ பழகுவர் மெய்ஞ்ஞானம்
விரவு முயற்சியின் மீண்டவரதை யினிவேண்டுவரோ வேண்டார்
சிரவணமனனா திகள்வேண்டாவோ சித்த முறைத்திடவே

குரவர் சிகாமணியே கேளீர்! நீர் கூறிய வழி ஒக்கும் (ஒத்துப்போகும்). பரமுடன் இகமும் (இச்சை) இழந்தவர் அன்றோ மெய்ஞ்ஞானம் பழகுவர்? [இகபரதொழில் சனன மரணம் தருவது என கருதி அதிலிருந்து] விரவு முயற்சியின் மீண்டவர் அதை இனி வேண்டுவரோ? வேண்டார். சித்தம் உறைத்திடவே (ஆத்ம சொரூபத்தில் மனது திடப்படும் பொருட்டு) சிரவண மனனாதிகள் (அவர்களுக்கு) வேண்டாவோ?

இத கேட்டு குருவுக்கு ரொம்ப சந்தோஷம்.

ஒளிருகிற மகனே கேளுப்பா! யார் ஞானத்தை தேடி பயிற்சி செய்யறாங்களோ அவங்களுக்குத்தான் இதெல்லாம் செய்ய தேவை இருக்கு. தான் பிரமம்ன்னு உணராதவங்கதான் கேட்டல் செய்யணும். யாருக்கு சந்தேகம் இருக்கோ அவங்கதான் மனனம் செய்யணும். யாருக்கு விபரீதப்பேய் என்கிற மலினமான வாசனை இருக்கோ அவங்கதான் நிதித்யாசனம் செய்யணும். ஆனா பிரம்ம சாக்ஷாத்காரம் அடைஞ்ச ஞானிக்கு இதெல்லாம் ஒண்ணுமே வேண்டாம்.

29.

உத்தரம்:

கிளர்மகனேகேள் தத்துவமறியார் கேட்டல்செயக் கடனே
தளர்வறு சிந்தித்தலின் முயல்வார்சிலர் சந்தேகங்களுளார்
தெளிதலினிற்பார் விபரீதப் பேய்தீரா வாதனையோர்
வெளியுருவா யறிவாய் நிறைவாயினர் வேண்டுவதொன்றுண்டோ

கிளர் மகனே (ஒளிரும் மகனே) கேள். [தான் பிரமம் என்று] தத்துவம் அறியார் (உணராதவர்) கேட்டல் செயக் கடனே. (சிரவணம் செய்தல் முறையே). தளர்வு அறு சிந்தித்தலில் முயல்வார் சிலர் (அவர்கள்) சந்தேகங்கள் உள்ளவர். விபரீதப் பேய் தீரா வாதனையோர் (காமம் முதலிய வாசனைகளால் சீவேஸ்வர ஜகத் ஆகிய பிசாசம் நீங்காத விபரீத பேத புத்தி நீங்காதவர்கள்) தெளிதலில் நிற்பார். (நிதித்யாசனம் செய்வர்). வெளியுருவாய் (பரா ஆகாசமாக) அறிவாய், நிறைவாயினர் (பரி பூரணமாக உள்ளவர்) வேண்டுவது ஒன்றுண்டோ? [இல்லை]

அப்பா நீ சொல்கிறது சரிதான். ஞானிக்கு "நான்" இருக்க முடியாது.

நாம் ஒரு கனவு காண்கிறோம். முழித்து கொண்ட பிறகு அதைப்பத்தி மத்தவர்கிட்டே

சொல்கிறோம். "நேத்து ஒரு கனா கண்டேன். தெருவிலே நடந்து போய் கொண்டு இருந்தேனா? அப்போ அங்கே ஒரு ஆனை வந்தது. என்னை துதிக்கையால அப்படியே தூக்கித்து" ன்னு கதை சொல்கிறோம். அப்படி ஒண்ணுமே நிச்சயம் நடக்கலை. அது நமக்கும் தெரியும்; கேட்கிறவருக்கும் தெரியும்.

இதே போலத்தான் ஞானியும் பூர்வ வாசனையால போனேன், வந்தேன் ன்னு சொல்லுவாங்க. இருந்தாலும் அவங்களுக்கு அது பொய்ன்னு நிச்சயமா தெரியும். அவனுக்கு ஜீவ பாவமே இல்லை. பிரம்ம சொரூபம் தான் என்கிற அனுபவமே இருக்கு. உடல் கீழே விழுகிற வரை அவன் அப்படித்தான் இருப்பான்.

ஒரு ராஜா கனவு கண்டு விட்டு "நான் ஒரு பிச்சைக்காரனா இருந்தேன்; பிச்சை எடுத்தேன்" ன்னு சொன்னாலும் அவன் பிச்சைக்காரனா உணருகிறதில்லை. தான் ராஜா என்கிறது சர்வ நிச்சயமா அவனுக்கு தெரியும். அது போல பிரம்ம ஞானிக்கும் தான் பிரம்மமென்ற அனுபவமே இருக்கும். "தான்"ன்னு சொன்னாக்கூட அது அவன் மனசை பாதிக்காததே. அப்போதைக்கு அப்போது அதெல்லாம் கனவு போல போயிடும். சாதாரண மக்களுக்கோ தான், செய்தது, போனது போன்ற எல்லாம் நினைவிலேயே நிக்கும்.

30.

விவகாரம் நீங்கிய சீவன் முத்தருக்கு எப்படி விபரீதமுண்டாகும்?

ஐயாகேளீர் தத்துவஞானியு மஞ்ஞானிகள் போலே
செய்யாநின்றேன் கண்டேனுண்டேன் சென்றே னெனலாமோ
பொய்யாம்விபரீதங்க ளவற்க்குப்போயின வென்றீரே
மெய்யாம் பிரமவிகாரமி தன்றேவெளியா வுரையீரே

ஐயாகேளீர்! தத்துவ ஞானியும் அஞ்ஞானிகள் போலே செய்யா நின்றேன், கண்டேன், உண்டேன், சென்றேன் எனலாமோ? பொய்யாம் விபரீதங்கள் அவற்க்குப் போயின என்றீரே? மெய்யாம் பிரம விகாரம் இதன்றே? வெளியா (வெளிப்படையாக) உரையீரே.

31.

விவகாரம் பொய்யானால் அவை நீங்க வேண்டாவா?

ஓய்ந்தகனாவிற் கண்டபழங் கதையோ துவன் வாதனையால்
ஆய்ந்தறி வுற்றவ னப்படிசெப்புவ னாபாசனு மாகான்
மாய்ந்தத னுடல் வேமளவும் விண்ணவன் மனிதனெனப் படுவான்
வீய்ந்தசிதா பாசன்போமளவும் விவகாரந் தொடரும்

ஓய்ந்த கனாவில் கண்ட பழங் கதை வாதனையால் (பூர்வ வாசனையால்) ஓதுவன் (சொல்வான்) [போல்] ஆய்ந்து அறிவுற்றவன் அப்படி செப்புவன் [ஆனாலும்] ஆபாசனும் ஆகான். மாய்ந்த தன் உடல் வேகும் அளவும் விண்ணவன் (தேவன்) மனிதன் எனப் படுவான். வீய்ந்த சிதாபாசன் போம் அளவும் (விதேக முத்தி வரை) விவகாரம் (செய்தேன் எனல் முதலிய விவகாரம்) தொடரும்.

[கனவு கண்டவன் கண்ட கனவை கூறுகையில் அது கனவுதான் என்ற அறிவு இல்லாமல் போகவில்லை, அது போல பிரமம் நான் என்று அறிந்த ஞானியும் பூர்வ வாசனையால் "சென்றேன், உண்டேன் என சொல்லும்போதும் அவனுக்கு ஜீவ பாவமில்லை. அஞ்ஞானி அப்படி சொல்லும்போது நான் என்ற பாவம் இருக்கிறது. அவனுக்கு விவகாரங்கள் மனதில் தங்கிவிடும். ஞானிக்கு தங்காது. கனவு போல் அப்போதைக்கப்போது போய்விட அவன் பிரம சொரூபமாகவே இருப்பான். ]

## 32

ஆனாலையா குருவே காண்ப தசத்திய மென்றாலும்
நானாவிவ காரந்துய ரலவோஞான சுகந்தருமோ
போனாலன்றோ நன்றா நிட்டை புரிந்திடல் வேண்டாவோ
தானாநிட்டை புரிந்தாற் செய்கை தவிர்த்தவனெப்படியோ

ஆனால் ஐயா குருவே காண்பது அசத்தியம் என்றாலும் நானா விவகாரம் துயரலவோ? ஞான சுகந்தருமோ?[இரண்டற்ற அகண்டாகார அனுபவத்தால் உண்டாகும் ஞான சுகம் அப்போது இருக்குமோ?] [விவகாரம்] போனால் அன்றோ நன்றா நிட்டை புரிந்திடல்? (நிற் விகற்ப சமாதியில் இருத்தல்) அது வேண்டாவோ? தானா நிட்டை புரிந்தால் செய்கை தவிர்த்தவன் எப்படியோ? [ஒரு இடத்தில் அமர்ந்து தேக சேட்டையை நிறுத்தி மனதை ஒடுக்கி நிஷ்டை பழகுவதும் ஒரு தொழில்தானே? அப்படி இருக்க எப்படி தொழிலற்றவன் என்று சொல்லலாம்?]

ஞானி தொழில் செய்கிறானா இல்லையா ந்நு உறுதி செய்துக்க திருப்பியும் கேட்கிறான் சீடன். சரி உடம்பு இருக்கிற வரை ஏதாவது விவகாரம் இருக்கும்ன்னு சொல்லறீங்க. நாம கண்ணால பாக்கிறதெல்லாம் அசத்தியம்ன்னா அதோட விவகாரங்களில சம்பந்தமானா துன்பம்தானே. இரண்டற்ற அகண்டாகார அனுபவத்தால் உண்டாகிற பிரம்ம ஆனந்தம் - ஞான சுகம் அப்போது இருக்குமா என்ன? அது வேணுமானா நிஷ்டை பழகணும்தானே? அப்படி நிஷ்டையில உக்காந்தா அது தொழில்தானே?

அதாவது சும்மா மனசை அடக்கி உட்காருகிறது கூட வேலைதானே என்கிறான் சீடன்.

அப்பா, பிராரப்த கர்மா கழிகிற வரை விவகாரம் இருக்கத்தான் இருக்கும். அப்படி இல்லாட்டா அது தீர முடியாது. தியானம், சமாதி எல்லாம் நிச்சயம் வேலைதான். சந்தேகமில்லை. அதெல்லாம் அந்தக்கரணத்தால செய்கிற வேலைதான். துரிய நிலையை அடைஞ்ச சாக்ஷாத்காரத்தை அடைஞ்சவங்களுக்கு செய்கிற வேலைன்னு ஒண்ணும் கிடையாது. அப்படி செய்தா அவங்க சீவன் முக்தன் இல்லை. இப்படி சர்வ நிச்சயமா சொல்கிறார் குரு.

## 33.

கிருத கிருத்திய ஞானிக்கு விவகாரம் தீருங்காலமும் அவன் யாதொரு தொழிலும் செய்வதில்லை எனவுங் கூறல்:

தெரிதரு மகனேயாரம் பத்தொடுதீரும் விவகாரம்
உரியதியானமும் விவகாரங்களு முள்ள தொழிலன்றோ
துரியபரம்பொரு ளானவர் வேறொருதொழில் செய்வதுமுண்டோ
அரியசமாதிகள் பழகுவனே லவனாரூடனுமன்றே

தெரிதரு (அறிவுள்ள) மகனே! ஆரம்பத்தொடு தீரும் விவகாரம். [ஆரம்பித்துவிட்ட பிராரப்த கர்மம் ஒழியும் வரை விவகாரம் இருக்கும்] உரிய தியானமும் விவகாரங்களும் உள்ளத்தின் (அந்தக்கரண) தொழிலன்றோ? துரிய [நிலை அடைந்து] பரம்பொருளானவர் வேறொரு தொழில் செய்வதும் (செய்யத்தேவையும்) உண்டோ? [அப்படி] அரியசமாதிகள் பழகுவனேல் அவன் ஆரூடனும் அன்றே.

சமாதி 2 வகை. 1. சவிகற்ப சமாதி 2. நிர்விகற்ப சமாதி.

விகற்பம் ன்னா பேதம் வேறுபாடு. சவிகற்ப சமாதின்னா கொஞ்சம் வேறுபாடு இருக்கிற சமாதி.

சவிகற்ப சமாதியில் ஆன்மா அணு அணுவாக அனுபவிக்கப்படிகிறது. இதில் பார்ப்பவன், பார்த்தல், பார்க்கப்படுபவன் என பேதம் உண்டு. (திரிபுடி என்பது இதுவே -ஞாத்ரு, ஞானம், ஞேயம் [subject - object - action] ).

நிர்விகற்ப சமாதி கொஞ்சம் கூட வேறுபாடு இல்லாத சமாதி. இதுல திரிபுடி ஒழிஞ்சு விடும். அகண்டாகாரமான சாக்ஷாத்கார நிலை.

தானாய் தன் மனமே யல்லாலொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலும் கற்பூர தீபம் போலும்
போயொளிப்ப தல்லாது புலம்வேறி ன்றாம்
ஞானாகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவு நழுவா னழுவி நிற்கும்
ஆனாலு மிதன் பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்

தானாய் தன் மனமே அல்லால் ஒன்றைத் தலையெடுக்க ஒட்டாது தலைப்பட்டு ஆங்கே

போனாலும் கற்பூர தீபம் போலும் போய் ஒளிப்பது அல்லாது புலம் வேறு இன்றாம்

ஞானாகாரத்தினொடு ஞேயமற்ற ஞாதுருவு நழுவா நழுவி நிற்கும் ஆனாலும் இதன் பெருமை எவர்க்கு யார் சொல்வார்? அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்

(தாயுமானவர்)

முதல்ல சவிகற்ப சமாதிதான் ஒத்தருக்கு கிடைக்கும். அப்புறமா இருக்கிற கொஞ்சம் வித்தியாசமும் போய் நிர்விகல்பம் ஆகிடும்.

இதெல்லாம் இல்லாம சகஜ சமாதின்னு ஒண்ணு உண்டு. நிர்விகற்ப சமாதியோட கனவு போல சாப்பிடுகிறது முதலியத செய்து கொண்டு சதா நிஷ்டையில் இருக்கிறது. அப்படிப்பட்ட ஆரூடர் விவகாரங்களை செய்தாலும் அவை செயல் ஆகாது. ஏன்னா அவை அவர்களோட பார்வையில விவகாரத்தோட கூடிய சம்பந்தம் இல்லாதவை. அவர்களுக்கு ஞானமும் செய்கையும் பரஸ்பரம் விரோதமில்லை. அவங்களோட விவகாரத்துக்கு அனுபவம் விரோதமில்லை. அவங்களோட அனுபவத்துக்கு விவகாரம் விரோதமில்லை.

பின்னே சீவன் முக்தரா இருக்கிற சிலர் ஏன் இந்த தியானம் முதலானதெல்லாம் செய்கிறாங்கன்னு கேட்டா.....

முன்னேயே சொன்ன விஷயம் ஒண்ணு நினைவு இருக்கா பிராரத்தப்படி பல விதமா இவங்க இருப்பாங்கன்னு சில காரியங்கள் நடக்கும்ன்னு? அதுவும் அதை சேர்ந்ததுதான்.

மாதவம் செய்யினும் செய்வர் வாணிபம் செய்யினும் செய்வர் ன்னு முன்னே பாத்தோம்.

(தத்துவ விளக்கம் பகுதி - 97. )

பிரம வித்துக்கள் இப்படி நான்கு விதமாக இருப்பானேன்?

பேதகர் மத்தால்வந்த பிராரத்த நாநாவாகும்
ஆதலால் விவகாரங்க ளவரவர்க் காவவாகும்
மாதவஞ் செயினுஞ்செய்வார் வாணிபஞ் செயினுஞ்செய்வார்
பூதலம் புரப்பாரையம் புகுந்துண்பார் சீவன்முத்தர்.

ஆரூட தசை அடையு முன்னே யார் இந்த தியானம் முதலானதை செய்கிறாங்களோ அவங்களையே கிரியை அற்றவன்னு சொல்ல முடியாது. ஆரூட தசை அடைஞ்சாச்சுன்னா அவர் கிரியை அற்றவரே கிருத கிருத்தியரே.

34.

ஆரூடர்களிலும் சிலர் சமாதி முதலியன செய்வதென்ன என வினா +அதற்கு உத்தரம்

உத்தம குருவே யாரூடமா யொருதொழி லற்றவருள்
சித்தமடங்கு தியானாதிகள்சிலர் செய்குவதென் னெனெறால்
இத்தலமருவும் பிராரத்தப் பிரிவெப்படி யப்படியே
முத்தரும்வெகு விதமாவ ரென்பதுமுன்னே சொன்னேனே

உத்தம குருவே, ஆரூடமாய் ஒரு தொழில் அற்றவர் உள் சித்தம் அடங்கும் தியானாதிகள் (தியானம் முதலியன) சிலர் செய்குவது என்ன என்று கேட்டால், இத்தல (இவ்வுலகில்) மருவும் (பற்றும்) பிராரத்தப் பிரிவு எப்படி அப்படியே. முத்தரும் வெகு விதமாவர் என்பது முன்னே சொன்னேனே.
[முந்தைய படலத்தில் ஜீவன் முத்தரும் பிராரப்தத்தை அனுபவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது]

ஞானிகளோட விவகாரங்கள் எல்லாமெ உலக உபகாரத்தை கருதிதானே தவிர அவற்றால அவனுக்கு ஒரு பிரயோசனமும் கிடையாது. ஏன்னா அதெல்லாம் அவன் எந்த பலனை கருதியும் ஆசையோட செய்வதில்லை. அதனால அவனுக்கு துன்பமும் கிடையாது. இது எப்படிருக்குன்னா ஈஸ்வரன் சிருட்டிக்கிறான், காக்கிறான், சம்ஹாரமும் செய்யறான். இதனால அவனுக்கு பாபம் புண்ணியம் ஒண்ணும் இல்லையே! ஞானிக்கு உலக

உபகாரமா யாரும் கேட்டா அவங்களுக்கு போதனை செய்யறதும்; அவனோட உடம்பு விழும் வரை உடம்பு காப்பாத்தப்படணும் என்கிறதால அதுக்கு ஆகாரம் போடறதும் மட்டுமே விவகாரம். இதுவும் அவன் சத்துவத்திலேயே நிக்கிறதால அவனுக்கு எந்த வேலையும் செய்கிற பாவமும் இல்லை; அதனால எந்த கர்மாவும் அவனுக்கு ஒட்டாது.

35.

வேறொரு பிரகாரம் த்ருஷ்டாந்தம் பூர்வகம் விடை

நல்லவனேகே ளுலகுபகாரம் ஞானிகள் விவகாரம்
அல்லதுவே றொருபெறுபேறும் மிலையதனாற்பிணியுமிலை
வல்லசிருட்டி முதற்பல தொழிலால் வரு புண்ணிய பாவம்
எல்லவருக்கு மநுக்கிரகஞ் செயு மீசனடைந்திலனே

நல்லவனே கேள். ஞானிகள் விவகாரம் உலகு உபகாரம் அல்லாது வேறொரு பெறு பேறும் இல்லை. அதனாற் பிணியும் இல்லை. வல்லசிருட்டி முதல் பல தொழிலால் வரு புண்ணிய பாவம், எல்லவருக்கும் (எல்லா உயிர்களுக்கும்) அநுக்கிரகம் செய்யும் ஈசன் அடைந்திலனே.
[ஈசனும் தொழில் செய்கிறான். ஆனால் அவனுக்கு புண்ணிய பாவங்கள் சேர்வதில்லை அல்லவா? ஞானி பிராரத்தம் தீரும் வரை உடல் இருப்பதால் அதன் போஷனை பொருட்டு உண்ணல் ஆகியன செய்வான். ஆனால் அவனது உள்பார்வையில் எந்த தொழில் செய்வதாயும் அவன் உணர்வதில்லை. அவன் மனம் சத்துவ குணத்தில் மட்டும் நிற்பதால் அவனுக்கு எந்த கர்மமும் உண்டாவதில்லை.]

அட ஞானி ஈஸ்வரனுக்கு சமம்ன்னா சொல்லறீங்க? அது எப்படி?
எப்படின்னா ரெண்டு பேருக்குமே நான், என்னுது ன்னு ஒண்ணுமேஇல்லை.
ஞானிதான் ஈசன், பல ஜீவர்கள், உலகம் எல்லாமே! அப்படித்தான் அவனோட பாவனை இருக்கும்!

36.

ஞானவான் ஈசனுக்கு எப்படி ஒப்பாவான்?

ஈசனுமா யருவாயுருவாகி யெழுந்தரு ளுங்குருவே
ஈசனுஞானியு மொப்பென்றீரே யெப்படியொப் பென்றால்
ஈசனுஞானியு மமதையகந்தை யிகந்ததினாலொப்பாம்
ஈசனுமாம் பலசீவருமா முலகெல்லா மிவனாமே

ஈசனுமாய் அருவாய் உருவாகி எழுந்தருளும் குருவே, ஈசனும் ஞானியும் ஒப்பென்றீரே, எப்படி ஒப்பு என்றால், ஈசனும் ஞானியும் மமதை (என்னுடையது என்ற எண்ணம்) அகந்தை (நான் என்ற எண்ணம்) இகழ்ந்ததினால் ஒப்பாம். ஈசனுமாம் பலசீவருமாம் உலகெல்லாம் இவனாமே. ("நான், என்" போனதால் ஈசன், உலகு, பல சீவர்கள் எல்லாவற்றையும் தான் என்றே உணர்கிறான்)

ம்ம்ம்ம்.. அப்படின்னா இவர் முக்தி அடைஞ்சா மத்த எல்லாருமே முக்தி அடையணுமே! அப்படி நடக்கிறதில்லையே!
(அட அதானே!)

இந்த ஞானியே எல்லா சீவர்களும் ஆனா இவன் மோக்ஷம் அடைஞ்சா எல்லா ஜீவன்களும் மோக்ஷம் அடையணும்.. இல்லைனா ஜீவன்கள் தனித்தனின்னு ஒத்துக்கணும். இப்படி ஒரு கிடுக்கிப்பிடி போடறார் சீடர். (பின்னே இப்படி ஆழமா கேள்வி கேக்கறவருக்கு மரியதை கொடுக்கணுமில்லே? அதான் சீடர். சீடன் இல்லே!)

37.

அறிஞன் எப்படி சகல சீவராய் விளங்குவான்?

எல்லாசீவரு மிவனானென்றீ ரிவன்றான் முத்தியடைந்
தெல்லாச்சீவரு முத்திபெறாம லிருப்பா னேனையா
எல்லாச்சீவரும் வெவ்வேறானா லிவனெல்லா மலனே
எல்லாப்பொருளு முரைத்தருள் குருவேயிதை நீர்மொழீயீரே

எல்லா சீவரும் இவனான் என்றீர். இவன் தான் முத்தியடைந்து எல்லாச் சீவரும் முத்தி பெறாமல் இருப்பானே ஐயா? எல்லாச்சீவரும் வெவ்வேறானால் இவன் எல்லாம் அலனே? எல்லாப் பொருளும் உரைத்தருள் குருவே இதை நீர் மொழீயீரே.

[எல்லா சீவர்களுமாய் இருக்கும் ஞானி முத்தி அடைந்தால் ஏன் எல்லாச்சீவரும் முத்தி அடையவில்லை?]

சரியான கேள்வி அப்பா!

ஆன்மா ஒண்ணுதான். அந்தக்கரணம் பலவிதமா இருக்கிறதாலே ஜீவர்கள் பலவிதமா உற்பத்தி ஆகின்றன. இந்த எல்லா ஜீவர்களிலேயும் பிரதி பலிக்கிறது ஒரே ஆத்மாதான். எண்ணிக்கையில்லா உடம்புகளிலே எண்ணிக்கை இல்லா அந்தக்கரணங்கள் குடிகொண்டு இருக்கு. அதிஷ்டான ஆன்மா ஒண்ணுதான் ஆனாலும் அந்தக்கரணங்களிலே பிரதிபலிக்கிற ஜீவன்கள் ஏராளம்.

சந்திரன் பிரகாசிக்கிறது. உலகம் முழுக்க பிரகாசிக்கிற சந்திரன் ஒண்ணுதான்.

இருக்கிற எல்லா நீர் நிலைகளிலேயும் அதோட பிம்பம் தெரிகிறது.

அது ஏரியா இருக்கலாம், குளமா இருக்கலாம், பல விதமான மண் குடங்களில் இருக்கிற தண்ணீரா இருக்கலாம். ஒரு குடம் உடைஞ்சு போனா ஒரு பிரதிபலிப்பு காணாம போயிடும். ஆனா வானத்து சந்திரன் அப்படியேதான் இருக்கு. மத்த நீர் நிலைகளில பிரதிபலிக்கிற சந்திரன்களும் அப்படியேதான் இருக்கும்.

குடத்து சந்திரனுக்கு உண்மையிலேயே தான் வானத்து சந்திரனோட பிரதிபலிப்புன்னு தெரிஞ்சு குடம் உடைஞ்சு வானத்து சந்திரனாகவே ஆகிடும் போது மத்த குடத்து சந்திரன்கள் அப்படியேதானே இருக்கும்? குடங்களிலே இருக்கற தன் பிரதிபலிப்புதான் ன்னு வான சந்திரனுக்கு தெரிஞ்சாலும் குடத்து சந்திரன்களுக்கு அது தெரியாதே!

அதே போல அந்தக்கரணம் நீங்குகிற ஜீவன் மட்டுமே மோக்ஷம் அடையும்; அதிஷ்டான பிரம்மத்திலே ஐக்கியமாகும். அந்தக்கரணம் இருக்கிற ஜீவர்கள் அப்படியேதான் இருப்பார்கள்.

(இந்த கேள்வியையே இன்னொரு விதமா கேக்கலாம் இல்லையா? எல்லாமே பிரம்மம்னா ஏன் நமக்கு நாம் பிரம்மம்ன்னு தெரிய மாட்டேங்குது?)

38.

விடை:

அகமெனு மான்மாபூரண மேகமனேக விதஞ்சீவர்
அகமெனு மந்தக்கரணோ பாதிகளளவிலை யாதலினால்
சகமுழுதுங் குளிர்சந்திர னேகஞ்சலசந்திரர் பலராம்
சகமதிலேரி குளஞ்சிறுகுழி சால்சட்டி குடம்பலவால்

அகமெனும் ஆன்மா பூரணம், ஏகம். (ஒன்றே) அனேக விதம் சீவர், அகமெனும் அந்தக்கரண உபாதிகள் அளவிலை (ஆதலினால்.) சக முழுதும் குளிர் சந்திரன் ஏகம். (ஒன்றே) சல சந்திரர் பலராம். சகம் அதில் ஏரி, குளம், சிறுகுழி, சால் சட்டி குடம் பலவால்.

[சந்திரன் ஒன்றே ஆனாலும் நீர் நிலைகள் பலவாததால் அதில் பிரதிபலிக்கும் சந்திரர்கள் அனேகம். அதே போல் ஆன்மா ஒன்றாயினும் அந்தக்கரணத்தில் பிரதிபலித்த அதன் சாயல்களான சீவர்கள் எண்ணற்றவர்.]

39.

சட்டிகுடங்களி லொன்றுநசித் திடினதினுட் சலசந்திரன்
ஒட்டுமுதற்சந் திரனொடுகூடு மொழிந்தவை கூடாவே
கட்டுமுபாதி நசித்திடுசீவன் காரணமாவான் மாவில்
கிட்டுமயிக்கிய முபாதி கெடாதவர் கேவலமாகாரே

சட்டிகுடங்களில் ஒன்று நசித்திடின் அதினுட் சலசந்திரன் ஒட்டு முதற் சந்திரனொடு கூடும். ஒழிந்தவை கூடாவே. கட்டும் (வேறு படுத்தி காட்டும்) உபாதி நசித்திடும் சீவன், காரணமாம் ஆன்மாவில் ஐக்கியம் கிட்டும், உபாதி கெடாதவர் கேவலமாகாரே.

[நீர் சட்டி உடைந்தால் அதில் பிரதிபலித்த சந்திரன் காணாமல் போய் அதிஷ்டான சந்திரனுடன் ஒன்றாகி விடும். மற்ற நீர் நிலைகளில் உள்ள ஆபாச சந்திரர்கள் (பிரதிபலிப்பு) அப்படியேதான் இருக்கும். அது போல ஞானி அகந்தை போய் ஆன்மாவோடு ஒன்றி விடுவான். மற்ற சீவர்கள் அப்படியே இருப்பர்.]

--

சரி ஐயா, ஜீவன் முக்தன் எப்படி பிரம்மன், சிவன், விஷ்ணு ஆகிய ஈசனுக்கு ஒப்புன்னு சொல்லறீங்க? பிரம்மா படைக்கிறார். சிவன் அழிக்கிறார். விஷ்ணு காக்கிறார். ஞானி இந்த மாதிரி எதுவும் செய்யலையே. ஈசனுக்கு முக்காலத்திலும் நடந்த நடக்கப்போற விஷயங்கள் தெரியுது. மத்தவங்க மனசில இருக்கிற விஷயங்கள் தெரியுது. அப்படிப்பட்ட சக்தி எதுவும் இருக்கிறதா ஞானி காட்டிக்கலையே.

40.

இவனயன்மால் சிவனாகிய வீசரொடெப்படி யொப்பாவன்
சிவன் முதன் மூவருமகில சிருட்டிதிதி நாசங்கள் செய்வார்
அவர்பிறர் மதிகளுமுக் காலங்களுமறிவார் விபுவாவார்
தவமிகுகுருவே யிவனுக்கவையிலொர் சற்றுங்காணேனே

இவன் அயன் மால் சிவன் ஆகிய ஈசரோடு எப்படி ஒப்பாவன்? சிவன் முதன் மூவரும் அகில (உலகின்) சிருட்டி,(உருவாக்குதல்) ஸ்திதி (நிலை பெறுத்தல்), நாசங்கள் செய்வார். அவர் பிறர் மதிகளும் (மனதில் உள்ள விஷயங்களும்) முக் காலங்களும் அறிவார்; விபு (எல்லாவற்றிலும் சம்பந்தம் உடையவர்) ஆவார். தவ மிகு குருவே இவனுக்கு அவையில் (அந்த மகிமைகளில்) ஓர் சற்றும் [தோன்ற] காணேனே.

நம்ம வீட்டிலே ஒரு ட்யூப் லைட் போட்டு வெச்சு இருக்கோம். அஞ்சாறு பேர் புழங்கற இடத்திலே அது போதுமானதா இருக்கு. இதுவே ஒரு பரபரப்பான நாலு ரோடு கூடற இடம்னா அதோட வெளிச்சம் போதாது. அதுக்கு ஒரு ஹைமாஸ்ட் விளக்குத்தொகுப்பு வேணும். இதுகளோட வீச்சு வேறயா இருந்தாலும் வெளிச்சம் தருகிற குணத்தில ரெண்டும் ஒண்ணுதானே?

வீட்டில குடிக்கிற தண்ணி ஒரு குடம் தயார் செய்து வைக்கிறோம். அது நாலு பேர் மட்டும் இருக்கிற குடும்பத்துக்கு போதும். இதுவே வீட்டில் ஒரு விசேஷம், உறவினர் இருபது, முப்பது பேர் வராங்கன்னா கடையிலேந்து ஒரு இருபத்தஞ்சு லிட்டர் கான் குடிநீர் ரெண்டு மூணு - காலத்துக்கு தகுந்தாப்போல வாங்கி வைப்போம். ரெண்டுமே தாகத்தை தணிக்கிறதுலே ஒரே குணம்தானே?

அதப்போலவே பிரம்ம ஞானியும் ஈசனும் ஞானத்தால வேறுபாடு உள்ளவங்க இல்லை.மாயையில் மட்டுமே வேறுபாடு உள்ளவங்க.

தத்துவ விளக்கப்படலத்தில பாத்து இருக்கோம் இல்லையா? ஈசன் -சத்துவ மாயை; சீவன்- ரஜஸ மாயை.

ராஜாக்கள் அவங்க நாட்டிலே இருக்கிற கெட்டவங்களை தண்டிக்கிறாங்க. நல்லவங்களை ஆதரிப்பாங்க. (இந்த காலத்து அரசைப்பத்தி இப்படி சொல்ல முடியலைங்கிறதால ராஜா ன்னு சொல்ல வேண்டி இருக்கு.:-( ) சித்தர்கள் முதலானவங்க சாபம் கொடுக்கவும் செய்வாங்க; அதை நீக்கவும் செய்வாங்க. அவங்களுக்கு அணிமா முதலான சக்திகளும் உண்டு.

அவங்களைப்போல பல சக்திகளும் உடையவன் ஈசன்.

ஞானி மனுஷ ஜன்மம் எடுத்தவன். இவனுக்கு இந்த மாயா வல்லமையும் இல்லை. அஷ்டமா சித்திகளும் இல்லை. அதனால ஏதோ தாழ்ந்தவன் மாதிரி தோணுது. இருந்தாலும் பிரம்ம பாவனையால வித்தியாசமே இல்லை.

ஞானி தன் பிராரத்தம் முடிகிற வரை டிராமாவிலே தனக்கு கொடுத்து இருக்கிற பாத்திரத்தை தேர்ந்த நடிகனா நடிச்சுவிட்டு போயிடுவான். ஈசனோ மெகா சீரியல் டைரக்டர். பல நடிகர்களை வெச்சுகிட்டு டிராமா போட்டு ஆகணும். ஞானி ரோல் முடிஞ்சு வீட்டுக்கு போயிடலாம். ஆனா டைரக்டர் ஈசன் சீரியல் முடிகிற வரை வேலை பாக்கணும். மெகா சீரியல் முடிகிறது ஏது? பிரலயத்திலேதான் முடியும்.

41.(அறுசீர் விருத்தம்-வேறு)

அதற்கு விடை:

தடத்துநீர் நிலாத்திரியொளி யுபயமுந்தழுவு மூர்தனைக்காக்கும்
குடத்து நீர் விளக்கினி லொளிரிரண்டுமோர் குடும்பமாத்திரங் காக்கும்
அடுத்த மைந்தனே ஞானியுமீசனு மறிவினாற் பிரிவில்லை
கெடுத்த மாயையின் குணங்களான் மேலொன்றுங் கீழொன்றும் பிரிவாமே

தடத்து நீர் (ஏரி நீர்) நிலாத் திரி (தீவட்டி) ஒளி உபயமும் தழுவும் (ஏற்றுக் கொள்ளும்) ஊர் தனைக் காக்கும். குடத்து நீர், விளக்கினில் ஒளி இரண்டும் ஓர் குடும்ப மாத்திரம் காக்கும். அடுத்த மைந்தனே ஞானியும் ஈசனும் அறிவினால் பிரிவில்லை. (சீவர்கள் முத்தி பெறா வண்ணம்) கெடுத்த மாயையின் குணங்களால் மேல் ஒன்றும் கீழ் ஒன்றும் பிரிவாமே.

--

ஒரு சிறு தீபம் ஒரு வீட்டில் உள்ள 5-6 பேர்களுக்கு மட்டும் ஒளி தரும். தீவட்டி பலர் உள்ள சபைக்கு ஒளி தரும். இவை ஒளி தரும் குணத்தில் ஒன்றே. ஒரு குடத்து நீர் ஒரு வீட்டில் உள்ளவருக்கு தாகம் தணிக்கும். தடாகத்து நீர் ஊருக்கே தாகத்தை தணிக்கும். ஆனால் இரண்டுமே தாகம் தணிக்கும் குணத்தை உடையவை. அது போல ஞானத்தால் ஈசனும் ஞானியும் வித்தியாசம் உடையவரல்லர். சீவர்கள் முத்தி பெறா வண்ணம் சீவர்களை தடுத்த ஆவரணம் மட்டுமே வித்தியாசம். (ஈசன் -சத்துவ மாயை; சீவன்- ரஜஸ மாயை)

42.

நரரின் மன்னனைச் சித்தரைப் போலவே நாரணன் முதலான
சுரர்கண் மாயைவல்லவ ரணிமாதிக டொக்க மாதவ மிக்கோர்
தரணிமா நுடர்க் கவைகளில் லாமையாற் றாழ்வுள ரானாலும்,
பிரம பாவனை யாலிவரவரென்னும் பேதமொன்றிலை பாராய்

நரரில் மன்னனை போலவே (தீயனைவை ஒழித்து நல்லனவற்றை பேணும் மன்னன் போல) சித்தரைப் போலவே (சாப அனுக்கிரக வல்லமை உள்ள சித்தர் போல) நாரணன் முதலான சுரர் கண் (தேவர்கள் இடத்துள்ள) மாயை வல்லவர் (மாயா சக்தி உடையவர்கள்) அணிமாதிகள் ஒக்க,(அணிமா முதலான சக்தி உடையவர்கள்)[யாரென்றால்] மாதவம் மிக்கோர். (அதற்காக பெரும் தவம் செய்தோர்). தரணி (உலக) மாநுடர்க்கு [இந்த இடத்தில் ஞானிகளை சொல்கிறார்] அவைகள் இல்லாமையால் தாழ்வுளர் ஆனாலும், பிரம பாவனையால் இவர் அவர் என்னும் பேதம் ஒன்றிலை பாராய்.

அது சரி! ஆனா பல கதைகள் கேட்டு இருக்கோமே. இந்த முனிவர்/ அந்த சித்தர் இப்படிப் பண்ணார், அவர் அப்படிப் பண்ணார்ன்னு. விஸ்வாமித்திரர் திரிசங்குவுக்காக சொர்கத்தையே படைச்சு இருக்கார். இப்படி இருக்கிறப்ப ஞானிகளுக்கு அணிமா சித்திகள் இல்லைன்னா என்ன அர்த்தம்?

சரியான கேள்விதான்!
எதை கேக்கிறோமோ அதானே கிடைக்கும்? ஈசனை நோக்கி இந்த சித்திகள் எல்லாம் வேணும்ன்னு தபஸ் பண்ணா அப்படியே கிடைக்கும்! நீ சொன்ன முனிவர்கள் எல்லாம் ஈசனை நோக்கி சித்திகள் வேண்டி தபஸ் பண்ணதாலும் யோகம் பழகியதாலும் அந்த மாதிரி சித்திகள் எல்லாம் கைவரபெற்றாங்க!

43.

முத்திநல்கிய சற்குருவே பலமுனிகளுக் கணிமாதி
சித்திபூமியிற் கண்டிருக்கவு மந்தச்செல்வ மீசனதென்றீர்
புத்தியொத்திட வுரைத்தருளென் றிடில்புகழு மீசனைநோக்கிப்
பத்திசெய்திடுந் தவத்தினா லியோகத்தாற் பலித்ததென்றறிவாயே

"முத்தி நல்கிய சற்குருவே, பல முனிகளுக்கு (முனிவர்களுக்கு) அணிமாதி சித்தி பூமியில் கண்டிருக்கவும் (உலகில் கண்டு இருக்கிறோம். அப்படி இருக்க) அந்த செல்வம் ஈசனது என்றீர். புத்தி ஒத்திட உரைத்தருள்" என்றிடில் புகழும் ஈசனை நோக்கிப் பத்தி செய்திடுந் தவத்தினால், யோகத்தால் பலித்தது என்று அறிவாயே.

ஓஹோ! அந்த ஞானிகள் தபஸ் பண்ணதால அணிமாசித்திகளும் அடைஞ்சாங்க, முக்தியும் அடைஞ்சாங்கன்னா சித்து விளையாட்டுகள் செய்கிறவங்க ஞானிகளா காணலையே! இப்ப பாக்கிற ஞானிகள் கிட்டே அணிமா முதலான சித்திகள் இருக்கிறதா தெரியலியே?

44.

அணிமாதி சித்திகள் ஞானபலமா (ஞானத்தின் விளைவா) அல்லவா?

சிவசொரூபமாந் தேசிகமூர்த்தியே சித்திமுத்தி யிரண்டும்
தவமுளோ ரடைகுவரெனி லவர்கள்போற் சகலரு மடைவாரே
அவர்கள் பூவருஞ்சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோமே
இவர்கண் ஞானிகளென்றிடிற் சித்திகளிவர்க் கிலாவகையேதோ

சிவசொரூபமாம் தேசிக மூர்த்தியே, சித்தி முத்தி இரண்டும் தவமுளோர் அடைகுவர் எனில் அவர்கள் போல் {இக்காலத்திலும்) சகலரும் அடைவாரே. அவர்கள் பூ [பூமியில்] அரும் சித்தியும் ஞானமும் அடைந்ததும் கண்டோமே.
இவர்கண் ஞானிகள் என்றிடில் சித்திகள் இவர்க்கு இலா வகை ஏதோ?

தவத்தால் சித்தியும் முத்தியும் அடையலாம் என்பது உண்மையானால் இக்காலத்தில் ஞானிகளிடம் சித்திகள் காணப்படவில்லையே? ஏன்?

சீடனே! தவம் செய்கிறதுல ரெண்டு வகை இருக்கு. ஒண்ணு எதையும் இலக்கா வெச்சுக்காமே, இதுதான் வேணும்ன்னு சங்கல்பம் இல்லாம தவம் செய்கிற நிஷ்காம்ய தவம். இது மோக்ஷத்தை மட்டுமே தரும். ரெண்டாவது காம்ய தவம். இது வேணும்ன்னு சங்கல்பத்தோட செய்கிறது. இது எதை கேட்டாங்களோ அதையே தரும். வழக்கமா இது அஷ்ட மா சித்திகள்.

45.

காமியத்தவங் காமியமொன்றையுங் கருதிடாத்தவ மென்றும்
பூமியிற்றவ மிருவகைசித்தியும் போதமுந்தரு மைந்தா
ஆமிவற்றி லொன்றியற்றினா லொன்றையே யடைகுவ ரிதுதீர்வை
யாமுரைத்த வவ்விரண்டையு மியற்றினா ரன்றுள பெரியோரே

காமியத்தவம், காமியம் ஒன்றையும் கருதிடா தவம் என்றும் பூமியில் தவம் இருவகை. [அவை முறையே] [அஷ்டமா] சித்தியும் போதமும் (அறிவையும்) தரும் மைந்தா. ஆம் இவற்றில் ஒன்று இயற்றினால் ஒன்றையே அடைகுவர். இது தீர்வை. (நிச்சயம்) யாம் உரைத்த அவ்விரண்டையும் இயற்றினார் அன்று உள பெரியோரே.

ஜனகன், மாபலி, பகீரதன் முதலியோர் மோக்ஷ சாதனமான ஞானத்தை மட்டுமே விரும்பினர். அதுவே அடைந்தனர். சிலர் இனிமையான சித்திகளை மட்டுமே விரும்பினர். அதெல்லாம் சித்து விளையாட்டை தருமே அன்றி மோக்ஷம் அளிக்க மாட்டா. அக்கால முனிவர்கள் இரண்டையுமே பெற தவம் செய்ததும் உண்டு.
(இது பரவாயில்லை போல இருக்கே!)

46

அனகமைந்தனே முத்திஞானத்தையே யடைந்தன ரல்லாமல்
ஜெனகன் மாபலிபகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ
இனியசித்தியே விரும்பினார் சிலர்சில ரிரண்டையு முயன்றாரம்
முனிவர் சித்திகள் வினோதமாத்திரந் தருமுத்தியைத் தாராவே

அனக (குற்றமில்லா) மைந்தனே முத்தி ஞானத்தையே அடைந்தனர் அல்லாமல் ஜெனகன் மாபலி பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ? இனிய சித்தியே விரும்பினார் சிலர். சிலர் இரண்டையும் முயன்றார். அம் முனிவரின் சித்திகள் வினோதம் மாத்திரம் தரும். முத்தியைத் தாராவே.

சாதாரண ஜனங்களாகிய நாம சித்திகள் வேணும்ன்னு தவம் பண்ண இறங்கினா அதை ஒத்துக்கலாம். அது நாம இந்த கால கட்டத்திலே வெச்சு இருக்கிற ஆசைகளோட பிரதி பலிப்பு. ஆனா தபஸ் இருந்தா முக்திகிடைககும்ன்னா அதை விட்டுட்டு சித்திகள் கிடைக்க தவம் செய்வாங்களா கற்று தேர்ந்த முனிவர்கள்? சரியா தோணலையே?

47

சித்திகளால் பயனில்லை என தெரிந்தும் ஏன் சில ஞானிகள் அதை விரும்பி வருத்தமுற்றார்கள்?

யோக ஞானமே முத்தியைத் தருமெனி லொழிந்த சித்திகள் வேண்டி
மோக மாயுடல் வருந்தினார் சிலசில முத்தர்களேனென்றால்
போக மாய்வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன்றோ நசித்தேகும்
ஆகை யாலந்தச் சித்திகள் பிராரத்தமாகுமென் றறிவாயே

யோக ஞானமே முத்தியைத் தரும் எனில் ஒழிந்த சித்திகள் வேண்டி மோகமாய் உடல் வருந்தினார் சிலசில முத்தர்கள். ஏனென்றால் போகமாய் வரும் பிராரத்த கர்மங்கள் புசித்து அன்றோ நசித்து ஏகும்? ஆகையால் அந்தச் சித்திகள் பிராரத்தமாகும் என்று அறிவாயே.

பரமான்ம ஐக்கியத்தை தர ஞானமே மோக்ஷத்தை தரும்ன்னா சில முத்தர்கள் ஏன் சித்திகள் அடைய வேண்டி அதுக்காக தவம் செய்து வருத்தினாங்கன்னா அவரவர் பிராரத்த கருமத்தை அனுபவித்தே தீர்க்க வேண்டும் இல்லையா? அதனால அவர்கள் பிராரத்த கர்மாவால தூண்டப்பட்டு சித்திகள் அடைஞ்சாங்க. ஞானிகளுக்கு அதுகளாலே என்ன பிரயோசனம் இருக்கும்? ஒண்ணுமில்லை. இருந்தாலும் சித்திகள் பெற்றவங்க போகிற போக்கிலே சிலருக்கு இந்த சித்திகளால சில நல்லது செஞ்சுட்டு போவாங்க.

[அட்டமா சித்திகளும் அனைத்துள்ள பேறுகளும்- கட்டமாங் கதிகள் தரும் பரகதி காணக்கொடா - தேவிகாலோத்தரம்.]

ஐயா குருவே நிறைய விஷயங்களை தெளிவாக்கினீங்க! நிறைய மயக்கங்கள் நீக்கிட்டீங்க.

கண்ணாடியை எவ்வளோ துடைச்சாலும் தப்பில்லையே! இன்னும் கேள்வி கேட்டு தெளிவாக்கிண்டாலும் தப்பில்லையே! இதே மாதிரி இன்னும் நிறைய கேக்க விரும்பறேன்.

48.

இலக்க மாயிரஞ் சுருதியா லூகத்தா லென்மன மசையாமல்
பெலக்க வேண்டுமென் றருள்குரு வேயகப் பிராந்தி போய்த் தெளிவானேன்
துலக்க மான கண்ணாடியை யடிக்கடி துலக்கினாற் பழுதன்றே
அலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமிர்தங்க டெவிட்டாவே

இலக்கம் ஆயிரம் சுருதியால், (சுருதி பிரமாணங்களாலும்) ஊகத்தால், (யுக்தி அனுபவத்தாலும்) என் மனம் அசையாமல் பெலக்க (திடமாக அழுந்த) வேண்டுமென்று அருளும் குருவே, அகப் பிராந்தி* (அந்தக்கரணத்தில் இருந்த மயக்கம்) போய்த் தெளிவானேன். துலக்கமான (தெளிவான) கண்ணாடியை அடிக்கடி துலக்கினால் (துடைத்தால்) பழுது அன்றே. (தவறில்லையே) அலக்கண் மாற்றிய (மனம் ஞான நிலையினின்று சலியாதபடி ஆக்கிய) தேவரீர் எனக்கு உரை[க்கும்] அமிர்தங்கள் தெவிட்டாவே.

"நிறைய மயக்கங்கள்" அப்படின்னு சொன்னாரில்லே சீடன்?

அதையெல்லாம் வகைப்படுத்தி இருக்காங்க.

*= அஞ்ஞான தசையில் உள்ளோருக்கு அகப் பிராந்தி ஐந்து.

1. இது நித்தியம் இது அநித்தியம் என ஆராயாது இவ்வுலகம் நித்தியம் என நினைத்தல்.

2. கருவிக்கரணங்களை பிரித்து தனக்கு அன்னியமாக காணாது சடமாகிய தேகமே தான் என நினைத்தல்.

3. நான் சீவன்; கர்மங்களை செய்கிறேன்; போகங்கள் அனுபவிக்கிறேன் என நினைத்தல்.

4 ஆன்மாவுக்கு அன்னியமாய் கடவுள் இருக்கிறார் என நினைத்தல்.

5. தான் சச்சிதாநந்த சொரூபம் என உணராது சிறிதே வல்லமை உடைய நான் எப்படி சிவமாவேன் என மயங்குதல்.

இவை ஐந்தும் தன்னை அறிந்ததும் நீங்கும்.

அப்புறமா சீடர் கர்ம அனுபவத்தைப்பத்தி கேக்கிறார்.

சாத்திரங்கள் எப்பவும் உண்மையைதானே சொல்லும்? ஒத்தர் செஞ்ச கர்மாவெல்லாம் அனுபவிச்சே தீரணும்ன்னு சொல்லி இருக்கே! இல்லாட்டா ஒழியாதாமே! அப்புறமா மறு படி பல ஜன்மங்களிலே செஞ்ச பாபம் எல்லாம் ஞானத்தீயால சுட்டு எரிக்கப்படும்ன்னு சொல்லி இருக்கு. இந்த ரெண்டிலே எது உண்மை?

கிரம சிருஷ்டியான சீவ ஈஸ்வர ஜகத்தைப் பற்றிய விவரங்கள் அறிஞனது பிராரத்துவம் என அறிந்து சீடன், அதற்கு வித்தாக உபகற்ப சிருட்டியால் அமைந்து கிடங்கும் சஞ்சிதத்தை அழிக்கும் பொருட்டு அது நசிக்குமென சுருதியில் கூறிய இரண்டு வகையில் எது உண்மை என வினாவுதல்:

கைதவங்களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனையாளும்
ஐய னேகுரு வேயெவரா கிலுமநுபவித் தாலன்றிச்
செய்த கர்மங்கள் விடாவென்ற வசனமுஞ் சென்மசஞ் சிதம்வேவத்
துய்ய ஞானத்தீ ச்சுடுமென்ற வசனமுந் துணிவதெப் படிநானே

கைதவங்களை(பொய்களை) சாத்திரஞ் சொல்லுமோ? கருணையால் எனை ஆளும் ஐயனே! குருவே! எவராகிலும் அநுபவித்தால் அன்றிச் செய்த கர்மங்கள் விடா என்ற வசனமும், சென்ம சஞ்சிதம் வேவ (வேக) துய்ய (மேலான) ஞானத்தீ சுடும் என்ற வசனமும் துணிவது (நிர்ணயிப்பது) எப்படி நானே?

~~

சாத்திரங்கள் பொய் சொல்லா அல்லவா? ஆனால் "எவராகிலும் அநுபவித்தால் அன்றிச் செய்த கர்மங்கள் விடா" என்று சொல்லிய பின், பிறப்பு முதல் வரும் சஞ்சித கர்மாவை மேலான ஞானத்தீ நீக்கும் என்பது எவ்வாறு?

அந்தக்கரணங்கள் பலதா இருக்கு. அதனால ஜீவன்களும் பலதா இருக்கு. இந்த அந்தக்கரணங்களோட செய்கைகளும் பலவிதமா இருக்கு. அதையெல்லாம் வகைப்படுத்தலாம். சிலது நல்ல காரியங்கள். அதிலே சந்தேகமே இருக்காது. அதே போல சிலது கெட்ட காரியங்கள். பல காரியங்களில நல்லதும் கெட்டது கலந்து இருக்கும். அது சிலருக்கு நல்லதாவும் சிலருக்கு கெட்டதாவும் இருக்கலாம். இல்லை ஒத்தருக்கே கலப்பட பலனை தரலாம்.இதைப்போல ஜீவன்களோட செய்கைகளும் அளவில்லாதவை.

எப்படி ஒரு மரத்திலே மொக்கு தோன்றி பூவாகி, பிஞ்சாகி, காயாகி, பழமாகுமோ அது போல வேதமும் அதிகாரிக்கு தகுந்த படி கர்ம காண்டம், உபாசனை காண்டம், ஞான காண்டம்ன்னு மூணு வித காண்டங்களாலே பூர்வ பட்சத்தையும் சித்தாந்தத்தையும் சொல்லும். பாபம் செய்யறவங்க அடைகிற நரகங்கள் நிச்சயமா இருக்குன்னு சொல்கிற சாத்திரங்களேதான் அதுக்கெல்லாம் போக்க/குறைக்க தானம், மந்திரம், விரதம், யக்ஞம் ன்னு பிராயச்சித்தங்கள் இருக்குன்னு சொல்லும். அது போலத்தான் முதல்லே பாபம் புண்ணியம் எல்லாம் அனுபவிச்சு தீரணும்ன்னு சொன்னாலும் அப்புறமா பிராரத்த கரமா தவிர மத்தது எல்லாம் ஞானத்தீயாலே ஒழியும்ன்னு சொல்கிறது சத்தியம்.

ஏன் அப்படி சொல்கிறீங்கன்னா,

முதலிலே செஞ்ச கர்மத்தை அனுபவிச்சே தீரணும்ன்னு சொன்னது கர்ம காண்டத்திலே. இது சாதாரணமான நமக்கு சொன்னது. ஞான காண்டத்திலே ஞானத்தீயாலே பாபங்கள் அழியும்ன்னு சொன்னது தீவிர சாதகர்களுக்கு.

இப்படி உபதேசம் எப்பவும் அதிகாரி பேதத்தை அறிஞ்சு கொண்டு செய்ய வேண்டியது.

அதற்கு விடை

சீவ பேதங்க ளளவிலை மைந்தனே செய்கையு மளவில்லை
ஆவ வாமவ ரவரதி காரங்க ளறிந்துபக் குவநோக்கிப்
பூவ லர்ந்துபின் பலங்கள் காட் டுவனபோற் பூருவஞ் சித்தாந்தம்
காவல் வேதங்க ளிரண்டையும் வசனிக்குங் காண்டமூ வகையாலே

(கர்ம பேதத்தால்) சீவ பேதங்கள் அளவிலை மைந்தனே, செய்கையும் அளவில்லை. [ஆகையால்] ஆவவாம் (அவைகளால் ஆவன ஆகும்) அவரவர் அதிகாரங்கள் அறிந்து பக்குவம் (பருவத்தை) நோக்கிப் பூ அலர்ந்து பின் பழங்கள் காட்டுவன போல் பூருவம் (பூர்வம்) சித்தாந்தம் காவல் (காக்கும்) வேதங்கள் இரண்டையும் வசனிக்கும் (சொல்லும்), காண்டம் மூவகையாலே (கர்ம உபாசனை ஞான காண்டங்களாலே)

அந்தக்கரணங்கள் பலவாகியதால் சீவ பேதங்களும் பலவாகும். அந்தக்கரணங்களின் சுபம் அசுபம் சுபாசுபம் என்ற இந்த பேதங்களின் படி சீவன்களின் செய்கைகளும் அளவிலாதன. இவற்றால் சீவர்களிடையே அதிகாரி பேதம் உண்டு. இதனால் ஒரு மரத்தில் எப்படி முதலில் மொக்கு தோன்றி பின் பூவாகி காயாகி பழமாகுமோ அப்படி வேதமும் அதிகாரிகளுக்கு தக்கப்படி கர்மகாண்டம், உபாசனை காண்டம், ஞானகாண்டம் என்ற 3 வித காண்டங்களாலே பூர்வ பட்சம் சித்தாந்தம் ஆகியவற்றை கூறும்.

51.

ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய மானாலும்
தான் மந்திர விரதவோ மங்களாற் றவிருமென் பதுபொய்யோ
ஈன மாம்பல சன்மசஞ் சிதவினை யெத்தனை யானாலும்
ஞான மாங்கனல் சுடுமென்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே

ஆன பாவிகள் அடைவன நரகங்கள் அவசியமானாலும், தான் [செய்யும்] மந்திர விரத ஹோமங்களால் தவிரும் என்பது பொய்யோ? ஈனமாம் பல சன்ம சஞ்சித வினை எத்தனை ஆனாலும் ஞானமாம் கனல் சுடும் என்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே.

பாப கர்மங்களை செய்வோர் அடையும் நரகங்கள் நிச்சயம் உளதாயினும் தானம், விரதம், யக்ஞம் முதலிய பிராயச்சித்தங்களால் பாபம் ஒழிந்து போகும் என சாத்திரங்கள் சொல்வது பொய்யல்ல. அதுபோலவே அனேக ஜன்மங்களை ண்டாக்கக்கூடிய சஞ்சித கர்மங்கள் எவ்வலவு அதிகமாயினும் ஞானமாகிய தீ அவற்றை சுட்டு எரிக்கும் என்ற வேத வாக்கியத்தை நம்பினால் மோக்ஷமடைவது சத்தியமே.

கர்மத்தை அனுபவித்தே தீர வேண்டும் என்றும் பிராயச்சித்தங்களால் நீக்கிக் கொள்ளலாம் என்றும் கர்ம காண்டம் சொல்வது மந்த அதிகாரிகளுக்கு. சஞ்சித கர்மத்தை ஞானாக்னி சுடும் என்று ஞான காண்டம் சொல்வது தீவிர அதிகாரிகளுக்கு. உபதேசங்கள் அதிகாரி பேதம் அறிந்து சொல்லப்பட வேண்டியன. வேதம் எல்லா அதிகாரிகளுக்கும் உபதேசம் சொல்வதால் ஞான காண்டத்தில் உள்ள சில கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டவைக்கு முரணாக தோன்றும். எது எங்கு யாருக்கு சொல்லப்பட்டது என அறிந்து உணர வேண்டும்.

எப்பவும் நல்ல குரு சீடனோட தராதரத்தை அறிஞ்சு கொண்டே செய்ய வேண்டியதை

சொல்லுவார்; உபதேசம் செய்வார். ஒத்தரால முடியாததை செய் ன்னு சொல்கிறதுல என்ன பிரயோசனம்?

சீடனறி வெவ்வளவோ வவ்வளவுஞ் சிந்தித்துக்

கூறுமுப தேசங்கள் கூறுவா-னீடுபுக

மூக்கமுடைச் சீராம னெண்ணுதற்கா யன்றெய்தான்

காக்கைக்கு தக்க கணை

(ஞான விளக்கம்- வள்ளலார்)

சீடன் அறிவு எவ்வளவோ அவ்வளவும் சிந்தித்துக் கூறும் உப தேசங்கள் கூறுவான் - ஈடு புகம் ஊக்கமுடைச் சீராமன் எண்ணுதற்கா அன்று எய்தான் காக்கைக்கு தக்க கணை.

(இந்த காக்கைக்கு தக்க கணை பத்தி பின்னூட்டம் வரும்ன்னு எதிர்பார்க்கிறேன்! :-)மந்த அதிகாரிகளுக்கே சரியை கிரியை எல்லாம் சொல்லி இருக்காங்க. அதாவது முக்காலே மூணு வீசமான நமக்குத்தான். அதனால ஞானத்தை உபதேசிக்கிற இடத்திலே இதை எல்லாம் தாழ்த்தியேதான் சொல்லி இருக்கும்.

தலையெலாந் தெய்வமென்னுந் தன்னை மற்றேனை

யிடையெல்லாம் வேறிருக்கு மென்னுங்-கடையெல்லா

மரத்தைபா டாணத்தை மண்ணையிருஞ் செம்பைக்

கருத்துருகத் தெய்வமெனுங் காண்

உத்தமங்க ளெல்லா முணர்வையே தாம்பேணும்

மத்திமங்க ளேபதுமை யைவாழ்த்துஞ்-சுத்த

அதமங்க ளெல்லாந்தன் னாகத்தைப் போற்று

நதியோடை கூபமென நாடு

தத்துவத்துக்கப்பாலே தன்னை தரிசித்து

நித்த பரி பூரணத்தினில்லாமல்-சுத்த

பனிமாயை யாற்செய் பதுமையினைத் தேடு

நனிமா னிடமிருக நாடு

(ஞான விளக்கம்- வள்ளலார்)

(தமிழ் அறிஞர்கள் யாரென்னும் இந்த் அபாடல்களுக்கு இன்னும் விளக்கம் தரலாம்!)

இதனால கிரியை, சரியை, விக்கிரஹ ஆராதனை எல்லாம் தேவை இல்லைன்னு இல்லை. அவரவருக்கு தகுந்தபடி...

மொட்டை மாடிக்கு போய்விட்டவனுக்கு மேலே போக படிகள் வேணாம். கீழ் மாடிகளிலே இருக்கிறவனுக்கு அது நிச்சயம் வேணும்தான்!

--

நிறைய அறிஞர்களை பாக்கலாம். பல நூல்களை எல்லாம் கரைச்சு குடிச்சு இருப்பாங்க. ஞான சம்பந்தமான நூல்களைக்கூடத்தான். அது குறிச்சு மணிக்கணக்கிலே விவாதம் செய்ய தயாரா இருப்பாங்க. சமயத்திலே சூடு பறக்கற விவாதங்கள் கூட நடக்கும். (பொன்னியின் செல்வன் ஆழ்வார்க்கடியான் ஞாபகத்துக்கு வரார்!) சரி அவ்வளோ தெரிஞ்சு இருக்கு இல்லே? அப்பக்கூட ஞான வழியிலே போகாம கர்ம படுகுழியிலே ஏன் விழறாங்க?

இந்த தியரிக்கும் நடைமுறைக்கும் ரொம்ப தூரம் என்கிற விஷயம் அடிக்கடி பாக்கலாம் வாழ்க்கையிலே! அன்பின் அவசியத்தைப்பத்தி மணிக்கணக்கிலே பேசிட்டு மத்தவங்க மேலே எரிஞ்சு விழுகிறவர்களை பாத்துதானே இருக்கோம்!

52.

அறிஞர்களும் ஆனந்தம் தரும் அத்வைத ஞானத்தை விட்டு கர்மம் செய்து துன்புறுதல் ஏன்?

என்ம னந்திருக்கோவிலாத் தினங்குடி யிருந்தருள் குருமூர்த்தி

சென்ம சஞ்சித வினைகள்வே றறுத்திடும் தேவரீர் மெஞ்ஞானம்

தன்ம யந்தரு மகிமையை விபுதராஞ் சமர்த்தரு மறியாமல்

கன்ம மாங்குழி யினில்விழுந் தழிகின்ற காரணமுரையீரே

என் மனந்திருக்கோவிலாத் தினம் குடி இருந்து அருள் குருமூர்த்தி, சென்ம சஞ்சித வினைகள் வேறறுத்திடும் தேவரீர், மெஞ்ஞானம் [ஆனது] தன்மயம் (மோக்ஷம்) தரும் மகிமையை விபுதராம் சமர்த்தரும் (கற்று தெரிந்து கொண்ட பெரும் அறிஞர்களும்) அறியாமல் (அதை அடைந்து உய்யாமல்) கன்மமாம் (கர்மமாம்) [படு] குழியினில் விழுந்து அழிகின்ற காரணம் உரையீரே. (கூறுங்கள்)

பிரகாசமான ரெண்டு கண்கள்! ஆனா பார்வை எங்கே போகிறதுன்னு விஷயம் இருக்கு இல்லையா? எங்கேயோ பராக்கு பாத்துண்டு போனா ஏதாவது படுகுழி வழில வந்தா விழத்தான் விழுவாங்க.

அதனால எல்லாத்திலேயும் மெய்ப்பொருளையே பாக்கிற உள் முக பார்வை இருக்கிறவங்களுக்கு நித்தியமான பிரம்மானந்த பதவி கிடைக்கும். சுவர்கத்தை விரும்பிக்கொண்டு இருக்கிறவங்க (ஆசைகள் நிறைய இருக்கிறவங்க ) என்ன படிச்சா என்ன, இந்த பிறவிக்கடலிலே விழுந்துகொண்டுதான் இருப்பாங்க. முக்தி அடைய மாட்டாங்க!

53.

விடை:

அழிவி லாததற் பதந்தனை மைந்தனே யகமுகத் தவர் சேர்வர்

வழிந டப்பவர் பராமுக மாயினான் மலர்ந்தகண் ணிருந்தாலும்

குழியில் வீழ்வர்கா ணப்படி வெளி முகங்கொண்டுகா மிகளானோர்

பழித ரும்பிற விக்கட லழுந்துவர் பரகதி யடையாரே

அழிவிலாத தத் பதந்தனை மைந்தனே, அக முகத்தவர் சேர்வர். வழி நடப்பவர் பராமுக மாயினான் மலர்ந்த (திறந்த) கண் இருந்தாலும் குழியில் வீழ்வர் காண். அப்படி வெளி முகம் கொண்டு காமிகளானோர் பழி தரும் பிறவிக் கடலழுந்துவர் பரகதியடையாரே.

--

வழியில் செல்பவர் கண்கள் திறந்து இருந்தாலும் பார்க்காது சென்றால் குழியில் விழுவார்கள் அல்லவா? அதுபோல வெளிமுக பர்வை கொண்ட சுவர்க காமிகள் கருவி நூல்கள் பல கற்றாலும் பிறவிக்கடலில் அழுந்துவார்களே அன்றி முத்தியடையார். எல்லாவற்றிலும் மெய்ப்பொருளை காணும் அகமுக பார்வை உடையவர் நித்திய பிரம்மாநந்த பதவி அடைவர்.

பல சமயங்களிலே சிலர் ஒரு வாதத்தை முன் வைக்கிறாங்க.

நீதான் எல்லாம் அவன் செயல்ன்னு சொல்கிறாயே! அப்ப நான் செய்கிறது எதுவுமே நான் செய்கிறது இல்லையே! நல்லதோ, கெட்டதோ எல்லாம் அவன் செய்விக்கிறது. நான் நினைச்சாலும் எதுவும் செய்ய எனக்கு சுதந்திரம் இல்லையே! அப்ப நான் என்ன செஞ்சாலும் என் மேலே குற்றம் சொல்லக்கூடாது.

மேலோட்டமா பாத்தா நல்ல ஆர்குமெண்ட் தான்.

அப்படி இல்லை.

54.

சீவச் செயலிவை சிவச்செயலிவை எனத் தெளியும் நிமித்தம் வினவுதலுக்கு விடை:

சிறந்த நன்மையுந் தீமையு மீசனார் செய்விக்குஞ் செயலன்றோ

பிறந்த சீவர்க ளென்செய்வா ரவர்கண் மேற்பிழைசொலும் வழியேதோ

துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற் பொருண் மார்க்கம்

மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனே யதுகேளாய்

சிறந்த நன்மையும் தீமையும் ஈசனார் செய்விக்கும் செயலன்றோ? பிறந்த சீவர்கள் என் செய்வார்? அவர் கண் மேற் பிழை சொலும் வழி ஏதோ? துறந்த தேசிக மூர்த்தியே என்றிடில், சுருதி நூற் (வேதநூல்)[இன்] பொருள், மார்க்கம் (வழி) மறந்த மூடர்கள் வசனிக்கும் (சொல்லும்) பிராந்தி (மயக்கம்) காண். மைந்தனே அது கேளாய்.

ஈஸ்வரனோட சிருஷ்டி வேறே; சீவனோட சிருஷ்டி வேறே. உலகத்தில பொதுவா இருக்கிறது எல்லாமே ஈஸ்வரனோட சிருஷ்டி. நதிகள் அவன் சிருஷ்டி. மலைகள், கடல், பூமி, வானம், செடி கொடிகள்......

அதை எல்லாம் வைத்துக்கொண்டு மனிதன் செய்கிறது சீவ சிருஷ்டி.

நான், என்னுது, கோபம், தாபம், பொறாமை - இதெல்லாம் மனிதனோட சிருஷ்டி.

[ஒரு சன்னியாசி வித்தியாசமா இறைவன் பத்தி சொன்னார்.

சாமி இருக்கான்னு கேக்கிறியா? இருக்கார்.

அவர் யார் ன்னு கேக்கிறயா?

எதுவெல்லாம் உருவாக மனுஷன் பொறுப்பில்லையோ, அதை எல்லாம் உருவாக்கினவர்தான் சாமி!]

முக்கிய வித்தியாசம் என்னன்னா ஈசனோட சிருஷ்டிகள் மோக்ஷமடைய சாதனமா ஆகும். புண்ணிய தீர்த்தங்கள், மலைகள், விருட்சங்கள்.... இப்படி ஏராளமா இருக்கே.

இன்னுமொன்னு. ஈசனோட சிருஷ்டிகள் நாசம் ஆகிறதால யாருக்கும் பிறவி ஒழியாது. ஆனா மனித சிருஷ்டியான நான், என்னது என்கிறதெல்லாம் ஒழிஞ்சா பிறவி ஒழியும்.

பிரலய காலத்திலே ஈச சிருஷ்டிகள் எல்லாம் ஒழியும். அப்பவும் பிறவி ஒழியாது. மெழுகு உருண்டையில தங்க தூள் போல ஜீவாத்தமா எல்லாமே சரியான நேரத்துக்காக காத்து இருந்து திருப்பி பிறவி எடுக்கும்.

ஆனா தேசம், காலம், தேகம் எல்லாம் இருக்கிறப்பவே ஆசை, கோபம், அகங்காரம் ஒழிச்சவங்க உயிரோட ஜீவன் முக்தர்களா இந்த உலகத்திலேயே ஞானத்தோட இருக்காங்க.

ஈஸ்வர சிருஷ்டி பொது; சீவன் அதில வேறுபாட்டை உருவாக்கறான் என்பதுக்கு உதாரணம் பாக்கலாம். ஈசன் ஒரு பெண்ணை படைக்கிறான். பொதுவா எல்லா பெண்களும் ஒரே தேக அமைப்போடதான் இருக்காங்க. ஆனா மனித பார்வையிலே ஒத்தர் அழகு ஒத்தர் கோரம்... இதே பெண் ஒத்தருக்கு பெண்; ஒத்தருக்கு மனைவி; ஒத்தருக்கு அம்மா; சகோதரி, நாட்டுப்பெண், பாட்டி..... இப்படி வித்தியாசங்களை உருவாக்குகிறது மனிதனோட கற்பனைதான்.

ஈச சிருஷ்டியை சீரழிச்சு மனுஷன் இயற்கையை திட்டுகிறதையும் பாத்துகிட்டுதானே இருக்கோம்.

55.

திகழ்ந்த வீசனார் சிருட்டியுஞ் சீவனார் சிருட்டியும் வெவ்வேறே
சகந்த னிற்பொது வீசனார் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம்
அகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல்லாம்
இகழ்ந்த சீவனார் சிருட்டிக ளாகுங்கா ணீசனார் செயலன்றே

திகழ்ந்த ஈசனார் சிருட்டியும் சீவனார் சிருட்டியும் வெவ்வேறே. ஈசனார் சிருட்டிகள்- சகந்தனில் பொது - சராசரப் பொருளெல்லாம். அகந்தையாம் (என் என்ற) அபிமானங்கள், கோபங்கள், ஆசைகள் இவையெல்லாம் இகழ்ந்த சீவனார் சிருட்டிகள் ஆகும் காண். ஈசனார் செயல் அன்றே.

56.

மூவராம்பரன் சிருட்டிக ளுயிர்களுக்கெல்லா முத்திசா தனமாகும்
சீவ னார்செயுஞ் சிருட்டிக டங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும்
தாவ ராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சனனங்க ணசியாவாங்
கோப மாதிக ணசித்திடிற் பந்தமாங் கொடும் பிற விகள்போமே

மூவராம் பரன் சிருட்டிகள் உயிர்களுக்கெல்லாம் முத்தி சாதனமாகும். சீவனார் செயும் சிருட்டிகள் தங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும். தாவராதிகள் நசித்திடில் ஒருவர்க்கும் சனனங்கள் நசியாவாம். கோபமாதிகள் நசித்திடில் பந்தமாம் கொடும் பிறவிகள் போமே.

--

ஈசனது சிருட்டிகள் மோக்ஷத்துக்கு சாதனமாகும். சீவர்களின் சிருட்டிகள் பிறவி அளிக்கும் பந்தங்களாம். ஈசன் சிருட்டித்த தாவரம் முதலியவை அழிந்தால் ஒருவருக்கும் ஜனனம் ஒழியாது.

57.

ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெவர்பவ மொழிந்தார்கள்

தேச காலதே காதிக ளிருக்கவுஞ் சீவகா ரியமோகம்

நாச மாக்கிய விவேகத்தி னுயிரொடு ஞானமுத் தர்களானார்

பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன்றே

ஈசர் காரியம் பிரளயத்து ஒழியவும் எவர் பவம் (உலகம்) ஒழிந்தார்கள்? தேச கால தேகாதிகள் இருக்கவும் சீவகாரிய மோகம் நாசமாக்கிய விவேகத்தின் உயிரொடு ஞான முத்தர்களானார். பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன்றே.

--

பிரளய காலத்தில் ஈசன் சிருட்டித்த அனைத்தும் அழிகின்றன. அப்படியும் யாருக்கும் ஜனன நாசம் ஏற்படுவதில்லை. கோபம் அகங்காரம் ஆசை ஆகிய ஜீவ சிருஷ்டிகள் ஒழிந்தால் ஜனன நாசம் ஏற்படும்.

முண்டகோபனிஷத்திலே ஒரு அருமையான உதாரணம் வருது. ஒரு அரச மரத்திலே ரெண்டு பறவைகள். கீழ் கிளையில இருக்கிற ஒரு பறவை கிளைக்குககிளை தாவி அங்க இருக்கிற பழங்களை எல்லாம் விரும்பி சாப்பிடும். மேல் கிளையில இருக்கிற மற்ற பறவை சாந்தமா சும்மா உக்காந்து இருக்கும். வேணும் வேணும் ன்னு ஆலாய் பறக்கிற பறவைதான் சீவன். அசங்காமல் இருக்கிறது ஈசன். சீவன் அஞ்ஞாகத்தால சுக துக்கங்களை அனுபவிக்கிறான். சுத்த சத்வ மாயையான ஈசன் இப்படி சுக துக்கங்களால பாதிக்கப்படுகிறதில்லை.

யார் ஜீவனோட செயல்களை கண்டு பிடிச்சுக்கொண்டு அதை சரி செய்ய நினைக்கிறங்களோ அவங்க தன் அகங்காரம், கோபம், தாபங்களை ஒழிச்சு முக்தி அடைய வாய்ப்பு இருக்கு. யார் செய்கிறதை எல்லாம் செய்ஞ்சுகிட்டு எல்லாமே ஈசன் செயல்ன்னு சொல்லிகிட்டு பழியை அவர் மேலே போட்டுட்டு இருக்காங்களோ அவங்க தன்னை கொஞ்சம் கூட மாத்திக்கப்போறதில்லை. (இங்கே முழு சரணாகதி பத்தி பேசலை. விதண்டாவாதம் செய்கிறவங்களைப்பத்திதான் பேசறோம். முன்னே கூட இதே பதிவுகளிலே இதைப்பத்தி பேசி இருக்கோம்!)

59.

சீவச்செயலை ஈஸ்வர செயலாகக் கூறுபவர்க்கு சனன துன்பமும் சீவச்செயலாவே கூறுபவர்க்கு முத்தியின் பலமும் பயனாம்:

இந்தச் சீவனால் வருமரு பகையெலா மிவன்செய லென்னாமல்

அந்தத் தேவனால் வருமென்ற மூடர்க ளதோகெதி யடைவார்கள்
இந்தச் சீவனால் வருமறு பகையெலா மிவன் செயலல்லாமல்
அந்தத்தேவனா லன்றெனும் விவேகிகளமலவீ டடைவாரே

இந்தச் சீவனால் வரும் (நேரிடும்) அரு பகையெலாம் (இங்கு ஆசை, கோபம் முதலானவை) இவன் (சீவனின்) செயல் என்னாமல், அந்தத் தேவனால் வரும் என்ற மூடர்கள் அதோ கெதி அடைவார்கள். இந்தச் சீவனால் வரும் அறு பகையெலாம் (செயல்களெல்லாம்) இவன் செயல் அல்லாமல் அந்தத் தேவனால் அன்று எனும் விவேகிகள் அமல (குற்றமற்ற) வீடு (மோக்ஷம்) அடைவாரே.

---

காம குரோதம் முதலான தீய குணங்களை தன்னுடைய செயல்கள் அல்ல என நினைப்பவன் மேலும் மேலும் அவற்றை செய்து பெரும்பாவம் தேடிக்கொள்வான். அவை தன்னுடையன என்று அறிபவன் அவற்றால் ஏற்படும் தீய பலன்களுக்கு அஞ்சி அக்குணங்களை ஒழிக்க முயன்று ஞானத்தை பெற்று முத்தி அடைவான்.

கடவுள் மறுப்பாளர்கள் முன் வைக்கிற இன்னொரு வாதம் - ஏன் ஏற்றத்தாழ்வு இருக்கு? எல்லாரும் ஒரே மாதிரி இருந்து இருக்கலாமே? ஏன் சிலர் பணக்காரங்க சிலர் அறிவாளி சிலர் பலசாலி மத்தவங்க அப்படி இல்லாம? சிலருக்கு எல்லாமே நல்லதா நடக்குது சிலருக்கு குட்டிக்கரணம் போட்டாலும் நடக்கலை. எல்லாருக்கும் பொதுவான கடவுள்னா ஏன் இப்படி பார பட்சம் காட்டறாரு?

முதலாவதா கடவுள் பாரபட்சம் காட்டலை. ஒரே அப்பா ஒழுங்கா படிச்சு நல்ல மார்க் வாங்கற பையனை தட்டிக்கொடுத்து பாராட்டுறார். சரியா படிக்காம ஊர் சுத்ததிட்டு குறைவா மார்க் வாங்கற பையனை திட்டறார் அடிக்கிறார். அது ஏன் அவருக்கு அதில சந்தோஷமா என்ன? கண்டிக்காட்டா பையன் இன்னும்தானே கெட்டுப்போவான்? அப்புறம் கஷ்டப்படுறது யாரு? அது போலதான் தர்மத்துப்படி நடந்துக்கிறவங்களுக்கு நல்லது செஞ்சு மத்தவங்களுக்கு தண்டனை தருவது இதுக்குத்தான். மக்களை நல்வழியிலே போக வைக்கத்தான். தண்டனை கொடுக்கிறதும் கருணையாலதான்.

இரண்டாவதா நெருப்பு எரியுது. யார் கிட்டே போய் உக்காந்துக்கிறாங்களோ அவங்களுக்கு குளிர் போகும். சுகமாயிருப்பாங்க. யார் கிட்டேயே வர மாட்டேன் என்கிறாங்களோ அவங்களுக்கு அதோட பயன் கிடைக்காது. இது நெருப்போட குத்தமா இல்லை பயன்படுத்தறவங்க குத்தமா? வெய்யில்லே காஞ்சுட்டு வந்த ஆசாமி குடத்தில இருக்கிற தண்ணியை குடிச்சாதான் தாகம் போகும். இல்லைனா தாகம் போகாது. அது தண்ணியோட குத்தமில்லை. அது போல ஆண்டவன்கிட்டே முறையிட்டா பலன் கிடைக்கும். இல்லாட்டா எப்படிக்கிடைக்கும்?

60.

ஈஸ்வர சிருட்டி பொதுவானால் அவரும் பொதுவாமே, அப்படியானால் பட்சபாதம் வருவானேன்? விடை:

நலமெய் யையனே யெல்லவர்க் குந்தெய்வ நாயகன் பொதுவானால்
சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதே யேனென்றாயேல்

குலவு மக்களைத் தந்தை போற் சிட்டரைக் குளிர்ந்து துட்டரை காய்வன்
கலைக்கணல் வழி வரச்செய்யும் தண்டமுங் கருணையென் றறிவாயே

நலமெய் ஐயனே, எல்லவர்க்கும் (எல்லாருக்கும்) தெய்வ நாயகன் (ஈசன்) பொதுவானால் சிலரை [நன்கு] வாழ்வித்தல், சிலரொடு கோபித்தல் செய்வது (துன்பமடையச்செய்வது) ஏன் என்றாயேல், குலவு மக்களைத் தந்தை போல் சிட்டரைக் குளிர்ந்து (சாத்திரங்களில் செய்யச் சொல்லியவற்றை செய்து விலக்கச் சொல்லியவற்றை விலக்கி செய்யாது உள்ளோருக்கு இன்பத்தை அளிக்கிறான்) துட்டரை காய்வன். (விலக்கிய தீ நெறியில் செல்வோர்களை தண்டிப்பான்) கலைக் கணல் வழி (ஆன்மாக்கள் நல்ல வழியில்) வரச் செய்யும் தண்டமும் (தண்டனையும்) கருணை[யால் செய்வதே] என்று அறிவாயே.

--

தந்தை நன்னடத்தை உள்ள மகனை சீராட்டி, கெட்ட நடத்தை உள்ள மகனை தண்டிப்பது போல ஈசனும் செய்கிறான்.

61.

மற்றொரு விதமாக விடை:

மனை யிலங்கறு மைந்தனே கற்பக மரங்கனல் புனன் மூன்றும்
தனைய டைந்தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாளும்
அனைய வீசனு மடைந்தவர்க் கருள்செய்வ னகன்றவர்க் கருள்செய்யான்
இனைய குற்றங்க ளெவர் குற்றமாகு மென்றெண்ணிநீ யறிவாயே

மனையிலங்கு அரு மைந்தனே, கற்பக மரம், கனல் (தீ), புனல் (நீர்) மூன்றும் தனை (தம்மை) அடைந்தவர் வறுமையும், சீதமும் (குளிரும்) தாகமும் தவிர்த்து ஆளும். (காப்பாற்றும்) அனைய [அதுபோல்] ஈசனும் அடைந்தவர்க்கு (வழிபடுவோருக்கு) அருள் செய்வன். அகன்றவர்க்கு அருள் செய்யான். இனைய (இந்த) குற்றங்கள் எவர் குற்றமாகும் என்று எண்ணி நீ அறிவாயே.

"சரி, எனக்கு என்ன செய்யணும் ன்னு தெரியலையே!"ன்னா செய்ய வேண்டியது ஒண்ணுதான். ஈசன் கொடுத்து இருக்கிற சாஸ்திரங்கள், வேதம் முதலியதெல்லாம் என்ன செய்ய சொல்லி இருக்குன்னு பாத்து அது மாதிரி நடந்துக்கணும். இப்படி செய்து கொண்டு நல்லவங்க கூடவே பழகிகிட்டு கெட்ட வாசனைகளை விட்டுடணும். இது ஆன்ம முன்னேற்றத்துக்கு உதவும் - இது உதவாது என்கிற விவேகத்தோட சமம், தமம் முதலானதை பழகணும். இப்படியாக சாதனை செஞ்சு, மாயையை நீக்கி, ஞானத்தை அடைகிறவங்களோட பிறப்பு ஒழியும். இது சர்வ நிச்சயம் என்கிறார் தாண்டவராய சுவாமிகள்.

பொரு திடங்கொண்ட பொன்னி புரக்கும்
அருதிடங்கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்னி நினைந்து
எண்ணருங் கோடி இடர் பகை களைந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா

இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து சிறப்பொடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனின்
முறியற் பெறுக்கள் முப்பழங் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றமன்று வெயிலின் வைத்து
ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட்டு இருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர் குற்றமன்று கண்ணகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
வடிபெயர்த்திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் இழற்றீங்கு அன்றே.

குண்ட்ஸா புரியுது இல்லே? சாப்பாடு ரெடியா இருக்கிறப்ப பசியோட இருக்கிறவன் சாப்பிடலைனா அது என்ன பண்ணும்? தாகமா இருக்கிறவன் இருக்கிற வாசனையான தண்ணியை குடிக்கலைனா தண்ணி என்ன பண்ணும்? குளிர்ச்சியான சோலை இருக்க வெயில்லே நான் காயறேன்னா சோலை என்ன பண்ணும்?

62.

அக் குற்றம் நீங்க உபாயம்:

ஒன்று கேண்மக னேபுமான் முயற்சியா லுறைத்துமா னுடர்க்கீசன்
நன்று செய்யவே காட்டிய நூல்வழி நடந்துநல் லவர்பின்னே சென்று
துட்டவா தனைவிட்டு விவேகியாய் செனித்தமா யையைத் தள்ளி
நின்று ஞானத்தை யடைந்தவர் பவங்கள்போம் நிச்சயமிதுதானே

ஒன்று கேண் மகனே! புமான் (மனிதன்) முயற்சியால் உறைத்து, மானுடர்க்கு ஈசன் நன்று செய்யவே காட்டிய நூல் வழி நடந்து நல்லவர் பின்னே சென்று, துட்ட வாதனை (வாசனை) விட்டு விவேகியாய், செனித்த மாயையைத் தள்ளி நின்று, ஞானத்தை அடைந்தவர் பவங்கள் போம். நிச்சயம் இதுதானே.

--

மனிதர்களுக்கு பிரம்மானந்த பேற்றை அளிக்கவே ஈஸ்வரன் வேதத்தை அருளியிருக்கிறார். யார் மோக்ஷம் அடைய வேண்டுமென்ற வைராக்கியத்தோடு முயன்று, வேதத்தில் கூறப்பட்ட வழியில் நடந்து, பிரம்ம நிஷ்டர்களாகிய பெரியோர்களின் சகவாசத்தில் இருந்து, காம குரோத முதலான மலின வாசனைகளை ஒழித்து சம, தம முதலான சாதனைகளை அடைந்து, நித்திய, அநித்திய விவேகம் உடையவர்களாய், அவிவேகத்தால் உண்டான மாயையாகிற பேத புத்தியை ஒழித்து ஓர் நிலையில் நின்று

ஞானத்தை அடைகிறார்களோ அவர்கள் பிறப்பு இறப்பாகிய பவசாகரத்தைக் கடந்து முத்தியாகிய கரையை அடைவார்கள். இது நிச்சயம்.

"அது சரி! இப்படி பல படிகள் சொல்லறீங்களே! எதால ஞானம் உதிக்கும்?" என்கிறார் சீடன்.

"ஞானம் இடைவிடாத விசாரத்தாலதான் உதிக்கும்."

"என்ன விசாரம்?"

விசாரம் என்கிறது என்ன ? "இந்த தேக இந்திரிய கரணங்களில் நான் என்று இருப்பது எது? இவற்றில் சித்தாக உள்ளது எது? இந்த சித்தும் ஜடமும் ஒன்றாகப் பொருந்தும் பந்தம் ஆவது எது? மோக்ஷம் என்பது என்ன?" இப்படி சதா ஆராய்ச்சி செய்தலே விசாரம்.

கெடாத சிற்கண்ணா னீதான் கிளர்மே லவர்க ளூடேதான்

விடாதிவ் வுலகே தியாமாரென் றுரைக்க மெல்ல விசாரிப்பாய்

தடாதுட் பொருடேர் வித்தைக்கு விசாரந் தானே தனிஞானம்

கடாவி யறியத் தக்கத்திற் காணும் பாலின் மதுரம்போல்

-வாசிட்டம்

63.

எதனால் ஞானம் உதிக்கும்?

இந்த ஞானத்தான் வருவதெப் படியெனி லிடைவிடா விசாரத்தால்

வந்த டைந்திடும் விசாரந்தா னேதெனின் மனாதியாஞ் சரீரத்தில்

இந்த நானெவன் சித்தெது சடமெது விரண்டுமொன் றாக்கூடும்

பந்தமேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமதாகும்

இந்த ஞானத்தான் வருவது எப்படி எனில், இடைவிடா விசாரத்தால் வந்தடைந்திடும். விசாரந்தான் ஏதெனில், மன ஆதியாம் (முதலான) சரீரத்தில் இந்த நான் எவன், சித்து எது, சடம் எது இரண்டும் ஒன்றாக்கூடும் பந்தம் ஏது, வீடு ஏது என உசாவுதல் பகர் (சொல்லப்பட்ட) விசாரம் அதாகும்.

ஏன் நிறைய நல்ல காரியங்கள் பண்ணா தானா ஞானம் வராதா என்ன?

வராது.

முன்னமேயே பார்த்து இருக்கோம். கர்மங்கள் கொண்டு விடறது சித்த சுத்தியிலதான். தெளிவா இருக்கிற இந்த சித்தத்தால விசாரம் செய்துதான் முக்தி அடையணும். தெளிவான சித்தம் நித்தியம் எது அநித்தியம் எது நாம் யார் என்றெல்லாம் விசாரித்து ஞானம் அடையும்.

64.

கன்மம் முக்கியம் எனும் கொள்கை நீங்கும் பொருட்டு ஞானம் உதிக்க சற்கருமம் இருக்க விசாரம் ஏன்?

போன சன்மங்க டமிலநுட் டித்தநற் புண்ணிய பரிபாகம்
ஞான மாக்குமே விசாரமே னென்றிடி னாமுரைத்திடக் கேளாய்
ஆன புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயி னசுசி போஞ் சுசியாகும்
மான தம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென் றறிவாயே

போன சன்மங்கள்தமில் அநுட்டித்த (கடை பிடித்த) நற் புண்ணிய பரிபாகம் (பயன்) ஞானமாக்குமே? (ஞானத்தை தருமே) விசாரம் ஏன் என்றிடின், யாம் உரைத்திடக் கேளாய். ஆன (செய்யும்) புண்ணியம் ஈசுர அர்ப்பணம் செயின் அசுசி (அசுத்தம்) போம். சுசியாகும். (சுத்தமாகும்) மானதம் (மனது) பினை (பின்னை- பிறகு) விசாரித்து (ஆத்ம அனாத்ம விசாரம் செய்து) ஞானத்தை மருவும் (அடையும்) என்று அறிவாயே.

ஈஸ்வர அர்ப்பணமாக செய்யும் கருமங்கள் சித்த சுத்தி தரும். அதன் பின் மனம் நித்தியம் எது, அநித்தியம் எது என விசாரித்து ஞானம் அடையும். நிஷ்காம்ய கர்மம் சித்த சுத்தி தருமே ஒழிய நேரடியாக ஞானத்தை தராது.

என்னங்க இது? கர்மங்கள் எவ்வளவு பலமா இருக்கு? பக்தி, வைராக்கியம், சுவர்க்கம், அணிமா சித்தி, நிஷ்டை ,யோகம் ,தியானம் ன்னு எவ்வளவு தர முடியது கர்மங்களாலே. சிவலோகம், வைகுந்தம், பிரம்ம லோகம், தேவலோகம் ன்னு கூட தர முடியுது.

இப்படி இருக்க அஞ்ஞானத்தை தள்ளனும்னா விசாரணை வேணும் என்கிறீங்க. ஏன்?

65.

ஞானத்துக்கு விசாரமே முக்கியமாய் வேண்டுமென்பது உறுதிப்பட வினா

பத்தியும்வயி ராக்கிய மும்பர லோகமு மணிமாதி
சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியானமுஞ் சாரூப
முத்தி யுந்தரும் விசித்திர கருமங்கண் மோகமா த்திரந்தள்ளும்
புத்தி தந்திட லருமையோ விசாரமேன் புண்ணிய குரு மூர்த்தி.

பத்தியும், வயிராக்கியமும், பர லோகமும் (சுவர்கம்) அணிமாதி சித்தியும், தவ நிட்டையும், யோகமும், தியானமும், சாரூப முத்தியுந் [இவ்வளவு அரிய விஷயங்களை] தரும் விசித்திர கருமங்கள் மோக (அஞ்ஞானம்) மாத்திரம் தள்ளும் புத்தியை தந்திடல் அருமையோ? (நடவாததோ) விசாரமேன் (அதற்கு விசாரம் வேண்டும் என்பது ஏன்) புண்ணிய குரு மூர்த்தி.

ஒத்தர் வேஷம் போட்டு இருக்கார். அவரை கண்டுபிடிக்க அவரோட நடை, பாவனை, குரல், உசரமா குட்டையா, அங்க அடையாளங்கள் இப்படி எல்லாம் தெரிஞ்சு இருக்கணும். இதை தெரிஞ்சுகிட்டு உத்துப்பாத்து "ஓ! இவன் சர்தார்ஜி மாதிரி வேஷம் போட்டு இருந்தாலும் குரலை மாத்திக்கலை; வலது கால்ல கொஞ்சம் ஊனத்தால விந்தி நடக்கிறது அப்படியே இருக்கு.” இப்படி எல்லாம் ஆராய்ஞ்சு பாத்து, அவர் இன்னார்தான் ன்னு கண்டுபிடிக்கலாம். அதை விட்டுட்டு "வெகு தூரம் ஓடறேன், மரத்தோட உச்சாணி

கொம்பிலே ஏறறேன், முத மாடியிலேந்து குதிக்கிறேன்; அப்படிப் பண்ணா அவர் யாருன்னு தெரியணும்" ன்னா, அப்படி நடக்குமா?

அதே போல பரப்பிரம்மம் பஞ்ச கோசங்கேளாட சீவனா வேஷம் போட்டு இருக்கு. அதை தெரிஞ்சுக்க அதைப்பத்திய ஞானம் வேணும். பிரம்மத்தோட விவரத்தை வேதம் முதலானவை சொல்கிறதை கேட்டு உள் வாங்கிக்கொண்டு விசாரித்து பாத்து புரிஞ்சுக்கணும்.

நாமார் நமக்கு பதியா ரெனவரு ஞானங்களே
மாமாயை கன்ம மலத்திரள் மாற்றிடும் ....
-வள்ளலார்

தன்னையறிவதறிவா மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறிவாமே....
தன்னை யறிந்து சிவனுடன் றானாக
மன்னு மலங்குண மாளும் பிறப்பும்....
தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியா மற் றானே கெடுகின்றான்
-திருமந்திரம்

66.

வேட மாறிய பேர்களை யறியவே வேண்டினான் மகனேகேள்
கூட மாமவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல்
ஓடி யுங்குதித் துந்தலை கீழ்நின்று முயர்ந்தகம் பத்தேறி
ஆடி யும்பல கருமங்கள் செய்யினு மவருண்மை தெரியாதே

வேடம் மாறிய பேர்களை அறியவே வேண்டினால், மகனே கேள். கூடமாமவர் (மறைந்திருக்கும் அவர்) சுபாவங்கள் சீலங்கள் (குணங்கள்) [அறி]குறிகள் ஆய்ந்து அறியாமல், ஓடியும் குதித்தும் தலை கீழ்நின்றும் உயர்ந்த கம்பத்து ஏறி ஆடியும் பல கருமங்கள் (செயல்கள்) செய்யினும் அவர் உண்மை தெரியாதே.

தன் உண்மை உருவை மாற்றி மாறு வேடம் கொண்ட ஒருவனைக் கண்டறிய வேண்டும் என்றால் மறைந்து இருக்கும் அவனது குணங்கள், ஒழுக்கங்கள், அடையாளங்கள் ஆகியவற்றை உற்று உணர்ந்து இவன் இன்னவன் என அறிய வேண்டும். அப்படி இல்லாது வெகு தூரம் ஓடுவதாலும், குதிப்பதாலும், தலை கீழ் நிற்பதாலும், உயர்ந்த கம்பத்தின் உச்சியில் ஏறி ஆடுவதாலும், இன்னும் இத்தகைய பல செய்வதாலும் வேடம் மாறி இருக்கும் அவன் உண்மையை கண்டறிய முடியாது.

67

திருஷ்டாந்தம்:

இன்ன வாறந்தப் பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத் தால்வேதம்
சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித்தாலும்

அன்ன தானங்க டவங்கண் மந்திரங்களா சாரங்கள் யாகங்கள்
என்ன செய்யினுந் தன்னைத்தா னறிகின்ற திவைகளால் வாராதே

இன்னவாறு அந்தப் பிரமத்தை அறிவிக்கும் இலக்கணத்தால் வேதம் சொன்ன ஞானமும் விசாரத்தால் வரும். [இது] அன்றிச் சுருதி நூல் (வேதம்) படித்தாலும், அன்ன தானங்கள், தவங்கள், மந்திரங்கள், ஆசாரங்கள், யாகங்கள் என்ன செய்யினும் தன்னைத் தான் அறிகின்றது இவைகளால் வாராதே.

--

சச்சிதானந்த சொரூபமாகிய பரப்பிரம்மம் பஞ்ச கோசம் முதலானவற்றோடு கூடி சீவனாக மாறு வேடம் அணிந்து இருக்கிறது. அதை அறிய வேண்டினால் ஞானத்தை பெற வேண்டும். பிரமத்தை அதற்கு உரிய இலக்கணங்களால் அறிவிக்கும் வேதங்களால் சொல்லப்பட்ட அந்த ஞானம் விசாரத்தால் மட்டுமே வரும். பிற செயல்களால் வாராது.

68.

ஞானத்தாலேயே அஞ்ஞானம் அழிய வேண்டுமென நன்றாய் அறிய வினவுதல்:

துளங்கு தர்பண மழுக்கறக் கைக்கொண்டு துலக்கினாற் போமன்றி
விளங்குபுத்தியா லுலகிலார் துலக்கினார் விமலதே சிகமூர்த்தி
களங்கமாகுஞ் ஞானமு மப்படிக் கருமத்தாற் கழுவாமல்
உளங்கு றித்தஞா னத்தினா லெப்படி யொழியுமீ தருள்வீரே

துளங்கு (விளங்குகின்ற) தர்பணம் (கண்ணாடி) அழுக்கு அறக் (அழுக்கு போக) கைக்கொண்டு துலக்கினாற் (துடைத்தால்) போம் அன்றி விளங்கு[கின்ற] புத்தியால் உலகில் யார் துலக்கினார்? விமல தேசிக மூர்த்தி! களங்கமாகும் ஞானமும் அப்படிக் கருமத்தால் கழுவாமல் உளம் குறித்த ஞானத்தினால் எப்படி ஒழியும்? ஈது அருள்வீரே.

--

என்ன ஐயா இப்படி சொல்லறீங்க? கண்ணாடியில இருக்கிற அழுக்க கையால துடைச்சாத்தானே சுத்தமாகும்? அப்படி இல்லாம புத்தியால யார் சுத்தம் செய்தாங்க? அதப் போல களங்கமா இருக்கிற அஞ்ஞானம் நல்ல செயல்களால நீங்காம அறிவால உணருகிற ஞானத்தால எப்படி நீங்குமோ?

இப்படி சீடன் கேட்க குரு சொல்லறார்.

கண்ணாடில இருக்கிற அழுக்கு உண்மையானது, அப்பா! அதனால கையால தேச்சு சுத்தம் பண்ணணும். இதுவே ஒரு கருப்பு துணி பக்கத்தில இருக்கிற ஸ்படிக கல்லில கருப்பா பாக்கிறோம் ன்னா, அது நிஜமா அந்த கல்லிலே இல்லை, பக்கத்துல இருக்கிற துணியோட வண்ணம் தான் அப்படி தோணுதுன்னு அறியணும்னா மனசு மட்டுமே போதுமே? இது போலதான் சச்சிதானந்தத்திலே தோன்றுகிற அசத்து, சட, துக்கமா தெரிகிற இந்த பிரபஞ்சம் உண்மையிலே கிளிஞ்சலிலே வெள்ளியை பாக்கிறது போல மாயைதான். சத்தியமில்லை. அஞ்ஞானத்தை கர்மங்கள் பகைச்சுக்காது. மாறா உறவாக்கிக்கும். பரிசுத்த ஞானம் மட்டுமே கருமத்தையும் அஞ்ஞானத்தையும் சுட்டு எரிக்கிற அக்னியாகும்.

69.

விடை:

தர்ப்ப ணத்தினிற் களிம்புவாஸ் தவமலஞ் சகசமாதலின் மைந்தா
கற்ப ளிங்கினிற் கருநிறஞ் சகசமாக் கருத்ததன் றாரோபம்
தர்பணத்தினி லழுக்கறவேண்டினாற் சாதனத் தொழில் வேண்டும்
கற்ப ளிங்கினிலா ரோபமே கறுப்பென்று கண்டிட மனம்போதும்.

தர்ப்பணத்தினில் (கண்ணாடியில்) களிம்பு (அழுக்கு) வாஸ்தவ மலம் (உண்மையான அழுக்கு) சகசம் ஆதலின் [அது செயலால் நீங்கும்]. மைந்தா கற் பளிங்கினில் கரு நிறம் சகசமாக (உண்மையாக) கருத்தது அன்று. [அது] ஆரோபம். தர்பணத்தினில் அழுக்கற வேண்டினால் சாதனத் தொழில் வேண்டும். கற் பளிங்கினில் ஆரோபமே கறுப்பு என்று கண்டிட மனம் போதும்.

--

கண்ணாடியில் உள்ள அழுக்கு உண்மையானது. ஆனால் ஸ்படிகக் கல்லில் கருமை நிறம் தோன்றுவது உண்மையல்ல, அது ஆரோபம். (கற்பிக்கப்பட்டது) ஆகையால் கண்ணாடியில் உள்ள அழுக்கை கையால் தொழில் (செயல்) தேவை. ஸ்படிகக் கல்லில் தோன்றும் கருமை நிறம் பொய் என்று அறிய மனம் மட்டுமே போதும்.

70.

அஞ்ஞானம் அத்தியாசமானாலும் கருமத்தால் நீங்காதோ?
இங்கு மப்படி சச்சிதாநந்தத்தி லிடர்சடம் பொய்மூன்றும்
தங்கு மாயையின் கற்பித மன்றியே சகவாஸ் தவமன்றே
பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகைசெய்யா துறவாக்கும்
துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே

இங்கும் அப்படி சச்சிதாநந்தத்தில் இடர் சடம் பொய் மூன்றும் தங்கு மாயையின் கற்பிதம் அன்றியே சக வாஸ்தவம் அன்றே. பங்கமாகும் அஞ்ஞானத்தைக் கருமங்கள் பகை செய்யாது உறவாக்கும். துங்க ஞானமே கரும அஞ்ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே.

--

அது போல இந்த தாஷ்டாந்தத்திலும் (உபமேயத்திலும்- எதற்காக உதாரணம் சொன்னோமோ அது) சச்சிதானந்த சொரூபத்தில் தோன்றி இருக்கும் அசத்து, சடம், துக்கமாகிய பிரபஞ்சம் முதலானவை யாவும் கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவது போல மாயையால் கற்பிதம் செய்யப்பட்டதாக (ஆரோபமாக) தோன்றியவை அன்றி உண்மை அன்று. அஞ்ஞானத்தை கருமங்கள் பகைத்து ஒழிக்கா; உறவாக்கிக்கொள்ளும். பரிசுத்தமான ஞானமே கருமத்தையும் அஞ்ஞானத்தையும் சுட்டு எரிக்கக்கூடிய நெருப்பாகும்.

{கிளிஞ்சலில் வெள்ளி: தூரத்தில் இருந்து பாக்கும் போது வெள்ளி போல பளிச்சிடுகிறது. கிட்டே போய் நன்றாக பார்த்தபின் அது வெள்ளி இல்லை கிளிஞ்சல் என்று தெரிகிறது.}

ஒரு பொருளை தவறுதலா வெச்சுட்டு தேடுறதுதான் நமக்கு பழக்கமாச்சே!
ஒத்தர் கணினியிலே நிறைய படங்கள் சேத்து வெச்சு இருந்தார். ப்ளாக்ல போட ஆசை ஆசையா சேத்தது. ஒரு நாள் குறிப்பிட்ட ஆனை படத்தை தேடினா காணோம். எங்கே சேமிச்சோம்னு நினைவுக்கு வரலை. செர்ச்சில் ஜேபெக் பிஎம்பி ன்னு தேடித்தேடி பாத்து கிடைக்கலை. என்னதான் அழுது புரண்டாலும் அது கிடைக்குமா? உக்காந்து நிதானமா எப்ப அதை கடைசியா பாத்தோம் என்ன செய்தோம்ன்னு யோசனை செய்தா அட ஆமாம் அன்னிக்கு நண்பருக்கு காட்ட ப்ளாஷ் ட்ரைவிலே காப்பி செய்தோமேன்னு நினைவு வந்து அந்த ப்ளாஷ் டரைவை எடுத்து பாத்தாத்தான் அதிலே கிடைக்கும்.
அது போலத்தான் விசாரத்தால அஞ்ஞானமாகிய மறதியை நீக்கணும்; அறிவால பரிசுத்தமான ஆத்மாவை தரிசிக்கணும். இப்படி இல்லாம நூறு யுகங்கள் பெரிய பெரிய யாகங்கள் பண்ணாலும் அந்த ஞானம் கிடைக்காது.

71.

மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்தவன் வருடநூறழுதாலும்

நினைத்து ணர்ந்தபின் கிட்டுமப் படியிந்த நின்மல வான்மாவும்
அனர்த்த மானதன் மறதியைக் கெடுத்துத் தன்னறிவினாற் காணாமல்
கனத்த கர்மங்க ணூறுகஞ் செய்யினுங் காணுமோ காணாதே

மனைக்குள் (வீட்டுக்குள்) வைத்த பண்டங்களை மறந்தவன் நூறு வருடம் அழுதாலும், நினைத்து உணர்ந்த பின் [மட்டுமே] கிட்டும். அப்படி இந்த நின்மல ஆன்மாவும் அனர்த்தமான தன் மறதியைக் கெடுத்துத் (போக்கி) தன் அறிவினால் காணாமல் கனத்த (பெரிய) கர்மங்கள் நூறுகள் செய்யினும் காணுமோ? காணாதே.

--

வீட்டில் ஒருவன் ஒரு பொருளை எங்கோ வைத்து விட்டு அந்த இடத்தை மறந்து போனான். அதற்காக அவன் நூறு வருஷ காலம் விழுந்து புரண்டாலும் அழுதாலும் அப்பொருள் கிடைக்குமோ? ஒரு போதும் இல்லை. நிதானமாக யோசனை செய்து கடைசியில் 'ஓ, கூடத்தில் உள்ள மேற்கு பக்க அறையின் சிறிய மாடத்தில் வைத்தோம்" என்று அந்த இடத்தை நினைவுக்கு கொண்டு வந்தால்தான் அது கிடைக்கும். அது போல விசாரத்தால் அஞ்ஞானமாகிய மறதியை நீக்கி அறிவினால் பரிசுத்த ஆன்மாவை தரிசிப்பதாகிய ஞானத்தை பெற வேண்டும். அது இன்றி நூறு யுகங்கள் பிரபலமாகிய பெரிய கர்மங்களை செய்தாலும் அந்த ஞானம் கிடைக்காது......

பத்தி நெறி நிலை நின்று நவகண்ட பூமிப் பரப்பைவல மாக வந்தும்

பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும் பசிதாக மின்றி யெழுநா

மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை வன்பசி தளக்க டைத்தும்

மவுனத் திருந்துமுயர் மலைநுழை தனிற்புக்கு மன்னுதச நாடி முற்றுஞ்

சுத்தி செய் தும்மூல ப்ராணனோ டங்கியைச் சோமவட் டத்த டைத்தும்

சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க டோறுநிலை நிற்க வீறு

சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ சித்தாந்த முத்தி முதலே

சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே சின்மயானந்த குருவே.

-தாயுமானவர்

ஆக கருமம் ஞான சாதனம் இல்லை. ஆனால் நிஷ்காம கர்மம் சித்த சுத்தி கொடுத்து அதன் வழியே விசாரம் உதித்து ஞானம் பெறச்செய்யும்.

சரி ஐயா. வேதத்திலே கர்ம காண்டத்தில சொல்லி இருக்கே ஐயா புண்ணிய கர்மம் பண்ணா தேவ ஜன்மம் கிடைக்கும் பாபம் பண்ணா மிருகம் முதல் தாவரம் வரையான ஜன்மம் கிடைக்கும். பலரும் செய்கிற படி இரண்டும் கலந்து பண்ணா மனுஷ ஜன்மம் கிடைக்கும்ன்னு. அவங்கவங்க ஜாதி ஆசாரத்திலே ஒழுக்கத்தில தவறாம நடக்கிறதே தவம் அதனால சுகமடைவான் னு சொல்லி இருக்கே. ஏன் இப்படி சொன்னாங்க?

72.

கர்ம காண்டத்தில் கூறி உள்ளதை சீடன் சந்தேகப்படுதல்:

நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞானமே யெனும் வேதம்

தன்ம பாவமிச் சிரங்களாற் றேவர்க டருவிலங்குகண் மாந்தர்

சென்ம மாகுவ சாதியா சாரமே செய்தவஞ் சுகமென்று
கன்ம காண்டத்தில் விதித்ததென் விதித்துள காரணமுரையீரே

நன்மையாங் குருவே, சுகந் தருவது ஞானமே எனும் வேதம் தன்ம (புண்ணிய) பாவ மிச்சிரங்களால் தேவர்கள், தரு, விலங்குகள், மாந்தர் சென்மமாகுவர். சாதி ஆசாரமே செய்[கின்ற] தவம், சுகம் என்று கன்ம காண்டத்தில் விதித்தது என்? விதித்துள காரணம் உரையீரே.

--

உத்தம குருவே! ஞானம் ஒன்றே மோக்ஷத்தை அளிப்பது என்று கூறும் வேதம், புண்ணிய கருமத்தால் தேவ ஜன்மமும் பாப கருமத்தால் மிருகம் முதல் தாவரம் வரையில் உள்ள ஜன்மங்களும் இரண்டும் கலந்த கர்மத்தால் மனித பிறவியும் கிடைக்கும் என்றும்; அவனவன் தன் தன் ஜாதி ஆசார ஒழுக்கங்களில் தவறாது நடப்பதே தவம் என்றும், அதனால் சுகமடைவான் என்றும் சொல்லி இருக்கிறதே அதன் காரணத்தை சொல்ல வேண்டுகிறேன்.

ஒரு குழந்தைக்கு உடம்பு சரியில்லை. அவங்க அம்மா மருந்து கொடுக்கப்பாக்கிறாங்க. மருந்தோ ஒரே கசப்பு. என்ன செய்கிறது? குழந்தைக்கு பிடிச்ச பண்டம் ஒன்னில மருந்தை ஒளிச்சு கலந்து வைக்கிறாங்க. குழந்த தனக்கு பிடிச்ச பண்டம் ன்னு சாப்பிட ஆரம்பிக்கும். ருசி வேற மாதிரி இருக்குன்னு அதுக்கு புரிஞ்சு துப்பறத்துக்குள்ளே ஏதோ பேச்சு போக்கு காட்டி சாப்பிட வைச்சுடுவாங்க.

அது போல இல்லற தர்மங்களை வேதம் வரையறுத்தாலும் அதன் உண்மையான நோக்கம் வேற. சுவர்க்கம் போன்ற போகங்களில ஆசை வெச்சு இருக்கிறவங்க அந்த உண்மையான பொருளை உணர மாட்டாங்க.

## 73

தினமு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்ட மெதிர்க்காட்டிக்
கனம ருந்துகளொளித்து வைத்தழைக்கின்ற கருணைநற் றாய்போலே
மனைய றங்கள் செய்மகங்கள் செய் நன்றென்று மலர்ந்தவா சகஞ் சொல்லும்
நினைவு வேறுகாண் சுவர்ககா மிகளந்த நிண்ணயந் தெரியாரே

தினமும் மண் நுகர்(தின்கின்ற) பிள்ளை நோய்க்கு இரங்கியே, தீம் (இனிப்பான) பண்டம் எதிர்க்காட்டி, கன மருந்துகள் ஒளித்து வைத்து அழைக்கின்ற கருணை நல் தாய் போலே மனை (இல்லத்துக்குரிய) அறங்கள் செய்; மகங்கள் (யாகங்கள்) செய்; நன்று. என்று மலர்ந்த வாசகஞ் சொல்லும் நினைவு வேறு காண். ஸ்வர்க காமிகள் அந்த நிண்ணயம் தெரியாரே.

--

மண் முதலியவற்றை உண்டு வியாதி உற்று இருக்கும் தன் குழந்தையின் நோயை நீக்க தாயானவள், நேரே அதற்கு மருந்தை கொடுத்தால் அது சாப்பிடாதாகையால் அப்படி தராமல் சுவையான தின்பண்டங்களைக் காட்டி அவற்றில் மருந்தை மறைத்து வைத்து குழந்தை அதை சாப்பிடும் படி செய்கிறாள். அந்த கருணை உள்ள தாயாரைப்போல இல்லற தருமங்களை செய். யக்ஞங்களை செய் என்று வேதம் கூறியதே அன்றி உண்மையில் அதன் கருத்து வேறாகும். சுவர்க்கம் முதலான போகங்களை அனுபவிக்க ஆசை உடையவர்கள் அந்த உண்மை கருத்தினை உணர மாட்டார்கள்.

சில விஷயங்கள் ஏற்கெனவே சுபாவமா இருக்கில்லை? அதை செய் ன்னு சொல்ல வேதம் வரணுமா என்ன? யாரும் "ஓ! காகமே! நீ கறுப்பாகு. அக்னியே, நீ சுடு! வேம்பே, நீ கசப்பா இரு! காத்தே, நீ வீசு!" ன்னு சொல்லறாங்களா என்ன? அதெல்லாம் அதததோட சுபாவம் இல்லையா?

## 74.

போக மாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பேகாண்
ஆக மங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோ வத்தனை தெரியாதோ
காக மேகறுத் திடுநெருப் பேசுடு கசந்திடு வேம்பே
வேக வாயுவே யசையென வொருவரும் விதித்திடல் வேண்டாவே

போகம் (உண்கின்ற) ஆருயிர்(கள்) கண்டதை உண்பதும் புணர்வதும் இயல்பே காண். ஆகமங்களும் சுபாவத்தை விதிக்குமோ அத்தனை தெரியாதோ? காகமே கறுத்திடு நெருப்பே சுடு, கசந்திடு வேம்பே, வேக வாயுவே அசைந்திடு என ஒருவரும் விதித்திடல் வேண்டாவே.

--

போகங்களை புசிக்கும் சீவன்கள் அகப்பட்டதை உண்பதும் உடன்உறங்குவதும் இயல்பே ஆகும். ஸ்ருதி (வேதம்) சுபாவமாக உள்ளதை எங்காவது விதிக்குமோ? அதற்கு அவ்வளவு தெரியாதோ? “காகமே! நீ கருப்பாய் இரு. நெருப்பே நீ சுடு, வேம்பே நீ கசப்பாய் இரு " என்று எல்லாம் யாரும் விதிக்க வேண்டியது இல்லையே?

மேலும் பாருப்பா! வேதம் சாதாரணமா நாம செய்ய விரும்புகிற விஷயங்களை பண்ணுன்னு சொல்லலை. மாறா அதுக்கெல்லாம் கட்டுப்பாட்டை விதிக்குது. "மது, மாமிசம் உண்ண ஆசை வந்தாச்சு; அதை கட்டுப்படுத்த முடியலை ன்னா யக்ஞங்கள் செய்து அங்க சாப்பிடு. ஸ்திரீ போகத்தில் இச்சை இருந்தா கட்டின பெண்டாட்டி கூட மட்டும் வெச்சுக்க.” இப்படி கட்டுப்பாடுகளை விதிக்குது. அதை மேலும் கட்டுப்படுத்தவும் பாக்குது. "யக்ஞத்தில மதுவோ மாமிசமோ சாப்பிட்டாகணும் ன்னு இல்லை; முகர்ந்து பாத்துட்டு விட்டுடலாம். அப்போ அது கர்ம வழி நடந்ததாகவும் ஆகும். நெடுங்காலம் சுவர்க போகங்களும் கிடைக்கும்.” என்கிறது. மேலும் அது "உன்னால யாகத்தில் பலி போடப்பட்ட பசு, சுவர்கத்தில கூர்மையான எஃகு கொம்புகளோட, நம்ம பலி போட்டப்பயல் எப்படா வருவான்; முட்டி குத்தி கிழிக்கலாம்" ன்னு கோபத்தோட காத்திருக்கும் அப்படின்னும் சொல்லுது.

"கண்ட கண்ட ஸ்த்ரீக்களோட போகம் அனுபவிச்சா இந்த பிறவில பழி ஏற்படும் மறுமையில நரக வேதனையும் கிடைக்கும்" என்குது. மேலும் "கட்டின பெண்டாட்டியானாலும் இன்னின்ன நாட்களில போகம் செய்யாதே" ன்னு பெரிய பட்டியலே போடுது. அதை கடைப்பிடிச்சா பெரிய - ஹிஹிஹி சின்ன - குடும்ப திட்டமே தேவையில்லை. இயற்கையாவே கட்டுப்பாடு வந்துடும்.

## 75.

கள்ளு மூனுநீ விரும்பினான் மகங்கள் செய் காமத்தின் மனதானால்
கொள்ளும் பெண்டொடு கலவி செய் யெனிலிவன் குறையெலாந் தொடானென்றே
தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாகும்
விள்ளுமிவ்விதி யென்னெனிர் பூருவ நியமமாம் விதியன்றே

"கள்ளும் ஊனும் நீ (உண்ண) விரும்பினால் மகங்கள் (யாகங்கள்) செய். காமத்தின் மனதானால் கொள்ளும் (கல்யாணம் செய்த) பெண்டொடு கலவி செய்" எனில் இவன் குறை எலாம் தொடான் என்றே வேதத்தின் சம்மதம் தள்ளும் (சம்மதித்தது போல கூறியது). சகலமும் தவிர்வதே கருத்தாகும். விள்ளும் (முன் சொல்லிய) இவ்விதி என்ன எனில் பூருவ நியமமாம். விதி (சித்தாந்தம்) அன்று.

--

மதுவும் மாமிசமும் உண்ண நீ இச்சித்தால் யாகங்கள் செய்து அங்கே உண். ஸ்திரீ போகத்தில் விருப்பம் கொண்டால் அக்னி சாட்சியாக மணம் செய்து கொண்ட பெண்ணுடன் கலவி செய்" என்று வேதம் விதித்தது. அப்படி சொன்னால் இவன் மனம் போன படி நேரிட்ட எல்லா போகங்களிலும் தலையிட மாட்டான் என்று கருதியே அப்படி கூறியது. யாவற்றையும் விட்டு ஒழிக்க வேண்டும் என்பதே அதன் கருத்து.

## 76.

மதுவி றைச்சிகளுண்ணென்ற சுருதிபின் மணந்துபா ரெனல் பாராய்
மிதுன விச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்ற விதிபாராய்
இதையும் விட்டொழி யதிநயிட் டிகவந்நிக் கிகழ்ச்சியற் றதும்பாராய்
அதைய றிந்துகன் மங்களா சைகளொழித் தானந்த மடைவாயே

மது இறைச்சிகள் (விதிப்படி) உண் என்ற சுருதி பின் மணந்து பார் எனல் பாராய்.

மிதுன இச்சையும் புத்திர உற்பத்தியால் விரும்பு என்ற விதிபாராய். இதையும் விட்டொழி, யதி (சன்யாசி) நயிட்டிகவன்னுக்கு (நைஷ்டிக பிரம்மச்சாரிக்கும்) இகழ்ச்சி அற்றதும் பாராய். அதையறிந்து கன்மங்கள், ஆசைகள் ஒழித்து ஆனந்தம் அடைவாயே.

--

"மதுவும் மாமிசமும் உண்ண நீ இச்சித்தால் யாகங்கள் செய்து உண்" என்ற வேதம் பின்னால் "அவற்றை புசிக்காமல் முகர்ந்து பார்ப்பது மாத்திரமாய் விட்டு விடுவாயின் நெடுங்காலம் சுவர்க்க போகங்களை அனுபவிப்பாய்" என்று கூறி உள்ளதைப் பாராய். மேலும் "ஸ்திரீ போகமும் புத்திர உற்பத்தி நிமித்தம் விரும்புவாயாக" என்று கூறி உள்ளதையும் பாராய். நேரிட்ட ஸ்திரீக்களை எல்லாம் சேர்ந்தால் இம்மையில் பழியும் மறுமையில் நரக வேதனையும் உண்டாகும் என்றும் கூறி உள்ளது. மேலும் மனைவியை சேர இந்த இந்த தினங்களில்தான் சேர வேண்டும் என்பது முதலான பல விதிகளையும் ஏற்படுத்தி இருக்கிறது. "யாக யக்ஞங்களை செய்" என்ற வேதம் "உன்னால் யாகத்தில் கொல்லப்பட்ட ஆடானது சுவர்க லோகத்தில் எஃகினால் ஆன கூரிய கொம்புகளுடன் கோபத்துடன் உன் வரவை எதிர் பார்த்து இருக்கும்; நீ அங்கு வந்ததும் உன்னை அக்கொம்புகளால் குத்தி வயிற்றை பிளந்து துன்பப்படுத்தும். ஆகையால் யாவற்றையும் விட்டொழி" என்றும் கூறுகிறது.

அம்மட்டும் இல்லாமல் மனைவி, மகன் யாவற்றையும் விட்டு ஒழித்த சந்நியாசி. துறவி

ஆகியோருக்கு நிந்தை நீங்கி புகழ்ச்சி ஏற்பட்டு இருப்பதை பாராய்.

இவை யாவும் அறிந்து எல்லா கருமங்களையும் மனைவி, புத்திரர், செல்வம் ஆகியவற்றில் ஆசைகளை துறந்து பிரம்ம ஐக்கிய ஞானத்தால் உண்டாகும் ஆனந்தத்தை அடைவாயாக.

### *அயமகத்தினில் அரசநீ படுத்தவம் மறிகள்*

செயிர்த ழைந்துகண் டீயுக வரவுபார்த் திருக்கும்
பயில்வி சும்புசெல் காலையில் வெருவரப் பாய்ந்து
வயிறு போழும்வல் விருப்பினொண் மருப்பினின் மாதோ
பகுத்திடு மறிகள் வேள்வி புரிந்தவன் பனிவி சும்பி
னகுத்திடுங் கால நோக்கி யழல்விழி யொழுகப் பாய்ந்து
வடித்தசா ரிருப்பிற் செய்த மருப்பினால் வயிறு போழ்ந்த
தெடுத்துநா முரைத்துங் கேட்டி விறைவனென் றுரைக்க லுற்றான்
பாகவதம்

கள்ளும் ஊனும் நீ விரும்பினால்....
இந்த செய்யுள் பலருக்கு பல சந்தேகங்களை தோற்றுவித்து உள்ளது என்று தெரிகிறது. இதை கொஞ்சம் சரியான பார்வையில் பார்க்க வேண்டும்.
யக்ஞங்கள் என்றாலே அந்தணர்கள் மட்டுமே செய்வதாக ஒரு கற்பனை வந்துவிட்டது. அப்படி இல்லை. வேதத்துக்கு அதிகாரம் உடையவர்கள் அந்தணர் க்ஷத்திரியர் வைச்யர் மூன்று வர்ணத்தவரும்தான். பல புராணங்களிலே பார்த்து இருக்கிறோமே.... இந்த ராஜா ராஜ சூய யாகம் செய்தான் அந்த ராஜா அச்வமேதம் செய்தான் என்று ... யக்ஞங்களை நடத்தி வைத்தது அந்தணர்களாக இருந்தாலும் யஜமானன் மூன்று வர்ணத்தவர்களாகவே இருக்கலாம்.
சமீப காலங்களாக அந்தணர்கள் வழக்கமாக இருந்த புலால் மறுப்பை விட்டுவிடுவது பலராலும் விரோதமாக பார்க்கப்பட்டாலும் இது இடைக்காலத்தில் வந்த பழக்கமே என்று தெரிகிறது. ஆதி சங்கரர் வந்த பிறகுதான் அவர் யோசித்து ஏற்கெனவே அந்தணர்களின் பிரம்ம தேஜஸ் குறைந்து வருகிறது. இந்த நிலையில் இவன் மாம்சம் சாப்பிட்டால் இருக்கிற கொஞ்ச நஞ்சமும் போய்விடும் என்று இப்படி மாற்றி விட்டதாக கேள்வி. இப்போதும் அரிதாக செய்கிற பசு பந்தம் போன்றவற்றில் மிகச்சிறிதளவே யாகம் செய்கிறவர்கள் உட்கொள்ளுகிறார்கள். முகர்ந்து பார்த்து விட்டுவிடுபவர்களும் உண்டு. எந்த பொருளை ஹோமம் செய்கிறோமோ அதை ஹோமம் செய்யும் குழுவில் உள்ளோர் புசிக்க வேண்டும் என்ற விதிக்கு இணங்க இப்படி செய்யப்படுகிறது.

அடுத்து கவனிக்க வேண்டியது "இங்கே ஊனும் மதுவும் உட்கொள்ள யாகம் செய்யச்சொல்லி இருக்கிறது; அதனால் அதுதான் அதன் குறிக்கோள்" என்ற கற்பனை தவறு. யாகங்களின் நோக்கம் வெவ்வேறு. இங்கே சொல்ல வந்தது "அப்படி இச்சை இருந்தால் இது போன்ற சந்தர்பங்களில் தீர்த்துக்கொள்" என்பதே தவிர அதற்காக யாகம் செய் என்பதல்ல. (வேதம் அப்படி எங்கே சொல்லி இருக்கிறது என்று தெரியவில்லை. விசாரித்துக்கொண்டு இருக்கிறேன், பதில் கிடைக்கவில்லை.) பின்னாலேயே வரும் செய்யுள்களே அதை சுட்டிக்காட்டுகின்றன. இயல்பாக இருக்கும் இச்சைகளை "செய்" என்றா வேதம் சொல்லும்? மாற்றாக கட்டுப்பாடுகளை விதிக்கிறது என்பதை கவனிக்க வேண்டும்.

பலி கொடுக்கும் ஆடுகள் எஃகு கொம்புகளுடன் வரவை எதிர் பார்த்து இருக்கும் என்பது பாகவதத்தில் புரஞ்சனோபாக்கியானத்தில் இருக்கிறது. அதன் தமிழ் வடிவத்தை பதிவில்

கொடுத்து இருக்கிறேன். ஒரு உற்சாகத்தில் சோம யாகங்களாக செய்து கொண்டே போன அரசனை வழிக்கு கொண்டுவர நாரதர் அவனிடம் இப்படி சொல்லுகிறார். மற்றபடி இதற்கு வேதத்தில் ஒரு சான்றும் தென்படவில்லை என்கிறார்கள்.

-----

உலகிலே இருக்கிற அஞ்ஞானம் கருமத்துக்கு விரோதி இல்லை, அதோட உறவாகிவிடும் ன்னு சொன்னீங்க. அஞ்ஞானத்துக்கும் ஞானத்துக்கும் விரோதம் இருக்குன்னா சந்திரனில களங்கம் இருக்கிறாப் போல பரிசுத்த ஞானத்தோட அஞ்ஞானமும் ஒன்றாக பொருந்தி இருந்து எல்லா காரியங்களையும் செய்ய முடியுமா?

77.

உலக மானவஞ் ஞானமுங் கருமமு முறவென்ற வழி கூடும்
பலவு மானவஞ் ஞானமு ஞானமும் பகையென்ப துளதானால்
நிலவி லேமறுப் போலவஞ் ஞானமு நிமலஞானத்தோடே
குலவி நின்றிந்தச் சிருட்டிகள் செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி

உலகமான அஞ்ஞானமுங் கருமமும் உறவென்ற வழி கூடும் (ஒன்றுக்கு ஒன்று சாதகமாகும்). பலவுமான அஞ்ஞானமும் ஞானமும் பகை என்பது உளதானால் (உண்மையானால்) நிலவிலே மறுப்போல அஞ்ஞானமும் நிமல ஞானத்தோடே குலவி நின்று இந்த சக சிருட்டிகள் செய்யவும் கூடுமோ குருமூர்த்தி!

78.

குரு ஞானம் இரு விதம் என்கிறார்.

சொரூப ஞானமும் விருத்திஞா னமுமென்று சோதிஞானமு மிரண்டாம்
சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த் தோன்றும்வே றிலைமைந்தா
சொரூப ஞானமஞ் ஞானசத்துருவன்று சுழுத்தியிற் கண்டாயே
சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும்விருத் தியின் ஞானம்.

சொரூப ஞானமும் விருத்தி ஞானமும் என்று சோதி ஞானமும் இரண்டாம்.

சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய் தோன்றும், வேறு இல்லை மைந்தா. சொரூப ஞானம் அஞ்ஞான சத்துருவன்று [என] சுழுத்தியிற் (அஞ்ஞானத்தை அனுபவித்து) கண்டாயே. ஆனாலும் சொரூப ஞானத்தில் மருவும் (தோன்றும்) அஞ்ஞானத்தைச் சுடும் விருத்தியின் ஞானம். (ஆகவே அதுவே சத்துரு)

--

ஞானமானது சொரூப ஞானம் என்றும் விருத்தி ஞானம் ன்னு ரெண்டு வகைப்படும்.

ஆனாலும் சொரூப ஞானமே அப்புறமா விருத்தி ஞானமா மாறுது அன்றி அது வேற இல்லை. சொரூப ஞானம் அஞ்ஞானத்துக்கு விரோதி இல்லை ன்னு நித்திரையில் பாத்தோம் இல்லையா? சுழுத்தியில் சொரூப ஞானத்துடன் கலந்து அழியாம இருந்த அந்த அஞ்ஞானத்தை விருத்தி ஞானம் சுட்டு எரிச்சுடும்.

அதெப்படி ஸ்வாமி?

சுழுத்தியிலே சொரூப ஞானம் இருக்கு. (நாம் ன்னு ஒரு நினைப்பு- நான் நல்லா தூங்கினேன்) தூங்கி எழுந்தா முன்னே இருந்த அதே அஞ்ஞானத்தோடதான் இருக்கோம். இப்படி அஞ்ஞானத்தை நீக்க முடியாத சொரூப ஞானம் திடீர்ன்னு எப்படி விருத்தி ஞானமாகி அஞ்ஞானத்தை சுட்டு எரிக்கும்?

சொரூப ஞானம் என்பது சாதாரண /சாமான்ய ஞானம். விருத்தி ஞானம் என்பது விசேஷ ஞானம்.

சுழுத்தியில் உள்ள சொரூப ஞானம் என்பது ஆன்ம பிரகாசம் மட்டுமே. அந்தக்கரண விருத்தி (செயல்பாடு) சுழுத்தியில் இல்லை. சொரூப ஞானம் ஒரு கொள்ளிக்கட்டை போல. அது தன் வரை பிரகாசமாக இருக்கும். ஆனால் அறையை அதனால பிரகாசமாக்க முடியாது. ஆனால் அதை விசிறிவிட்டு சுடர் உண்டாகச்செய்தா, அப்போது அது இருளை நீக்கும். அதுபோல சொரூப ஞானம் அஞ்ஞானத்தை அழிக்கக் கூடியது இல்லை. அதுவே அந்தக்கரண விருத்தி கூட சேர்ந்து விருத்தி ஞானமாக ஆன பின்னால அச்சக்தியை பெறுது.

சூரிய கிரணங்கள் சிதறி இருப்பதால் எதையும் எரிக்க சக்தி இல்லாம இருக்கு. அதே கிரணங்கள் சூரிய காந்த கல்லிலே (lens) பிரவேசித்து வெளி வந்து ஓரிடமாக குவியும்போது அந்த வல்லமை வருது. அதுபோல சமாதியிலே அந்தக்கரண விருத்தியுடன் சொரூப ஞானம் சம்பந்தப்பட்டால் விருத்தி ஞானமாகி அஞ்ஞானத்தை சுட்டு எரிக்கிறது.

## 79.

காரணத்தால் கெடாத அஞ்ஞானம் காரியத்தால் எப்படி கெடும்?

துருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாததற் சொரூப ஞானந்தானே
விருத்தி ஞானமாய்ச் சுட்டதெப் படியெனில் வெய்யிலா லுலகெங்கும்
பரித்த சூரியன் சூரிய காந்தத்திற் பற்றியக் கினியாகி
எரித்த வாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென் றறிவாயே

துருத்தி (போல பல விகாசங்களை உடைய) மாயையை சுழுத்தியில் சுடாத தற் சொரூப ஞானந்தானே, விருத்தி ஞானமாய் சுட்டது எப்படி? எனில் வெய்யிலால் உலகெங்கும் பரித்த (காத்த) சூரியன் சூரிய காந்தத்தில் பற்றி அக்கினியாகி எரித்த வாறு போல் சமாதியில் விருத்தியால் எரிக்கும் என்று அறிவாயே.

அஹா! அப்ப அந்தக்கரண விருத்தியோட சம்பந்தப்படணும். எந்த கரணத்தால எதை பண்ணாலும் அது கர்மமாதானே ஆகும்? அந்தக்கரணத்தால பண்ணாலும் அது கர்மாதானே? பின்ன ஏன் அதுக்கு புதுசா ஞானம் ன்னு ஒரு பெரிய பேர்?

## 80.

கருமத்துக்கும் ஞானத்துக்கும் பேதம் தெரிய வினா.

அருளு மையனே திரிவித கரணத்தா லாகிய தொழிலெல்லாம்

கரும மல்லவோ விருத்திஞா னமுமந்தக் கரணகா ரியமன்றோ
உரிய கர்மமஞ் ஞானத்தைக் கெடுக்குமென் றோதினா லாகாதோ
பெரிய ஞானமென் றதற்கொரு பெயரிட்ட பெருமையை யுரையீரே

அருளும் ஐயனே திரிவித கரணத்தால் ஆகிய தொழிலெல்லாம் கருமம் அல்லவோ? (நான் பிரமம் என்ற) விருத்தி ஞானமும் அந்தக் கரண காரியமன்றோ? உரிய கர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக்குமென்று ஓதினால் (கூறினால்) [சம்மதம்] ஆகாதோ? பெரிய ஞானமென்று அதற்கொரு பெயரிட்ட பெருமையை உரையீரே.

--

மனம், சொல், உடல் ஆகியவற்றால் செய்வது அனைத்தும் கர்மம்தானே? நான் பிரம்மம் என்று நினைப்பதுவும் உள்ளத்தின் ஒரு கர்மம் அல்லவா? அப்படியானால் கர்மம் அஞ்ஞானத்தை போக்கும் என்று சொல்லலாம் அல்லவா? அதற்கு மகத்தான விருத்தி ஞானம் என்று பெரிய பெயர் ஒன்று வைப்பானேன்?

81.

விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு விருத்தியா கிலுமைந்தா
ஒருத்தி மக்களே தங்களிற் பகைக்கின்ற துலகெங்குங் கண்டோமே
கருத்த னாகிய புருடதந் திரங்களாங் கருமங்க ளவைபோல
வருத்த ஞானமோ புருடதந் திரமன்று வஸ்துதந்திரமாமே

(நான் பிரமம் என்ற) விருத்தி ஞானம் அந்தக் கரணத்துடைய விருத்தியாகிலும், மைந்தா, ஒருத்தி மக்களே தங்களிற் பகைக்கின்றது உலகெங்கும் கண்டோமே. கருமங்கள் கருத்தனாகிய புருட தந்திரங்களாம். (புருஷனின் கட்டுப்பாட்டில் உள்ளவை) அவை போல வருத்த (பிரயத்னத்தால் சமாதியில் உண்டான பூரண) ஞானமோ புருட தந்திரமன்று. (பிரமமாகிய) வஸ்து தந்திரமாமே.

நான் பிரமம் என்ற விருத்தி ஞானம் அந்தக் கரணத்துடைய கர்மம்தான். ஆனாலும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் ஒத்தருக்கு ஒத்தர் சண்டை போட்டுக் கொள்கிறார்கள் இல்லயா? அது போல கர்மமும் விருத்தி ஞானமும் அந்தக்கரணத்தின் வேலைகள் ஆனாலும் ஞானம் கர்மத்துக்கு விரோதியே. கர்மம் சீவனின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. விருத்தி ஞானம் பிரம்மத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

நாம் ஒரு வேலையை ஆரம்பிக்கிறோம். தினசரி சீக்கிரம் எழுந்து ஜபம் செய்ய நினைக்கிறோம். நாலு நாள் போன பிறகு இது நம்மால முடியாதுன்னு தோணுது. ஒண்ணு அதை விட்டுடுவோம்; அல்லது நாலு மணி வேணாம், அஞ்சு மணிக்கு வெச்சுக்கலாம் ன்னு திட்டம் போடுவோம்.

இப்படி சீவன் ஒரு விஷயத்தை செய்யவோ. செய்யாமல் இருக்கவோ. மாற்றி செய்யவோ சுதந்திரம் இருக்கிறது. ஆனால் ஞானம் அவன் கட்டுப்பாடில் இல்லை.

சந்திரனை பாக்கக்கூடாது ன்னு ஒரு விரதம் இருக்கிறான்னு சும்மாவான வெச்சுக்கலாம். அது இவன் கட்டுப்பாட்டில் இருந்தா இவன் பாக்காம இருப்பான். அது இவன் கட்டுப்பாட்டில் இல்லைன்னா இவன் வெளியே போகிற போது "தற்செயலாக" ஆகாயத்தை பார்த்து சந்திரனுக்கும் இவன் கண்களுக்கும் ஒரு சம்பந்தம் உண்டாகி விட்டால் சந்திரஞானம் வந்துவிடும்! அதை இவன் தடுக்க முடியாது.

இதை வஸ்து தந்திரம் என்கிறாங்க. வஸ்து ன்னா பரம் பொருள்தான். இது பரமாத்மாவோட கட்டுப்பாட்டில இருக்கு. ஜீவன் கட்டுப்பாட்டில இல்லை. சமாதி நிலையில அந்தக்கரணத்தோட சொரூப ஞானம் சம்பந்தப்படுவது ஜீவனோட கட்டுப்பாட்டில இல்லை. ஞானமும் கர்மா மாதிரி இருந்தாலும் இது வஸ்து தந்திரம். மத்த கர்மாக்கள் ஜீவன் கட்டுப்பாட்டில இருக்கு.

ஞான சாதனமா பலர் பயன் படுத்துவது தியானம்.

தியானம் என்கிறதென்ன?

எண்ணங்களை ஒரே விஷயத்தை சுற்றி சுழல விடுகிறது.

ஒரு தேவதை உபாசனை செய்யப்போறோம். அந்த தேவதைக்கு இவ்வளவு முகம், இவ்வளவு கைகள், இதிலே இன்ன இன்ன ஆயுதங்கள் .... இப்படி பல விஷயங்களை கற்பனை பண்ணி அதை சுத்தியே எண்ணங்களை ஓட விடுகிறது தியானம்.

"காதல்ல மாட்டிக்கிட்ட பசங்க வேற ஒண்ணுமே தோணாம காதலியையே நினைச்சுகிட்டு இருக்கிறாப்போல" ன்னு சொன்னா இன்னும் சுலபமா புரியுமோ என்னவோ. :-)

பிரம்மத்தை தியானிக்கறது முக்தியை கொடுக்கும்னு சொல்லலாமா? - தியானமே பொய். பொய்யால விளைகிறதும் பொய்யாத்தானே இருக்கும்? அப்ப தியானத்தால வருகிற மோக்ஷமும் பொய்யாத்தான் இருக்கணும்.

பொய்தான். மத்தவங்க இப்படி இருக்கும் அப்படி இருக்கும்ன்னு சொல்லி அதை தியானம் செய்கிறது பொய்தான். ஆனா இது ஒரு துவக்க நிலைதான். ஆனையை பார்க்கவே பார்க்காத ஆசாமிகிட்ட, ஆனை இப்படி இருக்கும் ன்னு விவரிக்க, பின் ஒரு நாள் வீதியிலே ஆனையை பாக்கிறப்ப "ஹா! இதான் ஆனை!" ன்னு தெரிஞ்சுக்கிறான் இல்லியா?! அது போல குரு உபதேசம் கேட்டு ஒரு கற்பனை பண்ணி அதையே தியானம் பண்ணி பின்னால அது அனுபவப்படும் போது "அட! இதான்"னு புரியும். முதல்ல தியானம் பண்ணது பொய்யானாலும் அனுபவப்பட்டது உண்மையே.

## 82.

### உறுதியாக்கல்.

வகுத்த கர்மங்கள் செய்யவுந் தவிரவு மற்றொன்றாக் கவும்கூடும்
மிகுந்த ஞானமப் படியன்று தியானமும் விவேகஞா னமும்வேறே
செகத்தி லொன்றையொன் றாவிவன் பாவிக்குந் தியானம்கற் பிதயோகம்
முகத்த மாக்கண்ட ஞானமே வாஸ்தவ மோகமாய் மயங்காதே

(சாத்திரத்தில்) வகுத்த கர்மங்கள் (இச்சைபடி) செய்யவும் தவிரவும் (செய்யாதிருக்கவும்) மற்றொன்றாக்கவும் கூடும். மிகுந்த (மேலான) ஞானம் அப்படியன்று. [ஆகலின்] தியானமும் விவேக ஞானமும் வேறே. செகத்தில் ஒன்றை ஒன்றாய் இவன் பாவிக்கும் தியானம் கற்பித யோகம். முகத்தமாக்கண்ட (மறைவிலாது) ஞானமே வாஸ்தவம். மோகமாய் மயங்காதே.

--

திரிவித (மனம், சொல், உடல் ஆகிய மூன்று) கரணங்களால் ஒரு கர்மத்தை பிரியப்பட்டால் செய்யலாம்; பிரியப்படவில்லை என்றால் செய்யாது தவிர்க்கலாம்; மாற்றி செய்யவும் செய்யலாம். இது கருமம். அப்படி இல்லாது இருப்பது ஞானம். மனதால் செய்யும் பிரமத்தியானம் பொய். மன விசாரத்தால் பிரமத்தை அறியும் ஞானமே மெய். இரண்டுமே மனதின் காரியங்கள்தான்.

83.

கண்ட றிந்தது ஞானங்கேட் டதுதனைக் கருதுபா வனை யோகம்
கண்ட பேர்சொலக் கேட்டது மறந்து போங் கண்டது மறவாதே
கண்ட வஸ்துமெய் தியானவஸ் துக்கள்பொய் கறுவியஞ் ஞானத்தைக்
கண்ட வக்கணங் கொல்வது ஞானமே கருமமன் றறிவாயே

கண்டு அறிந்தது ஞானம். கேட்டதுதனைக் கருது(தல்) பாவனை யோகம். கண்ட பேர் சொலக் கேட்டது மறந்து போம். கண்டது மறவாதே. கண்ட வஸ்து மெய். தியான வஸ்துக்கள் பொய். கறுவி அஞ்ஞானத்தைக் கண்ட அக்கணம் கொல்வது ஞானமே, கருமமம் அன்று அறிவாயே.

தியானத்திலே ஒருவர் ஏதாவது சொல்லக்கேட்டு அவ்விதமா கற்பனை செய்து கொள்ளறோம். இது மறக்கக்கூடியது. இது பொய். தானே நேரடியாக அனுபவித்தது மறக்காது. இதுவே மெய் ஆகும். அஞ்ஞானத்தை பார்க்கும் அந்த கணத்திலேயே அதை அழிப்பது ஞானமே, கர்மங்கள் இல்லை.

84.

தியானம் பொய் எனில் அதனாலுண்டாகும் ஞானம் பொய்யா?

சருவ முத்தியைத் தருகின்ற தியானமுஞ் சத்திய மன்றென்றால்
சருவ முத்தியுஞ் சத்திய மன்றென்று சங்கியாதே நீகேள்
உருவங் கேட்டவன் றியானிக்கும் பொழுதிலவ் வுருவம்வாஸ் தவமன்றே
உருவ மாகுமப் பொழுது கண்ணாற் கண்ட வுருவம்வாஸ் தவமாமே

சருவ (ஸர்வ) முத்தியைத் தருகின்ற (பிரம) தியானமும் சத்தியம் அன்று என்றால், சருவ முத்தியும் சத்தியமன்று என்று சங்கியாதே. (சந்தேகம் கொள்ளாதே) நீ (சமாதானத்தை) கேள், உருவங் கேட்டவன் தியானிக்கும் பொழுதில் (பாவனையாகையால்) அவ்வுருவம் வாஸ்தவம் அன்றே. [பாவனா திடத்தால்] அந்த உருவமாகும் அப்பொழுது (உருவமே தானாகும் போது) கண்ணாற் கண்ட உருவம் வாஸ்தவமாமே.

--

குரு உபதேசத்தால் பிரம்ம உபாசனை செய்யும்போது, அச்சமயம் இவன் உபாசனை பாவனையே. அதனால் அது பொய்யாகும். பிறகு அந்த உபாசனை திடப்பட்டு அதுவே தானாகும் போது அப்பிரம்ம சொரூபம் உண்மையேயாகும். திருட்டாந்தமாக யானையை காணாத ஒருவனுக்கு அதைக் கண்ட ஒருவன் யானையைப்போல ஒரு உருவம் எழுதிக்காட்டுகிறான். அதைப்பார்த்த அந்த மனிதன் அதைப்போலவே பாவனை செய்கிறான். அப்படி செய்யும் பாவனையில் தோன்றுகிற யானை பொய்யே ஆகும். ஆனால் மறுநாள் அவன் வீதியில் வரும் யானையை கண்டு தான் செய்த பாவனைப்பழக்கத்தால் இதுவே யானை என்று உணர்ந்து சந்தோஷப்படுகிறான். அப்போது அவன் பிரத்யக்ஷமாக கண்ணால் கண்ட யானை சத்தியமானதேயாகும்.

முன்னமேயே பாத்து இருக்கோம் - கடைசி காலத்தில எதை நினைக்கிறாங்களோ அதுவாகவே பிறப்பாங்கன்னு. அதுக்காகத்தான் யாரும் இறந்து போற நிலையில இருந்தா

அவரை சுத்தி இருக்கிறவங்க நாம ஜபம் செய்வாங்க. அப்பவாவது இறைவன் நினைப்பு வந்து அவரோட ஒன்றி போகட்டுமேன்னு. ஹ்ம் ! இருந்தாலும் அந்த கடைசி தறுவாயில அப்படி நினைப்பு வர கொடுப்பினை இருக்கணும்.

பிரம்ம தியானத்தில உயிரை விட்டா என்ன விளைவுன்னு சொல்ல வேணாம் இல்லையா?

யாதொன்று பாவிக்க நான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கின்
அத்துவித மார்க்க முறலாம்
எதுபா வித்திடினு மதுவாகி வந்தருள் செய்
யெந்தைநீ குறையு முண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே
-தாயுமானவர்

இந்த வுடலம் விடும்பொழுது
யாவன் யாதொன் றினைநினைத்த
னந்த வளவே யந்தப்பா
வனையா லதனை யடையுமா
லென்ற னியல்பே யெப்பொழுது
மிதயத் திடைகொண் டென்பாலாஞ்
சிந்தை யொடும்வா ளமர்தொடங்கி
லதனா லெனையே சேருதியால்.
-கீதை

கொஞ்சம் பிரச்சினை இருக்கு இல்லே? பிரிச்சு பாக்கலாம்.

இந்த உடலம் விடும்பொழுது யாவன் யாது ஒன்றினை நினைத்தன், அந்த அளவே அந்தப் பாவனையால் அதனை அடையுமால் என்றன் இயல்பே, எப்பொழுதும் இதயத்திடை கொண்டு, என்பாலாம் சிந்தையொடும், வாள் அமர் தொடங்கில் (கத்திச்சண்டை இல்லைங்க; வாளாவிருந்தான்= சும்மா இருந்தான் மாதிரி; சும்மா இருக்கத்தொடங்கினால்) அதனால் எனயே சேருதியால்.

85.

சடம தாகிய தியானமெய் யாகிய சர்வமுத் தியைநல்கும்
திடம தானதெப் படியெனி லவரவர் தியானமே பிறப்பாகும்
உடல மாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்களா குவர்மைந்தா
தொடர்ப வங்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூபமா குவர்மெய்யே

சடமது (பொய்) ஆகிய தியானம் மெய்யாகிய சர்வ முத்தியை நல்கும். திடம் (வலிமை) அது ஆனது எப்படியெனில் அவரவர் (மரண காலத்தில் உண்டாகும்) தியானமே பிறப்பாகும். உடலம் ஆசையால் தியானிக்கில் தியானித்த உடல்களாகுவர் மைந்தா, தொடர் பவங் கெட (பிரம) சொரூபமே தியானிக்கில் (பிரம) சொரூபமாகுவர் மெய்யே.

பொய்யாகிய தியானம் உண்மையான மோக்ஷத்தை தரக்கூடிய திடத்தை எப்படி உடைத்தாக இருக்கிறது என்று சந்தேகம் வந்தால்: மரண காலத்தில் அவரவர் எத்தகைய உருவத்தை தியானம் செய்கிறோமோ அந்த ஜன்மத்தையே அடைவர். ஒரு ஆசையுடன் ஒரு நாம ரூபத்தை உடையவற்றை தியானித்தால் அந்த நாம ரூபத்தை அடைவார்கள். நெடுங்காலமாக தொடர்ந்து வரும் இந்த பிறவி ஒழிய வேண்டும் என்று நாம ரூபம் அற்ற சுத்த நிர்குணப்பொருளை தியானிப்பவன் அந்த பரப்பிரம்ம சொரூபமே ஆவான். இது சத்தியம்.

முன்னே விசாரம் நிச்சயம் வேணுமான்னு கேட்ட கேள்வி இப்ப திருப்பி வருது. பிரம்மத்தை தியானிப்பவங்களுக்கு முக்தி கிடைக்கும்ன்னா எதுக்கு விசாரணை? முதல்லே கிடைக்கிற பிரம்ம தியான அனுபவம் (பரோக்ஷமானது) மறைவானது. அது திடப்பட்டு விசாரமாகிதான் நிலையான வெளிப்படையான (அபரோக்ஷ) ஞானம் ஆகும். இதுவே மோக்ஷம்.

இது வரை சொன்னதை எல்லாம் வெச்சு பாத்தா நம்ம முயற்சியில சாதனை ஆரம்பிச்சு தீவிரமா பயிற்சி செய்து- ஒரு நிலையில நம்ம கட்டுப்பாட்டில இல்லாத விசாரம் ஒண்ணு துவங்கி படிப்படியா எல்லாம் புரிஞ்சு பிறகு எல்லாம் தெரிஞ்சு போகுது.

## 86.

தியானத்துக்கு இந்த சக்தி இருக்க விசார ஞானம் எதற்கு?

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமமா குவரென்றால்
நரச ரீரமாங் குரவனே விசாரமேன் ஞானமே னென்னாதே
பரம பாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமே யபரோட்சம்
திரவி சாரமா ஞானமே முத்தியாந் தீர்வையீ தறிவாயே

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமமாகுவர் என்றால், நர சரீரமாம் குரவனே, விசாரம் ஏன்? ஞானமேன்? என்னாதே. பரம பாவனை (பிரமத் தியானம்) பரோட்சமாம். (மறைவாயுள்ளது). (தியான பரிபாகத்தின்) பின்பு அந்தப் பரோட்சமே அபரோட்சம் (புலப்படும்) ஆகும். திர(திடமான) விசாரமாம் (விசாரத்தால் வரும்) ஞானமே முத்தியாம். [ஸ்ருதி ஸ்ம்ருதிகளின்] தீர்வை ஈது அறிவாயே.

முதலில் மறைவாக உள்ள பிரம்ம தியானம் பின்னால் திடமாகி புலப்பட்டும். அதுவே மோக்ஷமாகும். இது வேத வாக்கியம்.

போச்சுடா! குழம்புதே. அந்தக்கரணம் போனாதானே பிரம்மமாகலாம்? கூடஸ்தனை ஜீவனா ஆக்கறது அதுதானே. இந்த அந்தக்கரணம் சம்பந்தம் இருக்க எப்படி பிரம்ம அனுபவம் ஏற்படும்?

சொரூப ஞானம் அந்தக்கரண விருத்தி கூட சேர்ந்து ஞானமாகும்னா அந்தக்கரண விருத்தி இருக்கையில் அகண்டாநுபவம் எப்படி ஏற்படும்?

--

இரண்டு மூன்று பாடல்களாக சேர்த்து போட்டால் மிகவும் நீளமாகி விடுகிறது. சின்னதாக

போட்டால் இப்படி மர்மக்கதை போல ஆகிவிடுகிறது! மன்னிக்கவும். எழுப்பப்படும் கேள்விகளுக்கு அடுத்த பதிவுகளில் விடை வந்து விடும்!

87.

முன் கூறிய அந்தக்கரண விருத்தி இருக்கையில் அகண்டானுபவம் எப்படி ஏற்படும்?

வீட தாம்பரி பூரண சொரூபத்தில் விருத்திஞா னமுங் கூடிச்
சேட மாகினா லகண்டமா மநுபவ சித்தியெப் படியென்றால்
சாடி நீர்மண்ணைப் பிரித்ததேற் றாம்பொடி தானுமண் ணொடுமாயும்
ஊடி ஞானமு மறிவிலா மையைக்கெடுத் தொக்கவே கெடுந்தானே

வீடு (முத்தி) அதாம் பரிபூரண சொரூபத்தில் விருத்தி ஞானமுங் கூடிச் சேடம் (சேஷம்=மீதி) ஆகினால் அகண்டமாம் அநுபவ சித்தி எப்படி என்றால், சாடி நீர் மண்ணைப் பிரித்த தேற்றாம் பொடி தானும் மண்ணொடு மாயும். ஊடி (பகைத்து) ஞானமும் அறிவிலாமையைக் கெடுத்து (அழித்து) ஒக்கவே (கூடவே) கெடும் தானே.

முத்தி நிலையான பரி பூரண சொரூபத்தில் அந்தக்கரண சம்பந்தம் உள்ள விருத்தி ஞானமும் கூடினால் எப்படி இரண்டில்லாத அனுபவம் சித்திக்கும் எனில்: நீர் நிறைந்த ஜாடியில் உள்ள மண்ணை நீரில் இருந்து பிரிக்க அதில் தேற்றாம் கொட்டை பொடியை போடுவார்கள். அது மண்ணை பிரித்துவிட்டு தானும் அழியும். அது போல விருத்தி ஞானமும் அஞ்ஞானத்துடனே அழியும்.

விருத்தி ஞானம் என்பது சுத்த சத்துவமாக மீதி உள்ள மாயை. மனம் சத்துவமாக மட்டுமே நிற்கும் போது இதற்கு முன் பல இடங்களில் சிதறிக்கிடந்து அலைந்த

அதன் வல்லமை முழுதும் ஒரே இடத்தில் சேருகிறது. அதுவும் மாயையேதான். ஆனால் அது சத்துவ குணமான மாயை. இது ஆவரண சக்தியை அழிக்கும் சக்தி உடையது. இதையே முன்னால் நஞ்சை மருந்தாகிய மற்றொரு நஞ்சால் முறிப்பர்; துணியில் உள்ள அழுக்கை அழுக்கான உவர் மண்ணால் நீக்குவர்; அம்பை வேறொரு அம்பால் அழிப்பர்; அது போல் சத்துவ மாயையால் அசுத்த மாயையை கெடுப்பர், பின் "பிணம் சுடு தடி போல்" அதுவும் அழியும் என்று கூறினோம்.

ஓ! அப்ப பிரம்ம அனுபவத்தில கொண்டு விட்டதும் இந்த விருத்தி ஞானமும் காணாதுபோயிடும். சரிதான்.

இந்த பிரம்ம அனுபவம் எப்படி இருக்கும்?

அது அனுபவத்திலதான் தெரியும்னாலும்...

ஒரு சக்கிரவர்த்தி எப்படி ஒரு கவலையும் இல்லாம இருப்பாரோ, ஒரு சின்ன குழந்தை அம்மாகிட்ட பால் குடிச்சதும் எப்படி திருப்தியோட ஆனந்தமா இருக்குமோ- அப்படி பிரமானந்தத்தில மூழ்கி கொஞ்சமும் கவலை இல்லாம இருப்பாங்க. மோக்ஷம், நரகம், பிறப்புன்னு ஒண்ணுமே நினைவிராது. இதெல்லாம் உண்டுன்னு சொன்னா சாதாரணமா யார்கிட்டேயாவது கொசு ஒண்ணு ஆகாசத்தை விழுங்கினதா சொன்னா எப்படி சிரிப்பாங்களோ அப்படி இடி இடின்னு சிரிப்பாங்க.

88.

இந்த நிச்சய முத்தரு ளநுபவ மிருப்பதெப் படியென்றால்

சிந்தை யற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவைபோற் சுகமாவர்
பந்த முத்திகண் மறந்துபோ முண்டென்று பலர் சொலி னகையாவர்
அந்த ரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொசுகெனு மவர்களை நகையாரோ

இந்த நிச்சய [அகண்டானுபவம்] [சீவன்] முத்தருள் அநுபவமிருப்பது எப்படியென்றால், சிந்தையற்ற பூ மண்டல இராசனும் சிசுவை [யும்] போல் சுகமாவர். பந்தங்கள் முத்திகள் (ஆகிய பாவனா விகல்பங்கள்) மறந்து போம். [பந்த முத்திகள்] உண்டென்று பலர் சொலின் நகையாவர் (சிரிப்பர்). அந்தரத்தை (ஆகாயத்தை) உண்டு உமிழ்ந்ததோர் கொசு எனும் அவர்களை நகையாரோ.

--

அகண்டாநுபவம் பெற்ற சீவன் முத்தர்கள் ஒரு கவலையும் இல்லாத சக்கிரவர்த்தி போலவும்; தாயில் பாலை அருந்தி சுகமான அனுபத்தில் இருக்கும் குழந்தை போலவும் பரமானந்த அனுபவத்தில் முழுகி சற்றும் கவலை இல்லாது இருப்பர். மோக்ஷம், நரகம், பிறப்பு போன்ற நினைவுகளே ஒழிந்து போகும். அவை உண்டு என யாரேனும் சொன்னால் "ஒரு கொசு ஆகாயத்தை விழுங்கிவிட்டது" என்று ஒருவன் சொன்னால் மக்கள் எப்படி சிரிப்பார்களோ அதுபோல சிரிப்பார்.

பிரம்ம ஆன்ம ஐக்கிய நிலையில் சீவன் என்ற தன்மை போய்விட்டது. அப்போது அடைந்து இருக்கும் நிலையே நிரந்தரமான தன் நிலை என்று புரிந்து போயிற்று. மாயை முதல் யாவும் கனவாக பறந்து விட்டன. பந்தம் முத்தி காலம் இடம் வஸ்து என ஒன்றுமே அங்கு இல்லை.

இது சகச நிஷ்டை. அதாவது சதா -எப்போதும்- நிஷ்டையில் இருப்பது.
நிஷ்டை 3 வகைப்படும்.

1. சவிகற்ப நிஷ்டை: ஆன்மாவை அணு அணுவாக தரிசித்தல் . இதில் அறிபவன், அறிவது, அறியப்படும் பொருள் என திரிபுடி உண்டு.

2. நிருவிகற்ப நிஷ்டை: ஆன்மாவை அகண்ட ரூபமாக தரிசித்தல். இது ஒரே பிரம்ம சொரூபமாக விளங்கும் அனுபவம்.

இவை சத்துவ குணத் தொழில்கள். இவற்றில் ஒருவன் எவ்வளவு காலம் இருந்தாலும் மீண்டும் வெளியாக வேண்டியதே. ஆகவே இதில் ஆரம்பமும் முடிவும் உண்டு.

3. சகச நிஷ்டை: காலம், தேசம், வஸ்து, தநு, கரணங்கள் முதலியன, தேகம், இந்திரியம் முதலிய ஒரு தோற்றமும் அரவும் இல்லாமல் மாயை இல்லாமல். இரண்டற்று எல்லாம் ஒரே அகண்டாகாரமாக முடிவில்லாமல் பிரகாசித்து ஒரே நிலையில் நிற்பது.

89.

மலடி மைந்தனுந் தாணுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி
இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசதம் விலை பேசிக்
கலக மாயினா ரிடையினிற் கயிற்றராக் கடித்திரு வருமாண்டார்
அலகை யாயினா ரெனும்விவ காரத்தை யறிந்தவன் மயங்கானே

மலடியின் மைந்தனும், தாணுவின் (கைம்பெண்ணின்) புருடனும் வான்மலர் (ஆகாயத்தாமரை) முடி[யில்] சூடி இலகு கந்தர்ப்ப நகரிலே, சுத்திகை (கிளிஞ்சல்) [இல் தோன்றும்] இரசதம் (வெள்ளி) ஐ விலை பேசிக் கலகமாயினார். (சண்டை இட்டு

கொண்டனர்) இடையினில் கயிற்று அரா (பாம்பு) கடித்து இருவரும் மாண்டார்; அலகை (பேய்) ஆயினார் எனும் விவகாரத்தை (கதையில் நியாயத்தை) அறிந்தவன் மயங்கானே.
--
யாரேனும் குழந்தை பெறாதவளின் குழந்தையும், கணவனை இழந்தவளின் கணவனும் ஆகாயத்தாமரை [எனும் இல்லாத மலரை] சூடிக்கொண்டு கந்தர்ப்ப நகரிலே, கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியை விலை பேசி சண்டையிட்டு இடையில் கயிற்று பாம்பு கடித்து இறந்தனர், பேய் ஆகினர் என்றால் எப்படி இது அத்தனையும் நிகழ முடியாதது என்று அறிவார்களோ, அது போல சகச நிஷ்டையில் இருப்பவர் அனைத்தையும் பொய் என்று அறிவார்.

90.

மாயை யென்பது பொய்யெனி லதுபெற்ற வகையெலாம் பொய்யாமே
தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ
சேயசொர்க்கமு நரகமு நன்மையுந் தீமையும் பாராமல்
தூய சத்துச்சித் தானந்த பூரண சொரூபமா யிருப்பாயே

மாயை என்பது [ஸ்ருதி சொல்வதாலும், விசாரித்ததில் 9 விதத்தினாலும் நிச்சயிக்கப்படாததாலும், ஞானிகளும் அப்படி சொல்வதாலும்] பொய்யெனில் அது பெற்ற (அதில் இருந்து உறபத்தியான) வகை எல்லாம் பொய்யாமே. தாயை அன்றி மக்களுக்கு ஒரு பிறவியும் சாதியும் வேறு உண்டோ? [தாய் எப்படியோ அப்படியே மக்களும்). சேய (சொல்லப்பட்ட) சொர்க்கமும், நரகமும், நன்மையும், தீமையும் பாராமல், தூய சத்து சித்தானந்த பூரண சொரூபமாய் இருப்பாயே.

[நீரின் கரையில் நின்ற புருஷனின் நிழல் தலை கீழாய் தெரிவது பொய். அது ஆடி அசைவதும் பொய். அதை விசாரிப்பதில் பயனில்லை. ஆகவே அதை பகுத்து பாராது கரையில் நின்ற தன் உண்மை சொரூபத்தை பார்த்து சுகமாயிருப்பது போல; பிரமமாகிய தன்னிடத்து தோன்றும் சீவேஸ்வர ஜகத் பொய். அதில் துறக்கமென்றும், நிரயமென்றும், புண்ணிய- பாவம், பந்த- மோட்சம் என பார்ப்பதில் பயன் இல்லை. அனித்தியமான இவற்றை பாராது நிர்மலமாயும்; சிருட்டிக்கு முன்னேயும் பின்னேயும் இருப்பதால் சன் மாத்திரமாயும்; சிருஷ்டி ஸ்திதி சம்ஹார காலங்களையும் அதில் உள்ள காரியங்களையும் விளக்கி வைத்து அறிகிறதால் சின் மாத்திரமாயும்; துவைதமற்று இருப்பதால் சுகமாயும்; சராசரங்களாய் தோன்றும் பிரபஞ்சம் பிரமமாகிய தன்னைத் தவிர வேறில்லாது இருக்கிற படியால் அகண்டமாயும்; பிரம்ம சொரூபமாயும் இரு]

நீங்க சொல்கிறதை பாத்தா பிரம்மா முதலான தேவர்கள் பொய். ஊர்ல இருக்கிற பெரியவங்க பொய். அவங்க சொல்கிறது பொய். கங்கை முதலா இருக்கிற தீர்த்தங்கள் பொய். புண்ணிய ஸ்தலங்கள், வேதங்கள், மந்திரங்கள், விரதங்கள் எல்லாம் பொய். ஆனா நடைமுறையில பாத்தா, இதை எல்லாம் நம்பி நடந்து பாவமெல்லாம் ஒழிந்து மோக்ஷமடைகிறாங்க. இப்படி இருக்கிறதை எல்லாம் பொய்ன்னு சொல்கிறது தப்பில்லையா? அது பாபமாகாதா?

91.

மாயா காரியமான பிரம தேவர் முதலிய நன்மையான பிரபஞ்சத்தையும் மித்தை என தெளிதல்:

பங்கை யாசனன் முதற்பல தேவரும் பாருள பெரியோரும்
கங்கை யாதியாந் தீர்த்தமுந் தேசமுங் காலமு மறைநாலும்
அன்க மாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய மெனச் சொன்னால்

எங்க ணாயக னேயத னாற்குற்ற மில்லையோ மொழியீரே

பங்கை (தாமரை) ஆசனன் (= பிரமன்) முதல் பல தேவரும், பாருள பெரியோரும் கங்கை ஆதியாம் முதலான [புண்ணிய] தீர்த்தமும் [புண்ணிய] தேசமும் [புண்ணிய] காலமும் மறை நாலும் [சந்தஸ் முதலான] அங்கம் ஆறும் [பிரணவம் முதலான மகா] மந்திரங்களும் தவங்களும் [சுருதியின் படி வழிபட்டு, பாவம் ஒழித்து மோக்ஷம் அடைய காரணமாக கொண்டு இருக்கிறார்களே. அவற்றை] அசத்தியமெனச் சொன்னால், எங்கள் நாயகனே அதனால் குற்றம் இல்லையோ? மொழியீரே.

குரு சொல்கிறார்: மகனே கனவில பாத்ததை பொய்ன்னு சொல்கிறது தப்புன்னா, அற்பமான மாயையில தோன்றிய சகத்தை பொய் என்கிறதும் தப்புதான். கனவில பாத்ததை பொய்ன்னு சொல்கிறது தப்பு இல்லைன்னா, மாயையால தோன்றிய சகத்தை பொய் என்கிறதும் தப்பு இல்லை.
வேதத்தோட ஞான காண்டத்தில பொய்ன்னு சொல்லப்பட்ட உருவங்கள் முதலானதை வழி பட்டவங்களை புண்ணியவான்கள்ன்னு புராணங்கள் சொல்லுதுங்க. அப்படி இருக்க வேதம் உண்மைன்னு சொன்னதை ஆமோதிக்கிற ஞானிக்கு குற்றம் யார் சொல்ல முடியும்? பெயர் உருவம் கொண்ட மாயா காரியங்கள் எப்பவுமே மித்தை. எங்கேயும் இருக்கிற சச்சிதானந்த சொரூபம் மட்டுமே சத்தியம்.

எப்படி நாம தூக்கத்திலேந்து முழிச்சதும் நாம் கண்டது கனவுன்னு ரொம்ப சுபாவமா தோணுதோ, அதே போல அவித்தை ஒழிஞ்ச ஞானிக்கு இந்த பிரபஞ்சம் பொய்ன்னு இயல்பா தோணுது. அதனால அவன் அப்படி சொல்கிறது குற்றம் இல்லை.

ஆனா இது அந்த பிரம்மஞானியைப்பத்தி சொல்கிறது மட்டுமே. நாம அப்படி இல்லையே! நான் சீவன் என்கிற நினைப்பு போகாமல், ஆத்ம தரிசனம் கிட்டாமல், அஞ்ஞானத்தில இருந்துகிட்டு, ஏதோ சிலதை படிச்சுட்டு, அதில ஆழ்ந்து போக பாக்காம; "எல்லாம் பொய்! கோவிலாவது, குளமாவது; அதில ஒண்ணும் இல்லை. எல்லாம் நமக்குள்ளே இருக்கு" ன்னு பிதற்றிக்கிட்டு திரியக்கூடாது. அப்படி செய்கிறது அவங்களையும் முன்னேற்றாது; மத்தவங்களையும் குழப்பும். இதனால அவங்களுக்கு நரக வேதனை கிடைக்குமாம்.

92.

சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையானால்
அற்ப மாயையிற் றோன்றிய சகங்களை யசத்தெனல் பிழையாமே
சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய் யென்று சொல்லலாமெனிற் மைந்தா
அற்ப மாயையி றோன்றிய சகமெலா மசத்தியமெனலாமே

சொற்பனந்தனில் (கனவில்) கண்டதைப் பொய் என்று சொல்வது பிழையானால், அற்ப மாயையில் தோன்றிய சகங்களை அசத்து எனல் பிழையாமே. சொற்பனந்தனில் (கனவில்) கண்டதைப் பொய் என்று சொல்லலாம் எனில் மைந்தா, அற்ப மாயையில் தோன்றிய சகமெலாம் அசத்தியம் எனலாமே.

93.

பொய்யை மெய்யென்ற மூடர்புண்ணியரென்று புராணங் கூப்பிடுமானால்
மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத் திரமுண்டோ
பொய்ய தேதெனி னாமரூ பங்களாம் பூதமா கியமாயை
மெய்ய தேதெனிற் சத்திதானா னந்தமாய் வியாபிக்கு மான்மாவே

பொய்யை மெய்யென்ற மூடர் புண்ணியர் என்று புராணம் கூப்பிடுமானால், மெய்யை

மெய் என்ற ஞானிக்கு குற்றங்கள் விதித்த சாத்திரமுண்டோ? பொய்யது ஏது எனில் நாம ரூபங்களாம் பூதமாகிய மாயை. மெய்யது ஏது எனில் சச்சிதானானந்தமாய் வியாபிக்கும் ஆன்மாவே.

--

ஸ்ருதி முதலியவற்றால் ஞான காண்டத்தில் பொய் என்று தள்ளப்பட்ட சொரூபம் முதலியவற்றை சத்தியம் என்று வழி படுவோர்களை புண்ணியவான்கள் என புராணங்கள் கூறும். வேதம் சத்தியம் என்று கூறிய உண்மையை உண்மை என சாதிக்கும் ஞானிக்கு குற்றங்கள் விதிக்கும் சாத்திரம் ஏது? ஏதும் இல்லை. நாம ரூபங்கள் ஆகிய மாயா காரியங்கள் அனைத்தும் மித்தை. எங்கும் உள்ள சச்சிதானந்த சொரூபமே சத்தியம்.

--

உறங்கி விழித்தவன் கண்ட கனவு பொய் என உணர்வது போல பிரம்ம அனுபவம் கிடைக்கப்பெற்ற ஞானி எல்லாம் மித்தை என்கிறான். அது குற்றம் ஆகாது. ஆனால் அத்தகைய அனுபவம் இல்லாது புத்தகத்தை மட்டும் படித்துவிட்டு எல்லாம் பொய், கோவிலில் என்ன இருக்கிறது? எல்லாம் நமக்குள் இருக்கிறது என்று பேசி திரிபவர்கள் தானும் கெட்டு மற்றவரையும் கெடுப்பார்கள்.

மாயை என்கிறது எப்படிப்பட்டது? மாயை யார் யாருக்கு இருக்கு? அது எப்படி வந்தது? அது வருவானேன்? மாயை என்பது பிரமத்திலிருந்து வேறா?

அப்படியானால் வஸ்துவும் (பிரம்மமும்) ஒரு பொருள் இல்லாமல் இரண்டு ஆகுமே. எல்லாமே பிரம்மம் என்கிறதுக்கு இது ஒத்துப்போகலையே. மாயை என்பதும் பிரமமும் ஒண்ணுதான்னா மாயா வஸ்து போல் பிரம வஸ்துவும் பொய் ஆகுமே?

(இந்த பிரம்ம விசாரணையில இறங்கிய போது எனக்கு ரொம்ப புதிரா இருந்தது இது.)

94.

மாயை யென்பதே துடையரா ரெப்படி வந்தது வருவானேன்
மாயை யென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே
மாயை யென்பதும் பிரமமு மொன்றெனின் வஸ்துவும் பொய்யாமே
மாயை யென்றமே கங்களுக் கொருசண்ட மாருத குருமூர்த்தி

மாயை என்பது ஏது? உடையவர் யார்? எப்படி வந்தது? வருவானேன்? மாயை என்பது பிரமத்தின் (பிரமத்திலிருந்து) வேறு எனின் வஸ்துவும் இரண்டாமே. மாயை என்பதும் பிரமமும் ஒன்றெனின் வஸ்துவும் (மாயா வஸ்து போல் பிரம வஸ்துவும்) பொய்யாமே. மாயை என்ற மேகங்களுக்கு ஒரு சண்ட மாருதம் (போன்ற) குருமூர்த்தி.

--

95.

அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையா லவாச்சிய வடிவாகும்
இதுத னக்குள துடலியா னுலகுமெய் யெனுமவ ருடையோர்கள்
கதையி லாதபொய் வந்ததிப் படியென்று கண்டபே ரிலைமைந்தா
விதன மாயையேன் வந்ததென் றாற்புத்தி விசாரமற் றாதனாலே

அதனை இன்னதென்று உரைத்திடப் படாமையால் அவாச்சிய வடிவாகும். இது தனக்கு

உளது, உடல் யான், உலகு மெய் எனும் அவர் (பேர்கள்) உடையோர்கள். கதை இல்லாத (இன்ன விதம் என சொல்ல முடியாத) பொய் வந்தது இப்படி என்று கண்ட பேர் இல்லை மைந்தா. விதன (துன்பமான) மாயை ஏன் வந்தது என்றால் புத்தி விசாரம் அற்றது அதனாலே.

--

மாயை இப்படிப்பட்டது ன்னு சொல்ல முடியாது. அதனால அது சொல்லால் சொல்லப்பட முடியாத வடிவானது (அநிர்வசனீயம்). யார் நான் எனது என்கிற பற்று உடையவராக இருக்கிறாங்களோ அவங்க மாயை உடையவர்கள். இப்படிப்பட்டதுன்னு சொல்ல முடியாத அதை இப்படி உருவாயிற்று என்று கண்டவரும் யாரும் இல்லை. ஏன் வந்தது என்றால் "நான் யார்? இந்த உலகம் என்கிறது என்ன? இது எப்படி வந்தது?" என்ற விசாரணை இல்லாததால் வந்தது.

## 96.

அருவ மாகுமா யாவிவித் தைகள்விளை யாடுமுன் றெறியாவே
உருவ மாம்பல கந்தர்ப்ப சேனையா யுதித்தபின் வெளியாகும்
பிரம சத்திக ளநந்தமா மதைக்கண்டு பிடித்திடல் கூடாதே
பரவு பூதங்கள் கண்டநு மானத்தாற் பலருக்கும் வெளியாமே

அருவமாகும் மாயாவி வித்தைகள் விளையாடு முன் (யாருக்கும்) தெரியாவே. உருவமாம் பல கந்தர்ப்ப சேனையாய் உதித்த பின் வெளியாகும். (தெரியும்) பிரம சத்திகள் அநந்தமாம் அதைக்கண்டு பிடித்திடல் கூடாதே. பரவு பூதங்கள் கண்டு அநுமானத்தால் பலருக்கும் வெளியாமே (தெரிய வரும்)

## 97.

மித்தையான சகம் தோன்றுதலால் மித்தையான மாயா சக்தி உள்ளது என அறிக.

காரி யங்களுஞ் சத்தியா தாரமுங் காணுமற் றதுமாயம்
பாரி னின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர் கண்காணும்
வீரி யந்திகழ் வித்தையா யினசத்தி வெளிப்படாதது போலே
பேரி யற்பிர மத்துக்கு முலகுக்கும் பிறிதுசத் திகளுண்டே

[ஜீவேஸ்வர ஜகங்களான சக்தியின்] காரியங்களும் (மாயா) சத்தி ஆதாரமும் (ஆன பிரமமும்) காணும்.(காணப்படும்.) (ஆனால் அச் சக்தியான) மற்றது மாயம். பாரின் (பூமியில்) நின்ற மாயாவியும் சேனையும் பார்ப்பவர் கண் காணும். [ஆனால்] வீரியந் திகழ் (பராக்கிரமான இந்திர ஜால) வித்தையாயின சத்தி வெளிப்படாது. அது போலே, பேர் இயல் (மகத்துவமுள்ள) பிரமத்துக்கும் உலகுக்கும் பிறிது சத்திகள் உண்டே.

--

இந்த மாயை தோற்றம் இல்லாதது. ஒரு இந்திர ஜாலக்காரனுடைய மணிமந்திர ரூபமான

சக்திக்கு உருவமில்லை. அதனால அது தோற்றுவிக்கப்படுவது இல்லை. ஆனால் அவன் விளையாடியபின் அதன் காரியமாக மாயா நகரங்கள், மக்கள், மிருகங்கள் ஆகியன எல்லாம் தோன்றுகின்றன. இந்த மாயா தோற்றத்தைக்கண்டு "ஓஹோ! ஒரு மாய சக்தி வேலை செய்கிறது" என்று உணர்கிறோம். இது போலவே பிரம்மத்தோட எண்ணிக்கை இல்லாத சக்திகள் இருக்கு. அவற்றை யாராலும் கண்டு அறிய இயலாது. அந்த சக்திகளோட விளைவாக இருக்கிற எங்கும் பரவி நிற்கும் இந்த மாய பிரபஞ்சத்தை பார்ப்பதாலேயே நாம் ஊகத்தால் அந்த சக்திகளை உணர்ந்து கொள்கிறோம்.

98.

பிரபஞ்சத்தை தோற்றுவிக்கும் மாயாச் சக்தி பிரமத்தை தவிர வேறாக இருக்கும்.

சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனா மாயாவி

வித்தை காட்டிய விந்திர சாலம்பொய் வித்துவான் மெய்போலப்

புத்தி மைந்தனே சத்திமா னாகிய பூரண வான்மாவின்

வத்து நிண்ணயஞ் சொன்னதிட் டாந்தத்தின் வழிகண்டு தெளிவாயே

[இந்திர ஜால] சத்தி சத்தனைத் [இந்திர ஜாலக்காரனை] தவிர வேறன்று காண். சத்தனாம் (சக்தியுடைய) மாயாவி வித்தை காட்டிய இந்திர சாலம் பொய். வித்துவான் மெய் போல- புத்தி மைந்தனே, சத்திமானாகிய பூரண ஆன்மாவின் வத்து நிண்ணயம் சொன்ன திட்டாந்தத்தின் வழியாக கண்டு தெளிவாயே.

--

இந்திர ஜாலம் காட்டும் மாந்திரீகனை தவிர அவன் சக்தி வேறானதல்ல. அது அவனோட வெளிப்பாடேதான். அது போல மாயை பிரமத்துக்கு வேறானதல்ல. அதனால் வஸ்து ஒன்றே, இரண்டல்ல. மாந்திரீகன் செய்த காரியங்கள் பொய்யாகி அவன்மட்டும் மெய்யாக இருப்பது போல மாயையும் மாயா காரியங்களும் பொய்; பிரம்மம் மெய்.

மாயை, அவித்தை, ஆவரணம், விக்சேபம், அஞ்ஞானம், சத்தி, பிரகிருதி என்ற எல்லா சொற்களும் ஒன்றையே குறிக்கும். மாயையின் தொழில்கள் பல. ஆதலால் வேறு வேறு பெயர்கள் வந்தன. மாயைக்கு உற்பத்தின்னு ஒண்ணு இல்லை என்கிறதால அது அநாதி. அதுக்கு பல வெளிப்பாடுகள் இருந்தாலும் முக்கியமா இருக்கிறது ஆவரணமும் விட்சேபமும்தான்.

மாயை அநாதியானதால அதன் காரியமான பிரபஞ்சமும் அநாதி. எப்படி கானல் நீர் பொய்ன்னு உணர்ந்த பின்னாலும் அது தோன்றிகிட்டுதான் இருக்கோ அப்படி பிரபஞ்சம் மாயைன்னு தெரிஞ்ச பின்னும் அது தோன்றவே தோன்றும். கானல் நீர் சத்தியமில்லைன்னு எப்படி நமக்கு தெரியுமோ அதே போல பிரபஞ்சம் சத்தியமில்லைன்னு ஞானிக்கு தெரியுது.

இதனால பிரம்மம் மாதிரி மாயையும் நித்தியமேன்னு வாதிக்கிறவங்க உண்டு. ஏன்னா பிரம்மம் இருக்கிற வரை மாயையும் இருக்கும். ஆனால் ஒரு தனி சீவனைப்பொறுத்த அளவில இதை நீக்கிக்கொள்ளலாம். அந்த சீவனை பொறுத்த அளவில அது அநித்தியமே. ஞானியை பொறுத்த வரை மாயை இல்லை.

கொஞ்சம் யோசிச்சுப்பாத்தா அனுபவத்தில மாயை மனசைத்தவிர வேற ஒண்ணும் இல்லை.

மாயை யெனுமிவ் வுரைக்கருத்த

மதிக்கின் யாதொன் றிலாதததுவே

மாயை யெனலிப் படியிருக்க

மதிப்பரதனை இரு வகையாய்

மாயை மெய்யென் றுரைத்திடுவர்

மயக்கப்பட்டு தனைமறந்தோர்

மாயை பொய்யென் றுரைத்திடுவர்

மயக்க நீங்கி தனையறிந்தோர்

-அத்துவித உண்மை - குமாரத்தேவர்

மாயை யெனும் இவ்வுரைக் கருத்த மதிக்கின் யாது ஒன்று இலாதததுவே. மாயை எனல் இப் டியிருக்க, மதிப்பர் அதனை இரு வகையாய்.மாயை மெய் என்று உரைத்திடுவர் மயக்கப்பட்டு  தனை மறந்தோர். மாயை பொய் என்றுரைத்திடுவர் மயக்க நீங்கி தனையறிந்தோர்.

-அத்துவித உண்மை - குமாரத்தேவர்

நாம யார்ன்னு மறந்து போனதுதான் மாயை. மறப்பு உள்ளவரை நினைப்பு உண்டு. இந்த மறப்பு நினைப்பு மனசோட தொழிலா இருக்கிறதால மனசே மாயை.

மனமன மெங்குண்டு மாயையு மங்குண்டு

மனமன மெங்கில்லை மாயையு மங்கில்லை

மனமாயை யன்றி மற்றொன்றுமில்லை

பினையாய வேண்டாம் பிதற்றவும் வேண்டாம்

தனையாயந் திருப்பது தத்துவம்தானே

-பாடுதுறை

இந்த மனசோட உருவ நாசம் சீவன் முத்தியிலும், அருவ நாசம் விதேக முத்தியிலும் சித்திக்கும். அதனால மாயை அழியக்கூடியதுதான்.

அதனால மாயை அநாதி, அநித்தியம்; பிரம்மம் அநாதி, ஆனா நித்தியம்.

பிரபஞ்சம் மாயா சொரூபம். பெயர் உருவம் இல்லாம பிரபஞ்சம் இல்லை. இந்த பெயர் உருவத்தில இருக்கிற நாட்டத்தை விட்டு விட்டா மாயையை ஒழிச்சதா ஆகும். (ம்ம்ம்ம்.... சுலபமா சொன்னாலும் இதை விட முடியலையே) மனமும் மாயை ஆனதாலும், மனசுக்கு நாம ரூபத்திலேயே பற்று இருக்கிற படியாலும், மனமும் ஒழிஞ்சதாகும். அப்ப ஆன்ம சொரூபம் தோன்றிடும்.

பிரபஞ்ச தோற்றமான மாயையால நமக்கு ஒரு கெடுதியும் இல்லை. :-)

என்ன, அதை நிஜம்ன்னு நினைக்கக்கூடாது.

:-))

அப்படி நினைக்கிற அஞ்ஞானமே அந்த பந்தத்தை உருவாக்கி இருக்கு.

சினிமாவில ஏதோ காட்சியை பாத்து மோகிக்கிறோம். எப்ப இது உண்மையில்லைன்னு திடமா மனசில உறைக்குமோ அப்ப அந்த மோகம் போயிடும். எப்ப போகும்? உண்மையை பாக்கிறப்ப போகும். அந்த காலத்தில சினிமா பாத்து கதாநாயகி படுகிற கஷ்டத்தைப்பாத்து பிழியப்பிழிய அழுவாங்க பாக்கிறவங்க. "ச்சே! என்ன இப்படி

அழறோம்! இது முட்டாள்தனம்!" ன்னு சில சமயம் தோணும். அப்போ திரையை விட்டு பார்வையை விலக்கி வேற எங்கேயாவது பாத்தா, கொஞ்ச நேரத்தில மனசு சமநிலைக்கு வந்துடும்.

கயிறைப்பாத்து பாம்புன்னு நினைச்சு மயங்கிறப்ப, எப்ப அதிஷ்டானமான கயிறு தெரிய ஆரம்பிக்குமோ அப்ப ஆரோபமான பாம்பு காணாம போகும். அது போல எப்ப தன் நிஜ சொரூபத்தை பாக்க ஆரம்பிக்கிறோமோ அப்ப "ஹா! இதுதான் நாம்." இது மாயை இல்லைன்னு இயல்பாகவே தோன்றிடும். அப்ப இந்த பிரபஞ்சமும் பொய்ன்னு விளங்கிடும்.

இறப்பும் பிறப்பும் பொருந்த- எனக்
கெவ்வணம் வந்ததென் றெண்ணிநான் பார்க்கில்
நினைப்பு மறப்புமாய் வந்த-வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி-சங்கர
தாயுமானவர்

இங்கே கொஞ்சம் நின்னு சுதாரிச்சுக்கலாம்.
நாம் பார்க்கிற அனைத்தும் பிரம்மமே. அதன் பல்வேறு வெளிப்பாடுகளே. இது அத்வைத நோக்கிலே பாத்து பாத்து யோசிச்சு கொஞ்சம் கொஞ்சம் அனுபவமும் கிட்டி உறுதிப்படுத்திக்கொள்கிறது.
ஆனா நாம் அந்த இடத்துக்கு வரும் வரை கவனமாக இருக்கணும். நம்ம கால்கள் எந்த பிரபஞ்சத்திலே ஊன்றி இருக்கோ அதுக்கான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே நடந்துக்கணும். யானைக்கதையை கிருஷ்ண மூர்த்தி சார் எழுதினது நல்ல பொருத்தம். ப்ரம்ம நிலைக்கு போகாம, அதோட டேஸ்ட் கூட கிடைக்காம நீயும் பிரம்மம் நானும் பிரம்மம் ன்னு பேசிகிட்டு திரியறது பிரச்சினையிலேதான் கொண்டுவிடும்!

அதுக்குன்னு நாம பாக்கிற இந்த லோகமே நிஜம்ன்னும் நினைச்சுடக்கூடாது. நாம் ஏதோ ஒரு நாடகத்திலே மாட்டிகிட்டு இருக்கோம். அதிலே நமக்கும் ஒரு ரோல் இருக்கு. அதை சரியாவே செய்துவிட்டு போவோம். அதே சமயம் நாம் நடிக்கிறது ஒரு நாடகம் என்கிற நினைப்பும் இருக்கட்டும்.

## 99.

### அசத்தான மாய சக்தி உளதென்பது எப்படி?

இல்லை யாகிய சத்தியை யுண்டென்ப தெப்படி யெனக் கேட்கில்
புல்லை யாதியா மசேதனப் பொருளெலாம் பூத்துக்காய்ப் பனபாராய்
நல்லை யாமக னேயதிற் சிற்சத்தி நடந்திடா திருந்தக்கால்
தொல்லை யாய்வருஞ் சராசர வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறாமே

இல்லையாகிய சத்தியை உண்டென்பது எப்படி எனக் கேட்கில், புல் ஆதியாம் அசேதனப் பொருளெலாம் பூத்துக் காய்ப்பன பாராய். நல்லையாம் மகனே அதிற் சிற்சத்தி நடந்திடாது (செல்லாது) இருந்தக்கால்,(இருப்பின்) தொல்லையாய் (தொன்று தொட்டு) வரும் சராசர உயிர்க்கெல்லாம் சுபாவங்கள் வேறாமே.

--

இன்னது என சொல்ல முடியாத இந்த சக்தி இருக்கிறது என்று எப்படி சொல்வது? நகராத புல் பூண்டு, செடி முதலியவை வளர்வதும், பூக்கும் காலத்தில் பூப்பதும், காய்க்கும் காலத்தில் காய்ப்பதும் பழுத்து உதிரும் காலத்தில் பழுத்து உதிருவதும் பார்ப்பாயாக. பிரம்மத்தின் சித் சக்தி அவற்றில் இல்லாவிட்டால் இந்த ஒழுங்கு இருக்காது.

"மெதட் இன் தி மேட்னஸ் "ன்னு ஆங்கிலத்தில சொல்கிறது போல, பொய்யானாலும் இதில ஒரு ஒழுங்கு இருக்கே. இயற்கையை பாத்தா ஒவ்வொரு விஷயத்திலும் இதை பாக்க முடியுது. உண்மையில்லை சினிமாதான்னாலும் நல்ல சினிமாவா இருக்கு. தீ எப்பவுமே சுடுது. சூரியன் ஒரு ஒழுங்கிலேயே உதிச்சு மறையுது. இதுக்கெல்லாம் பின்னால ஒரு சக்தி இல்லைன்னா இப்படி நடக்காது. சுபாவங்கள் எப்போ வேண்ணா எப்படி வேண்ணா மாறும்.

100.

கருப்பை முட்டையுட் பறவைகள் பலநிறங் கலந்தசித் திரம்பாராய்
அருப்ப மாம்சத்தி நியமமில் லாவிடி லரசிலா நகர்போலாம்
நெருப்பு நீரதாங் கசப்புமே மதுரமா நீசனு மறையோதும்
பொருப்பு மேகமாங் கடலெலா மண்களாம் புவனமிப் படிபோமே

கருப்பை முட்டையுள் பறவைகள் பல நிறம் கலந்த சித்திரம் பாராய். அருப்பமாம் (அருவமாம்) சத்தி நியமம் இல்லாவிடில் அரசிலா நகர் போலாம். நெருப்பு நீரதாம் (நீர் ஆகும்). கசப்பும் மதுரமாகும். நீசனும் மறையோதும். பொருப்பு (நகராத மலைகளும்) மேகமாம். கடல் எலாம் மண்களாம். புவனம் இப்படி போமே.
[பிரம்மத்தின் சித் சக்தி அவற்றில் இல்லாவிட்டால் இந்த ஒழுங்கு இருக்காது.].......

இந்த ஒழுங்கு எவ்வளோ தூரம் இருக்குன்னா சைன்ஸ் ன்னு சொல்லி விதிகள் எல்லாம் வரையறுக்க முடியுது. இன்ன இன்ன ரசாயனத்தை கலந்தா இது உருவாகும் ன்னு சொல்ல முடியுது. உப்பை தண்ணில கரைச்சு சர்க்கரை வரதில்லை.
இந்த ஒழுங்கைப்பாத்துட்டு இதுவே எல்லாம்ன்னு மயங்கிப்போறோம். அதுதான் தப்பு. சரிப்பா எல்லாம் ஒழுங்காதான் நடக்குது, ஏன் அப்படின்னு சொல்லுன்னு கேட்டா பதில் வராது. அது இயற்கை விதின்னா இயற்கை எங்கிருந்து வந்தது?

இந்த மாயா உலகத்தில இருந்து கொண்டு நாம எந்த மட்டத்திலே -ப்ளேன்ல- இருக்கோமோ அதுக்கு தகுந்த படி எல்லாத்தையும் பார்க்கலாம். பூலோகத்தில இருந்து கொண்டு விஞ்ஞான விதிகள் படியும் ஒழுங்கை பார்க்கலாம். தேவ உலக விதிகள் படி பூஜை ஹோமங்கள் பலன் தரதையும் பார்க்கலாம். பித்ரு லோக நியாயங்கள் படி செய்ய வேண்டியதை செய்யாததற்கு பலனாக பிரச்சினைகளும், செய்ய வேண்டியதை செய்து நிவர்த்திகள் கிடைக்கிறதையும் பார்க்கலாம். ஞானியா இருந்து கொண்டு இதைப்பத்தி எல்லாம் கவலைப்படாம, நடக்கிறதை வேடிக்கையும் பார்க்கலாம்.
--
என்னங்க இது? மாயையை யாராலும் அறிய முடியாது, இன்னதுன்னு சொல்ல முடியாது. இந்த பிரபஞ்சம் என்கிற பயிருக்கு இதுவே வித்து ன்னு நீங்க சொன்னா அதை நீக்குவது எப்படி? நீக்க முடியாதுன்னா எப்படி பிரமத்தை ஒரே ரூபமாக பார்க்க முடியும்? ஒரே ரூபமாக பார்த்தாதானே அது முத்தி ஆகும்?

101.

அத்வைத நிச்சயம் உண்டாகும் பொருட்டு வினா

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய வடிவென்றும்
சேர்க்கு நாம ரூபப்பயிர் வித்தென்றுஞ் செப்பிய சிற்சத்தி
பேர்க்கு மாறெங்ஙன் பிரித்திடப் படாதெனிற் பிரமபா வனையொன்றாப்
பார்க்கு மாறெங்ஙன் முத்தியா குவதெங்ஙன் பரமசற் குருமூர்த்தி

ஆர்க்கும் (யாருக்கும்) காணவும் அறியவும் படாது என்றும், அவாச்சிய (சொல்ல

இயலாத) வடிவென்றும் சேர்க்கு நாம ரூப[மாகிய] பயிர்[களின்] வித்து என்றும் செப்பிய சிற்சத்தி (மாயையை), பேர்க்குமாறு எங்ஙன்? (நீக்கும் வழி எது?) பிரித்திடப் படாதெனில் பிரம பாவனை ஒன்றாக (ஸ்வரூப சமாதியில் அத்வைதமாக) பார்க்குமாறு எங்ஙன்? (பார்க்கும் விதம் எப்படி?) (அத்வைதமாக பார்க்க முடியாதானால்) முத்தியாகுவது எங்ஙன்? பரம சற்குரு மூர்த்தி.

102.

வாயுத் தம்பனஞ் சலத்தம்ப னம்மணிமந்திர மருந்தாலே
தேயுத் தம்பனஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத் திகளெங்கே
நீயச் சச்சிதா நந்தமாய் வேறொன்று நினைந்திடா திருப்பாயேல்
மாயச் சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற் காணோமே

வாயு தம்பனம், சல (நீர்) தம்பனம், தேயு (நெருப்பு) தம்பனம், [ஆகியவற்றை] மணி மந்திர மருந்தாலே செய்திடில் அதில் அதில் சிறந்த சத்திகள் எங்கே? நீ அச் சச்சிதாநந்தமாய் வேறு ஒன்று நினைந்திடாது இருப்பாயேல் மாயச் சத்தி போம். ஈது அன்றி மந்திரம் [ஏதும்] மறைகளில் காணோமே.
மனோ நாசம் செய்தலே மாய சக்தியை நீக்கும் விதம். அப்போது அத்வைதம் சித்திக்கும். இது அன்றி வேறு வழி ஏதும் இல்லை.
--
மணி, மந்திர, மருந்தாலே வாயு, நீர், அக்னி ஆகியவற்றை கட்டுக்குள் கொண்டு வரும்போது அவற்றின் சிறப்பான சக்திகளான சலனம், திரவத்தன்மை, சூடு ஆகியன மறைந்து போச்சு இல்லையா? அது போல நீ ஒரே பிரமமான நிலையிலே வேற ஒண்ணும் நினைப்பு வராம நின்னா மாயை மீண்டும் வராம அழியும். இது தவிர வேறு வழி ஏதும் வேதங்களில சொல்லப்படலை.

103.

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் விவகரித் திடவேண்டில்
நாவி னான்மண்ணைக் குடமென்ப ரக்குட நசிப்பது நாவாலே
பாவு நாமரூ பங்களை மறந்துமண் பார்ப்பதே பரமார்த்தம்
சீவ பேதகற் பிதங்களை மறந்துநீ சின்மய மாவாயே

மேவு மண்ணில் அவ்வியத்தமே (மறைந்திருந்த கட சக்தியே) வியத்தமாம். (குயவனின் செய்கைக்கு பின் கடமென வெளிப்படும்.) விவகரித்திட வேண்டில், நாவினால் மண்ணைக் குடமென்பர். அக் குடம் நசிப்பது (மண்ணாவது) நாவாலே. பாவும் (பாவனையான) நாம ரூபங்களை மறந்து மண் பார்ப்பதே பரமார்த்தம். [அது போல] சீவ பேத கற்பிதங்களை மறந்து நீ சின்மயமாவாயே.

சாதாரணமான மண்ணை குயவன் எடுத்து சக்கரத்தில சுத்தி ஒரு குடம் செய்கிறான். அங்க இருப்பது மண்தான் ஆனாலும் அதற்கு ஒரு குறிப்பிட்ட உருவம் இருக்கு. அதனால அதை குடம் என்கிறோம். குயவனின் செயலுக்கு முன்னே மண்ணில் மறைந்து இருந்த சக்தியே கிரியைக்குப்பின் காரியமாக குடம் ன்னு வெளியானது. மண்ணை தவிர குடம் இல்லை. அந்த குடம் உடைந்து போனால் அதையே மீண்டும் மண் என்போம். ஆக குடம் என்பது வாய்சொல் மட்டுமே.

குடம் உண்டாகும் முன் மண் இருந்தது. உண்டான போது குடமாக தோன்றுவதும் மண்ணே. உடைந்த பின் இருப்பதும் மண்ணே. ஆக மூன்று காலத்திலும் இருப்பது

மண்ணே. காரியம் ஆன குடம் என்பது நம் வாயால சொல்லப்பட்டு பின்னே அழிஞ்சு போச்சு. அதனால மண்ணே சத்தியம். குடம் என்கிறது நடுவில வந்து போன பொய்யே. நிலை இல்லாதது.

அது போல பிரமம் ஒன்றே எப்போதும் இருப்பது. இடையில் வந்து போகும் தோற்றங்களான நாம ரூப உலகம் பொய்யாகும்.

நாம ரூப நாட்டம் விடின் நமது சொரூபம் தோன்றிவிடும். -குமார தேவர்.

வெளிச்சமும் இருட்டும் முரணா இருக்கு. எங்க இருட்டு இருக்கோ அங்க வெளிச்சம் இல்லை. எங்க வெளிச்சம் இருக்கோ அங்க இருட்டு இல்லை.

அதப்போல எங்க பிரம்ம சொரூபம் தோணுதோ, அங்க நாம ரூபமா வஸ்துக்கள் தோணாது. அந்த நிலையிலேயே நின்னா நாம ரூப தோற்றங்கள் ஒழிஞ்சே போகும்.

இருப்பது குடமும் மண்ணும், ஆனால் உண்மையில் 2 பொருட்கள் இல்லை. மண்ணே குடமாக தோன்றுகிறது. குடம் என்பது சொல் மட்டுமே. நாம் குடம் அழகாக இருக்கிறது; பெரிதாக இருக்கிறது, இலேசாக இருக்கிறது என்றெல்லாம் பேசும் போது மண் என்பதை மறந்து விடுகிறோம். மண் என்பதை கவனிக்கும் போது இது நல்ல மெழுகு போன்ற சிவப்பு மண், கற்கள் கலப்பில்லாதது என்கிறோம். அப்போது குடம் என்று நினைப்பதில்லை. ஒன்றே மற்று ஒன்றாய் தோன்றுவதால் எதை பார்க்கிறோமோ அது மட்டுமே தோன்ற மற்றது மறையும்.

உப மேயதிலும் உள்ளது பெயரும் சச்சிதானந்தமாகிய பிரம்மமும். உண்மையில் இரண்டு இல்லை. பிரம்ம சொரூபம் ஒன்று மட்டுமே உள்ளது. அதுவே பெயருடைய பிரபஞ்சமாக தோன்றுகிறது. பிரம்மமே மூன்று காலமும் இருக்கும் உண்மையாக பொருள். பிரபஞ்சம் குடம் போல பொய். பிரம்ம சொரூபமே பிரபஞ்ச சொரூபமாக தோன்றுவதால் ஒன்றை நாட மற்றது மறையும். பிரம்ம சொரூப நாட்டத்தை விட்டால் நாம சொரூபம் தெரியும். நாம் நாம சொரூப நாட்டத்தை விட்டால் பிரம்ம சொரூபம் தெரியும். பிரபஞ்ச தோற்றம் பழங்கனவாக மறையும்.

இந்த இரண்டு வழிகளிலே நமக்கு சரியானதை தேர்ந்து எடுத்து அதை பயிற்சி செய்யணும். அதுக்கு குருதான் வழி காட்ட முடியும். வேற யார் உதவுவாங்க?

இந்த வழிகளில் ஒண்ணு பிபீலிகா மார்க்கம். அதாவது எறும்பு வழி. அது எப்படி சுறு சுறுப்பா அலைஞ்சு இதுவா இதுவான்னு உணவை தேடுதோ அப்படி பிரம்மம் இதுவா இதுவா ன்னு ஒவ்வொண்ணா பாத்து நீக்குகிறது. மற்றது மேலே சொன்ன விகங்க மார்க்கம். அதாவது பறவை வழி. வானத்திலே கருடன் சும்மா மெதுவா க்ளைட் பண்ணிகிட்டே இருக்கும். அது பெரிசா ஒண்ணும் செய்கிறதா தோணாது. பட்டுன்னு கீழே பாய்ஞ்சு இரையை கொத்திக்கும். முடிஞ்சது வேலை. அது போல பிரம்ம நாட்டத்திலே பட்டுன்னு பிரவேசம் செஞ்சு அதிலேயே நிக்கிறது விகங்க மார்க்கம். இப்படி ஏக காலத்தில மாயையை நீக்கி அதிலேயே நிக்கிறது அதி தீவிர பக்குவிகளுக்கு மட்டுமே சாத்தியம்.

பிறப்பிறப்பாம் பெயருடைய விந்த மாயைப்
பெருமையினை முடிவுபெறப் பேசவொண்ணா
வறப்பெரிய தன்மனதை வென்றான்மாளு
மல்லதொரு வகையாலு மகற்றலாகா

-வாசிட்டம்

உன்னுறு மனத்தாலே யுலகமா மிந்திர சாலந்
துன்னுரும் பணிக ளென்னுஞ் சொற்பொருட் பொன்னையன்றி
யன்னிமில்லைப் பொன்னாற் பணியென வறைய வேண்டா
பன்னிய உலகாஞ் சொற்குப் பரமன்றிப் பொருள் வேறில்லை
-வாசிட்டம்

அதுவிதுநீ முதலாய்க் காண்பதெல்லா
மணுவுமிலை யணுவுமிலை யணுவுமில்லை
யெதுவெதுதான் திரிசியமா யெங்கே யெங்கே
யெவ்விதமாய்த் தோற்றினுமத் தோற்றமெல்லாந்
திதமருவுந் திருக்கான பிரமமயமாந்
திலமளவு மையமிலைச் சத்தியந்தா
னிதமனைய பரப்பிரம நானேயென்று
நிகழ்பிரம நிச்சயமே தருப்பணங்காண்
-ரிபுகீதை

104.

பூரிக் குங்கன சச்சிதா னந்தத்திற் பொய்சடந் துயர் மூன்றும்
தூரத் தாயினுந் தோன்றுபாழ் விபரிதந் துடைப் பதெப் படியென்றால்
நீரிற் றோன்றுந்தன் னிழறலை கீழதாய் நின்றலை யினுநேராய்ப்
பாரிற் றோன்றிய தன்னை நோக் கிடிலந்தப் பாழ்நிழல் பொய்யாமே

பூரிக்கும் கன சச்சிதானந்தத்தில் பொய், சடம், துயர் மூன்றும், (சத் சித் ஆநந்தத்தின் எதிர்மறைகள்) தூரத்தாயினும் (இல்லாவிடினும்) தோன்றும் பாழ்(வீணான) விபரீதம் துடைப்பது (நீக்குவது) எப்படி என்றால், நீரில் தோன்றும் தன் நிழல் தலை கீழது ஆகி நின்று அலையினும், நேராய்ப் பாரில் தோன்றிய தன்னை நோக்கிடில் அந்த பாழ் நிழல் பொய்யாமே.

--

சத் சித் ஆனந்த நிலைக்கு எதிரானது பொய், சட, துயர் நிலை. இது நாம் சாதாரணமாக இருக்கும் நிலை. ஞான விசாரம் செய்து முன்னேறி அந்த நிலையில் இல்லாவிட்டாலும் இன்னும் சத், சித், ஆனந்தம் வரவில்லை. விசாரத்தால் உடல், மனம், அந்தக்கரணம் ஆகியவற்றை நீக்கி பார்க்கும் போது அப்படி ஒரு நிலை வரக்கூடும். வெறும் பாழாக தோற்றம் இருக்கலாம். இதை முன்னேயே பாத்து இருக்கோம் இல்லையா?

---------------

பார்க்க முதல் பாகம்- தத்துவ விளக்கம்- 70:

ஆசாரியர் உபதேசித்தப்படி அநுஷ்டித்து அதற்கு பின் சீடன் வினாதலைக்கூறல்: பஞ்ச

கோசமும் விட்டு அப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே (சூன்யமே) விஞ்சியது. (மீதியாக இருந்தது). அது அல்லாமல் வேறொன்றும் தெரியக் காணேன். அஞ்சன (மை போல கருத்த) இருளையோ நான் அகமென (நானென) அநுபவிப்பேன்? வஞ்சமில்[லாத] குருவே என்ற மகன் மதி தெளியச் சொல்வார்.

----------------

அப்போது என்ன செய்வது?

நாம் யார் ன்னு தெரிந்து கொள்ள நீரில் நம் தோற்றத்தை பார்க்கிறோம். அது அலைவதாக தோணுகிறது. இதை விசாரித்து தெரிந்து கொள்ள கரையில் நிற்கிற நம்மையே நாமே பார்க்க வேண்டும். உண்மையில நாம் அலையலை. அலைவு நீரோட சலனத்தினால் ஏற்பட்டதுன்னு புரியும். அப்போது நம் உண்மை சொரூபம் தெரியவரும்.

அதுபோல இருளை பார்க்காமல், பார்க்கிற நாம் யார்ன்னு பார்க்க வேண்டும். அப்ப நம்மை நாம் சரியாக பார்ப்போம்.

105.

ஞானங் காரண மறிபொருள் காரிய நாமரூ பப்பேய்கள்
ஆன தெப்படி யழிந்ததெப் படியென வாய்குதல் பலனன்றே
மான மைந்தனே தீர்க்கசொப் பனசகம் வந்ததும் பாராமல்
போன தும்நினையாமலுன் போதமாய்ப் பூர்ணமாயிருப்பாயே

காரணம் ஆன ஞானம் அறி பொருள் (அறியப்படும்) நாம ரூப பேய்கள் (ஆன) காரியம் ஆனது எப்படி? அழிந்தது எப்படி என ஆய்குதல் (ஆராய்ச்சி செய்தல்) பலனன்றே. மான (பெருமையுள்ள) மைந்தனே, தீர்க்க சொப்பன சகம் வந்ததும் பாராமல், போனதும் நினையாமல் உன் போதமாய்ப் பூர்ணமாய் இருப்பாயே.

[அத்வைத அனுபவம் அடைய வேண்டுபவன் அத்வைத சொரூபமாக இருப்பது தவிர்த்து ஆத்மா அல்லாததின் உற்பத்தி நாசத்தை விசாரிப்பானேன் என்பதாம்.]

--

எல்லாத்தையும் அறிகிற அறிவோட சொரூபமே காரணம். காரணத்தால உண்டானது காரியம்.

அதாவது அறிவால அறியப்பட்டவை அனைத்தும் காரியம்.

இங்கே பலவிதமாக பிரபஞ்சம் தோன்றுகிறது, இல்லையா? அதுவே காரியம்.

பிரம்மத்தின் தோற்றம் போய் இந்த பிரபஞ்சத்தில் பலவிதமாக தோன்றும் நாம - ரூப பேய்கள் எப்படி வந்தன, அவை அழிவது, [மீண்டும் தோன்றுவது] எப்படின்னு விசாரிக்கிறதிலே பயனில்லை. விசாரிச்சு தெரிஞ்சு கொண்டு என்ன செய்யப்போறோம்? :-) எப்படியோ வந்தாச்சு! அவற்றை ஒரேயடியாக நீக்கும் விதம் சொல்லி இருக்காங்க. ஆகவே நீண்ட கனவு போன்ற இந்த பிரபஞ்சம் உண்டான வழியையும் ஒழிக்கும் வழியையும் விசாரிப்பதை விட்டுட்டு நம் ஆத்ம சொரூபத்தில் நிலைத்து நிக்கிற வழியை பாக்கலாம்.

106.

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகினா லம்மட்டும்
நிசத்தி லுள்விழிப் பார்வையா மிப்படி நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தி லுன்மன நின்றுசின் மாத்திர வடிவமா யிடின் மைந்தா
கசத்த தேகத்தி லிருக்கினு மானந்தக் கடல்வடி வாவாயே

அசத்தில் [சத்திய புத்தியுடன் பார்க்கும் ஆதரவு] எம்மட்டுண்டு (எவ்வளவு உண்டு) அம் மட்டும் (அவ்வளவும்) பரா முகமாகினால் (விடுத்தால்) அம் மட்டும் (அவ்வளவுக்கும்)

நிசத்தில் (ஆத்மாவான சத்தில்) உள் விழிப் பார்வையாம். இப்படி நிரந்தரப் பழக்கத்தால் வசத்தில் உன் மனம் நின்று சின் மாத்திர வடிவமாயிடின், மைந்தா, கசத்த (வெறுக்கப்பட்ட) தேகத்தில் இருக்கினும் ஆனந்தக் கடல் வடிவு ஆவாயே.

--

அசத்தாகிய நாமரூபங்களில் உள்ள பற்று (வெளி முக பார்வை) எவ்வளவுக்கு எவ்வளவு விடப்படுகிறதோ அந்த அளவு உள்முக பார்வை கிடைக்கும். இப்படி நீடிச்சு செய்கிற பயிற்சியால மனம் வசப்பட்டு ஆன்ம சொரூபத்தில் நிலைக்கும். அந்த நிலையை அடைந்தா இந்த ஸ்தூல உடம்பில் இருந்தாலும் ஆனந்தமாக இருப்போம். இதுவே தன்னை தான் அறிதல்.

தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும் போதிற்
சேர்ந்தசுக வறிவுமிகச் சிறந்த தாகும்
தெரிபொருளால் வளைப்புண்டாற் பந்த மாகும்
தெரிபொருளை விட்டகன்றால் திடங்கொள் வீடாந்
தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும் போதிற்
சேர்ந்தவநு பூதியிடர் தீர்த்த தாகுந்
தெரிவுறவாங் கதுபற்றி நிற்பாய் நீரின்
றிந்நிலையாஞ் சுழுத்திதனை சேருவாயே
-வாசிட்டம்.

107.

ஆத்மாவின் ஆனந்த சொரூபம் வெளிப்படும் விதம் தெரிய வினா:

தானன்றி வேறொன்று மில்லாத பூரணச் சச்சிதானந்த குணமாய்
ஊனின்ற வுயிர்தோறு மொன்றாகு மென்றாலஃ தொக்கின்ற படி கண்டிலேன்
நானென்ற சீவன்கள் சத்தான வகையொக்கு ஞானங்கள் வெளிகண்டதால்
ஆனந்த மிதுபோல வெளியாக வுதியாத வடைவேது குருநாதனே

தானன்றி வேறொன்றும் இல்லாத பூரணச் சச்சிதானந்த குணமாய், ஊன் (தேகத்தில்) நின்ற உயிர்தோறும் ஒன்றாகும் என்றால் அஃது ஒக்கின்றபடி கண்டிலேன் (ஆத்மா அப்படி ஒத்து இருப்பதை அறிந்திலேன்). நான் என்ற சீவன்கள் சத்தான வகை ஒக்கும் (தன்மை கூடும்).

ஞானங்கள் வெளிகண்டதால் (சித்தும் விளங்குகிறது). ஆனந்தம் இது போல (எல்லா விருத்திகளிலும்) வெளியாக உதியாத அடைவேது (கிரமம் ஏது) குருநாதனே.

[சத்தும் சித்தும் போல ஏன் ஆனந்தம் வெளியாக காணப்படவில்லை?]

சத் = இருப்பு. சித் =அறிவு இரண்டும் சீவன்களில் காணப்படுகிறது. ஆனால் அதுபோல ஆனந்தம் எல்லா சந்தர்பங்களிலும் காணப்படவில்லையே?

தனக்கு அன்னியமா இல்லாத ஆன்மா பூரண சத், சித், ஆனந்தமா எப்பவும் இருக்கிறதா சொல்கிறீங்க. தான் எதுன்னு ஒரு கேள்வி இருந்தாலும், தான் இருக்கிறோம் ன்னு எப்பவும் எல்லா சீவர்களுக்கும் தெரியுது. என்னதான் இருட்டு இருந்து நம்மை நாமே பார்க்க முடியாம போனாலும் நாம் இருக்கோமான்னு தொட்டு பார்க்கவா வேண்டி இருக்கு? சின்ன குழந்தைக்குக்கூட தான் இருக்கிறது தெரியுது. அதாவது தன் இருப்பு தெரியுது. அதே மாதிரி அறிவு - அது எவ்வளவு அல்பமா இருந்தாலும் எப்பவும் அதுவும் இருக்கு. ஆனால் அதே போல எப்பவும் ஆனந்தம் இருக்கிறதில்லையே? சில சமயம் ரொம்பவே குஷியா இருக்கோம். சில சமயம் துக்கம். பல சமயம் ரெண்டும் இல்லாம இருக்கோம். அப்பல்லாம் ஆனந்தம் எங்கே போச்சு?

## 108.

உருவங்க ளிரதங்கள் பரிசங்க ளொருபூவி லொன்றாகு மென்றாலுமே
கரணங்க ளோரொன்றி லோரொன்று தெரியுன்க ணக்கன்றி வாராதுகாண்
அருமந்த சச்சிதா னந்தச் சுபாவங்க ளான்மா வின்வடிவாகிலும்
பிரபஞ்ச மயமாம்வி ருத்திபே தத்தினாற் பேதங்களா மைந்தனே

உருவங்கள் இரதங்கள் (ரஸங்கள்) [ஸ்]பரிசங்கள் ஒரு பூவில் ஒன்றாகும் என்றாலுமே, கரணங்கள் (இந்திரியங்கள்) ஓர் ஒன்றில் (விஷயம்) ஓர் ஒன்று தெரியும் கணக்கு அன்றி வாராது காண். அருமந்த சச்சிதானந்த சுபாவங்கள் ஆன்மாவின் வடிவாகிலும், பிரபஞ்ச மயமாம் விருத்தி பேதத்தினால் பேதங்களாம் (வேறுபடும்) மைந்தனே.

ஒரு மலரில் நிறம், சுவை, மணம் மூன்றும் இருந்தாலும் ஒவ்வொரு புலனால்தான் அவை தெரியவரும். ஒரே புலனால் மூன்றும் தெரியவரா. அதுபோல சத், சித், ஆனந்தம் ஆன்ம சொரூபமானாலும் பிரபஞ்ச மயமான விருத்திகளின் வேறுபாட்டால் அவை வேறாக உணரப்படும்.

(டீத்தூள் விளம்பரம் நினைவுக்கு வந்தா அதுக்கு நான் பொறுப்பில்லே! உசாத் துணை பொத்தகத்திலேயே அப்படித்தான் இருக்கு :)

மூக்கால பாக்க முடியாது. நாக்கால பாக்கமுடியாது. கண்ணால நுகர முடியாது. எந்த கரணத்தோட- புலனோட- உதவியால கவனிக்கிறோமோ அதுக்கு தகுந்த படித்தான் கவனிக்கப்பட்டது தோன்றும்.

சினிமா பாக்க ரெண்டு நண்பர்கள் போறாங்க. ஒத்தர் திரும்பும் போது அடாடா என்ன அருமையான பாட்டு... ட்யூன்... ங்கிறார். இன்னொருத்தர் அட போப்பா! என்ன அருமையா இயற்கை காட்சிகளை படமாக்கி இருக்காங்க என்கிறார். ரெண்டு பேரும் பாத்தது ஒரே சினிமாதான். எதுக்கு ஃபோகஸ் இருக்கோ அதுபடி....

## 109.

தாமதமி ராசதஞ் சாத்துவித முக்குணத் தால்வரும்வி ருத்திமூன்றாம்

ஆமவைகண் மூடமுங் கோரமுஞ் சாந்தமு மபிதான மாகுமகனே
ஏமுறவி ருக்கின்ற சச்சிதா னந்தங்க ளென்றென்று மொன்றாகிலும்
நாமுரைக் கும்விருத் திப்பிரிவி னாற்சொரூப ஞானாதி பிரிவாகுமே

தாமஸம் இராசதம் சாத்துவிகம்[ஆகிய] முக்குணத்தால் வரும் விருத்தி மூன்றாம். ஆம் அவைகள் மூடமும் கோரமும் சாந்தமும் (என) அபிதானமாகும் (பெயர் பெறும்) மகனே. ஏமுறவிருக்கின்ற (இன்புறவிருக்கின்ற) சச்சிதானந்தங்கள் என்றென்றும் ஒன்றாகிலும், நாம் உரைக்கும் விருத்திப் பிரிவினால் சொரூப ஞானாதி (சித் முதலிய சதானந்த ஸ்வரூபங்கள்) பிரிவாகுமே (பேதமாகுமே)

--

சத்துவம், ராஜசம், தாமசம் என குணங்கள் மூன்று ஆகும். இந்த 3 குணங்களால் உண்டாகும் விருத்திகளும் மூன்று. அவை முறையே சாந்த, கோர, மூட விருத்திகள். இந்த வேறுபாட்டால் ஆத்ம குணங்கள் வேறு வேறாக தோன்றுகின்றன.

110.

சடமான மூடத்த ருக்கல்லு மண்களிற் சத்தொன்று மேதோன்றுமால்
விடமான காமாதி கோரத்தி லானந்தம் விளையாதுமற் றவைகளாம்
திடமான வொழிவாதி சாந்தத்தி லேசச்சி தானந்த மூன்றும் வெளியாம்
மடமான மூடங்கள் கோரங்கள் விடுசாந்த மனமாகி லானந்தமே

சடமான மூட தரு (மரம்), கல், மண்களில் சத்து ஒன்றுமே தோன்றுமால். விடமான காமாதி கோரத்தில் ஆனந்தம் விளையாது. மற்றவைகளாம் (சத் சித் ஆகிய மற்றவை தோன்றும்.) திடமான ஒழிவாதி (வைராக்யம் முதலான) சாந்தத்திலே சச்சிதானந்தம் மூன்றும் வெளியாம். மடமான (அறிவின்மையான) மூடங்கள் கோரங்கள் விடு[த்து] சாந்த மனமாகில் ஆனந்தமே.

--

ஜடமான மரம் கல், மண் ஆகியவற்றால சத் (இருப்பு) மட்டுமே வெளியாகும். அதாவது அதெல்லாம் இருக்குன்னு தெரியுமே ஒழிய அதுக்கு அறிவோ (சித்தும்) உணர்ச்சியோ (ஆனந்தமும்) வெளியாகா.

காம, குரோதம் முதலான குணங்களின் கோர விருத்தியிலும், மயக்கம் பயம் ஆகிய மூட விருத்திகளிலும் சத்தும் சித்தும் மட்டுமே வெளியாகும். ஆனந்தம் வெளியாகாது.

பொறுமை, கருணை முதலான சாந்த விருத்தியில் மூன்று குணங்களும் வெளியாகும்.

காமம், குரோதம், மோகம், பயம் ஆகிய கோர மூட விருத்திகளை விட்டு ஒழித்து வைராக்கியம் சாந்தம் பொருந்திய மனதுடன் உள்பார்வை கிட்டுமானால் ஆனந்தம் உண்டாகும்.

ஆக நம்மோட குண விருத்தி எப்படி இருக்கோ அதுக்கு தகுந்தபடியே நமக்கு சத் சித் ஆனந்த அனுபவமும் ஏற்படும்.

111.

இகமான குருநாத னேசச்சி தாநந்த மெனுமிலக் கணமறிகிலேன்
அகலாத சத்தாவ தேதுசித் தாவதே தாநந்த மேதென்றிடில்
மிகுகால மூன்றுங்கெ டாதிருப் பதுசத்து வேறுபா டறிதல்சித்தாம்
மகிழ்காம நுகர்போது சுகமாகு மநுபூதி வாழ்வென்ப தாநந்தமே

இகமான குருநாதனே, சச்சிதாநந்தம் எனும் இலக்கணம் அறிகிலேன். அகலாத சத்தாவது ஏது? சித்தாவது ஏது? ஆநந்தம் ஏது என்றிடில்; மிகு கால மூன்றுங் கெடாதிருப்பது (நசியாதிருப்பது) சத்து; வேறுபாடு (சிற் சட பேதங்கள்) அறிதல் சித்தாம். மகிழ் காமம் நுகர்போது சுகமாகும் அநுபூதி (அனுபவம்) வாழ்வென்பது ஆநந்தமே.

PG: விவகாரிக (practical) சத்தும், பிராதி பாசிக சத்தும் கூட உள்ளதால் அவை சத்தல்ல என நீக்க "அகலாத சத்து" என்றார். இந்திரியங்களும் அந்தக்கரணங்களும் கூட அறிவாக உள்ளதால் அவை சித்தல்ல என நீக்க "சித்தாவதேது" என்றார். விஷய ஆனந்தம், சுஷுப்தி ஆனந்தம், வாசனானந்தம், உதாசீன ஆனந்தம் (விளக்கங்கள் பின்னால் வரும்.) ஆகியன கூட உள்ளதால் அவை ஆனந்தம் அல்ல என நீக்க "ஆனந்தமேது" என்றார்.

தாத்பர்யம்: முக்காலத்திலும் கெடாமல் இருப்பதே சத்து. சகல விஷயங்களைகளிலும் வேறுபாடுகளை பிரித்து அறிவது சித்து. இஷ்டம் லபித்த (வேண்டியது கிட்டும்) போது உண்டாகும் சுகம் ஆனந்தம்.

--

எளிமையா சொல்ல:

முக்காலத்திலும் கெடாமல் எது இருக்குமோ அதுவே சத்து.

விஷயங்களிலே வேறுபாடு அறியும் அறிவே சித். இது சுயமாக பிரகாசிக்கும். இதன் பிரகாசத்தாலேயே மற்றவையையும் பிரகாசிக்க செய்யும்.

இஷ்டப்பட்டது கிடைத்து அதை அனுபவிக்கிற போது கிடைக்கிற திருப்தியே ஆனந்தம்.

இந்திரியங்கள் (புலன்கள்) கரணங்கள் முதலானவற்றை பிரகாசிக்க செய்வது ஆன்மாவே. ஆன்மா தவிர யாதும் சடம். ஆன்மா ஞான சொரூபம். ஞானம் என்பதே பிரகாசம். ஞானம் ஆத்மாவை பிரிஞ்சு இருக்கிறதல்ல. தூங்கும் போது இந்திரியங்கள் செயலிலே இல்லைதான். ஆனாலும் விழித்தபின் "”சுகமாக தூங்கினேன்" என்கிறோம். அப்ப ஏதோ ஒண்ணு விழிப்போட இருந்து அதை அனுபவிச்சது இல்லையா?

அது சரிங்க, ஆன்மாவை விட்டு ஞானம் பிரிந்தது இல்லைன்னா ஏன் எல்லாரும் ஞானிகளாக இல்லை?

தீபம் பிரகாசமா இருக்குதான். ஆனாலும் மூடுபனியில் அது தெரியறதில்லை. அது போல அவித்தையில் மறைந்து ஞானம் மங்கி இருக்கு. அவித்தை நீங்கினால் அது பிரகாசிக்கிறது. நாம் "ஞானம் உதித்தது" ன்னு சொல்கிறோம் ன்னாலும் ஞானம் புதிசா உதிக்கலை. மறைவு நீங்கித்து, அவ்வளவே.

அவ்வாறே ஆன்மா ஆநந்த சொரூபமாம். சட பொருட்கள் எதிலும் ஆனந்தம் இல்லை. எப்படி எனில் ஒருவனுக்கு ஒரு பொருளில் உதிக்கும் ஆனந்தம் மற்றவருக்கு அதே போல் உதிப்பதில்லை; சில சமயம் வெறுப்பு கூட உண்டாகலாம். ஆனந்தம் அந்த பொருளில்

இருந்தால் எல்லாருக்கும் அதில் ஆனந்தம் வர வேண்டுமே?

உதாரணமா ஒத்தருக்கு கேசரி பிடிக்குது. அதை நினைச்சாலே ஆனந்தம் வந்துடும். சாப்பிட்டா கேக்கவே வேணாம். அதுவே இன்னொருத்தர் நல்லா இருக்கு ன்னு சாப்பிடுவார். ரொம்ப ஒண்ணும் சந்தோஷப்பட மாட்டார். இன்னும் ஒத்தர் எனக்கு சக்கரை வியாதி; கேசரியே பிடிக்காதும்பார்.

ஆனந்தம் கேசரியிலே இல்லை. அப்படி இருந்தா எல்லாருக்கும் அதிலே ஆனந்தம் கிடைக்கணுமே?

ஆக ஆனந்தம் ஆன்மாவில் தான் உள்ளது என்பது ஸ்ருதி, யுக்தி, அனுபவ சம்மதம்.

## 112.

நாசச்ச ரீரத்தி ருக்குஞ்ச ரீரிதனை நால்வேத மாவாக்கியம்

நீசச்சி தாநந்த மென்றிடினு மாசிரியர் நீபிரம மாகுமெனினும்

மாசற்ற சச்சிதா நந்தநா னென்னவிவன் மன்னுமநு பவமெங்ஙனே

கோசப்பு ரங்களையி டித்துத்த கர்க்குமத குஞ்சரக் குரு நாதனே

நாசச் (நசிக்கும்) சரீரத்தில் இருக்கும் சரீரிதனை நால் வேத மாவாக்கியம் நீ சச்சிதானந்தம் என்றிடினும், ஆசிரியர் நீ பிரமமாகும் எனினும், மாசற்ற சச்சிதாநந்த நானென்று இவன் அநுபவம் எங்ஙன் மன்னும்?(எப்படி பொருந்தும்) (பஞ்ச) கோச புரங்களை (நகரங்களை) இடித்து தகர்க்கும் மத குஞ்சரக் குரு நாதனே.

--

இந்த உடம்பு அழியக்கூடியது. இதில் உள்ளவனை "நீ சச்சிதானந்தம்" என்று வேதங்கள் சொன்னாலும், குரு சொன்னாலும் நம்மிடத்தில் சச்சிதானந்த லக்ஷணம் இருக்கிறது என்று எந்த அனுபவத்தால உணர்வது? கேக்க நல்லா இருந்தாலும் அனுபவத்துக்கு வந்தாதானே ஸ்திரப்படும்?

## 113

சென்மாந்த ரஞ்செய்த வினைகளுட றருமெனிற் செல்கால மிவனுண்டலோ

கன்மாநு பவநரக சொர்க்கமெனில் வருகின்ற காலத்து மிவனுண்டலோ

உன்மாத யாதனா வுடல்கடவு ளுடன்மநுட வுடன்மாறி மாறியழியும்

தன்மாய வுடல்நெடினு மிவனிருப் பதுகொண்டு சத்தென்ப தொக்குமகனே

சென்மாந்தரம் செய்த வினைகள் உடல் தரும் எனில் செல் (சென்ற) காலம் இவன் உண்டலோ? கன்மாநுபவம் நரக சொர்க்கம் எனில் வருகின்ற காலத்தும் இவன் உண்டலோ? உன்மாத (உன்மத்தமான) யாதனா உடல் கடவுளுடல் மநுட வுடல் மாறி மாறி அழியும். தன் மாய உடல் நெடினும் இவன்(இத்தேகி) இருப்பது கொண்டு (இவனே) சத்து என்பது ஒக்கும் மகனே.

--

சீடன் சரியான கேள்வி கேட்டான். ஒவ்வொண்ணா குரு தீர்த்து வைக்கிறார்.

முன் ஜன்மத்தில் செய்த கர்ம பலனாக இந்த பிறவி எடுத்து இருக்கிறாய் அல்லவா? ஆகவே போன சன்மத்தில் இருந்தாய். இப்போது செய்யும் செய்கைகளால் நீ நரகமோ சொர்கமோ சென்று பலன் அனுபவிப்பாய். ஆகவே இனியும் நீ இருப்பாய். இப்படியாக மனித உடலையும் யாதனா சரீரத்தையும் நீ மாற்றி மாற்றி எடுத்தாலும் தேகங்கள் அழிகின்றன. நீயாகிய ஆன்மா அழிவதில்லை. ஆகவே நீ சத்தாகும்.

--

யாதனா சரீரம்: நரக வேதனையையோ அல்லது ஸ்வர்க சுகத்தையோ அனுபவிக்க தரப்படும் சரீரம். நம் சாதாரண சரீரம் தீயால் வெந்து கருகும். யாதனா சரீரம் தீயால் சுடப்பட்டு வேதனை அனுபவிக்குமே ஒழிய மாறாது. வேதனையை அனுபவிக்க அது இருக்கணும் இல்லையா?

114

இருளாக மூடுஞ்சு ழுத்தியி லிராத்திரியி லிரவிசுட ரற்றபொழுது
மருளாம லிருளையும் பொருளையுந் தெரிகின்ற வகைகொண்டு சித்தாகுமே
பெருவாழ்வு மிக்கதா னேதன்னிடத்தினிற் பேராத பிரியமதனால்
அருகாத பிரியஞ்சு கத்தில்வரு மாதலா லாநந்த மாமைந்தனே

இருளாக மூடும் சுழுத்தியில் இராத்திரியில் இரவி சுடரற்ற பொழுது மருளாமல் இருளையும் பொருளையும் தெரிகின்ற வகை கொண்டு (இவனே) சித்தாகுமே. பெருவாழ்வு மிக்க (பேராநந்தத்தால் நிர் அதிசயமாகிய) தானே தன்னிடத்தில் பேராத (நீங்காத) பிரியமதனால் அருகாத (குறையாத) பிரியம் சுகத்தில் வருமாதலால் (இவனே) ஆநந்தமாம் மைந்தனே.

--

இருட்டாக இருக்கும் சுசுப்தியில் எதுவும் தோன்றாமல் மறைந்து இருக்கும் போது அவித்தையாகிய இருளையும், ஆனந்தமாகிய பொருளையும் அறிகிறது. இரவில் சூரிய ஒளி இல்லாவிட்டாலும் சாமான்ய தொடுதலால் பொருட்களை அறிகிறது. கனவில் ஆன்மா வேறு ஒளியை வேண்டாமல் திரிபுடிகளான பார்ப்பவன், பார்த்தல், பார்க்கப்படும் பொருளை பிரகாசிப்பித்து அறிகிறது. ஆகவே இது சித்தாகும்.

--

சுசுப்தில ஒண்ணும் தெரியலை. ஆனா தூங்கி வெளியே வந்து ஆனந்தமா தூங்கினேன் ன்னு சொல்கிறப்போ ஏதோ ஒரு அறிவு இருக்கு. ஜாக்ரத்திலே பார்த்தோ, இல்லை வெளிச்சம் இல்லாட்டா தொட்டு நுகர்ந்தோ விஷயங்களை தெரிஞ்சு கொள்கிறது. சொப்ன நிலையிலே ஏதும் இல்லாமலே சில விஷயங்களை உருவாக்கி அறிகிறது. இப்படி எல்லா நிலகளிலேயும் அறிவு இருக்கு.

எல்லாருக்கும் எல்லா பொருட்களைக்காட்டிலும் தன் மீதே பிரியம் அதிகம். அனைவருக்கும் சுகத்தில்தான் பிரியம்; துக்கத்தில் இல்லை. ஆகவே ஆன்மா ஆனந்தம் என்பது அனுபவம்.

நானே யென்று மெவ்விடத்து நன்றா யுண்டா யிருக்குகேன்
நானே யென்று மெவ்விடத்து நன்றாய்த் தோன்றி விளங்குகேன்

நானே யென்று மெவ்விடத்து நன்றாயின்ப மாய் நிகழ்கேன்
நானே யென்று மெவ்விடத்து நன்றாய் விளையா டாநிற்கேன்
-விஞ்ஞான சாரம்

115.

அன்னபா னாதிசுக சாதனம தாகையா லார்க்கும் வெகு பிரியமாகும்
இன்னவா றான்மாவு மாநந்த சாதன மெனக்கருதல் பொருளல்லவே
சொன்னவான் மாவையொரு சுகசாத னங்களொடு சொல்லுவா யாகின் மகனே
உன்னதா நந்தம்வே றேதநுப விப்பதா ருபயவான் மாவு முளவோ

அன்ன பானம் ஆதி (முதலானவை) சுக சாதனம் அது, ஆகையால் ஆர்க்கும் (யாருக்கும்) வெகு பிரியமாகும். இன்னவாறு (இதே போல்) ஆன்மாவும் ஆநந்த சாதனம் என கருதல் பொருளல்லவே. (சரியல்ல). சொன்ன ஆன்மாவை ஒரு சுக சாதனங்களொடு சொல்லுவாயாகின் மகனே, உன்ன (உன்னுடைய) ஆநந்தம் வேறேது? அநுபவிப்பது யார்? உபய (இரண்டாம்) ஆன்மாவும் உளவோ? (இருக்கிறதோ?)

--

சாப்பிடும் குடிக்கும் பொருட்கள் சுகத்தை கொடுக்கிற சாதனங்கள். அதனால அதுகள் மேலே பலருக்கும் பிரியம் உண்டாகுது. இது போலவே ஆன்மா சுகத்தை தருகிற சாதனம்ன்னு நினைக்கக்கூடாது. ஆன்மா சுகத்தை தரும் சாதனம் அல்ல. அதுவேதான் ஆனந்தம். அப்படி இல்லைன்னா ஆன்மா வேற அதை அனுபவிக்கிறது வேறன்னு ஆகி அதை அனுபவிக்க இன்னொரு ஆன்மா இருக்கான்னு கேள்வி வரும்.

116.

விடயங்களில் பிரியமிருப்பது போல ஆத்மாவிலும் பிரியம் இருப்பதால் ஆத்மா ஆநந்த சொரூபர் என்பது எப்படி?

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும் வெகு பிரிய மான்மாவி லாம்
விடயசுகம் வருபிரிய மாறிவரு மான்மாவில் வெகுபிரிய மாறாது காண்
விடயசுகம் விடலுமாங் கொளலுமா மான்மாவை விடுவதெவர் கொள்வதெவர் பார்
விடயசுக போகங்கள் விடுமவனை யவனால் விடப்படா தொருநாளுமே

விடய சுகமதில் வருதல் பிரியம் மாத்திரம் (அணு அளவு) ஆகும். வெகு பிரியம் ஆன்மாவிலாம். விடயசுகம்(த்தில்) வரும் பிரியம் மாறி வரும். ஆன்மாவில் வெகு பிரியம்; மாறாது காண். விடய சுகம் விடலுமாம் கொளலுமாம். (விடவும் பற்றவும் கூடும்.) ஆன்மாவை விடுவது எவர், கொள்வது எவர் பார். விடய சுக போகங்கள் விடும் (நீக்கும்) அவனை. அவனால் (ஆத்மாவால்) விடப்படாது ஒரு நாளுமே.

--

விஷய சுகத்தில் கிடைப்பது திருப்தி மட்டுமே. ஆன்மாவில் உள்ளது நிரதிசய பிரீதி. (அதாவது இதுக்கு மிஞ்சிய பிரீதி இல்லை) விஷய சுகத்தில் இருக்கும் விருப்பம் வேறு விஷயத்துக்கு மாறும். இன்னிக்கி கேசரி பிடிச்சதுன்னா நாளை ஐஸ்க்ரீம் பிடிக்கும். நாளன்னிக்கி இன்னும் வேற ஏதோ ஒண்ணு. ஆனா ஆன்மா மேலே உள்ள பிரியம் நிலையானது. விஷய சுகத்தை இஷ்டப்படி விட்டுடலாம். கொள்ளலாம். ஆன்மா மீது

உள்ள பிரியத்தை யாரால் விட முடியும்? யாராலும் ஒரு போதும் முடியாது.

117.

ஆத்மா ஆநந்த சொரூபமாய் தள்ளக் கூட்டப்படாததாய் இருக்கின்ற தன்னை வெறுப்பினால் நீக்குவரோ?

வேகின்ற கோபங்க ளாலென்னை நான்கொன்று விடுகிறே னென்று சிலபேர்
சாகின்ற படியினாற் றன்னையே தான்கொன்று சாவனெனல் சங்கை யலவே
தேகந்த னைக்கொல்லு மவனால்வி டப்பட்ட தேகமவ னல்லன் மகனே
ஆகந்த னிற்கோ பமலதுதனை யொருநாளு மான்மாவெ றுப்பதிலையே.

வேகின்ற கோபங்களால் என்னை நான் கொன்று விடுகிறேன் என்று சிலபேர் சாகின்ற படியினால் தன்னையே தான் கொன்று சாவன் எனல் சங்கை அலவே. தேகந்தனைக் கொல்லும் அவனால் விடப்பட்ட தேகம் அவனல்லன் மகனே. ஆகம் தனில் கோபம் அலது (தேகத்தின் மீது கோபம் வந்தது அல்லாது) தன்னை ஒரு நாளும் ஆன்மா வெறுப்பதிலையே.

[ஆத்மா சுகத்துக்கு ஏதுவாய் உள்ளபோது தேகத்தை பேணி, சுகத்துக்கு ஏது அல்லாத போது அதன் மீது வெறிப்படைந்து அதை விடுகிறது. விட்ட தேகம் அவனல்ல. எப்போதும் ஆன்மா தன்னை வெறுக்கவில்லை. அது சுக ரூபமே.]

சீடன் கேட்கிறான், ஏன் ஸ்வாமி சில பேர் வெறுப்பில தற்கொலை கூட செய்து கொள்கிறாங்களே? நீங்க என்னடானா ஆன்மாவை வெறுக்க முடியாது என்கிறீங்க?

குரு சொல்கிறார், ஆமாம்பா உண்மைதான். சில சமயம் சிலர் கொடிய வியாதி, மன சஞ்சலம் இதெல்லாம் வரும்போது தற்கொலை செய்து கொள்கிறங்கதான். ஆனா உன் கேள்வி தப்பு. அவங்க ஆன்மாவை விடலை. அவங்க தேகத்தைதான் விடறாங்க. அந்த உடம்பு அவங்க இல்லை. ஆன்மாவே தானாக இருக்கிறதால யாருமே அதை விடவும் முடியாது. கொள்ளவும் தேவையில்லை.

118.

தாகப் படும்பொருளி லும்மகன் பிரியமாந் தனயனிலு முடல்பிரியமாம்
ஆகத்தி லும்பிரிய மிந்திரிய மாங்கரண மதனிலும் பிரியமுயிராம்
ஏகப்பி ராணனிலும் வெகுபிரிய மான்மாவி லிந்தவான் மாமுக்கியம்
ஊகத்தி னாற்கெவுண மித்தைகர்த் தாமூன்று மோரொன்றி லதிகமகனே

தாகப்படும் (பிரியமாக சம்பாதிக்கும்) பொருளிலும் (பொருளை விட) மகன் பிரியமாம். தனயனிலும் (மகனை விட) உடல் பிரியமாம். ஆகத்திலும் (உடலிலும்) பிரியம் இந்திரியமாம். (புலன்கள்). இந்திரியங்களிலும் கரணம் (அந்தக்கரணம்) பிரியமாம். அதனிலும் பிரியம் உயிராம். (ஜீவனாம்) ஏகப் பிராணனிலும் வெகு பிரியம் ஆன்மாவில். இந்த ஆன்மா முக்கியம். [அதை காட்டிலும் பிரியமானது இல்லை]. ஊகத்தினால் கெவுணம் [செல்வம் முதலான ஆறு பிரியங்கள்] மித்தை கர்த்தா மூன்றும் ஓரொன்றில் அதிகம் மகனே.

--

ஸ்வாமி, ஆன்மாவே பிரிய வஸ்துன்னா காசு மேலே எல்லாருக்கும் ஆசை இருக்கு. தன் பிள்ளைகள் மேலே எல்லாருக்கும் ஆசை இருக்கு. இதை என்ன சொல்லறீங்க?

சாதாரணமா யாருக்கும் காசு மேல ஆசை இருக்கு. ஆனா தன் மாகனுக்கு ஒரு உடம்புன்னா காசு செலவழிச்சு வைத்தியம் பாக்க தயாரா இருக்காங்க. ஆனா தன் மகனை விட தன் உடம்பு மீதே ப்ரியம் அதிகம்; பல காரணங்களுக்காக தன் பிள்ளை மேலே கோபம் இருக்கும். தன் உடம்பு மேலே கோபம் வராது. அதுக்கு குளிர்ச்சியா இருக்க ஏ.சி என்ன பஞ்சு மெத்தை என்ன இந்த ரீதியிலே நிறைய உண்டு. உடலைவிட மனசு மேலே பிரியம் அதிகம். உடம்பு கொஞ்சம் சிரமப்பட்டாலும் மனசு சந்தோஷமா இருக்கும்ன்னா அதுக்கும் நாம தயாரா இருக்கோம். மனசை விட உயிர் மேலேதான் ஆசை அதிகம்.

டாக்டர் இனிமே இன்ன இன்ன விஷயங்களை விட்டுடனும்; இல்லைன்னா உயிருக்கே ஆபத்துன்னு சொன்னா சரின்னு அப்படியே செய்கிறோம், அதெல்லாம் இது வரைக்கும் மனசுக்கு ரொம்ப சந்தோஷம் கொடுத்ததா ஆனாலும்.

119.

கெடலான பொழுதிவன் காணிக்கு மகனான கெவுணவான் மாமுக்கியம்
விடலாத வுடம்ப ரிக்குநா ளுடலான மித்தையான் மாமுக்கியம்
திடமான நன்மைகதி வேண்டினாற் கர்த்தனாஞ் சீவவான் மாமுக்கியம்
சடமாயு முத்தியின் ஞானவான் மாவான தானேம காமுக்கியம்

கெடலான பொழுது (மரண காலத்தில்) இவன் காணிக்கு (ஆதீனத்துக்கு வேண்டிய) மகனான கெவுண [secondary] ஆன்மா (அந்த சமயம்) முக்கியம். விடலாத உடலம் பரிக்கும் (பேணும்) நாள் உடலான மித்தை ஆன்மா முக்கியம். திடமான நன்மை கதி வேண்டினால் கர்த்தனாம் சீவ ஆன்மா முக்கியம். சடம் மாயும் முத்தியின் ஞான ஆன்மாவான தானே மகா முக்கியம்.

--

மரண காலத்தில் தன் மகன் அருகில் இருக்க மனிதன் விரும்புகிறான். அப்போது அது முக்கியமாக தோன்றுகிறது. ஆனால் அவன் வாழும் காலத்தில் தன் உடலை மட்டுமே அதிகம் விரும்புகிறான், மகனை அல்ல. ஆக ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு பொருள் விரும்பப்படுகிறது, பின் அதுவே மற்றொன்று வர கைவிடப்படுகிறது. திடமான நன்மையை கருதி யார் மோட்சத்தின் மீது பற்று கொள்கிறார்களோ அவர் தன் உடலையும் விட்டு தன் சுய சொரூபமான ஆன்மா மீது பற்று கொள்கிறார்.

120.

புலியுமநு கூலமெனி லிட்டமாம் பகைசெயிற் புதல்வனெனினும் வெறுப்பாம்
உலகிலிரு வகையுமல் லாதபுல் லாதியிலு தாசீன மாமாதலான்
மலினமறு சின்மயன் பலவகையு மிப்படி மகிழ்ச்சியில் விருப்பமிகழான்
அலகிலா னந்தவடி வாகுமுன் சொரூபத்தை யாராய்ந்துபார் மகனே

புலியும் அநுகூலம் எனில் இட்டமாம். (இஷ்டமாம்) பகை செயின் புதல்வன் எனினும் வெறுப்பாம். உலகில் இரு வகையும் (பிரியம் துவேஷம்) அல்லாத புல் ஆதியில் (முதலானவற்றில்) உதாசீனமாம். ஆதலான் மலினமறு (அஞ்ஞானம் முதலான குற்றமற்ற) சின்மயன் பலவகையும் இப்படி மகிழ்ச்சியில் விருப்பம் இகழான். அலகில் [வாக்,

மனதுக்கு எட்டாத] ஆனந்த வடி வாகும் உன் சொரூபத்தை ஆராய்ந்து பார் மகனே.

--

ஒருவர் புலியை பழக்கி பிழைப்பு நடத்துகிறார். அவருக்கு அஞ்சத்தக்க புலி கூட விருப்பமாகிறது.

தன் மகன் தனக்கு சாதாரணமா ரொம்ப ப்ரியமானவன். ஆனா பல சமயம் பாக்கிறோமே! குடும்பத்தில சண்டை வந்து அடி தடியாக்கூட போய், அப்புறம் பேச்சு வார்த்தை இல்லாம எல்லாம் இருந்து, "என்பாகத்தை பிரிச்சு கொடு! நான் போறேன்", "எல்லாம் சுய ஆர்ஜிதம்! உனக்கு ஏது பங்கு?" இப்படி எல்லாம் வளந்து கிடக்கிற சமயம் பிள்ளையானாலும் வெறுப்புதான். மகன் பகையான காரியம் செய்வானே ஆனால் அவன் வெறுக்கப்படுகிறான்.

சாதாரணமா தோட்டத்தில புதர் இருக்கும். அத கண்டுக்காம விடுவோம். அத வெட்டிப்போட்டு அடுப்பெரிச்சு வென்னீர் கிடைச்சா சந்தோஷம் வருது. அதுவே பாம்பு பதுங்கி இருந்து அப்பப்ப நம்ம பயமுறுத்தினா புதரெல்லாம் நமக்கு வெறுக்கற விஷயமாச்சு.

உதாசீனப்படுத்தும் புல், பூண்டு ஆகியவை கூட நெருப்பு உண்டாக்க என்று பயன்படும்போது அவை பிரியமாகும். அவையே பாதையில் நடந்து செல்லும் போது இடையூறு செய்தால் அவற்றின் மீது வெறுப்பு வரும்.

ஆனால் பரிசுத்த சின்மய சொரூபமான ஆன்மா தன் ஆனந்தத்தில் மாறுதல் இல்லாத விருப்பம் உடையவனாக இருக்கிறான்.

ஆகவே நீங்காத ஆனந்த சொரூபியான உன் ஆன்மாவை ஆராய்ந்து பார்த்து அறிவாயாக.

## 121.

### ஆனந்தம் எத்தனை வகை

மானஞ்சி றந்தகுரு நாதனே யாநந்த வகைகளெத் தனையென்னிலோ
ஞானத்தி கழ்ந்தபிர மாநந்தம் வாசனா நந்தம்விட யாநந்தமென்
றாநந்த மூன்றுவித மெட்டுவகை யென்பர்சில ரவ்வைந்து மிதிலடக்கம்
யானந்த வகைசொலக் கேண்மைந்த னேயெட்டு மிஃதின்ன தின்னதெனவே

மானஞ் சிறந்த குரு நாதனே ஆநந்த வகைகள் எத்தனை என்னிலோ, ஞானம் திகழ்ந்த பிரமாநந்தம், வாசனாநந்தம், விடயாநந்தம் என்று ஆநந்தம் மூன்றுவிதம். எட்டு வகை என்பர் சிலர். அவ்வைந்தும் இதில் அடக்கம். ஆனந்த வகை சொலக் கேள், மைந்தனே எட்டும் இஃது இன்னது இன்னது எனவே.

ஆநந்தம் மூன்றுவிதம். பிரமாநந்தம், வாசனாநந்தம், விடயாநந்தம். எட்டு வகைன்னு சிலர் சொல்வாங்க. அஞ்சும் இதிலேயே அடக்கம். ஆனந்த வகை என்னன்னு பாக்கலாமா?

## 122.

### எட்டு வித ஆநந்தம்.

போகத்தில் வருசுகம் விடயசுக நித்திரைப் போதுளது பிரமசுகமாம்

மோகத்த னந்தலிற் சுகம்வாச னைச்சுகமு முப்பிரிய மான்மசுகமாம்
யோகத்தி லுளதுமுக் கியசுகமுதாசீன முற்றசுக நிசசுகமதாம்
ஏகத்தை நோக்கலத் துவிதசுகம் வாக்கியமெ ழுந்தசுக ஞானசுகமே

போகத்தில் வரு சுகம் விடய சுகம்.[1. விடயானந்தம்] (சுசுப்தி) நித்திரைப் போது உளது பிரம சுகமாம் [2.பிரமானந்தம்]. மோகத்து அனந்தலில் (நித்திரை கலைந்து எழும் போது உள்ள) சுகம் வாசனைச் சுகம் [3.வாசனானந்தம்]. முழுப் பிரியம் ஆன்ம சுகமாம். [4.ஆன்மானந்தம்] யோகத்தில் உளது முக்கிய சுகம் [5. முக்கியானந்தம்]. உதாசீனமுற்ற சுகம் [6. நிஜானந்தம்] நிசசுகம் அதாம். ஏகத்தை நோக்கல் அத்துவித சுகம் [7.அத்வைதானந்தம்]. வாக்கியம் எழுந்த சுகம் ஞானசுகமே. [8.வித்தியாநந்தம்]

1. விடயானந்தம்: உலக விஷயங்களை அனுபவிக்கிறதுல வருகிற சுகம் விடய சுகம்.

2.பிரமானந்தம்: ஆழ்ந்த தூக்கத்தில (சுசுப்தி) உள்ளது பிரம சுகமாம்.

3.வாசனானந்தம்: நல்ல காப்பி கிடைக்குது. குடிச்சிட்டு சந்தோஷமா இருக்கோம். அரை மணி ஆகி அந்த சுவை போயிட்டாக்கூட அந்த சந்தோஷம் போகாது. அதப்போல நல்ல தூக்கம் தூங்கி அது கலைஞ்சு முழிச்சுகிட்டு படுக்கையிலேயே கிடந்துகிட்டு ஒரு பிரச்சினையான நினைப்பும் இல்லாம சுசுப்தியை அனுபவிச்ச வாசனை இருக்கே அந்த சுகமே வாசனைச் சுகம்.

4.ஆன்மானந்தம்: எல்லாத்துலேயும் நாமே நமக்கு முழுப் பிரியம்நு நினைக்கிறது ஆன்ம சுகமாம்.

5. முக்கியானந்தம்: யோகத்தில் சமாதில உள்ளது முக்கிய சுகம்.

6. நிஜானந்தம்: மனசில ஒரு சிந்தனையும் இல்லாம உதாசீனமா இருக்க முடிஞ்சா அந்த சுகம் நிசசுகம்.

7.அத்வைதானந்தம்: பிரபஞ்சத்தை அன்னியமா பாக்காம ஏகத்தை -ஒன்றையே- பாக்கிறது அத்துவித சுகம்

8.வித்தியாநந்தம்: மகா வாக்கியத்தோட அனுபவம் -பரமான்ம ஐக்கியத்தில எழுந்த சுகம் ஞானசுகமே.

123

விடயாநந்த இலக்கணம்

இவ்வா றுரைசெயுஞ் சுகபே தங்களி னியல்பா மவை சொல மகனேகேள்
ஒவ்வா நனவினி லுழல்வா னிடர் கெட வுறங்குஞ் சயனம துறுநேரம்
செவ்வா மனமக முகமா மதிலொளிர் சித்தின் சுகநிழல் சேருங்காண்
அவ்வா றிவனுள மகிழ்வா மநுபவ மதுதான் விடயசு காநந்தம்

இவ்வாறு உரை செயும் சுகபேதங்களின் இயல்பாம். அவை சொல மகனே கேள். ஒவ்வா (இன்பம் பொருந்தாத) நனவினில் (ஜாக்ரத்தில்) உழல்வான் இடர் (துன்பம்) கெட (நீங்க) உறங்கும் சயனம், அது உறு நேரம் செவ்வா (செவ்விதான) மனம் அமுகமாம் (அந்தர் முகமாகும்). அதில் ஒளிர் சித்தின் சுகநிழல் சேருங்காண். அவ்வாறு இவன் உள மகிழ்வாம் அநுபவம் -அதுதான் விடய சுகாநந்தம்.

--

சாக்கிரத்தில் உழலுகிற சீவன் எதிர் பட்ட விஷயங்களில நாட்டம் போய் அவற்றை அனுபவிக்கிறான். பிறகு அவற்றில களைப்பு உண்டாகிறது. அந்த துன்பம் நீங்க தூங்கப்போகிறான்.

காலை எழுந்ததிலிருந்து எத்தனை வேலைகள்!! காலை கடன்களை முடிச்சு, ஆபீஸ்க்கு பறக்க பறக்க கிளம்பி, பஸ்ஸை தப்பவிட்டு, தாமதமா போய் திட்டு வாங்கி, கீழே வேலை செய்கிறவங்க வேலையை முடிக்காம லொள்ளு பண்ண, அதுக்கு மேல் அதிகாரிகிட்ட திட்டு வாங்கி, வேலை மேல வேலை வர எல்லாத்தையும் கவனிச்சு, தாமதமா கொண்டு வந்த சாப்பாட்டை வேண்டா வெறுப்பா சாப்பிட்டு, தூக்கம் அழுத்த வேலையும் கவனிச்சு, அவஸ்தைப்பட்டு கிளம்புற நேரம். "இத கொஞ்சம் பாத்துடுப்பா!"ன்னு வர வேலையை "முடியாது"ன்னு மனசில சொல்லிக்கிட்டே "பரவாயில்லை சார்! முடிச்சுடறேன்"னு சொல்லி, செய்து முடிச்சு, வழக்கமான பஸ் எப்பவோ போயிட்டதால ரெண்டு கிலோ மீட்டர் நடந்து வேற பஸ்ஸை பிடிச்சு, ஒரு வழியா வீட்டுக்குப்போனா, மனைவி வாங்கி வர சொன்ன பொருளை மறந்து போனது நினைவுக்கு வந்து, மனைவிகிட்டே மானேஜரை திட்டி சமாதானம் சொல்லி, பிள்ளை குட்டிங்களுக்கு கதை சொல்லி, களைச்சு போய் படுக்கையில விழுந்து...."அப்பாடா! இனிமே நிம்மதியா தூங்கலாம்!"ன்னு நினைக்கும்போது மனசு உள்முகமாகும். அதில சித்தோட சுகமான நிழல் சேரும். அப்ப உள்ளம் மகிழுது. இதுவே விஷயானந்தம்.

124.

பிரமானந்த இலக்கணம்

ஈனந் தருசுக விடயம் திரிபுடி யிடரா மெனமன மசையாமல்

சேனந் தனதுகு லாயந் தனில்விழு செயல்போ னித்திரை செறிசீவன்

தானந்தமில்பர னுடனென் றுவனொரு தனையல் லதுபிற நினையாமல்

ஆனந் தமயனுமாவன் சுகமிகு மதுதா னுயர்பிர மாநந்தம்

ஈனம் (குறைவை) தரு சுக விடயம் திரிபுடி இடராம் (துன்பமாம்) என மனம் அசையாமல், சேனம் (பருந்து) தனது குலாயந்தனில் (கூண்டில்) விழு (அடங்கும்) செயல் போல் நித்திரை செறி(செய்யும்) சீவன், தான் அந்தமில் பரனுடன் ஒன்றுவன் ஒரு தனை அல்லது பிற நினையாமல் ஆனந்த மயனுமாவன். சுகமிகும் அதுதான் உயர் பிரமாநந்தம்.

கருவி கரணங்கள் எல்லாம் ஒடுங்கி நித்திரையில அனுபவிக்கிற சுகம்.

ஆகாயத்தில் பறந்து அலைந்த கருடன் களைப்பாகி சுகம் அனுபவிக்க கூட்டில போய் விழுவது போல,

அநித்தியமான விஷயங்களில் மனம் நாடுது. எப்ப சுகம்ன்னு ஒண்ணு வருதோ பின்னாலேயே துக்கம்ன்னு ஒண்ணு வந்துகிட்டே இருக்கு. எப்பவுமே சுகமா இருக்கிறவங்களை பாக்கிறது அரிது. (அதே போல எப்பவுமே துக்கமா இருக்கிறவங்களை பாக்கிறதும் அரிது.) அனுபவிக்கிறவன், அனுபவித்தல், அனுபவிக்கப்படுவது என்கிற மூன்றும் (ஞாபகம் இருக்கா அதான் திரிபுடி) இருக்கிற நிலை துக்கம் தருவதால களைப்பு வருது. அதனால அந்த மூணும் நீங்க மனசை ஒடுக்கி தூங்கி ஒரு அவஸ்தையும் இல்லாம தானே தானாக இருந்து ஆனந்த மயனா இருக்கிறான். இதுவே பிரம்மானந்தம்.

125.

தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள் விழி துயில்வோர்கள்

தாங்கும் மலரணை நன்றா கச்சிலர் சம்பாதிப்பது தானுகம்

தீங்குந் நன்மையு மாண்பெண் முறைமையுந் தெரியா தமளிசெய் பொழுதேபோல்
ஆங்குள் வெளிகளு மறியா வநுபவ மதனா லதுபிர மாநந்தம்.

தூங்குஞ் சுகமது பிரமச் சுகம் எனல் சுருதிப் பொருள் (வேதம் ஒப்புக்கொள்வது). விழி துயில்வோர்கள் தாங்கும் மலரணை நன்றாகச் சிலர் சம்பாதிப்பது தான் ஊகம். தீங்கும் நன்மையும் ஆண் பெண் முறைமையும் தெரியாது அமளி (ஆலிங்கனம்) செய் பொழுதே போல், ஆங்கு உள் வெளிகளும் (ஸ்வப்ன ஜாக்ரத்) அறியா அநுபவம். அதனாலது பிரமாநந்தம்.

--

என்னங்க இது? போயும் போயும் தூங்கறதையா பிரம்ம சுகம்ன்னு சொல்லறீங்கன்னா ஆமாம். சுழுத்தியில் பிரம்மானந்த நிலை எட்டுகிறது என்கிறது வேதம் ஒப்புக்கொண்ட விஷயம். அங்க அவ்வளவு ஆனந்தம் இருப்பதாலதான் அந்த தூக்கத்துக்கு பங்கம் வராம இருக்க மிருதுவான மெத்தை தலையணை முதலியன முயன்று சம்பாதிக்கிறான். அனுபவத்தில அந்த சுழுத்தியில் விருப்பு வெறுப்புகள், காலம், இடம் முதலான வித்தியாசங்கள் இல்லாது, இரண்டு இல்லா ஆனந்தத்தையே அனுபவிக்கிறான்.

ஆனா, இது ஆன்மா பிரம்மத்துடன் ஐக்கியமடையும் போது உண்டாகிற ஆனந்தம் இல்லை. அதுக்கு சமமான ஆனந்தம் என்கலாம்.

ப்ரம்ம ஐக்கியம் அடைந்த ஆன்மா மறுபடி அஞ்ஞானத்தில் அழுந்தாது. பிறவியும் அதற்கு இல்லை. இங்க அப்படி இல்லை. கருவி கரணங்கள் எல்லாம் கழன்று ஆன்மா அவித்தையில மூழ்கி இருக்கு. அதாவது மாயையுடன் சம்பந்தப்பட்டே இருக்கு. கர்ம பலன் தூண்ட அது மீண்டும் ஜாக்கிரத்துக்கு வந்து அஞ்ஞானத்தில பொருந்தி உழண்டுகிட்டு இருக்கு.

அந்த பிரம்மத்தோட ஐக்கியம் அடைஞ்சு இருந்தா அப்படி அது அஞ்ஞானத்தில் பொருந்தாம வெளி வரும் போது ஜீவன் முக்த நிலையில இருக்கும்.

ஆக நித்திரை ஆனந்தத்தில் மாயா சம்பந்தம் உள்ளது. பிரம்ம ஐக்கிய ஆனந்தத்தில் மாயா சம்பந்தம் இல்லை.

(உடல் உறவு கொள்ளும் போது ஏற்படும் ஆனந்த நிலை சுசுப்திக்கு சமமாக சொல்கிறார்கள்)

126.

உதவும் புவியினி லொருவன் னநுபவ மொருவன் மனதினி லுதியாதே
மதியுங் கெடுகிற துயில்கொண் டாநந்த மயனன் றோசுக முறுகின்றான்
இதுவிஞ் ஞான மயனாஞ் சிந்தையி னினைவாய் வந்திட லழகன்றே
சுதைவிண் ணோர்புகழ் குருவே நீரிது சொல்வீர் சகலமும் வல்லீரே

(எல்லா விருப்பங்களையும் அடைய கருமம், உபாசனை, ஞானத்தை அனுஷ்டிக்க) உதவும் புவியினில் ஒருவன் அநுபவம் [வேறு] ஒருவன் மனதினில் உதியாதே. மதியும் கெடுகிற (மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் நசிந்த) துயில் கொண்டு ஆநந்த மயன் அன்றோ சுகமுறுகின்றான். இது விஞ்ஞான மயனாம் சிந்தையில் நினைவாய் வந்திடல் அழகு அன்றே. சுதை (அமிர்த பானம் செய்யும்) விண்ணோர் புகழ் குருவே, நீரிது சொல்வீர், சகலமும் வல்லீரே.

சீடனுக்கு சந்தேகம். உலகில ஒத்தர் அனுபவம் வேறு ஒத்தர் மனசில உதிக்கிறதில்லை. ஆழ் தூக்கமான சுசுப்தில மனமும் புத்தியும் இல்லை. ஆகையால ஆனந்த மய கோசமே

சுகம் அனுபவிக்கிறது. தூங்கி எழுந்த பின்னே இந்த சுகத்தை மனம், புத்தியோட சம்பந்தப்பட்ட விஞ்ஞானமய கோசம் எப்படி அனுபவிக்கும்?

127.

நெய்யும் வெண்ணையு மிருபேர் களுமறி நினைவிற் பிறிவறி வினில்லை

செய்யுந் நனவினி லிறுகும் மனதொடு சேருஞ் சின்மய விஞ்ஞானன்

நையுந் துயர்மன நழுவும் பொழுதுணர் ஞானச்சுக முணுமாநந்தன்

பெய்யுந் துளிகளு நீருங் குளமொடு பாகும் போலிவர் பிறிவன்றே

நெய்யும் வெண்ணையும் இரு பேர்களும் அறிநினைவில் பிறிவு. அறிவினில் இல்லை. செய்யும் நனவினில் (ஜாக்ரத்தில்) இறுகும் (ஸ்தூலமான) மனதொடு சேரும் சின்மய விஞ்ஞானன் (விச்வன்), நையும் (வருத்தும்) துயர்மனம் நழுவும் பொழுது உணர் ஞானச் சுகம் உணும் ஆநந்தன்[இருவரும் ஒருவரே]. பெய்யும் துளிகளும் நீரும், குளமொடு (வெல்லத்துடன்) பாகும் போல் இவர் பிறிவன்றே.

வெண்ணை, நெய்ன்னு பெயர்கள் இரண்டானாலும் அவை அடிப்படையில ஒன்றேதான்.

விஞ்ஞானமயனும் ஆனந்த மயனும் அந்தக்கரண விருத்தி, அவித்தை ஆகியவற்றால பிரிவானாலும் இயக்கத்தால் வேறல்ல.

ஜாக்கிரத்தில் மனதுடன் கூடிய ஆன்மாவே மனம் ஒடுங்கிய போது ஆனந்தமயனாகிறான். மழை பெய்யுது. அதில இருக்கிற நீரும் குளத்தில இருக்கிற நீருக்கும் என்ன வித்தியாசம்? வெல்லத்துடன் பாகும் வேறாகதது போல.

128.

ஒன்றா கியபிர மாநந் தச்சுக மொழிவா னேன்வெளி வருவானேன்

என்றான் முன்செய்த கருமம் வெளியினி லிழுக்குஞ் சுழுத்திவிட் டெழுந்தோனும்

நன்றா யினசுக மகலாம் வெளியிலு நடவான் மறதியும் பெறமாட்டான்

அன்றா மெனவிருந் துறங்குஞ் சிலகண மதுவே வாதனை யாநந்தம்

ஒன்றாகிய பிரமாநந்த சுகம் ஒழிவானேன்? வெளி வருவானேன்? என்றால் முன் செய்த கருமம் வெளியினில் இழுக்கும். சுழுத்தி விட்டு எழுந்தோனும் நன்றாயின (அநுபவித்த) சுகம் அகலான். வெளியிலும் நடவான். மறதியும் பெறமாட்டான். அன்றாம் (ஜாக்ரத்தும் அல்ல, சுசுப்தியும் அல்ல) என இருந்து உறங்கும் சில கணம் அதுவே வாதனையாநந்தம். (வாசனாநந்தம்)

சுழுத்தி விட்டு வெளி வந்தாலும் கொஞ்ச நேரம் ஜாக்ரத்துக்கு வராமலே சுகத்தை விடாது இருப்பது வாசனை ஆனந்தம்.

பிரம்மானந்தத்தில முழுகி இருக்கிற நாம அப்படியே இருந்துடலாமே? ஆனா நாம இந்த ஜன்மத்தில அனுபவிக்க வேண்டிய சுக துக்கம் இன்னும் நிறைய இருக்கே? அதனால் தூக்கத்தை விட்டு வெளியே வரோம். சிலர் அனுபவம் தூங்கி வெளியே முழுக்க உடனே வராம ஒரு அரைத்தூக்கம்- சொகமா இருக்கும். அது சொல்லித்தெரியாது. அனுபவிக்கணும். இப்படி தூக்கத்தை விட்டு வெளி வந்தாலும் கொஞ்ச நேரம் ஜாக்ரத்துக்கு வராமலே சுகத்தை விடாது இருக்கிறது வாசனை ஆனந்தம்.

129.

அந்தக் கணமுட லகமென் றிடர்களி லலைந்தே சுகந்தனை மறந்தேபோம்
முந்தைச் செயும்வினை சுகதுக் கந்தரு மோனந் தருநடு வடிவே காண்
எந்தப் புருடனு மொருசிந் தையுமற விருந்தே னெனலநு பவமாகும்
இந்தப் படிதனுதாசீ னச்சுக மிதுவே நிசமெனு மாநந்தம்.

[வாசனாநந்தம் போன] அந்தக் கணம் உடல் அகம் என்று இடர்களில் அலைந்தே [பிரமாநந்த] சுகந்தனை மறந்தே போம். முந்தைச் செயும் வினை சுக துக்கம் தரும்.

{அடுத்ததாக} மோனந் தரும் (தருவது) நடு (சுக துக்கமில்லாத) வடிவே காண். எந்தப் புருடனும் ஒரு சிந்தையும் அற இருந்தேன் எனல் அநுபவமாகும். இந்தப்படி தன் உதாசீன சுகம் இதுவே நிசம் எனும் ஆநந்தம்.

--

தூக்கம் கலைஞ்ச பின்னே, பழையபடி உடல்தான் நாம் என்கிற நினைப்பு வந்து, உலக விஷயங்களிலே வேலைகளில ஈடு பட்டு தினப்படி அவஸ்தை ஆரம்பிச்சுடும். அப்ப அந்த பிரம்மானந்த சுகம் மறந்தே போகும்.

சாதாரணமா மனசை நிறுத்தறது நடக்காத காரியம். ஆனா கொடுப்பினையாலோ பயிற்சியாலோ அப்படி செய்ய முடியும். (நெரூர் பிரம்மேந்திரர் அதிஷ்டானத்தில அப்படி செய்ய முடிஞ்சதுன்னு முன்னே எழுதி இருக்கேன்.) நல்லது, கெட்டது; சுகம், துக்கம் ன்னு ஒரு ஜட்ஜ்மெண்ட் பண்ணாம நடப்பதை சும்மா பார்த்துக்கிட்டு உதாசீனப்படுத்த முடியும். அப்படி இருக்க முடிஞ்சா அதுவே உண்மையான சுகம்.

அதாவது ஜாக்ரத் அவஸ்தையில் சுக துக்கம் இல்லாது இருக்கும் சுபாவ ஆநந்தம் நிஜ ஆநந்தமாகும்.

130.

நிசமா னதுமுக் கியமோ குடத்துள நீரன் றேவெளி யீரந்தான்
வசமாவ கங்கர மறைந்தா னிசமது படிந்தான் முக்கிய வகையாகும்
திசையார் திரிசய மரியா தேதுயில் செறியா தேயுட றறிபோலே
அசையா தேமதி சமமா கியநிலை யதுதான் முக்கிய வாநந்தம்

வசமாய் அகங்கரம் (சாமானிய அகங்கார வசமாக பிரமாநந்தம்) மறைந்தால் நிசம். அந்த நிசமானது முக்கியமோ (முக்கிய ஆநந்தம் ஆகுமா? இல்லை). குடத்துள நீரன்று; வெளி ஈரந்தான். அது படிந்தால் (அந்த சாமானிய அகங்காரம் சமாதி அப்பியாசத்தால் நீங்கினால்) முக்கிய வகையாகும். திசையார் திரிசயம் (திக்குகளில் காணப்படும் விஷயங்கள்) அரியாதே, (அறியப்படாது) துயில் செறியாதே, (உறங்காது) உடல் தறி போலே அசையாதே, மதி (மனம்) சமமாகிய நிலை அதுதான் முக்கியவாநந்தம்.

--

நித்திரையில் உள்ள பிரம்மானந்தம் "நான்" என்ற அகங்கார எண்ணம் தோன்றியதுமே மறைஞ்சு போயிடும். அப்படி மறைஞ்சும் அதோட நினைவிருக்கிறது வாசனானந்தம்ன்னு பாத்தோம். யோக பயிற்சியால இந்த சாமான்ய அகங்காரமும் மறைந்து, தூக்கமும் இல்லாம, பெயர் உருவம் எல்லாம் மறைஞ்சு, உடல் தூண் போல அசைவில்லாமல் நிக்க, ஆன்மா சூக்ஷ்மமான தன்மை அடைந்துள்ள நிலையே முக்கியானந்தம்.

131.

மனுடன் மனுடகந் தருவன் றேவநன் மாகந் தருவனொண் பிதிரோடே
பனுமா ஜானர்கள் கருமத் தேவர்கள் பகர்முக் கியரிந் திரனாசான்
கனமார் பிரஜா பதியென் விராட்டுபொன் கர்ப்பப் பிரமனென் றின்னோர்கள்
பினவாநந்தங்க ணுரையாம் பிரளய வெள்ளக் கடல்பிர மாநந்தம்.

மனுடன் (சார்வ பௌமன்), மனுட கந்தருவன் (மனிதனாயிருந்து புண்ணியம் செய்து கந்தருவன் ஆனவன்), தேவ நன்மா கந்தருவன் (பூர்வ கல்ப புண்ணியத்தால் இந்த கல்ப ஆதியிலேயே கந்தருவனானவன்) ஒண்பிதிரோடே (சிறந்த தம் உலகில் வாசம் செய்யும் அக்னிஷ்வாத்தா முதலான பிதிரர்) பனும் ஆஜானர்கள், (கல்ப ஆதியிலேயே தேவரானவர்) கருமத் தேவர்கள், (இந்த கல்பத்தில் கருமம் செய்து மகத் பதம் அடைந்து ஆஜான தேவர்களால் பூஜிக்கப்பட்ட தேவர் ஆனவர்) பகர் முக்கியர் (மேலான அஷ்ட வசு துவாதச ஆதித்யர் ஏகாதச ருத்திரர் ஆகிய 31 முக்கிய தேவர்கள்) இந்திரன், ஆசான் (ப்ருஹஸ்பதி), கனமார் (கனம் பொருந்திய) பிரஜாபதி என்னும் விராட்டு, பொன் கர்ப்பப் பிரமன் (ஹிரண்யகர்ப்பன்) என்று 11 இன்னோர்கள் பின (அநுபவிக்கும் ஒன்றுக்கொன்று நூறு மடங்கு அதிகமான) ஆநந்தங்கள் நுரையாம். பிரளய வெள்ளக் கடல் பிரமாநந்தம்.

--

மனிதரில் சிறந்தவன் சார்வ பௌமன் எனப்படுவான். இவன் அனுபவிக்கும் சுகத்தைவிட 100 மடங்கானது மனுட கந்தர்வனின் ஆனந்தம். "அட! இது யாருப்பா?"ன்னா இந்த கல்பத்தில மனுஷனா இருந்து செஞ்ச புண்ணியத்தால கந்தருவனா ஆனவர்.

இப்படியே அடுத்து அடுத்து வருபவர் ஆனந்தம் 100 மடங்கு அதிகம்ன்னு கணக்கு வெச்சுக்கங்க.

தேவ நன்மா கந்தருவன் என்பவர் பூர்வ கல்பத்தில செஞ்ச புண்ணியத்தால இந்த கல்பம் ஆரம்பிக்கிறப்பவே கந்தருவனா ஆனவர்.

சிறந்த தம் உலகத்தில வாசம் செய்கிற அக்னிஷ்வாத்தா முதலானவர்கள் பித்ருக்கள்.

தாம் செஞ்ச புண்ணிய காரியங்களால இந்த கல்ப ஆதியிலேயே தேவரானவர் ஆஜான தேவர்கள்.

கருமத் தேவர்கள் என்பவர் இந்த கல்பத்தில 40 சம்ஸ்காரங்களையும் சரியா செய்து பல யாகங்கள் செய்து உயர்ந்த நிலை அடைஞ்சு ஆஜான தேவர்களால பூஜிக்கப்பட்ட தேவரா ஆனவர்.

பகர் முக்கியர் ன்னு சொல்கிறது மேலான அஷ்ட வசுக்கள், துவாதச ஆதித்யர், ஏகாதச ருத்திரர் ஆகிய 31 முக்கிய தேவர்கள்.

அடுத்து இந்த தேவர்களுக்கு எல்லாம் தலைவனா இருக்கிற இந்திரன்.

அதுக்கும் மேல இந்திரனோட ஆசான் ப்ருஹஸ்பதி.

அதுக்கும் மேல கனம் பொருந்திய பிரஜாபதி என்னும் விராட்டு.

கடைசியா ஹிரண்ய கர்ப்பன் என்கிற பிரமன்.

இப்படி த்வைத உலகத்தவங்களை பட்டியல் போட்டாச்சு.
அப்ப மனுஷர்களோட ஆனந்தத்தை விட பிரம்மனோட ஆனந்தம் 100 பவர் 10.

ஆனாலும் இவர்கள் அனுபவிக்கும் ஆனந்தம் நுரை போலவாம், அத்வைத நிலையிலே இருக்கிற பிரமானந்தம் ப்ரலய காலத்து பெரும் கடல் போலவாம்.

132.

இப்பிரமாநந்தம் அடைந்ததற்கு திருஷ்டாந்தம்.

எவனா கிலுமிந்தத் துரியா தீதத்தி லேழாம் பூமியி லிருந்தானேல்
அவனா ரதன்சுகன் சிவன்மா லயன்முத லறிவோ ரநுபவ சுகபோதம்
விவகா ரதிர்சய மிதுவே யநுபவ மெனமுன் சொல்லிய விவகாரி
உவமா னமுமறி மகனே யவனடி யுதிரும் பொடிகளென் முடிமேலே.

எவனாகிலும் இந்தத் துரியாதீதத்தில் ஏழாம் பூமியில் இருந்தானேல், அவன் (அவனுக்கு) போதம் (தத்வ ஞானம்) விவகார (பிரபஞ்ச) அதிரிசயம் (அத்ருஷ்யம் =பார்வையின்மை) [ஆகிய] இதுவே [ஸ்வ]அநுபவம் எனவும், நாரதன் சுகன் சிவன் மால் அயன் முதல் அறிவோர் (அறிவோருக்குமுள்ள) அநுபவ சுகமும் (ஆநந்தம்) என முன் சொல்லிய (துரீயாதீதனின்) விவகாரி உவமானமும் அறி மகனே, அவனடி உதிரும் பொடிகள் என் முடிமேலே [தரிக்கத்தக்கன].

இரண்டற்றதாயும் சுழுத்தி அல்லாததுமா இருக்கிற முக்கிய நிஜ ஆனந்தத்தோட அனுபவமே துரியாதீதம் என்கிற ஏழாம் பூமியாம்.

[ஆங்கில வழக்கிலேயும் செவன்த் ஹெவன் என்கிறாங்க]

எவன் இந்த நிலையில இருக்கானோ அவன் நாரதன், சுகன், சிவன், விஷ்ணு, பிரமன் ஆகியவருடைய அனுபவ ஆனந்த நிலையில் இருக்கிறான். அத்தகைய மகா புருஷனின் பாத தூசிகள் என் தலையில் தாங்கத்தக்கன என்கிறார் நமக்கு இவ்வளவு தூரம் சமாசாரம் சொன்ன தாண்டவராய ஸ்வாமிகள்.

133.

இந்தவா றைந்துசுகஞ் சொல்லினோம் வித்தைசுக மினிமேற் சொல்வோம்
முந்தமா யையுஞ்சச்சி தாநந்தப் பொருளுமே மொழியும் போதில்
அந்தமா மத்துவித சுகமான்ம சுகமிரண்டு மங்கே சொன்னோம்
தொந்தமாற் றியமகனே யின்னமுனக் கையமுண்டேற் சொல்லு வாயே.

இந்தவாறு ஐந்து சுகஞ் சொல்லினோம்.(செய்யுள் 123-விஷயாநந்தம்; 124-127 பிரமாநந்தம்; 128-வாசநாநந்தம்; 129- நிசானந்தம்; 130-முக்கியானந்தம்) வித்தை சுகம் இனிமேல் (நூலின் கடைசியில்) சொல்வோம். முந்த (முன்பு) மாயையும் சச்சிதாநந்தப் பொருளுமே மொழியும் போதில், அந்தமாம் அத்துவித சுகம் (95-108) ஆன்ம சுகம் (114-120) இரண்டும் அங்கே சொன்னோம். தொந்த மாற்றிய (துவந்தங்களை கெடுத்த) மகனே இன்னமும் உனக்கு ஐயமுண்டேல் சொல்லுவாயே.

லிஸ்டில இன்னும் ஒண்ணதான் பாக்கி. வித்தியானந்தம். இதைப்பத்தி அப்புறம் வரும்.

134.

ஆத்மா சச்சிதாநந்த சொரூபமெனத் தெரிந்திருந்தும் அதன் உண்மையான சுவானுபூதி வெளிப்பட சுருதி யுக்தி அநுபவங்களுக்கு ஒத்திருக்கும் அவற்றின் ஒருமையை தெரிய வினா:

குகன்றனையு மெனையுமுல கினையுமீன் றளித்தருளுங் குருவே கேளீர்
புகன்றசச் சிதாநந்தப் பதங்கடனித் தனியாகிப் பொருள்வே றானால்
உகண்டமன முறைப்பதெங்ஙன் பரியாய பதங்களைப்போ லுறவு காணேன்
அகண்டமா யொருசுவையாய்த் தெனீக்கூட்டியமதுவா வறிவிப்பீரே

குகன் தனையும் எனையும் உலகினையும் ஈன்று அளித்து அருளுங் குருவே கேளீர்!

புகன்ற சச்சிதாநந்தப் பதங்கள் தனித் தனியாகிப் பொருள் வேறானால் உகண்டமனம் (விஷயங்களில் பாயும் மனம்) உறைப்பது எங்ஙன்? (எப்படி) பரியாய பதங்களை (பல்சொல் ஒரு மொழி) போல் உறவு காணேன். அகண்டமாய் ஒரு சுவையாய் தேனீ கூட்டிய மதுவாய் அறிவிப்பீரே.

சந்தேகமிருந்தா கேட்கச்சொன்ன குருகிட்ட சீடன் ஒரு சந்தேகம் கேட்கிறான்.

அத்வைதம்ன்னா எல்லாமே ஒண்ணுதானே. ஆனா அந்த நிலையை எப்படி சொல்லறோம்? சத், சித், ஆனந்தம். கை, பாணி, ஹஸ்தம் ன்கிறா மாதிரி ஒரே விஷயத்தை குறிக்கிற ஒரு பொருட் பன் மொழியாவும் இது இல்லை. இப்படி இருக்க சச்சிதாநந்த பதங்களுக்கு ஒரே அர்த்தம் தோன்றலைன்னா எப்படி மனசு நிலை பெறும்? தேனீக்கள் பலதா இருந்தும் பல பூக்களிலிருந்து தேன் கொண்டு வந்தாலும் தேன் சுவை ஒரே மாதிரி இருக்காப்போல ஒரே மாதிரி அத்வைத நிலையை சொல்லக்கூடாதா?

135.

குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினா னீர்மூன்று கூறா யிற்றோ
வொளிதவனஞ் செம்மையென்ற பதங்களா லக்கினியு மொருமூன் றாமோ
வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து விலக்கி வேதம்
எளிதறிய முரண் மொழிந்த சத்தாதி யெனும்பிரம மேகந்தானே.

குளிர், இளகல், வெண்மை என்ற பதங்களினால் நீர் மூன்று கூறாயிற்றோ? ஒளி, தவனம் (சூடு) செம்மை (சிவப்பு) என்ற பதங்களால் அக்கினியும் ஒரு மூன்றாமோ? [ஆகாய] வெளி முதலாம் (முதலான) சகம், அசத்து (unreal) மூடம் (ஜடம்) இடர் (துக்கம்) எனப்பிரித்து விலக்கி வேதம், [பக்குவிகள்] எளிது அறிய முரண் மொழிந்த (எதிராக

கூறிய) சத்தாதி (சத் முதலான [சத் சித் ஆநந்தம்]) எனும் பிரமம் ஏகந்தானே.

--

"தண்ணி சில்லுன்னு இருக்கும் உருவமில்லாம, இளகி ஓடும் (fluid), நிறமில்லாம இருக்கும்"ன்னு சொன்னா அது மூணு பொருளா ஆயிடுமா?இல்லை. சூடு, ஒளி, சிவப்பு நிறம் உடையதுன்னு சொன்னா நெருப்பு மூன்றாகுமா? இந்த பிரபஞ்சமானது அசத்து, சடம், துக்கம் ன்னு தெரிஞ்சுக்க பிரமத்தில அவற்றுக்கு மாறா சத், சித், ஆனந்தம் ன்னு 3 குணங்கள் உள்ளதாக வேதம் கூறியதே ஒழிய அக்குணங்கள் உள்ள பிரமம் ஒண்ணுதான்.

## 136.

நித்தியம்பூ ரணமேகம் பரமார்த்தம் பரப்பிரம நிதானஞ் சாந்தஞ்
சத்தியங்கே வலந்துரியஞ் சமந்திருக்குக் கூடஸ்தன் சாட்சி போதம்
சுத்தமிலக் கியஞ்சநா தனஞ் சீவன் றத்துவம்விண் சோதி யான்மா
முத்தம்விபு சூக்கும மென்றிவ்வண்ணம் விதிகுணங்கண் மொழியும் வேதம்

நித்தியம் பூரணம் ஏகம் பரமார்த்தம் பரப்பிரமம் நிதானம் சாந்தம் சத்தியம் கேவலம் துரியம் சமம் திருக்கு கூடஸ்தன் சாட்சி போதம் சுத்தம் இலக்கியம் சநாதனம் சீவன் தத்துவம் விண் சோதி ஆன்மா முத்தம் விபு சூக்குமம் என்று இவ்வண்ணம் விதிகுணங்கள் மொழியும் வேதம்.

## 137.

அசலநிரஞ் சனமமிர்த மப்பிரமே யம்விமல மநுபா தேயம்
அசடமநா மயமசங்க மதுலநிரந் தரமகோ சரம கண்டம்
அசமநந்த மவிநாசி நிர்குணநிட் களநிரவ யவம நாதி
அசரீர மவிகார மத்துவித மெனவிலக்கா மநேக முண்டே

அசலம் நிரஞ்சனம் அமிர்தம் அப்பிரமேயம் விமலம் அநுபாதேயம் அசடம் அநாமயம் அசங்கம் அதுல நிரந்தரம் அகோசரம் அகண்டம் அசமநந்தம் அவிநாசி நிர்குண நிட் கள நிரவயவம் அநாதி அசரீரம் அவிகாரம் அத்துவிதம் என விலக்காம் அநேகம் உண்டே.

--

குறிப்பு - ஒரே பொருள் கொண்டதாக இங்கே கூறப்படும் சொற்கள் நூற்களில் சேர்ந்து வரலாம் - நித்தியம், ஸநாதநம் என்பது போல. அங்கே அவ்விரு சொற்களுக்கிடையே உள்ள சூக்குமமான பொருள் வேறுபாட்டை வியாக்கியானங்களிலிருந்து அறிந்து கொள்ளவேண்டும். பொதுவான பொருள் மட்டுமே இங்கே கொடுக்கப்படுகிறது.

நித்தியம், ஸநாதனம் - எப்போதும் இருப்பது
பூரணம் - முழுமையானது
ஏகம் - தன்னிகரில்லாமல் தானொன்றாக மட்டும் இருப்பது
பரமார்த்தம் - உண்மை
ப்ரஹ்மம் (பிரமம்) - பரந்து இருப்பது
நிதானம் - (nidaanam, not nidhaanam) முதற்காரணம்

சாந்தம் - ஆசாபாசங்கள் அடங்கி அவையின்றி இருப்பது
சத்தியம் - மூன்று காலங்களிலும் அழியாமல் மாறாமல் இருப்பது
கேவலம் - வேறொன்றுடன் தொடர்பு இல்லாதது
துரியம் - விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் இம்மூன்றையும் கடந்த நான்காவது
சமம் - வேறுபாடற்றது
திருக்கு - அறிவுமயமானது
கூடஸ்த(ம்/ன்), அசங்கம் - பற்றுதலற்றது
சாட்சி - ஒரு காரியத்தில் இறங்காமல் அதைப் பார்க்கமட்டும் செய்வது
போதம், அசடம் - தன்னைத்தான் அறிந்தது
சுத்தம், நிரஞ்சனம், விமலம் - ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலமற்றது
இலக்கியம் - ???
ஆன்மா - அறிபவன், (பரம்பொருளைக் குறிக்கையில்) அநித்தியமான வெளித்தோற்றங்களைக் கடந்தது
சீவன் - ஸம்ஸாரபந்தமுள்ள ஆன்மா
தத்துவம் - சாத்திர சித்தாந்தத்தில் உலகிலிருக்கும் ஒரு முக்கியபொருளாகக் கணிக்கப் பட்டது (எ-கா- அக்னி தத்துவமே சிவனின் நெற்றிக்கண்ணாம்), (பரம்பொருளைக் குறிக்கையில் ஆன்மா என்பதன் பொருளையே கொள்க)
விண் - ???
சோதி - ப்ரகாசிப்பது
முக்தம் - தளைகளற்றது
விபு - வியாபித்திருப்பது
சூக்குமம் - மேலோட்டமாய்ப் பார்க்கையில் தெரியாதது.
அசலம் - செயல்கள் அடங்கிய நிலையிலிருப்பது
அமிர்தம் - அழிவு இல்லாதது
அப்பிரமேயம், அகோசரம் - சாமானிய அறிவிற்கு எட்டாதது
அநுபாதேயம் - தானே அடையத்தக்க பரம லட்சியமாக இருப்பதால் வேறு லட்சியத்தை அடைவதற்கு உபயோகிக்கவியலாதது
அநாமயம் - சம்சாரம் என்ற வியாதியற்றது
அதுல - ஒப்பில்லாதது
நிரந்தரம் - இடைவெளியில்லாதது
அகண்டம், நிஷ்கலம் (நிட்களம்), நிரவயவம் - பகுதிகளாகப் பிரிக்கவியலாதது
அசமநந்தம் - ??
அவிநாசி - அழிவற்றது
நிர்குணம் - ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களும் அவற்றிலிருந்து பிறந்த வெப்பம், தண்மை முதலிய குணங்களும் இல்லாதது
அநாதி - பிறப்பில்லாதது
அசரீரம் - உடல் இல்லாதது
அவிகாரம் - எப்பொழுதும் மாறுபாடற்றது
அத்துவிதம் அத்விதீயம் - தன்னைக்காட்டிலும் வேறு (இரண்டாவது) பொருளில்லாதது
--

138.

இன்னவகை விதிவிலக்குக் குணங்கணன்றாய்ச் சேந்தொருமித் தெல்லாம்கூடிச்
சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை யொருபொருளைச் சொல்லுஞ் சொற்கள்
பின்னபத மாமதனால் சத்தாதி குணப்பொருளாம் பிரம மேகம்
அன்னபொரு ளொருமையறிந் தகண்டபரி பூரணமா யாவாய் நீயே

இன்னவகை விதி, விலக்குக் குணங்கள் நன்றாய்ச் சேர்ந்து ஒருமித்து எல்லாம் கூடிச்

சொன்ன பொருள் ஒன்று அன்றி இரண்டில்லை. ஒரு பொருளை சொல்லுஞ் சொற்கள். பின்ன பதமாம். (வெவ்வேறு சப்தங்களாம்.) அதனால் சத்தாதி குணப் பொருளாம் பிரமம் ஏகம் (ஒன்றே). அன்ன பொருள் ஒருமை அறிந்து அகண்ட பரி பூரணமா யாவாய் நீயே.

139.

நிற்குணவத் துவின்குணங்க ளுரைப்பது தாய் மலடியென னிகரென்னாதே
சற்குணனே வத்துநிலை யுரையாம லறியவல்ல சதுரருண்டோ
நற்குணவே தங்களிந்தச் சீவன்முத்தி பெறப்பிரம ஞானந் தோன்றச்
சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களன்று பிரமமாஞ் சொரூபந்தானே

நிற்குண வத்துவின் குணங்கள் உரைப்பது தாய் மலடியென நிகர் என்னாதே. சற்குணனே, [ஆசிரியர்] வத்து நிலை உரையாமல் அறியவல்ல சதுரர் (திறமைசாலி) உண்டோ? [யாருமில்லை] நற்குண வேதங்கள் இந்தச் சீவன் முத்தி பெற பிரம ஞானம் தோன்ற சொன்ன குணங்கள் பிரமத்தின் குணங்கள் அன்று. பிரமமாஞ் சொரூபந்தானே.(பிரமத்தின் ஸ்வ ரூபமே ஆகும்)

--

குணமற்றது என்று சொல்லி பின் குணங்களை சொல்லுவது ஏன்? இது "என் தாய் மலடி" என்று முன்னுக்கு பின் விரோதமாக சொல்லுவது அல்ல. பிரமத்தின் குணங்களை கற்பனை செய்து கூறாமல் அதன் உண்மை தன்மையை அறிபவர்கள் யாருமில்லை. ஆக இப்படி சொல்லிய குணங்கள் அனைத்தும் பிரமத்தின் குணங்கள் அல்ல. அதன் சொரூபமே.

வார்த்தைகளுக்கு அகப்படாதது பிரம்மம். ஆனா எதையாவது சொல்லி நமக்கு புரிய வைக்க வேண்டி இருக்கு. ஆக நாம பாக்கிறது பிரமத்தை இல்லை. அதைப்பத்திய நம்மோட சில பார்வைகளே.

140.

மோகவிருள் கெடக்கோடி யருணனென வருகுருவே மொழியக் கேளீர்
ஏகபரி பூரணமா மென்சொரூப மென்னுளத்தி லிறுகும் வண்ண
மாகமங்கள் சொன்னபடி யென்னையகண் டார்த்தமா வறிந்தே னையா
ஊகமுமொத் திடவுரைத்தாற் பசுமரத்தி லாணிபோ லுறைக்கு நெஞ்சே

மோக (அஞ்ஞான) இருள் கெட (நீங்க) கோடி அருணன் என வரு குருவே, மொழியக் கேளீர். ஏக பரி பூரணமாம் என் சொரூபம் என் உளத்தில் இறுகும் (நிலைக்கும்) வண்ணம் ஆகமங்கள் (வேதங்கள்) சொன்னபடி என்னை அகண்ட (ஒரே) அர்த்தமாய் அறிந்தேன் ஐயா. ஊகமும் (உத்தியும்) ஒத்திட (சம்மதமாகும்படி) உரைத்தால் பசுமரத்தில் ஆணி போல் உறைக்கும் நெஞ்சே.

சீடன் இன்னும் கொஞ்சம் புத்திக்கு எட்டுறாப்பல லாஜிகலா இதை விளக்கச்சொல்லி கேட்கிறார்.

141.

சத்தேசித் தாகுமய லெனிலசத்தா மசத்தானாற் சாட்சி யெங்கே

சித்தேசத் தாகுமய லெனிற்சடமாஞ் சடங்களுக்கு திதியுமில்லை
ஒத்தேதோன் றியசததுஞ் சித்து நல்ல சுகமாகு மூகத் துக்கோர்
வித்தேயன் னியமாகிற் சடமசத்தாஞ் சுகாநுபவம் விளைந்திடாதே

சத்தே (இருப்பதே) சித்தாகும் (அறிகின்றதாகும்). அயல் (வேறு) எனில் அசத்தாம் (இல்லாததாகும்). அசத்தானால் (அப்படி இல்லாததானால், இல்லாத சித்துக்கு) சாட்சி [தன்மை] எங்கே? (எவ்விடத்தில் இருக்கும்?)

சித்தே சத்தாகும். அயல் எனில் சடமாம் (மூடமாம்). (மூடமான) சடங்களுக்கு [ஸ்]திதியுமில்லை. (இருப்பில்லை)

சத்தும் சித்தும் ஒத்தே (பொருந்தியது எதுவோ அதுவே) தோன்றிய நல்ல சுகமாகும். (நிரதிசிய ஆநந்தம்). அன்னியமாகில் (சித்துக்கு ஆநந்தம் வேறு எனில்) சடம் அசத்தாம். (மூடமும் இருப்பில்லாததுமாகும்) [அதற்கு] சுகாநுபவம் விளைந்திடாதே. ஊகத்துக்கு (இப்படி கூறிய யுத்தியே மற்ற நாமங்களை உணர) ஓர் வித்தே.

குழப்பறா மாதிரி இருக்கா?!

கொஞ்சம் கவனமா பாக்கலாம். சத் - முக்காலத்திலும் இருப்பது. சித் என்பது அறிவு.

எது இருக்கோ அதைத்தானே அறிய முடியும்? இல்லாத விஷயத்தை எப்படி அறிய முடியும்? ஆகவே சத்தே சித்து. ஒரு விஷயம் இருக்கிறதா தெரியறப்பவே அதைப்பத்திய அறிவு கொஞ்சமாவது வந்துடும் இல்லியா? இருப்பே அறிவு.

எதை அறிகிறோமோ அதுக்கு இருப்பு இருக்கும். இருப்பில் இல்லாததை அறிய முடியாது. கணினில இருக்கறதா நினைச்சு ஒரு கோப்பை தேடறோம். தமிழ் இடைமுகம் இருந்தா அது தேடிட்டு சொல்கிறப்ப "நீங்கள் தேடும் கோப்பு இருப்பில் இல்லை" ன்னு சொல்லும். இல்லாத இதை அறிய முடியாது. ஆகவே சித்தே சத்து. (அறிவே இருப்பு)

தேடின கோப்பு கிடைக்கும் போது "அப்பாடா! கிடைச்சுடுத்து"ன்னு சந்தோஷப்படறோம். இருந்து அறிவதே ஆநந்தமாகும். ஆகவே சத்தும் சித்தும் ஒன்றானதே ஆநந்தமாகும்.

142

வீயாத சத்துமுன்னம் விளங்குவது தன்னாலோ வேறொன்றாலோ
வாயால்வே றெனிலதுவு மசத்தோசத் தோவசத்தேன் மலடி மைந்தன்
பேயாகா ரியஞ்செயுமோ சத்தெனவிப் படியதையும் பிரித்துச்சொன்னால்
ஓயாத வவத்தையாங் குதர்க்கவிகற் பங்களைவிட் டொழித்திடாயே.

வீயாத (மூன்று காலங்களிலும் நசியாத) சத்து முன்னம் (ஆதியில்) விளங்குவது (பிரகாசிப்பது) தன்னாலோ? வேறொன்றாலோ?

வாயால் வேறு எனில் அதுவும் அசத்தோ? சத்தோ? அசத்தேல் (அசத்து எனில்) மலடி மைந்தன் பேயா(க) காரியஞ் செயுமோ? சத்தென இப்படி அதையும் பிரித்து (வேறொன்றாக) சொன்னால், ஓயாத வவத்தையாம் (அனவஸ்தா தோஷம் உண்டாகும்.

ஒரு தீபம் மற்றொரு தீபத்தினால் பிரகாசிக்கிறது எனில் அந்த வேறொரு தீபம் எப்படி பிரகாசிபிக்கிறது? அது மற்றொரு தீபத்தினால் பிரகாசம் பெற்று பிரகாசிபிக்கிறது என வரிசையாக முடிவில்லாமல் போகும்) குதர்க்க விகற்பங்களை (வேறுபாடுகளை) விட்டொழித்திடாயே.

--

சத் எப்போதுமே இருந்து விளங்குகிறது. அதை விளக்க வேற ஒண்ணம் வேண்டாம். தேவை ன்னுஒரு வாதத்திற்காக எடுத்துக்கொண்டால் அதை விளங்கச்செய்வது எது? இன்னொரு சத்தா? அசத்தா?

அசத்து சத்தை விளங்கச் செய்ய முடியாது. அதாவது இல்லாத ஒண்ணு இருக்கிறதை சுட்டிக்காட்ட முடியாது.

சத்தா இருந்தால் அந்த சத்தை எது விளங்கச்செய்வது? இன்னொரு சத்து. அதை விளங்கச்செய்வது? இப்படி முடிவில்லாத கேள்விகள் எழும். அதனால அது தவறு.

143.

சுருதியுத்தி யொத்ததுபோல நுபவமுங் கேள்சுழுத்திச் சுகவாநந்தம்

மிருதிவடி வாதலிலவ் வாநந்த மேயறிவாம் வேறங் கில்லை

கருதுபிர ளயஞ்சுழுத்தி யிரண்டிலுநீ யிருந்திருளைக் காண்கிறாயே

இருதயத்திப் படிநோக்கி யேக பரிபூரணமா யிருந்தி டாயே

சுருதி யுத்தி ஒத்தது போல் அநுபவமும் (அநுபவ பிரமாணமும்) கேள். சுழுத்தி சுகவாநந்தம் (ஆனது) ஸ்மிருதி (நினைப்பு) வடிவு. (நித்திரையில் அஞ்ஞானத்தை அறிந்து ஒன்றையும் அறியாதிருந்தேன் என்ற நினைப்பு வெளிப்படுமாதலால்) ஆதலில் அவ்வாநந்தமே அறிவாம். வேறு அங்கில்லை. கருது[கின்ற] பிரளயம் சுழுத்தி இரண்டிலும் (2 அவஸ்தையிலும்) நீ [சத்தாக] இருந்து இருளைக் காண்கிறாயே. [ஆகவே சித்தான ஆநந்தமே சத்து] இருதயத்து இப்படி நோக்கி ஏக பரிபூரணமாய் இருந்திடாயே.

--

சுழுத்தியிலும் பிரலயத்திலும் ஆநந்தமே அஞ்ஞானத்தை அறிகிறது. அறிவது அதுவே ஆகையால் அதுவே சித்து. இருந்தே அறிய வேண்டுமாதலால் அதுவே சத்து.

அனுபவத்தால அறிந்து கொள்ள வழி சொல்கிறார்.

நல்லா தூங்கி சுழுத்தில ஆனந்தம் அனுபவிக்கிறோம். தூங்கி எழுந்ததும் ஆனந்தமா தூங்கினதா நினைக்கிறோம். இப்படியா ஆனந்தம் அறிவா ஆயிடுத்து. அதெப்படி ன்னா சுழுத்தில ஆனந்தத்தைத்தவிர விளக்கி வைக்க ஒண்ணும் இல்லையே.

அப்படி உணர்ந்ததும் நாமே. பின்னால் அதை நினைப்பதும் நாமே. அப்படின்னா இருப்பு அப்பவும் இருந்தது. இப்பவும் இருக்கு. ஆக சத் இருக்கு. ஆக நாம் சத் சித் ஆனந்தம். இந்த சத் சித் ஆனந்தமே பிரம்மம் என்பதால நாம் பிரம்மம்.

ஜாக்ரத்திலேயும் இதே போல சத் சித் ஆனந்தமா இருந்து பழகுப்பா என்கிறார்.

அதாவது விழிப்பிலேயும் சுழுத்தில இருக்கிறாப்போல அகண்ட பரிபூரணமாக இருப்பாயாக என்கிறார்.

144.

பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமநு பவம் விடாமல்
பலமலரின் மதுப்போல சச்சிதா நந்த மொன்றாம் பரமார்த் தத்தைப்
பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப் பார்த்தபோது
பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்றுமொரு படமா னானே

பலகலையும் உணர்ந்த குரு மொழிந்தபடி இவனும் அநுபவம் விடாமல், பல மலரின் மதுப்போல (பல மலர்களிலிருந்தும் வந்த மது ஒருமித்தது போல) சச்சிதாநந்தம் ஒன்றாம் பரமார்த்தத்தைப் பல பொழுதும் கண்மூடி [ஸ்வரூப] சமாதியிருந்தான். [ஞான விழியால்] விழித்துப் பார்த்தபோது, பல வடிவாம் சராசர சித்திரங்கள் எல்லாம் தோன்றும் ஒரு படமானானே.

--

சீடன் குரு சொன்னபடி சச்சிதானந்த நிலையில நீண்ட நேரம் சமாதியில இருக்கிறார்.

கடலில் அலை, திவலை நுரைகள் தோன்றுவது போல இந்த சராசர பிரபஞ்சம் பிரம்மத்தில ஆரோபமா இருக்கு. ப்ரபஞ்சத்தை சித்திரத்தில இருக்கிற பல பொருட்களாகவும் பிரமத்தை படம் (படசீலை) ஆகவும் கூறியுள்ளது. அதுவே அகண்டாகார (இரண்டற்ற) நிலை. சீவன்முத்தரின் அனுபவ நிலை.

சுழுத்தியில் அறிவு அவித்தையாகிய அஞ்ஞான இருளை எதிர் கொண்டு அறிகிறது. தூக்கத்தில் இல்லாமல் ஜாக்ரத் நிலையில் அதே போல மனம் ஒடுக்கி அறிவு மயமாக விளங்குவதே சீவன் முத்தி நிலை. இது நினைவில் சுழுத்தி எனவும் சொல்லப்படும். இந்த அனுபவ நிலையில் எல்லாம் அகண்ட பிரம சொரூபமாக விளங்கும்.

கண்ட அறிவுதனைக் கொண்டுன்னைக் கண்மறைத்த

பண்டை யிருளைநீ பார்த்துக்கா ணென்றானோ

- தத்துவராயர் தாலாட்டு.

இதை நினைவில் சுழுத்தி என்பாங்க.

தன் மயமாய் நின்றநிலை தானேதா னாகிநின்றால்
நின்மயமா யாவும் நிகழும் பராபரமே
தாயுமானவர்
மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிறக்கில்
வானில்லை யகத்தி லெங்கும் யானன்றி மற்றொன் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாது மில்லை
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா நந்த மென்றான்

வாசிட்டம் - கசன் கதை

உயிர் அசைவதுதான் மனதை அசைக்கிறது. மனம் ஜடம். ஆன்மா இல்லாம மனம் அசைய முடியாது. ஆன்மா உற்று பாத்தால் அந்த உண்மை வெளிப்படும். ஆன்மா தன்னை மறக்காமல் தன் நிலையில் நின்று மனம் எங்கேன்னு பார்த்தால் மனதுக்கு தன்னைத்தவிர வேறு இருப்பிடம் இல்லைன்னும், இதையே மாயை என்கிறது உண்மைன்னும் தெரியவரும். இந்த மனதின் அசைவை வளர விடாம அடக்கி சுழுத்தியில் அது எப்படி சாட்டை இல்லாத பம்பரம் போலவும் காற்றில்லாத காற்றாடி போலவும்

அடங்கிக்கிடந்ததோ அப்படி சுழுத்தி இல்லாத ஜாக்கிரத்திலேயே அதை இருக்கச் செய்தா ஆன்ம பிரகாசம் தோன்றும்.

உண்டாகி யெவ்விடத்து முற்ற போத
முயிரசைவா லுணர்வுறுமப் போதந் தன்னை
மண்டாமற் றடுக்கைபெரு நன்மை யாகும்
வளர்போதங் காண்பவற்றை மருவு மாலாற்
றண்டாத காண்பவையே மனதிற் கென்றுந்
தவிராத துயராமத் தனிப்போ தந்தான்
மிண்டாத சுழுத்தியிற்போ தம்போ னிற்கில்
வீடதுபே றதுவிமல பதம்வே றில்லை

வாசிட்டம்

உண்டாகி எவ்விடத்தும் உற்ற போதம் உயிர் அசைவால் உணர்வுறும். அப்போதந் தன்னை மண்டாமல் தடுக்கை பெரு நன்மையாகும். வளர் போதம் காண்பவற்றை மருவுமாலால் அண்டாத காண்பவையே மனதிற்கு என்றுந் தவிராத துயராம். அத் தனிப்போதம்தான் மிண்டாத சுழுத்தியில் போதம் போய் நிற்கில் வீடது பேறது விமல பதம் வேறில்லை.

145.

துரியாதீத ஏழாம் பூமி முக்கியமென்றது ஏன் எனவும் அதில் இன்ன வகை எனவும் கூற வேண்டுமென்றது.

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே வினோதமன்றி யினிவே றுண்டோ
அதையுரைத்து மதைநினைத்து மிருப்பதன்றோ ஞானிகளுக் கானநீதி
முதலுரைத்த துரியாதீ தமுமேழாம் பூமியுமுக் கியமாமென்ற
பதமுமதன் வகையுமெனக் கெளிதாகத் தெளியும்வண்ணம் பணித்தி டீரே

இதயம் ஒத்த சற்குருவே! நமக்கு இதுவே வினோதம் அன்றி இனி வேறுண்டோ? அதை உரைத்தும், அதை நினைத்தும் இருப்பது அன்றோ ஞானிகளுக்கான நீதி? [ஆகவே] தாங்கள் முதல் (முன்பு) உரைத்த துரியாதீதமும் ஏழாம் பூமியும் முக்கியமாம் என்ற பதமும் அதன் வகையும் எனக்கு எளிதாகத் தெளியும் வண்ணம் பணித்திடீரே.

சமாதியிலிருந்து வெளி வந்த சீடர் மேலே கேள்வி கேட்கிறார்.

சீவன் முத்தருக்கு என்ன வேலை? மனமில்லாத போது பிரம்மத்தில திளைக்கிறதும் மனம் இருக்கும் போது பிரம்மத்தைப்பத்தி யோசிக்கிறதும்தானே. நமக்கு இத்தானே வேலைங்கிறார் சீடர். கவனிங்க. நமக்கு.

முன்ன துரியாதீதம் ஏழாம் பூமி இதெல்லாம் முக்கியம் ன்னு சொன்னீங்களே அது என்ன? முன்ன மாதிரி சுலபமா புரிய வையுங்க.

146.

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூமிகளே ழென்பார்
இனியவற்று ளஞ்ஞான பூமிகளே ழையுமுந்தி யியம்பக் கேளாய்
தனிவித்துச் சாக்கிரஞ்சாக்கிரமகா சாக்கிரஞ்சாக் கிரத்தைச் சார்ந்த
கனவுகனாக் கனவுசாக் கிரஞ்சுழுத்தி யென்றெழுபேர் கணித்தார் மேலோர்

வினவுமிடத்து அஞ்ஞான பூமிகள் ஏழ், ஞானபூமிகள் ஏழ் என்பார். இனி அவற்றுள் அஞ்ஞான பூமிகள் ஏழையும் முந்தி இயம்பக் கேளாய். தனி, வித்துச் சாக்கிரம், சாக்கிரம், மகா சாக்கிரம், சாக்கிரத்தைச் சார்ந்த கனவு, கனாக் கனவு, சாக்கிரஞ் சுழுத்தி என்று ஏழு பேர் (பெயர்கள்) கணித்தார் மேலோர்.

பூமின்னா ஏதோ நிலப்பரப்புன்னு இல்லை. அது ஒரு நிலை. அவ்வளோதான். கொஞ்சம் சுலபமா விஷயங்களை புரிஞ்சுக்க ஒரு பாகுபாடு செய்கிறாங்க. ஞான பூமிகள் ஏழு அஞ்ஞான பூமிகள் ஏழுன்னு பிரிக்கிறாங்க.

முதல்ல அஞ்ஞான பூமிகள்:

தனி வித்துச் சாக்கிரம், சாக்கிரம், மகா சாக்கிரம், சாக்கிரத்தைச் சார்ந்த கனவு, கனாக் கனவு, சாக்கிரஞ் சுழுத்தி.

147.

முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமதுதான் முதல்வித்தாகு
மிந்தவறி விற்பண்டில் லாவகந்தை முளை போலா மிதுந னாவாம்
வந்துவந்து பிறவிதொறு மகமமதை வளருமது மகாந னாவாம்
நந்துமகங் கொடுநனவின் மனோராச்சி யஞ்செயலே நனாக்க னாவே.

முந்த (முன்பு) அகண்டத்து (பிரமத்திலிருந்து) எழும் ஓரறிவு மாத்திரம் அதுதான் முதல் வித்தாகும். [1.பீஜ ஜாக்ரம்=வித்து சாக்கிரம்]. இந்த அறிவில் பண்டில்லா (முன்பில்லாத) அகந்தை முளை போலாம். [2.ஜாக்ரம்=சாக்கிரம்] இது நனாவாம். (ஜாக்ரத்).வந்து வந்து பிறவிதொறும் அகம் மமதை (நான் எனது எனும் நினைப்பு) வளரும். அது மகா நனாவாம். [3.மஹா ஜாக்ரத்]

நந்தும் அகங் கொடு (எழுகின்ற மனத்தினால்) நனவில் மனோ ராச்சியஞ் செயலே நனாக்கனாவே. [4.ஜாக்ரத் ஸ்வப்னம்]

--

நாம தூங்கப்போகும் போது படிப்படியா கருவி கரணம் எல்லாம் கழண்டே தூங்கப்போகிறோம். படுத்தோம் பட்டுன்னு தூங்கிட்டோம் அப்படின்னு இல்லை. அதே போல தூக்கத்திலிருந்து வெளியே வரப்ப திடுதிப்புன்னு வரதில்லை. படிப்படியாதான் வெளியே வரோம். அது சில கணங்களா இருந்தாக்கூட தனித்தனியா பிரிக்கலாம்.

1.தனி வித்துச் சாக்கிரம் (பீஜ சாக்கிரம்): தூக்கத்தில் இருந்து விழிப்புக்கு வரும்முன் மாயையோடு சம்பந்தப்பட்டு இருந்த ஆத்ம சைதன்யம்; அதில் இருந்து எழும் சித் ஆபாசத்துடன் கூடிய அறிவு மட்டும் உள்ள நிலை.

இதில இன்னும் நான் என்கிற நினைப்பு வரலை. சுசுப்தில சுத்த அறிவா இருந்தது இப்ப கொஞ்சம் நிலை குலைஞ்சு ஆபாசமானது. அவ்வளவே.

2.சாக்கிரம்: மேற் கண்ட அறிவில் முன்பு இல்லாத நான் என்னுடையது என்றவை

சூக்ஷுமமாக உண்டாவது. இது நம்ம உடம்பு இடம் நேரம் போன்ற விஷயங்கள் மட்டும் தெரியும். நாங்க மயக்கம் கொடுத்த நோயாளி இந்த நிலைக்கு வந்ததும் கூட இருக்கிறவங்க உஷார் வந்திடுச்சும்பாங்க!

3. மகா சாக்கிரம்: நான் எனது என்பவை திடமாகவும் விரிவாகவும் உதிப்பது. இது சாதாரணமா நாம இருக்கிற நிலை.

4. சாக்கிர சொப்பனம்: சாக்கிரத்தில் இருந்து கொண்டு நாம் அறிந்தவை அறியாதவைகளை கொண்டு "மனக்கோட்டை" கட்டுதல். நிறைய பணம் சம்பாதிப்பேன். வீடு கட்டுவேன். கார் வாங்குவேன். பிசினஸ் பண்ணி பணத்தை பெருக்கி ஊர்லேயே பெரிய பணக்காரன் ஆகிடுவேன். இப்படி எல்லாத்தையும் கற்பனை செய்கிறதே சாக்கிர கனவு. இதை பின்னால வர கனவு சாக்கிரத்தோட குழப்பிக்கக்கூடாது.

--

148.

உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல்சொப் பனமெனும்பே ருடையதாகும்

பண்டுகனாக் கண்டுமறந் ததைமீண்டு நினைப்பதுசொ ப்பனநனாவா

மண்டுமிருண் மூடுவது சுழுத்தியா மஞ்ஞான வகைகள் சொன்னோம்

விண்டு நிறை முத்திதரு ஞானபூ மிகளேழும் விளம்பக்கேளாய்

உண்டு உறங்கி மனோராச்சியம் செயல் (அனுபவித்ததை அனுபவிக்காததை உறக்கத்தில் நினைப்பது) 5.சொப்பனம் எனும் பேர் உடையதாகும்.

பண்டு (பழைய காலத்தில்) கனாக் கண்டு மறந்ததை மீண்டும் நினைப்பது சொப்பன நனாவாம். [6.ஸ்வப்ன ஜாக்ரம்] மண்டும் (பிரபஞ்சம் அடங்கி இருக்கும் அஞ்ஞான) இருள் மூடுவது (ஏழாம் பூமியாகிய) 7. சுழுத்தியாம். அஞ்ஞான வகைகள் சொன்னோம். விண்டு (நீங்கி) நிறை (பரி பூரணமான) முத்தி தரும் ஞான பூமிகள் ஏழும் விளம்பக்கேளாய்.

--

5.சொப்பனம்: சாக்கிரத்தில் அனுபவித்தவை, அனுபவிக்காதவை ஆகியவற்றை தூக்கத்தில காண்பது. கனவு காணும்போது நம்ம வாழ்க்கையில முன்னே நடந்ததே வரலாம்; அதே நபர்கள், இடங்கள் இப்ப இல்லைன்னா கூட வரலாம்; புது நபர்கள் இடங்கள் .. நனவில நம்மால செய்ய முடியாதது - பறக்கிறது போல - வரலாம்.

6. சொப்பன சாக்கிரம்: முன்பு கண்ட சொப்பனத்தை மீண்டும் சாக்கிரத்தில் காண்பது. அதாவது நாம் கண்ட கனவை நடந்தபடியே திருப்பி நினைவுக்கு கொண்டு வரது. நம்ம ஜீவா வெங்கட்ராமன் இப்படி செஞ்சு சுவையான பதிவுகள் எழுதி இருக்கார்.

7. சுழுத்தி: மேற்கண்ட 6 அவஸ்தைகளும் இல்லாது கருவி கரணங்கள் எல்லாம் ஒடுங்கி அஞ்ஞான இருள் மூடி இருக்கும் நிலை.

நாம் தூங்கப்போகு முன் இந்த நிலைகளை கடந்தே போகிறோம். அதே போல இவற்றை கடந்தே விழிப்புக்கு வருகிறோம். அவை தானியங்கியாக நடப்பதால் நமக்கு புலப்படவில்லை.

149.

ஞானபூமிகள் ஏழு:

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சைவிசா ரணையிரண்டாம் பூமியாகும்
நலதநுமா னசிமூன்றாம் பூமிசத்து வாபத்தி நாலாம் பூமி
சொலுமசம்சத் திப்பேரும் பதார்த்தாபா வனைபேருந் துரியப் பேரும்
மலினமறு மகனேயைந் தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர்

புலவர் (மகான்கள்) புகழ் முதற் பூமி சுபேச்சை. (சுப இச்சை=சுபம் விரும்பல்) விசாரணை இரண்டாம் பூமியாகும். நல்ல தநுமானசி மூன்றாம் பூமி. சத்துவா பத்தி (உண்மையில் மனதில் நின்றல்) நாலாம் பூமி. சொல்லும் அசம்சத்தி, பதார்த்தா பாவனை, துரியம் ஆகிய பெயர்கள் [கொண்டவற்றை], மலினமறு (களங்கமில்லா) மகனே, ஐந்து ஆறு ஏழு பூமிகளாக வகுத்தார் மேலோர்.

--

150.

துற்சங்க நிவர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சையாகும்
நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையா நம்பி
முற்சங்க வேடனைகள் விடறநுமா னசியிந்த மூன்றி னாலும்
சற்சங்க மனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவா பத்தி தானே

துர் (மூட) சங்க நிவர்த்தி வந்து சிவ (பிரம) ஞானம் விரும்புவது சுபேச்சையாகும்.

நற்சங்க (சாது சங்க) மொழி வினவி ஞானநூல் பழகல் (வேதாந்த சாஸ்திரம் அப்பியாசித்தல்) விசாரணையாம்.

(விசாரணையில் வெளிப்படுவதை) நம்பி முற்சங்க வேடனைகள் (காமாதி வாசனைகளான இச்சைகளை) விடல் தநுமானசி (நினைவு குவிந்து மனம் சிறுகல்).

இந்த மூன்றினாலும் சற்சங்க (வைராக்கியம் முதலான நல்ல குணங்களை பழகிய) மனதில் உண்மை அறிவுதித்தல் (சத் சித் ஆநந்தம் சொரூபமே நான் எனும் அபரோட்ச ஞானம் உதித்தல்) சத்துவா பத்தி தானே.

--

அடுத்து ஞான நிலைகளை பாக்கலாமா?

இதில வர பெயர்கள் அஞ்ஞான பூமிகள் பெயர் மாதிரி சுலபம் இல்லை. கொஞ்சம் முயற்சி எடுத்து நினைவு கொள்ளணும்.

1. சுபேச்சை முதலாவது. தேர்தல்ல சுயேட்சை கேள்விப்பட்டு இருக்கோம். இது என்ன சுபேச்சை?

சுப இச்சை= சுபம் என்பது இங்கு பிரம்ம ஞானத்தால் அடையும் மோக்ஷம். இச்சை

விரும்புவது. நம்ம பூர்வ ஜன்ம புண்ணியம் திடுதிப்புன்னு ஒரு நாள் ஒரு நினைப்பு தோணுது; “அடடா! நாம் மூடத்தனமாக இந்த அநித்திய உலகையும் இதில் உள்ள போகத்தையும் நம்பி பிறப்பிறப்பாகிய பெரிய துன்பத்தில் அகப்பட்டுக்கொண்டு இருக்கிறோமே.” என்ற உணர்வு வந்து "சே! இனியாவது எல்லா கர்மங்களையும் நிவர்த்தி செய்து எப்படியாவது மோக்ஷமடைய வேண்டும் என திட வைராக்கியம் கொள்வதே சுபேச்சை.

2. அப்படி ஆன பின் குரு பெரியோர் இவர்களை அடைந்து சாத்திர விசாரணை செய்து ஞானத்தை அடைய அப்யாசித்தல் விசாரணை. இது இரண்டாவது.

3. சாத்திர ஆராய்ச்சியாலும் குருவிடம் கேள்வி கேட்டதாலும் உண்டான பலத்தால் பிரபஞ்சம் அநித்தியம் என்ற உண்மை தோன்றி மனைவி, மக்கள், பொருள் முதலியவற்றில் உள்ள ஆசையை அறவே விடல் தநுமானசி. இது மூன்றாவது நிலை. திடுதிப்புன்னு விட முடியுமா? முதல்ல தனக்கு என்கிற ஆசைகளை ஒழிச்சு அப்புறம் தன் குடும்பத்துக்கு தன் உறவினர்களுக்கு ஊருக்கு ன்னு இது வேணும், அது வேணும் என்கிறதை எல்லாம் விட்டு ஒழிக்கணும்.

4. மேற் கூறிய 3 பூமிகளின் அப்பியாச வலிமையால் சத்துவ வாசனை உடைய மனதினிடத்தில் உண்மை அறிவு உதித்தல் சத்துவாபத்தி. (சத்வ உபத்தி). அதாவது பிரபஞ்சம் கனவு போன்றது நிரந்தரம் இல்லைன்னு உணர்ந்து சத் ரூப பிரம்மமே தான் என அறிந்து பிரம்ம சாக்ஷாத்காரம் அடைய அப்பியாசித்தல்.

151.

தத்துவத்தின் மனமுறைத்து மித்தையெலா மறத்தலசம் சத்தியாகும்
அத்துவிதா னந்தம்வருந் திரிபுடிபோம் பதார்த்தாபா வனைய தாகும்
வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவு னசுபாவந் துரிய மாகும்
இத்துரிய பூமியைமுன் றுரியாதீ தப்பதமென் றதுவுங் கேளாய்

தத்துவத்தில் மனம் உறைத்து மித்தை எலாம் மறத்தல் அசம்சத்தி (சங்கல்பம் அறல்) ஆகும். (5 ஆம் பூமி) அத்துவிதானந்தம் வரும்; திரிபுடி போம்; பதார்த்தா பாவனை அதாகும்.(6 ஆம் பூமி). வத்து நிலை இருந்தபடி இருந்த மவுன சுபாவம் துரியமாகும். (7 ஆம் பூமி) இத்துரிய பூமியை முன் துரியாதீதப் பதம் என்றதுவுங் கேளாய்.

--

5. சம் சத்தின்னா விஷயங்களில பற்று வைக்கிறது.

அசம்சக்தின்னா விஷய சம்பந்தம் இல்லாம இருக்கிறது. அதாவது 4 ஆம் பூமியின் அப்பியாசத்தால பிரபஞ்சம் முதல் எல்லாத்தையும் அகண்ட பிரம்ம சொரூபமாக காண்கிற அபரோக்ஷ (மறைவில்லா) அனுபவம் அடைஞ்சு, சாக்ஷாத்காரம் தவிர மற்ற எல்லா விஷயங்களில் இருந்தும் சம்பந்தத்தை உணர்விலிருந்து நீக்குதல்.

6. பதார்த்த பாவனை என்பது வெளியும் உள்ளும் எவ்வித பொருட்களின் தோற்றரவும் இல்லாது இருத்தல். அதாவது சமாதி அப்பியாசத்தால் பிரம்மான்ம ஐக்கியம் பூரணமாகி திரிபுடி என்னும் "காண்பவன்- காணப்படுவது- காட்சி" என்ற மூன்றும் நீங்கி இரண்டற்ற ஆனந்தம் அடைதல்.

7. துரியம் என்பது சாக்கிரம், சொப்பனம், சுசுப்தி என்ற மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாற்பட்டது. திரிபுடி ஒழிந்து, சாக்ஷாத்கார நிலையில் அழுந்தி, பூரண மௌனமாய்;

தன்னாலும் பிறராலும் வெளிவராமல்; நிர் விகல்ப சமாதி அடைவதே துரியம் ஆகும். இந்த நிலைக்கு போனவர் தானாகவும் வெளி வர மாட்டார். பிறராலும் இவரை வெளிவரச்செய்ய முடியாது.

இந்த துரீயமே துரியாதீதம் எனப்பட்டது.

152.

இத்துரிய பூமியே துரியாதீதம் ஆகும்.

முற்புவிமூன் றினுமுலகந் தோன்றுதலாற் சாக்கிரமா மூன்றற் கப்பால்

சொற்பனமா மதுவுமெள்ள நழுவுமைந்தாம் பூமியே சுழுத்தி யாகும்

அற்புதமாஞ் சுகாநுபவ மிகுமாறாம் புவிதுரிய மதற்கப் பாலோர்

கற்பனையி லாதவிட மதீதமென்று மௌனமாக் காட்டும் வேதம்.

(சுபேச்சை முதலான) முற்புவி மூன்றினும் உலகம் தோன்றுதலால் சாக்கிரமாம். மூன்றற்கு அப்பால் [4 வது ஆன சத்துவாபத்தி] சொற்பனமாம் (பிரபஞ்சம் மித்தையாக தோன்றும் கனவு) அதுவும் மெள்ள நழுவும் ஐந்தாம் (அசம்சத்தி) பூமியே சுழுத்தியாகும். அற்புதமாம் சுகாநுபவ மிகும் ஆறாம் புவி [பதார்த்தாபாவனை] துரியம் ஆகும். அதற்கப்பாலோர் (துரியம் எனும் 7 ஆம் பூமி) கற்பனையிலாத இடம் அதீதம் என்று மௌனமாய் காட்டும் வேதம்.

--

சுபேச்சை, தநுமானசி, சத்துவா பத்தி ஆகிய முதல் 3 பூமிகளில் உலகம் தோன்றுகிறது. நாம சாதாரணமா பாக்கிற இந்த உலகம் தெரியுது. அதனால் அவை சாக்கிரம் ன்னு சொல்லாம்.

நான்காவது சத்துவாபத்தியில் பிரபஞ்சம் மாயை ன்னு தோன்றுகிறது. ஆனா அது என்ன என்கிற தெளிவு இருக்காது. அதனால் அது கனவு.

5 வது ஆன அப்பியாசத்தில் எல்லாம் பிரம்ம சொரூபமாக தோன்றுகிறது. உலகம் நழுவுகிறது. அதனால் அது சுழுத்தி.

ஆறாவதில் ஆனந்தம் உதிக்கும். இது துரியம்.

இதற்கு அடுத்து ஒன்றும் தோன்றாத நிலையே துரியாதீதம் எனப்பட்டது. அதாவது துரியத்துக்கு அப்பாற்பட்டது.

153.

துரியநிலந் தனைத்துரியா தீதமெனின் மயக்கமென்று கருதி மேலோர்

அரியதொரு விதேகமுத்தி யதீதமென் பாரதுகணக்கி லாறாம் பூமி

மருவுசுழுத் தியிற்காட்சி சுழுத்தி யென்பா ரென்பதுநீ மனதிற்கொள்வாய்

பெருமைதரு ஞானபூ மியின்விகற்ப மின்னமுண்டு பேசக் கேளாய்.

துரிய நிலந்தனைத் துரியாதீதம் எனில் மயக்கம் என்று கருதி மேலோர், அரியதொரு விதேக முத்தி அதீதம் என்பார். அதுகணக்கில் ஆறாம் பூமி. மருவு சுழுத்தியில் காட்சி சுழுத்தி என்பார் என்பது நீ மனதில் கொள்வாய். பெருமை தரு ஞான பூமியின் விகற்பம் இன்னமுண்டு. பேசக் கேளாய்.

--

சீவன் முத்தர் தேகத்துடன் கூடி இருக்க அவர் நிலை துரியாதீதம் ன்னு சொன்னா ஸ்தூல திருஷ்டி இருக்கிறவங்களுக்கு குழப்பம் வரும் என கருதிய முன்னோர், முதல் மூன்று சாக்கிரம் எனவும் நான்காவது சத்துவாபத்தி கனவு எனவும், ஐந்தும் ஆறும் சேர்த்து காட்சி சுழுத்தி எனவும், ஏழாம் பூமி துரியம் எனவும் கூறினர். இந்த ஞான பூமிகளின் விசேடங்கள் இன்னும் உண்டு.

அதாவது ஒரு சீவன் முத்தர் இருக்கார். அவருக்கு ஞானம் வந்துட்டாலும் கர்மாவை கழிக்க இந்த உலகத்தோட தொடர்பு இருக்கு. இவரோட நிலை எப்படி துரியாதீதம் ஆகும்ன்னு சிலர் குழம்பலாம். இதுக்காக இந்த ஞான நிலைகளை கொஞ்சம் ரீக்ளாஸிபை பண்ணி துரியாதீதம் என்கிற வார்த்தையை எடுத்துட்டாங்க சிலர். வேற இடத்தில படிக்கும்போது குழப்பம் வரக்கூடாதேன்னு இதை குறிப்பிடுறார் ஆசிரியர்.

154.

முன்னிலங்க ளேறியமூ வருமப்பி யாசிகளா முத்த ரல்லர்
பின்னிலங்கள் வரன்வரீயான் வரிட்டனெனுஞ் சீவன் முத்தர் பேத மாகுஞ்
சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந் தூய முத்த
ரின்னமுமப் பூமிகளின் பெருமைதனை நீயறிய யான்சொல் வேனே

முன் நிலங்கள் (சுபேச்சை, விசாரணை, தனுமாசி ஆகிய மூன்று) ஏறிய மூவரும் அப்பியாசியாவார்கள். [சீவன்] முத்தர் அல்லர். பின் நிலங்கள் (அசம்சத்தி, பதார்த்த பாவனை என்ற மூன்று) வரன், வரீயான், வரிட்டன் எனும் சீவன் முத்தர் பேதமாகும். சொன்ன நடுப் பூமி (சத்துவாபத்தி) வந்த ஞானிகளே பிரம வித்தாம், தூய முத்தர். இன்னமும் அப் பூமிகளின் பெருமைதனை நீ அறிய யான் சொல்வேனே.

நமக்கு ஏற்கெனவே தெரிஞ்சதை வெச்சு பாத்தோம்னா சுலபமா இந்த நிலைகளை புரிஞ்சுக்கலாம். சுபேச்சை, விசாரணை, தனுமாசி என்கிற முதல் மூணு நிலைகள்ல இருக்கிறவங்க ஆன்மீக நாட்டம் உள்ளவங்க அவ்வளோதான். இவங்க முன்னேறினாலும் முன்னேறலாம்; இல்லை நல்ல வாசனை கழிஞ்ச பின் மற்ற வாசனைகள் இழுக்க கீழே இறங்கலாம். இல்லை முன்னேற்றம் தடைப்பட்டு அப்படியே நின்னுடலாம். சொல்ல முடியாது.

விஷய சம்பந்தம் இல்லாம இருக்கிற அசம்சக்தி என்கிற நிலையில அவரை பிரம்ம வரன் என்கலாம்.

பிரபஞ்சம் முதல் எல்லாத்தையும் அகண்ட பிரம்ம சொரூபமாக காண்கிற அனுபவம் அடைஞ்சு சாக்ஷாத்காரம் தவிர மற்ற எல்லா விஷயங்களில் இருந்தும் சம்பந்தத்தை உணர்விலிருந்து நீக்கிட்டார்ன்னு பாத்தோம் இல்லையா? இருந்தாலும் தானாக வெளியே அப்பப்ப வந்து கொஞ்சம் உணவு எடுத்துக்கிறது போல சிலது பண்ணிட்டு திருப்பி

சமாதிக்கு போயிடுவாங்க.

பதார்த்த பாவனை நிலையில வெளியும் உள்ளும் எவ்வித பொருட்களின் தோற்றரவும் இல்லாது இருத்தல். அதாவது சமாதி அப்பியாசத்தால் பிரம்மான்ம ஐக்கியம் பூரணமாகி திரிபுடி என்னும் "காண்பவன்- காணப்படுவது- காட்சி" என்ற மூன்றும் நீங்கி இரண்டற்ற ஆனந்தம் அடைதல் ன்னு பாத்தோம். இவங்க பிரம்ம வரீயான்.(நினைவிருக்கா? இவர் தானா வெளியே வர மாட்டார். ஆனா மத்தவங்க இவரை வெளியே கொண்டு வரலாம்.)

துரியம் என்பது சாக்கிரம் சொப்பனம் சுசுப்தி என்ற மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாற்பட்டது. திரிபுடி ஒழிந்து சாக்ஷாத்கார நிலையில் அழுந்தி பூரண மௌனமாய் தன்னாலும் பிறராலும் வெளிவராமல் நிர் விகல்ப சமாதி அடைஞ்சுடுவார். இந்த நிலைக்கு போனவர் தானாகவும் வெளி வர மாட்டார். பிறராலும் இவரை வெளிவரச்செய்ய முடியாது. இவர் பிரம்ம வரிட்டன்.

இதுக்கு நடுவில நாலாம் நிலையில இருக்கிறவங்கதான் சீவன் முத்தர்.

155.

நாலாம் பூமியில் வருமுன் மூன்றுபூ மியுமடைந்து நடந்து மாண்டோர்
மேலான பதமடைந்து பிறந்து மெள்ள மெள்ளவந்து வீடுசேர்வார்
மாலான பவத்தில் விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்த மைந்தா
காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே

நாலாம் பூமியில் வரு முன் மூன்று பூமியும் அடைந்து நடந்து மாண்டோர் மேலான பதமடைந்து பிறந்து மெள்ள மெள்ள வந்து வீடு சேர்வார். மாலான பவத்தில் விழார். முதற் பூமி கிடைப்பதுவே வருத்த மைந்தா காலான முதற் பூமி கை வந்தான் முத்தியுங் கை வந்ததாமே.

ஆன்மீக நாட்டம் ஒத்தருக்கு வருது. கஷ்டப்பட்டு முன்னே போறார். வயசாயிடுது. இறந்து போறார். இது வரைக்கும் அவர் கஷ்டப்பட்டது வீணா?

ஒத்தருக்கு நிறைய வயசான பிறகுதான் ஆன்மீக நாட்டமே வருது. நமக்கு வாழ்க்கையே வீணா போச்சு. ஆன்மீகத்தில இனிமே என்ன சாதிக்கப்போறோம் ன்னு அதைரியப்படலாமா? .

நாமும் எத்தனையோ நாளா சாதனை சாதனைன்னு நேரம் போக்கிக்கிட்டு இருக்கோம். என்னத்தை சாதிக்க முடிஞ்சது? ஒரு இஞ்ச் கூட முன்னேறினதா தெரியலையே. ஒண்ணும் பிரயோசனம் இல்லைன்னு டிப்ரெஸ் ஆகலாமா?

தேவையில்லை.

நாம இந்த உலகத்தை விட்டு போகிறப்ப காசு பணம் நகை நட்டு வீடு வாசல் தோட்டமெல்லாம் கொண்டு போக முடியாது. ஆனா இந்த ஆன்மீக முன்னேற்றத்தை கொண்டு போகலாம். விட்ட இடத்திலேந்து தொடரலாம்.

முதல் மூன்று பூமிகளை மட்டும் அடைந்து 4 வது பூமியின் அப்பியாசம் இல்லாமல் மரணமடைந்தவர் மேலான சுவர்க்கம் முதலான பதவிகளை அடைந்து பின் நல்ல வம்சத்தில் பிறந்து நான்காம் பூமி முதலானவற்றை அடைந்து மோக்ஷம் பெறுவர். (நல்ல

வம்சம்ன்னா மேலே ஆன்மீகத்தில முன்னேற நல்ல சூழ்நிலையை தரக்கூடிய குடும்பம்.) அவர்கள் மயக்கத்துக்கு காரணமான பிறவியை திருப்பியும் அடைய மாட்டார்.

*அதனால முதல் படியான சுபேச்சை கைவருவதே பிரயாசை.* அதுக்குத்தான் கஷ்டப்படணும். அது கிடைச்சாச்சுன்னா மற்றவற்றுக்கு சுலபமா போயிடலாம். மற்றவற்றுக்கு காரணமான அது வந்துவிட்டால் முத்தியே கிடைச்சதாகும்.

இதைத்தான் பகவானை நோக்கி ஒரு அடி எடுத்து வெச்சா அவன் நம்மை நோக்கி பத்தடி எடுத்து வைக்கிறான்னு சொல்கிறாங்களோ என்னவோ.

அப்பாடான்னு இருக்கு இல்லே?

156.

இப்புவி யிலிஞ்ஞான பூமியொன்றி லிரண்டிலடைந் திருந்தா ரானால்
அப்புருடர் மிலேச்சரா கிலுமுத்தர் குருபாதத் தாணை மெய்யே
தப்புரை யென் றவர்கெடுவார் நடுவான மறைகளைநீ சங்கி யாதே
செப்புமொழி வழிதிடமா யகம்பிரம மென்றிருந்து தெளிந்தி டாயே

இப்புவியில் ஞான பூமி ஒன்றில் இரண்டில் அடைந்திருந்தார் ஆனால் அப்புருடர் மிலேச்சர் ஆகிலும் முத்தர் குரு பாதத்தாணை மெய்யே! தப்பு உரை என்றவர் கெடுவார் நடுவான மறைகளை நீ சங்கியாதே. செப்பு மொழி வழி திடமாய் அகம் பிரமம் என்றிருந்து தெளிந்திடாயே.

யாரேனும் இந்த ஞான பூமிகள் ஒன்று (சுபேச்சை) அல்லது இரண்டில் (விசாரணை) அப்பியாசம் உடையவர்களாக இருந்தால் அவர் மிலேச்சராக இருந்தாலும் ஞானிகளாக காலப்போக்கிலே ஆவார்கள். சற்குரு பாதங்கள் மீது ஆணையாக இது சத்தியமே. இது தவறு என்பவர்கள் நாசமடைவார்கள். பாரபட்சமற்ற சுருதி வாக்கியங்களில் நீ சந்தேகம் கொள்ளாதே! அவற்றில் உறுதி உடையவனாக அகம் பிரம்மம் என்று அநுசந்தானம் செய்து பிரம்மமாகவே இருப்பாயாக.

ரொம்ப பலமாவே சொல்கிறார். முன்னே நல்ல குடியில் பிறந்துன்னு சொன்னப்ப சந்தேகம் வந்தவங்களுக்கு இப்ப தெளிவா இருக்கணும்.

157.

பொல்லாத மிலேச்சருக்கும் விதேகமுத்தி தருஞான பூமியென்று
நெல்லாகி முளைக்குமெனைத் தண்டுலமாக் கியகுருவே நீர்சொன் னீரே
இல்லாளுங் குடும்பம்விட்டுச் சன்னியா சம்புகுந்தே காங்கியானோர்
அல்லாமன் முத்திபெறா ரென்றுசிலர் சொலுமயக்க மகற்று வீரே.

பொல்லாத மிலேச்சருக்கும் ஞான பூமி விதேக முத்தி தரும் என்று நெல்லாகி முளைக்கும் எனைத் தண்டுலம் (அரிசி) ஆக்கிய குருவே நீர் சொன்னீரே, இல்லாளும் குடும்பமும் விட்டுச் சன்னியாசம் புகுந்து ஏகாங்கியானோர் அல்லாமல் [மற்றவர்] முத்தி பெறார் என்று சிலர் சொல்லும் மயக்கம் அகற்றுவீரே.

முளைக்கக்கூடிய நெல்லில் இருந்து உமியை நீக்கி அரிசியாக்கியது போல அவித்தையாகிய அஞ்ஞானத்தால் மூடப்பட்டு இருந்த என்னை அஞ்ஞானம் நீக்கி பிரம்ம

சொரூபமாகும்படி செய்த குருவே! இந்த ஞான பூமிகள் ஒன்று அல்லது இரண்டில் அப்பியாசம் உடையவர்களாக இருந்தால் அவர் மிலேச்சராக இருந்தாலும் ஞானிகளாக ஆவார்கள் என்றீர்களே. மனைவியையும் குடும்பத்தாரையும் விட்டு சன்னியாசி ஆனால் ஒழிய யாரும் முத்தி பெறார் என சிலர் சொல்கிறர்களே, அந்த சந்தேகத்தை நீக்க வேண்டும்.

உமியை நீக்கிவிட்டால் நெல் முளைக்க முடியாது. அப்படி பிறவி முளைக்காமல் அருளியதால் இந்த உவமை சொல்லப்பட்டது.

தெளிவாவே இருக்கு இல்லையா? இதை முன்னேயும் பாத்து இருக்கோம் - சன்னியாசியானாதான் முத்தியா?

158.

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கைநன்று தெரியக் கேளாய்

கட்டழியுந் துறவுநால் வகையாகு மவைகளுக்கங் காகும் பேர்கள்

பட்டதுயர் கெடுங்குடீசகம்வெகூ தகமஞ்சம் பரவஞ்சம்

விட்டகலுந் துறவுக்கு விராகங்கா ரணமன்றி வேட மன்றே

சிட்டர் புகழ் மகனே நீ சங்கித்த சங்கை நன்று தெரியக் கேளாய், கட்டு அழியும் துறவு நால் வகையாகும். அவைகளுக்கு அங்கு ஆகும் பேர்கள்: பட்ட துயர் கெடும் குடீசகம், வெகூதகம், அஞ்சம், பரம் அஞ்சம். விட்டு அகலும் துறவுக்கு விராகம் காரணம் அன்றி வேடம் அன்றே.

--

"சிட்டனே நீ கேட்ட சந்தேகம் நல்லதே.

சன்னியாசம் 4 வகையாகும்.

குடீசகம், வெகூதகம், ஹம்ஸம், பரம ஹம்ஸம்.

குடும்பத்தை விட்டு நீங்கும் சன்னியாசத்துக்கு மனதில் உண்டாகும் ஆசை இன்மை காரணமின்றி காஷாய வஸ்திரம் போன்ற வேடம் முக்கியமல்ல."

ஹிம் ! எல்லாத்தையுமே இவர் க்ளாஸிபை பண்ணிகிட்டே போறார். சன்னியாகளிலேயும் வித்தியாசம் இருக்காம். யார் என்னன்னு அப்புறம் பாக்கலாம். இப்ப பாக்கிற முக்கியமான பாய்ண்ட் பற்றின்மைதான் முக்கியம் வெளியே தெரிகிற தோற்றம் இல்லை என்கிறது.

159.

மந்தமுந்தீ விரமுந்தீ விரதரமு மெனமூன்று வகைவி ராகம்

வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத் துவரும் விராக மந்த

மிந்தவுட லளவுமனை தனம்வேண்டா மெனவிடறீ விரமென் பார்க

ளந்தணர்நூன் மித்தையென விடலதுதீ விரதரமா மறிந்திடாயே

மந்தமும் தீவிரமும் தீவிரதரமும் என மூன்று வகை விராகம் (வைராக்யம்). வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத்து வரும் விராகம் மந்தம். இந்த உடலளவு மனை, தனம் வேண்டாம் என விடல் தீவிரம் என்பார்கள். அந்தணர், நூல், மித்தை என விடல்

அது தீவிரதரதமாம் அறிந்திடாயே.

--

பற்றின்மையை மூணா பிரிக்கிறார். மந்தம், தீவிரம், ரொம்ப தீவிரம்ன்னு.

ஒத்தரோட மனவி மக்கள் இறந்து போகிறார்கள். வாழ்க்கை கசந்து போகுது. சன்னியாசியா போயிடலாம்ன்னு சன்னியாசம் வாங்கிக்கிறார். இல்லை, எப்ப பாத்தாலும் குடும்பத்தில ஒரே சச்சரவு. தொல்லை தாங்கலை. "போதும்பா ஒங்க சகவாசம்"ன்னு தொல்லை பொறுக்காமல் சன்னியாசம் வாங்கிக்கிறார். இப்படி வரும் வெறுப்பு மந்த வைராக்கியம். இப்படி இருக்கிறவர் நிலைமை அனுகூலமா போச்சுன்னா சன்னியாசத்தை விட்டாலும் விட்டுடுவார். உண்மையான சன்னியாசம் இவருக்கு சித்திக்காது.

இப்படிப்பட்டவங்கதான் சன்னியாசிகளுக்கு கெட்டப்பெயர் வாங்கி தரவங்க. அதுவும் இந்த காலத்தில தராதரம் பாக்காம சன்னியாசம் கொடுக்கிறாங்க அல்லது சும்மா காவி உடை போட்டுக்கிட்டு நான் சன்னியாசின்னு கிளம்பிடறாங்க....

கிடக்கட்டும். நாம நல்ல விஷயங்களை பாத்துகிட்டு போகலாம்.

இந்த உடல் உள்ள வரை நமக்கு மனைவி மக்கள் தேவையில்லை என விடல் தீவிர வைராக்கியம்.

இந்த உலக போகங்களும், தேவ லோகம் முதலான போகங்களும் அநித்தியம்; துக்கம்; மித்தை. ஆகையால் நமக்கு அவை வேண்டாம் என விடுதல் தீவிரதர வைராக்கியம்.

160.

மந்த வைராக்கியத்தில் சன்னியாசம் இல்லை. தீவிரத்தில் இரண்டு உண்டு.

பாவிமந்த விராகத்திற் சந்நியா சங்களொன்றும் பலித்திடாதே
தீவிரத்திற்கு டீசகமும் வெகூதகமு மென்றிரண்டு திறங்களுண்டாம்
தாவிநடந் திடத்திடமி லாதவர்களுக்குக் குடீசகமுஞ் சகங்களெங்கும்
மேவிநடந் திடத்திடமுள் ளவர்க்குவெகூ தகமுமென விதித்தார் மேலோர்.

பாவியின் மந்த விராகத்தில் சந்நியாசங்கள் ஒன்றும் பலித்திடாதே. [மீண்டும் இச்சை உண்டாகி பற்றுதல் ஏற்பட்டால் இம்மையில் இகழ்ச்சியும், மறுமையில் நரகமும் விளயும். ஆதலால் சன்னியாசம் கிடையாது) தீவிரத்தில் குடீசகமும் பகூதகமும் என்று இரண்டு திறங்கள் (சன்னியாசங்கள்) உண்டாம். தாவி நடந்திட (ரோகம் அல்லது வயோதிகத்தால்) திடமில்லாதவர்களுக்குக் குடீசகமும் (இவர்களுக்கு சஞ்சாரம் தவத்துக்கு விக்கினமாகும். ஆகையால் காமம் முதலான பிரவிருத்திக்கு ஹேது இல்லாத ஓர் இடத்தில் தவம் செய்தல் நன்று.) சகங்கள் எங்கும் மேவி நடந்திட திடமுள்ளவர்க்கு (சஞ்சரிக்காவிடில் ஆத்ம விசாரம் இல்லாது போனால் காமாதி பிரவிருத்தி உண்டாகிவிடும்) பகூதகமும் என விதித்தார் மேலோர்.

மந்த வைராக்கியம் இருக்கிறவருக்கு சன்னியாசம் சித்திக்காது. திருப்பி குடும்பியா ஆகிறவனை பாத்து ஜனங்கள் சிரிப்பாங்க திட்டுவாங்க. இந்த பிறவி முடிகிறப்ப அடுத்து நரகம்தான். அப்படி அது மகா பாபம்.

தீவிர வைராக்கியத்தில...

பற்றின்மையை வளத்துக்காட்டாலும் அப்படியே வைச்சுக்கிறது முக்கியம். மழைக்காலம்

தவிர ஒரு இடத்தில மூணு நாளுக்கு மேல தங்கக்கூடாதுன்னு விதி. அப்படி தங்கினா அங்கே இருக்கிறவங்க மேலே பற்றுதல் வர அதிக வாய்ப்பு இருக்கு.

அதனால யாருக்கு இடம் இடமா நகர உடம்பில தெம்பு இருக்கோ அவங்க நகந்துகிட்டே இருக்கணும். இவர் பகூதகர்.

ஒத்தருக்கு உடம்பில தெம்பு இல்லை. அவரைப்போய் நகந்துகிட்டே இருன்னா அவர் கஷ்டப்படுவார். அந்த நிலைல ஆத்ம விசாரம் எங்க செய்யறது? அதனால சௌகரியமான ஒரு இடத்தில தனிமையில தங்கி தபஸ் பண்ணலாம். இவர் குடீசகர். ஹ்ம் . அப்படி யாரும் உக்காந்தா மக்கள் அவரை தனிமையில விடுவாங்க என்கறீங்க? வயதான சிலர் குடும்பத்திலேயே இருந்து கொண்டு பூஜை, ஜபம்ன்னு இருக்கிறதை பாத்து இருக்கேன். குடும்பம் என்கிறதால அவரை கவனிச்சுக்கவும் செய்கிறாங்க. தொந்திரவும் செய்கிறதில்லை. அப்படிப்பட்ட குடும்பம் அமையனுமே.

161.

தீவிரதரத்தில் இரண்டு சன்னியாசம்.

இருவகைதீ விரதரத்து மஞ்சனென்றும் பரமாஞ்ச னென்றுஞ் சொல்வார்
வருமஞ்ச னுக்குமுத்தி சத்தியலோ கத்தன்றி வாரா தென்பார்
பரமஞ்சனுக்குமுத்தி யிவ்வு லகின் ஞானத்தாற் பலிக்குமென்பார்
திரமருவும் பரமாஞ்சன் றானுமிரு வகையாகுஞ் செப்பக் கேளாய்.

இருவகை தீவிரதரத்தும் அஞ்சன் (ஹம்ஸன்) என்றும் பரமாஞ்சன் (பரம ஹம்ஸன்) என்றுஞ் சொல்வார். வரும் அஞ்சனுக்கு முத்தி சத்திய (பிரம) லோகத்து அன்றி (இம்மையில்) வாரா தென்பார். பரமஞ்சனுக்கு முத்தி இவ்வுலகில் ஞானத்தாற் பலிக்குமென்பார். ஸ்திர மருவும் (பொருந்திய) பரமாஞ்சன்தானும் இரு வகையாகும் செப்பக் கேளாய்.

--

ஹம்ஸ சன்னியாசிக்கு இந்த உலகில் முத்தி இல்லை. அவர் பிரம்ம லோகத்தில் முத்தி பெறுவார். பரமஹம்ஸ சன்னியாசி தத்துவ ஞானத்தால் இவ்வுலகிலேயே முத்தி அடைவார்.

--

162.

பரம ஹம்ஸ சன்னியாசி இருவகை:

சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்களவ ரிற்சிஞ்ஞாசு
மெஞ்ஞான பூமியின்முன் மூன்றுபூ மியுணடக்கும் விவேகி யானோன்
சுஞ்ஞான வானென்போன் சீவன்முத்தி யடைந்திருக்குந் தூய மேலோன்
அஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசு மிருவகையா மதுவுங் கேளாய்

சிஞ்ஞாசு, ஞானவான் என்று இரண்டு பேர்கள். அவரில் சிஞ்ஞாசு மெஞ்ஞான [ஏழு] பூமியில் முன் மூன்று பூமியில் (சுபேச்சை, விசாரணை, தனுமானசி ஆகியவற்றில்) நடக்கும் விவேகி [அப்பியாசி] ஆனோன். சு (நல்ல) ஞானவான் என்போன் சீவன் முத்தி

அடைந்திருக்கும் தூய மேலோன். [அநுபவி] அஞ்ஞானம் அகலும். அந்தச் சிஞ்ஞாசும் இரு வகையாம். அதுவுங் கேளாய்.

ஜிக்ஞாஸ் என்கிறவரே ஞான வழில இறங்கிட்டவர். முதல் மூணு நிலைகள் ஏதாவதில இருப்பார். இது வரைக்கும் பாத்தவங்க சன்னியாசிகள் ஆனாலும் ஞான வழில முழுக்க இறங்கலை.

ஞானவான் சீவன் முத்தன்.

அந்தச் சிஞ்ஞாசும் இரு வகையாம். தலையை சுத்துது இல்லை?

163.

சிஞ்ஞாசும் இரு வகை:

பந்தமனை துறந்துசில ரதிதிகளா யிருந்தடைவர் பரம ஞானம்
அந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரராயிருந்து சில ரடைவர் ஞானம்
இந்தவகைச் சாத்திரத்து முலகத்து நடப்பதுகண் டிருந்து மைந்தா
சிந்தனையின் மயக்கமென்னே சுருதியுத்தி யநுபவத்தாற் றெளிந்தி டாயே

1.பந்த மனை துறந்து சிலர் அதிதிகளாய் (சன்னியாசிகளாய்) இருந்து அடைவர் பரம ஞானம். 2. அந்தணர் மன்னவர், வணிகர், சூத்திரராயிருந்து சிலர் அடைவர் ஞானம். இந்த வகை சாத்திரத்தும் உலகத்து நடப்பது கண்டு இருந்து மைந்தா, சிந்தனையின் மயக்கம் என்னே? சுருதி யுத்தி அநுபவத்தால் தெளிந்திடாயே.

--

சிஞ்ஞாசுகளிலும்..... சிலர் மனைவி, மக்கள் எல்லாம் துறந்து சன்னியாசிகளாக இருப்பர்; கிடைத்த இடத்தில் விருந்தினரா இருந்து உண்டு தவம் செய்து கொண்டு இருப்பாங்க. சிலர் வருணாசிரம தர்மப்படி இல்லறத்தில் இருந்து கொண்டே அகத்துறவு பூண்டு குருவை அடைந்து அப்பியாசம் செய்து ஞானம் அடைந்தவர்.

இப்படி சாத்திரங்களில் கூறப்பட்டு உள்ளது; பிரத்தியக்ஷ அனுபவமாயும் உள்ளது. ஆகவே சந்தேகம் வேண்டாம். மோக்ஷத்தை அடைய ஆசிரமம் காரணம் அல்ல. இல்லறத்தில் இருந்தாலும், சன்னியாசி ஆனாலும், உலகில் எந்த தொழில் செய்தாலும்; மனதில் தீவிர வைராக்கியம் அடைந்து அகத்துறவு கொண்டு அப்பியாசத்தால், ஞானத்தை பெற்று எவரும் மோக்ஷமடையலாம்.

164.

வித்தையானந்தத்தை கூறத் துவங்கி பிரமமே கூடஸ்தன் எனல்.

பிறந்ததுண் டானா லன்றோ பிறகு சாவதுதா னுண்டாம்
பிறந்ததே யில்லை யென்னும் பிரமமா வதுவு நானே
பிறந்தது நானென் றாகிற் பிரமமன் றந்த நானே
பிறந்தது மிறந்ததற்ற பிரமமா நானே நானே

பிறந்தது உண்டானால் அன்றோ பிறகு சாவதுதான் உண்டாம். பிறந்ததே இல்லை என்னும் பிரமம் ஆவதுவும் நானே. பிறந்தது நான் என்றாகில் அந்த நானே பிரமம் அன்று. பிறந்தது

இறந்தது அற்ற பிரமமா(கிய) நானே நானே. [தத்வமஸி- சாம வேத மஹா வாக்கியம்]

ஆத்மா பிறப்பு இறப்பு இல்லாதது. பிறப்பு இல்லை என்பதால் மூலமாக இருக்கும் ஆத்மாவேதான் நான்.

165.

கூடஸ்தனே பிரமம் எனல்:

நானென்ற பிரம மான நானேநா னறியே னென்றால்
நானென்ப தேது பின்னை நம்முடைப் புந்தி யென்னில்
தானது மயக்கந் தன்னிற் சாகுமே சாவாதாகி
நானென நிறைந்திருந்த ஞானமா நானே நானே

நானென்ற பிரமமான நானே நான் [என] அறியேன் என்றால், நான் என்பது பின்னை ஏது? நம்முடைப் புந்தி என்னில் தான் அது (சுசுப்தி) மயக்கம் தன்னில் சாகுமே? [ஆகவே] சாவாது ஆகி நான் என நிறைந்திருந்த ஞானமாகிய (கூடஸ்தனே) நானே நானே. [அஹம் ப்ரம்ஹாஸ்மி-யஜுர் வேத மஹா வாக்கியம்]

--

நான் பிரம்மம். இப்படி அறியாவிடில் நான் என்பது வேறு என்ன? அது புத்தி எனில் புத்திதான் சுசுப்தியில் இல்லாது போய்விடுமே? ஆகவே சாகாமல் இருக்கும் ஞானமாகிய கூடஸ்தனே நான்.

166.

ஞானமே பிரமம் எனல்:

நிறைந்தவா றென்றவாறு நிலைதெறிந் திலனென் றாயேல்
அறிந்ததாஞ் சுழுத்தி தன்னி லாநந்த மதுவே யாகும்
குறைந்ததற் காநந்தந் தான் குவலயந் தன்னி லில்லை
நிறைந்ததே யிந்த வான்மா நிதானமிவ் வறிவு தானே

நிறைந்தவாறு (பரிபூரணனாயிருத்தல்) என்றவாறு (எப்படி என்ற) நிலை தெரிந்திலன் என்றாயேல், (அஞ்ஞானத்தை) சுழுத்திதன்னில் அறிந்ததாம் (அஞ்ஞானத்தை அறிந்து இருந்த) ஆநந்தம் அதுவே ஆகும். குறைந்ததற்கு ஆநந்தந்தான் குவலயம் (உலகம்) தன்னில் (எங்கும்) இல்லை. நிறைந்ததே இந்த ஆன்மா. இவ்வறிவு தானே நிதானம்.

[இவ்வறிவென்பது 5 இந்திரியங்களால் பஞ்ச விடயத்தை அறியும் பிரஞ்ஞானமே, நிதானம் என்பது சீவ ஈஸ்வர சகத்துக்கு ஆதி காரணமாயும் அவற்றுக்கு தற் சாட்சியாயும் வியாபகமாயும் உள்ள பிரமம். பிரக்ஞானம் ப்ரம்ஹா- ரிக் வேத மஹா வாக்கியம்]

--

பரிபூரணனாயிருத்தல் எப்படி என்று தெரியாது என்றால், தன்னை சுழுத்தியில் அறிந்த ஆனந்தம் எதுவோ அதுவே ஆகும். இதை குறைந்தது என்று சொல்லக்கூடிய அளவு வேறு ஆனந்தம் உலகில் இல்லை. அப்படி நிறைவானது இது. இந்த அறிவைதான் சீவ ஈஸ்வர சகத்துக்கு ஆதி காரணமான நிதானம் என்பர்.

167.

ஆத்மாவே பிரமம்.

மனத்தினா லெண்ணித் தானே வந்ததிவ் வுலக மாகும்
நினைத்திடி லனேக லோக நிற்பதவ் வறிவி லன்றோ
வனைத்தையுங் கடந்தப் பாலு மந்தமற் றறிவி தாமென்
றெனைத்தனி விசாரத் திட்டாலேகமாய் நிறைந்தோ னானே

மனத்தினால் எண்ணித்தானே வந்தது இவ்வுலகம் ஆகும். நினைத்திடில் அனேக லோகம் நிற்பது அவ்வறிவில் அன்றோ? (ஆரோபமான மனதுக்கு அதிஷ்டானமான அந்த பிரம சைதன்யத்தில் அன்றோ) அனைத்தையும் கடந்து, அப்பாலும் அந்தம் அற்று, 'அறிவு (பிரம சைதன்யம்) இதாம்' என்று என்னை தனி (தனிமையாக) விசாரித்திட்டால் ஏகமாய் நிறைந்தோன் நானே. [அயமாத்மா ப்ரம்ஹா -அதர்வண வேத மஹா வாக்யம்]

[இப்படி மேல் கண்ட 4 வேத மஹா வாக்கியங்களை வாக்கியார்த்த சொரூபம் தானே என சிந்திக்கும் போது உண்டாகும் சுகம் வித்தையாநந்தம்]

168.

அந்தவா றிருந்து கொண்டே யாநந்த மநுப விக்க
வெந்தவா றிருந்துகொண்டா லெனக்கிது தெரியுமென்னில்
இந்தமூன் றவத்தை தம்மு ளெழுந்திடும் விருத்தி நீக்கில்
அந்தவா றிருந்து நீயு மாநந்த மடைய லாமே

அந்தவாறு [பூரணமாக] இருந்து கொண்டே [வித்தை] ஆநந்தம் அநுபவிக்க எந்தவாறு இருந்து கொண்டால் எனக்கு இது தெரியும்? என்னில், இந்த மூன்று (ஜாக்ரத், சுசுப்தி, ஸ்வப்னம் என்ற) அவத்தை தம்முள் எழுந்திடும் [கோர மூட] விருத்தி நீக்கில், அந்தவாறு இருந்து நீயும் ஆநந்தம் அடையலாமே.

--

எல்லாம் சரி! எப்படி இந்த ஆனந்தத்தை அடைகிறதுன்னா ஜாக்ரத், சுசுப்தி, ஸ்வப்னம் என்கிற மூன்று அவஸ்தைகளால் எழும் மூட அந்தக்கரண விருத்தியை நீக்கி, அறிவு சொரூபமாக இருந்தால் ஆனந்தம் அடையலாம்.

அந்த விருத்தியை நீக்குகிறது எப்படி?

மூணு வழிகள் சொல்கிறாங்க.

169.

விருத்தியை நீக்கும் உபாயம் மூன்றில் முதலாவது:

வாதனா வசத்தினாலே வருகின்ற விருத்தி யெல்லா
மேதினா லடக்க லாகு மென்றுதான் விசாரஞ் செய்யில்

போதமா மிராசன் றானாய்ப் புந்தியைம் புலன்க ளெல்லாந்
தாதரா யிருக்கப் பெற்றாற் சகலமு மடங்குந் தானே

வாதனா (வாசனா) வசத்தினாலே வருகின்ற விருத்தி எல்லாம் எதினால் அடக்கலாகும் என்று தான் விசாரம் செய்யில், போதமாம் இராசன் தானாய் (ஆத்மா ராஜன் தானாகி) புந்தி ஐம் புலன்கள் எல்லாம் தாதராய் (தாசராக) இருக்கப் பெற்றால் சகலமும் அடங்குந்தானே.

--

"ரொம்ப சுலபமா சொல்லிட்டீங்க! அந்தக்கரண விருத்தி எல்லாம் எப்படி அடக்கறது?" அப்படின்னு கேட்டா.... (அந்தக்கரணம் ன்னா புரியலைன்னா மனசுன்னு வெச்சுக்கலாம். மனம்தானே உலகத்தை வேற விதமா பாக்குது? பல விஷயங்களை யோசிக்குது. மேலே மேலே மனக்கோட்டை கட்டுது?)

இதை தெரிஞ்சுக்க ஏன் இப்படி விருத்தி வருதுன்னு தெரியணும்.

"நான்", "எனது" போன்ற நினைப்புக்களும், காமக் குரோதங்களும் ஆகிய விருத்திகள் வருவது பூர்வ ஜன்ம வாசனைகளாலே. அவை எப்போது அடங்கும்? ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை அடக்கி, நீ அரசனாக இருக்க, அவை ஆட்களாக இருக்கப்பெற்றால் எல்லா வாசனைகளும் தானே அடங்கும்.

முன்னே எங்கயோ கேள்விப்பட்டாப்பல இருக்கு இல்லே? ஆமாம்! கர்ம வழியை பாக்கிறப்ப பாத்தோம். கண்ணபிரான் கதை சொன்னான்!

இந்திரியங்கள் இழுக்கிற இழுப்புக்கு நாம் போகிற வரை அவை நமக்கு எஜமானன். அப்படி இழு படாம இருக்க நாம் பழகிட்டா அவை நமக்கு வேலைக்காரன்.

வாசனைகள் ரொம்பவே வலிமையானவைதான். ஆனாலும் தைரியமா இவைகளோட சண்டை போட்டு ஜெயிக்கிற ப்ராஸஸ்தான் சாதனா.

170.

மீதி 2 உபாயங்கள்:

விருத்திக ளடக்க வின்னம் விநோதமாம் யோகத் தாலே
துருத்திபோ லூது மூச்சை சுகமுட னடக்கி னிற்கும்
கருத்ததற் கில்லை யென்னிற் காரண சரீர மாகிப்
பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந்தானே

விருத்திகள் அடக்க இன்னம் விநோதமாம் யோகத்தாலே துருத்தி போல் ஊது மூச்சை சுகமுடன் அடக்கின் நிற்கும். கருத்து (மனம்) அதற்கு இல்லை என்னில் காரண சரீரமாகிப் பெருத்தது (தடித்தது) ஓர் அவித்தை தன்னைப் பிடுங்கிடில் [விருத்திகள்] அடங்குந்தானே.

--

அந்த வாசனைகளை ஜெயிக்க இந்திரியங்களை கட்டுப்படுத்தறது எனக்கு முடியலை வேற வழி இருக்கான்னா...

துருத்தி போல வீசிக்கொண்டு இருக்கும் பிராண வாயுவை ரேசக பூரக கும்பங்களால் அடக்கினால் மனோ விருத்திகள் எல்லாம் தானே அடங்கும். இது ஒரு யோக மார்கம்.

இது இயலாது எனில் காரண சரீரமாகிய அவித்தையை நாசம் செய்தால் அடங்கும்.

171.

காரண சரீரத்தை களையும் உபாயம்.

காரண சரீரந் தன்னை களைவதெவ் வாறென் றேதில்
ஆரணம் பொய் சொல்லாதே யதன்பொரு ளகத்தி லுன்னிப்
பூரண மாகு மென்மேற் புவனங்க டோற்ற மென்று
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே

காரண சரீரம் தன்னை களைவது எவ்வாறு என்று ஏதில் (கேட்கில்) ஆரணம் (வேதம்) பொய் சொல்லாதே. ஆதலால், அதன் பொருளை அகத்தில் உன்னி, (சிந்தித்து) பூரணமாகும் என் மேல் புவனங்கள் தோற்றம் என்று தாரணை (உறுதி) வந்ததாகில் எங்கே தரித்திடும் (இருக்கும்) அவித்தை?

சுத்தம்! அதென்ன காரண சரீரத்தை களையறது?

வேத நிச்சயப்படி குரு வாக்கியத்தால் "சர்வம் பிரம்ம மயம்" என்றும் "சர்வம் மித்தை" என்றும் "பரிபூரணமான என்னிடத்தில் இந்த பிரபஞ்சங்கள் ஆரோபமாக குடி கொண்டு உள்ளன" என்றும் உறுதி வந்தா அவித்தை காணாமல் போகும். அப்படி ஒரு உறுதி எப்படி வரும்? அநுபவம் வந்தாதான் அப்படி ஒரு உறுதி வரும்.

172.

சர்வம் பிரம மயம் என்றும் சர்வம் மித்தை என்றும் ஞானம் உண்டானதற்கு அநுபவம்:

அப்படியிருக்கச் சித்த மலைதலால் விவகாரத்தில்
எப்படி கூடுமென்னி லென்னைவிட் டொன்றுமில்லை
இப்படிகண்ட வெல்லா மென்மய மென்கனாப் போற்
கற்பித மென்று தானே காண்கின்ற சித்து நானே

[உலக] விவகாரத்தில் சித்தம் அலைதலால் அப்படி [உறுதியாய்] இருக்க எப்படி கூடும்? என்னில், என்னை விட்டு ஒன்றுமில்லை. இப்படி கண்ட எல்லாம் என் மயம், என் கனா போல் கற்பிதம் என்று தானே காண்கின்ற சித்து நானே [என்று இரு]

அது சரி அந்த அனுபவம் எப்படி வருமாம்?

என்னைத்தவிர அன்னியமா இங்கே ஒன்றும் இல்லை. இங்கு நாம ரூபமாய் தோன்றிக்கொண்டு இருக்கும் அனைத்தும் உண்மையில் என் மனமே. என் மனம் இது பாம்புன்னு நினைச்சா அது பாம்பா தோணுது. கயிறுன்னு நினைச்சா கயிறா தோணுது.

உடனே இதெல்லாம் உடான்ஸ் ன்னு தோணுதில்லே?

ஹிப்நாடிச நிகழ்ச்சி எதுக்காவது போய் இருக்கீங்களா?

பயிற்சி பெற்ற ஹிப்நாடிச வல்லுனர்கள் அரங்கத்தை ஒரு சுத்து சுத்தி வருவாங்க. யார் வலிமையில்லாத மனம் கொண்டவங்கன்னு அவங்களுக்குத் தெரியும். அவங்களை மேடைக்கு கூப்பிட்டு போய் ஹிப்நாடிச தூக்கத்தில ஆழ்த்துவாங்க. அதாவது அவங்க மனசை கட்டுப்படுத்துவாங்க. மனசு கட்டுக்கு வந்தாச்சுன்னா வித்தைகள் ஆரம்பிக்கும். அந்த நேரத்தில "இத பார்! ஒரு எரிகிற குச்சி. உன் கையை சுடப்போறேன்"னு சாதா குச்சியை கை மேல அழுத்தினாலே போதும். அந்த இடம் சுட்டு கொப்பளிச்சு போயிடும்.

மனுஷனாலேயே இது முடியும்ன்னா பரம்பொருளால என்னதான் முடியாது?

கடலில பாக்கிற அலை திவலை அனைத்தும் நீர் அன்றி வேறில்லை. அதே போல் இவை அனைத்தும் என்னை அன்றி வேறில்லை, நானே. இந்த தோற்றம் அனைத்தும் இருட்டில் பாம்பு போலும் கானல் நீர் போலும் கனா போலும் கற்பிதமே ஆகும்.

173.

சித்துநா னிறந்தோ னென்ற திடமற வாதி ருந்தால்

எத்தனை யெண்ணி னாலு மேதுசெய் தாலு மென்ன

நித்திரை யுணர்ந்த பின்பு நிற்கின்ற கனாவே போல

அத்தனையும் பொய் தானே யானந்த வடிவு நானே

சித்து நான் நிறைந்தோன் என்ற திடம் மறவாதிருந்தால், எத்தனை எண்ணினாலும் ஏது செய்தாலும் என்ன? நித்திரை உணர்ந்த பின்பு நிற்கின்ற கனாவே போல அத்தனையும் பொய் தானே! ஆனந்த வடிவு நானே! [தானே சித்து என்ற அநுபவம் உதிக்கில் யாவும் மித்தையாய் தான் ஆநந்த வடிவாகவும் ஆவான்]

--

எங்கும் நிறைந்த பரி பூரண ரூபமாகிய சித்தே நான் என்று உறுதியை மறவாதிருந்தால் என்ன எண்ணினாலும் என்ன செய்தாலும் அவற்றால் கெடுதி ஒன்றும் உண்டாகாது. தூக்கத்தில் இருந்து விழித்தபின், கண்ட கனவு பொய் என்று தோன்றி விடுவது போல எல்லாம் மித்தையாகும்.

174.

இந்த அநுபவம் உதிக்க ஹேதுவான உறுதியை கூறல்:

நானென வுடலைத் தானே நம்பினே னநேக சன்மம்

ஈனராய்ப் பெரியோ ராகியிருந்தவை யெலாமிப் போது

கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவி னாலே

நானென வென்னைத் தானே நம்பியீடேறி னேனே

நான் என உடலைத் தானே நம்பினேன். அநேக சன்மம் ஈனராய்ப் பெரியோராகி இருந்தவை எலாம் இப்போது கானலில் வெள்ளம் (கானல் நீர்) போல கண்டு சற் குருவினாலே நான் என என்னைத்தானே (என் பிரம வடிவத்தைதானே) நம்பி ஈடேறினேனே.

--

தியரியா ஆயிரம் சொன்னாலும் சொந்த அனுபவத்தை சொல்வது போல எதுவும் இல்லை. அதனால தாண்டவராய ஸ்வாமிகள் சொல்கிறார்:

நான் பல சன்மங்களாக உடலையே நானென்று நம்பி இருந்தேன். இழிந்த பிறவிகளாக இருந்த அவை அனைத்தும் இப்போது சற் குருவின் அருளால் கானல் நீர் போல மித்தையென்று அறிந்து கொண்டேன்.

175.

குரு கிருபையை வியந்து கூறல்:

என்னபுண் ணியமோ செய்தே னேதுபாக் கியமோ காணேன்

நன்னிலந் தனிலெ ழுந்த நாரணன் கிருபை யாலே
தன்னிய னானே னானுத் தரீயத்தை வீசு கின்றேன்
தன்னிய னின்னு நானே தாண்டவ மாடு கின்றேன்

என்ன புண்ணியமோ செய்தேன்? ஏது பாக்கியமோ காணேன் (தெரிந்திலேன்). நன்னிலந்தனில் எழுந்த நாரணன் கிருபையாலே தன்னியன் ஆனேன் நான். உத்தரீயத்தை வீசுகின்றேன். தன்னியன் இன்னும் நானே. தாண்டவம் ஆடுகின்றேன்.

எத்தனை புண்ணியங்களை செய்தேனோ! என்ன அதிருஷ்டமோ! நன்னிலம் என்னும் இடத்தில் அருளே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிய நாராயண தேசிகருடைய கடாக்ஷத்தால் நான் கிருதார்த்தன் ஆனேன். கிடைத்த திருப்தியால் ஆனந்த தாண்டவம் ஆடுகிறேன்.

176.

தத்துவ ஞானம் வந்த சந்தோட வதிச யத்தால்
நித்தமா டுவன்கா ணென்ற நிலைமுன்ன மேய் றிந்த
சத்திய மதனா லன்றோ தாண்டவா வென்ற ழைத்தார்
அத்தனை மகிமை யுள்ளோ ரன்னையும் பிதாவுந் தாமே

தத்துவ ஞானம் வந்த சந்தோட அதிசயத்தால் நித்தம் ஆடுவன் காண் என்ற நிலை முன்னமே அறிந்த சத்தியம் அதனால் அன்றோ தாண்டவா என்றழைத்தார், அத்தனை மகிமையுள்ளோர் அன்னையும் பிதாவும் தாமே.

நூலாசிரியருக்கு அவரது குருவான நாராயணன் இட்ட பெயர் தாண்டவராயன். "தத்துவ ஞானத்தால் தான்டவம் ஆடுவேன் என உணர்ந்தோ இந்த பெயரை இட்டார்? அவரே எனக்கு தாயும் தந்தையும் ஆவார்" என்று வியக்கிறார். இருவர் அதிஷ்டானமும் ஒன்றாக நன்னிலம் பேருந்து நிலையத்தின் அருகில் சுமார் 100 மீ தூரத்தில் அமைந்துள்ளது.

177.

வந்தோ ரிவ்வா நந்தமகிழ்சியா ருடன்சொல் வேன்யான்
சிந்தையி லெழுந்துபொங்கிச் செகமெலா நிறைந்து தேங்கி
அந்தமில் லாத தாயிற் றாப்படி குருவே தாந்த
மந்திர மருளுமீசன் மலரடி வணங்கி னேனே.

வந்தது ஓர் இவ்வாநந்த மகிழ்சி. யாருடன் சொல்வேன் யான்? சிந்தையில் எழுந்து பொங்கிச் செகமெலாம் நிறைந்து தேங்கி, அந்தம் (முடிவு) இல்லாதது ஆயிற்று. அப்படி குரு வேதாந்த மந்திரம் அருளும் ஈசன் மலரடி வணங்கினேனே.

--

இந்த பிரமானந்தத்தை யாருடன் பகிந்து கொள்வேன்? அது என் உள்ளத்துள் உதயமாகி கங்கு கரையற்று விளங்குகிறது. அத்தகைய ஒப்பு உயர்வற்ற ஆனந்த பேற்றை அருளவல்ல ஞானதேசிகரையும் வேதாந்த வாக்கியங்களை அருளிய பரமேஸ்வரனையும் பணிகிறேன்.

178.

வித்தியா னந்த மிந்த விதமென விளம்பி னோமே
பத்தியா லிந்த நூலை பார்தநு பவித்த பேர்கள்
நித்திய தரும நிட்டை நிலைதனை யறிந்து சீவன்
முத்தியை யடைந்தி ருந்த முனிவர ராகுவாரே

வித்தியானந்தம் இந்த விதம் என விளம்பினோமே. பத்தியால் (அன்பினால்) இந்த நூலை பார்த்து (சற்குரு முன்னிலையில் இந்த ஞான சாஸ்த்ரார்த்தத்தை கேட்டு உணர்ந்து) அநுபவித்த பேர்கள், நித்திய தரும நிட்டை நிலைதனை அறிந்து சீவன் முத்தியை அடைந்திருந்த முனிவரர் ஆகுவாரே.

179.

ஆரணப் பொருளாம் வித்தியாநந்தம் விளங்க வேதுங்
காரணங் குறைவி லாமற் கைவல்லிய நவநீதத்தைப்
பூரணமாக்க வேண்டிப் பூர்வமா நன்னிலத்தில்
நாரண குருநமக்கு நவின்றனர் யோகில் வந்தே

ஆரண (வேதாந்த மஹா வாக்கிய) பொருளாம் வித்தியாநந்தம் (ஞானசுகம்) விளங்க ஏதும் (எவ்வளவும்) காரணம் குறைவில்லாமல் கைவல்லிய நவநீதத்தைப் பூரணமாக்க வேண்டிப் பூர்வமா (பழமையான) நன்னிலத்தில் நாரண குரு யோகில் (யோக நிஷ்டையில்) வந்தே நமக்கு நவின்றனர்.

180.

குலவுசற் குருவின் பாதகுளிர் புனற்றலைமேற் கொண்டால்
உலகினிற் றீர்த்த மெல்லா முற்றபே றாடைவார் போல
நலமையா குங்கை வல்லிய நவநீத நூலைக் கற்றோர்
பலகலை ஞான நூல்கள் படித்தஞா னிகளாய் வாழ்வார்.

குலவு சற்குருவின் பாத குளிர் புனல் (நீர்) தலை மேற் கொண்டால், உலகினில் தீர்த்தம் எல்லாம் உற்ற பேறு அடைவார் போல, நலமையாகும் (மோட்ச சுகம் தரக்கூடிய) கைவல்லிய நவநீத நூலைக் கற்றோர் பலகலை ஞான நூல்கள் படித்த ஞானிகளாய் வாழ்வார்.

இத்துடன் ஞான வழி நிறைவடைகிறது.